உரிமைகளின் பாதுகாவலர்
Adv. P. தர்மராஜ்

(கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம்)

தொகுப்பாசிரியர்

டாக்டர் **டி. பீட்டர்,** எம்.எ., எம்.-ட., பிஎச்.டி.,

பேருரையாளர் (ஓய்வு)

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி

நாகர்கோவில் - 629 001.

கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றம்

266, வாட்டர் டேங்கு ரோடு

நாகர்கோவில் - 629 001

ஏப்ரல் 2010

ABOUT THE BOOK

Title	:	**Urimaikalin Paathukavalar Adv. P. Tharmaraj** (Kanyakumari C.S.I. Perayam)
Subject	:	Some Aspects of the History of Kanyakumari C.S.I. Diocese Which were hidden deliberately and/or forgotten safely, with special reference to the rights of lay-men
Compiled by	:	Dr. D. Peter, Reader in Economics (Retd.)
Owner & Publishers	:	Kanyakumari Institute of Development Studies, 266, Water Tank Road, Nagercoil - 629 001.
Printed by	:	M/s. Peniel Printers W.C. College Road, Nagercoil - 629 001
First Edition	:	April 2010
No. of Copies	:	500
Language	:	Tamil
Size	:	1/8 demy
Print Area	:	4.2 x 7
Print Point	:	11
Paper Used	:	13.7 GVG Maplitho
Type of Binding	:	Side Stitch
Suggested Contribution	:	Rs. 200/- per copy



உரிமைகளின் பாதுகாவலர்

ஓர் அறிமுகம்

வரலாறு மன்னர்களைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்த காலம் மன்னராட்சியுடன் முடிவடைந்தது. மக்களாட்சி மலர்ந்தபின் வரலாறு, மக்கள் தலைவர்களையும், மக்கள் தங்கள் வளர்ச்சியையும் விடுதலை வாழ்வையும் உறுதி செய்ய நடந்து வந்து கொண்டிருக்கும் பாதையையும் வலம் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். போப் ஆட்சி (Papacy) மட்டும் நிலவியிருந்தபோது, திருச்சபை வரலாறு போப்களையும் அவர்களோடு இணைந்த பாதிரியார்களையும் சுழன்று கொண்டிருந்தது. அந்த ஆட்சி உடைந்ததும் புரோட்டஸ்தாந்து மதம் உருவானது. **புரோட்டஸ்தாந்து மத அமைப்புகள் ஜனநாயகத்தை அரவணைத்துக் கொண்டாலும், வரலாறு இன்னும் பாதிரியார்களையே வலம் வந்து கொண்டிருக்கிறது.**

கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம் போதகர்களும் (Clergy) பொது நிலையினரும் (Lay-men) இணைந்த ஒரு ஜனநாயக அமைப்பு. இந்த அமைப்பில் மக்கள் பிரதிநிதிகள் மிகப் பெரும்பான்மையினராயினும் வரலாறு, பேராயர் மற்றும் போதகர்களை மட்டுமே வலம் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். மக்கள் பிரதிநிதிகளின் சாதனைகளும், மக்கள் தங்கள் வளர்ச்சியையும் விடுதலை வாழ்வையும் உறுதி செய்து கொள்ள நடத்திவரும் போராட்டங்களும் வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்படுவதைத்தான் காண முடிகிறது. அந்தக் குறையை நிவர்த்தி செய்யவே, ***உரிமைகளின் பாதுகாவலர் : Adv. P. தர்மராஜ்*** என்ற நூல். வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களின் தலைமையில் குமரி சி.எஸ்.ஐ. பேராய மக்கள் தங்கள் உரிமைகளைக் காக்க நடத்திய போராட்ட வரலாறுடன் **இந்நூலில், திருச்சபை வரலாற்றில் அழுத்தம் பெற்று இதுவரை வெளிச்சத்துக்கு வராத அனேக தகவல்களை உள்ளடக்கிய பல கட்டுரைகளையும் காணலாம் என்பது ஒரு தனிச்சிறப்பு.**

மக்கள் வரலாறு இருட்டடிப்பு !

திருச்சபை வரலாறு, பாதிரியார் ஆட்சி சர்வ நாசம் என்பதையே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. *(கிறிஸ்தவம் நடந்து வந்த பாதை டாக்டர். ஐவி பீட்டர்*) உலகை 1600 ஆண்டுகளுக்கு மேலாக இருட்டறைக்குள் தள்ளி, பூட்டி வைத்த பெருமை இந்த பாதிரியார் ஆட்சிக்கே உரியது. மிகப் பெரிய தியாகங்களுக்குப் பின்னரே கத்தோலிக்க சாம்ராஜ்யம் உடைந்தது–புரோட்டஸ்தாந்து சமயம் பிறந்தது. இன்று நாம் காணும் வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் அனைத்தும் புரோட்டஸ்தாந்து சமயத்தின் தோற்றத்துக்குப் பின் நிகழ்ந்தவை என்று சொல்வதை மறுப்பதற்கில்லை.

தொன்று தொட்டு இருந்து வந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவம் முழுக்க முழுக்க ஒரு பாதிரியார் ஆட்சி அமைப்பு. புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவம், பாதிரியார் அல்லாதவர்களும் (Lay - men) பாதிரியார்களும் (Clergy) இணைந்த ஒரு ஆட்சி அமைப்பைக் கொண்டது. சாதாரண மனிதர்களின் அறிவு – ஆற்றல்–உழைப்பு முதலியவை, வளர்ச்சி மற்றும் சமுதாய மாற்றப் பணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சி.எஸ்.ஐ.யும் புரோட்டஸ்தாந்து மத அமைப்பின் ஒரு பிரிவு. கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம் மற்றுள்ள எல்லா பேராயங்களையும்விட ஜனநாயகத்தில் பேரளவு நம்பிக்கை கொண்டது. பேராய சட்ட நூல் சாதாரண மனிதர்களுக்கே அதிக அதிகாரங்களை வழங்குகிறது. எனினும் பேராய வரலாறு என்று வரும்போது **சாதாரண மனிதர்களின் பங்களிப்பு முற்றிலுமாக இருட்டடிப்பு செய்யப்பட்டு விடுவதைக் காணலாம்.**

சுமார் 30 ஆண்டுகள், கன்னியாகுமரி முதல் கொல்லம் வரை வியாபித்திருந்த மிஷன் கவுன்சில் செயலாளராகப் பணியாற்றியவர், திரு. பால் டேனியல் அவர்கள். திருவிதாங்கூர் சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்து அரும்பெரும் சாதனைகளை புரிந்திருக்கிறார். பால் டேனியல் அவர்களின் வரலாறு எங்கே? அவர் உயிருடன் இருந்த போது அவரைப் பாராட்டி வரலாறைப் பதிவு செய்து மலர் அல்லது நூல் வெளியிட்டிருந்தால் பால் டேனியல் காலத்து மிஷன் வரலாறு நமக்குப் கிடைத்திருக்கும். தென்னாட்டிலேயே முதல் ஆங்கில வாரப்பத்திரிகையையும், முதல் தமிழ் வாரப்பத்திரிகையயும் வெளியிட்டவர் ஒரு புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவர், திரு. P.C. ஜோசப் அவர்கள். இவரும்

இவரைத் தொடர்ந்து இருபத்திரிகைகளையும் நடத்திவந்த இவருடைய மகன், திரு. D.C. ஜோசப் அவர்களும் திருவிதாங்கூர் மன்னர்களுக்கு நெருங்கிய நண்பர்களாய் இருந்தனர். இவர்கள் உயிருடன் இருந்தபோது பாராட்டி மலர் அல்லது நூல் வெளியிட்டிருந்தால் தென்தேச பத்திரிகை வரலாறு சி.எஸ்.ஐ கிறிஸ்தவர்களாகிய நம்மை ஒட்டி வலம் வந்திருக்கும். அந்த வாய்ப்பை நாம் இழந்தோம்.

இறுதி மூச்சு இருந்தவரை மிஷனுக்காகப் பணியாற்றியவர் மார்ஷல் A. நேசமணி. எல்.எம்.எஸ். உடன் ஒரு சட்ட ரீதியான போராட்டத்தைப் போராடி சபைகளையும் அவைகளோடு இணைந்த ஸ்தாபனங்களையும், சொத்துக்களையும் மீட்டு தந்தவர் மார்ஷல் A. நேசமணி. திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்து இருந்தபோது, சட்ட சபையில் வாதாடி சி.எஸ்.ஐ. (எஸ்.ஐ.யு.சி) மக்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் சலுகைகள் பெற வாய்ப்பு தேடித்தந்தவர் மார்ஷல் A. நேசமணி. **நேசமணி இல்லையேல் குமரி சி.எஸ்.ஐ. பேராயம் இல்லை. அவரே குமரி சி.எஸ்.ஐ. பேராயத்தின் தந்தை.** அவர் உயிருடன் இருந்த போது பாராட்டி, விழா எடுத்து, மலர் அல்லது நூல் வெளியிட்டிருந்தால் நாம் அவரை குமரிப்பேராய பொன்விழா ஆண்டில் மறந்திருக்கமாட்டோம். இனி எல்.எம்.எஸ். – சி.எஸ்.ஐ. போராட்ட வரலாறை முழுமையாக எங்கிருந்து பெற முடியும்? இந்த போராட்ட வரலாறு இல்லாமல் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தின் வரலாறு முழுமை பெறுமா?

திருச்சபை வரலாறை எழுதுகிறவர்கள் குருமார்களையே மையமாக வைத்து எழுதி வெளியிடுகிறார்கள். இந்தெந்த பிஷப்கள் காலத்தில் இன்னென்ன நடந்தன எனப்பதிவு செய்கிறார்கள். சில புள்ளி விவரங்களையும் அவர்களுடன் இணைத்து, வரலாறு என்று அழைக்கிறார்கள். அவர்கள் காலங்களில் நிகழ்ந்த பாதகங்களையும், அவைகளிலிருந்து விடுபட மக்கள் நடத்திய போராட்டங்களையும் மறைத்து விடுகிறார்கள். சுருங்கக்கூறின் **ஒரு பேராயரை அல்லது போதகரைத் துதிபாடுவது, வரலாறு ஆகி விடுகிறது.**

பேராயர் G. தேவகடாட்சம் அவர்களின் 'பாஸ்' மற்றும் வழிகாட்டி, பேராயர் கிறிஸ்துதாஸ் அவர்கள். அவர்களை மிகைப்படுத்த ***முள்ளில் பதித்த முத்திரைகள்*** என்ற நூலை தேவகடாட்சம் அவர்கள் போதகராக இருக்கும்போது வெளியிட்டார்கள். கிறிஸ்துதாஸ் காலத்தில்

நடந்த மிக முக்கியமான வரலாற்று நிகழ்வு கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தின் நிர்வாகத்தை சினாட் ஏற்றெடுத்த நிகழ்ச்சி – அதிலிருந்து பேராயம் விடுதலையடைந்த வரலாறு. இந்த வரலாறை தேவகடாட்சத்தின் முள்ளில் பதித்த முத்திரைகள் என்ற நூல் தரவில்லை. அந்த நூலினால் என்ன பயன்? சி.எஸ்.ஐ. சினாட் பொன்விழா ஆண்டை கொண்டாடியது. அதை முன்னிட்டு *United to Unite* என்ற ஒரு நூல் வெளியிடப்பட்டது. கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம் பற்றிய ஒரு கட்டுரை தேவகடாட்சம் அவர்கள் கைவண்ணத்தில் அந்நூலில் வெளியாகியிருந்தது. அதில் ஊதியத்துக்கு மாரடித்துவிட்டு ஓய்வு பெற்றுச் சென்ற ஞானதாசன், செல்வமணி, கிறிஸ்துதாஸ், கேசரி ஆகிய பேராயர்கள் மட்டும் மிகைப்படுத்தப்பட்டு, சில புள்ளிவிவரங்களுக்கு சொந்தமாக்கப்பட்டிருந்தனர். பேராய வரலாற்றில் திருப்பு முனைகளை ஏற்படுத்தித் தந்த மார்ஷல் A. நேசமணி அவர்களோ, Adv. P. தர்மராஜ் அவர்களோ இடம் பெறவில்லை. அதனால் அது ஒரு குப்பைதானே?

பேராயர் G. கிறிஸ்துதாஸ் *பாதச்சுவடுகள்* என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டார்கள். அதில் அவர் காலத்தில், நடந்த உரிமைப் போராட்டத்தின் சுவடுகள் எதுவும் இல்லை. ஏன்? அந்த பாதச்சுவடுகள், பாதகச்சுவடுகளாக மாறிவிடும் என்பதே. ஆனால் வரலாற்று மாணவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை அவர் அறிவாரா? எத்தனை கோவில்கள் எத்தனை பள்ளிகள்–எத்தனை கல்லூரிகள் – எத்தனை மருத்துவ மனைகள் – எத்தனை கல்லறைகள் – யார் கட்டினது – யார் திறந்தது என்பதெல்லாம் வறண்டுபோன வகைக்கு உதவாத புள்ளி விவரங்கள். அவைகளால் வரலாற்று மாணவர்களுக்கு எந்த பயனும் இல்லை.

குமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் நிகழ்ந்த உரிமைப் போராட்டங்கள் தான் வரலாறு ஆக முடியும். பேராய நிர்வாகத்தில் சினாட் தலையிட்டபோது அதை எதிர்த்து பேராய மக்கள் நடத்திய போராட்டம் ஒரு வரலாறு. பாதிரியார் ஆட்சியை பேராயங்களில் நிலை நிறுத்த பேராய மாமன்றத்தில் ஒரு போதகருக்கு இரண்டு பொது நிலையினர் பிரதிநிதித்துவம் என்ற வாய்ப்பாடை புகுத்த சினாட் முயன்றபோது, பேராய மக்கள் எதிர்த்து நடத்திய போராட்டம் ஒரு வரலாறு. பேராய நிர்வாகத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று நிலை நாட்டியது ஒரு வரலாறு. **நாம் நடந்து வந்த இந்த பாதையை**

பதிவு செய்யாமல் கூலிக்கு மாரடித்துவிட்டு ஓய்வு பெற்ற பேராயர்களை தூக்கிப் பிடிப்பதால் என்ன பயன்? கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் நடந்து முடிந்த இந்த உரிமைப் போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தித் தந்தவர், பேராயச் செயலர் பொறுப்பில் 27 ஆண்டுகள் பணி புரிந்த வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்கள். அவர் வாழும்போது அவரைப் பாராட்டி அவர்கால பேராய விடுதலை வரலாற்றை பதிவு செய்யாமல் விட்டால் சமகாலத்தவராக வாழ்ந்து வரும் நாம் சமுதாயத்துரோகிகளல்லாமல் வேறு யார்?

வரலாறு யாரைச் சுற்றுகிறது?

வராலாறு நம்மைச் சுற்றி வருகிறதா? அல்லது வரலாற்றை நாம் சுற்றி வருகிறோமா? தமிழகத்தில் சமுதாய மாற்றம் என்று சொல்லும் போது வரலாற்று மாணவர்கள் தந்தை பெரியாரையே சுற்றிச் சுற்றி வருவார்கள். தந்தைப் பெரியாரை விரும்புகிறோம் அல்லது விரும்பவில்லை என்பது இங்கு ஒரு கேள்வியாக எழ முடியாது. சிலர் தங்கள் பெயர் வரலாற்றில் நின்று நிலைக்க வேண்டும் என்பதற்காக, கட்டிடங்களுக்குத் தங்கள் பெயர்களை வைத்துக் கொள்வார்கள், கற்களில் தங்கள் பெயர்களைக் கொத்தி சுவர்களில் பதித்து வைத்துக் கொள்வார்கள், தங்களைப் புகழ் பாடி நான்காம் தர நூல்களை எழுதி வெளியிடச் செய்வார்கள். இவர்கள் வரலாற்றைச் சுற்றி வருபவர்கள்.

நம் நாட்டின் இப்பகுதியில், சமுதாய மாற்றத்துக்குப் பாடுபட்டவர்களில் முன்னணியில் நிற்பவர்கள் மேலை நாட்டு புரோட்டடஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகள். திருச்சபை வரலாற்றில் பிரதான இடத்தைப்பிடித்தவர் கனம் சார்லஸ் மீட் ஐயர் அவர்களே. அவர் நிகழ்த்திக் காட்டிய போராட்டம் "தோள் சீலைப் போராட்டம்" என விலாசப்படுத்தப்பட்டுவருகிறது. மீட் ஐயர் மேலை நாட்டுக்காரர், கிறிஸ்தவன், ரவுடி, இந்தியப் பெண்ணை மணந்தவர் என்றெல்லாம் சொல்லி அவரை சிலர் ஒதுக்கினாலும் வரலாற்று மாணவர்கள் அவரைச் சுற்றித்தான் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

கீழ் ஜாதியினரின் உரிமைப் போராட்டம் முற்றுப்பெறவில்லை. தொடர்ந்து 20–ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் உச்சக் கட்டத்தை அடைந்தது. கீழ் ஜாதியினர் விழித்தெழுந்து போராடி விடுதலை பெற்றனர். இந்த இரண்டாம் கட்டப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர், குமரித்தந்தை மார்ஷல் A. நேசமணி அவர்கள். அவர் மேக்கன், சுயநலவாதி,

கிறிஸ்தவன் என்றெல்லாம் சொல்லி சில நாஞ்சில் நாட்டார் ஓரம் கட்ட முயற்சி மேற்கொண்டாலும், வரலாற்று மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட விடுதலை வரலாற்றைப் படிப்பதற்கு நேசமணியை சுற்றிச் சுற்றி வருவதைத் தவிர வேறு வழி கிடையாது.

இவ்விரண்டு போராட்டங்களும் திருச்சபை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை. திருச்சபை வரலாற்றில், மூன்றாவதாக இடம் பெறுவது திருச்சபையார் (Lay-men) குருமாருக்கு (Clergy) எதிராக நடத்திய ஒரு உரிமைப்போராட்டம், இன்னும் தெளிவாகச் சொன்னால்.... கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராய மக்கள் பேராயர், போதகர் மற்றும் சினாட் (குருமார்கள் சபை) க்கு எதிராக நிகழ்த்திய ஒரு உரிமைப்போர். இந்தப் போரட்டம் 1984–85 –ம் ஆண்டு நடந்தது. விளைவு, திருச்சபையாரின் உரிமைகள் நிலை நாட்டப்பட்டன. தென்னிந்தியத் திருச்சபை கூட்டுக்கு உட்பட்ட 22 பேராயங்களுக்கும் குருமார் சபையிடமிருந்து விடுதலை கிடைத்தது. **இந்த விடுதலைப் போராட்ட நாயகன் வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்கள்** கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயச் செயலராகப் பல்லாண்டுகள் பணியாற்றியவர். நாம் அவரை விரும்புகிறோமோ இல்லையோ, இந்த உரிமைப்போர் பற்றிப்பயிலும் வரலாற்று மாணவர்கள் வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களைத்தான் சுற்றிச் சுற்றி வர வேண்டும் என்பது கட்டாயமே.

குருமார் சபைக்குக் கடிவாளம்

கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் அடிக்கடி சட்ட திருத்தங்கள் செய்யப்படுகின்றன. அவை பேராயரின் அதிகார வரம்பை விரிவு படுத்துவதாய் உள்ளன. எனினும் வழக்கறிஞர் P. தர்மராஜ் பேராயர்களின் கட்டவிழ்ந்த போக்குக்குக் கடிவாளம் போட்டுக்கொண்டிருந்தார். இது கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராய மக்களுக்குப் பெரும் பாக்கியமே. 1984 மற்றும் 1985–ம் ஆண்டுகளில் வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்கள் தலைமையில் குமரி C.S.I. பேராய மக்கள் நிகழ்த்திய போராட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அந்த ஆண்டுகளில் நடந்த ஒரு வழக்கின் தீர்ப்பில் காணும் சில ஷரத்துக்கள் இங்கே தரப்படுகிறது.

கூட்டம் நடத்த பேராயர் நாள் தரவில்லை அல்லது பேராயர் கூட்டத்துக்கு வரவில்லை என்ற காரணத்துக்காக பேராய மாமன்றத்தையோ, நிர்வாகக்குழுவையோ, வாரியங்களையோ கூட்டாமலும் அவை செயல்படாமலும் இருக்க முடியாது. கலைக்க சினாட் சட்டத்திலும் இடம் இல்லை – பேராய சட்டத்திலும் இடம் இல்லை.

பேராய பொருளாளரை நியமிக்கும் பொறுப்பு காரிய நிர்வாகக்குழுவுக்கு மட்டுமே உண்டு. நிதி நிர்வாகத்தில் பேராயருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை.

சினாடுக்கோ, பேராயருக்கோ செயல்பட்டு வரும் பல்வேறு குழுக்களைச் செயலிழக்கச் செய்ய உரிமை இல்லை. பேராயர் தடை உத்தரவு பிறப்பித்தால் உடனடியாக போகும் வழியையும் பேராயர் தந்தாக வேண்டும். இல்லையேல் தடை ஆணையை மீறி தீர்மானம் போட்டு செயல்படுத்த குழுக்களுக்கு உரிமை உண்டு.

பேராய உரிமைகளின் பாதுகாவலர்

மார்ஷல் A. நேசமணிக்குபின் வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களே பேராயத்தின் உரிமைகளைப் பாதுகாத்து நின்றவர் என்றால் மிகையாகாது. ஒரு பேராயத்தின் நிர்வாகத்தை சினாட் ஏற்றெடுக்க முடியாது என்பதை நீதிமன்ற ஆணை மூலம் உறுதிப்படுத்தினார். ஒரு பேராயத்தின் உள் விவகாரங்களில் நீதி மன்றம் தலையிட முடியாது என்பதை நீதிமன்ற ஆணை மூலமே உறுதிப்படுத்தினார். 1:2 என்ற போர்வையில் சினாட், பேராயங்களில் பாதிரியார் ஆட்சியை அமல்படுத்த முயன்றது. அதை 1:3 ஆக்கி பேராயங்களை பாதிரியார் ஆட்சியிலிருந்து மீட்டுத் தந்தார். சமீப கால வரலாற்றில் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் பாதிரியார்களின் ஆட்சியை வலுவிழக்கச் செய்து, பேராபத்துக்களிலிருந்து பேராயத்தைக் காத்து இரட்சித்தவர் இவரே.

"When time is past and history is written, we do not esteem the rich men most, nor the prosperous, nor the powerful, nor the learned, but men who have contributed their might to relieve humanity from bondages." - M.D.Daniel

Certainly, Mr. P. Dharmaraj ranks next to Marshal A. Nesamony, the **Father of Kanyakumari C.S.I. Diocese.** Adv. P. Dharmaraj deserves the honorary title, **The Guardian of Diocesan Rights.** Hence, Kanyakumari Institute of Development Studies confers the same on Adv. P. Dharmaraj.

நாகர்கோவில்
05 மார்ச் 2010

Dr. D. Peter
President, KIDS.



Adv. P. தர்மராஜ்

ஓர் அறிமுகம்

தமிழகத்தின் தென்கோடி குமரிமாவட்டம். குமரியின் தலைநகர் நாகர்கோவில். இந்நகருக்கு மேற்கே 27 கி.மீட்டர் தொலைவில் அமைந்த ஒரு சிற்றூர் தேவிகோடு. இவ்வூரே திரு. P. தர்மராஜ் அவர்களின் தாயாரான திருமதி. கிரேஸ் லிசி அவர்களின் சொந்தஊர். இந்த ஊரில் தாய்க்குத் தலைமகனாய் 1934–ம் ஆண்டு மேய் திங்கள் 24–ம் நாள் திரு. P. தர்மராஜ் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு பிரபலமான வக்கீல், திரு. P. பாக்கியநாதன் அவர்கள். இவர் தன் மனைவி மக்களுடன் குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் குழித்துறை நகருக்கு அருகாமையில் அமைந்த ஈத்தவிளை என்னும் சிற்றூரில் வசித்து வந்தார். திரு. P. தர்மராஜ் அவர்களுக்கு 8 சகோதரிகளும் 6 சகோதரர்களும் உண்டு.

திரு. P. தர்மராஜ் தன் ஆரம்பக் கல்வியைச் சொந்த ஊரிலேயே முடித்துக் கொண்டார். பள்ளிக் கல்விக்காக குழித்துறையின் அருகாமையில் உள்ள மார்த்தாண்டத்துக்கு வந்தார். கணக்குப் பாடம் எடுத்து தன் இளங்கலை பட்டப்படிப்பை நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் முடித்து முதல் வகுப்பில் தேறினார். பொறியியல் படிக்க விரும்பிய திரு. P. தர்மராஜ் தன் தந்தையின் அறிவுரையை ஏற்று, சட்டம் பயில திருவனந்தபுரம் சட்டக் கல்லூரிக்குச் சென்றார். சட்டத்தில் பட்டம் பெற்றபின் திரு. P. தர்மராஜ் அவர்கள் தன்னை ஒரு வழக்கறிஞராக 1958–ல் பதிவு செய்து கொண்டார்.

வழக்கறிஞர் P. தர்மராஜ் 1959–ல் தக்கலையில் தனியாக தன் தொழிலை ஆரம்பித்தார். 1965 –ல் தன் தொழில் அலுவலகத்தை நாகர்கோவிலில் திறந்தார். வழக்கறிஞர் P. தர்மராஜ் 26–5–1969 –ல் குமரி மாவட்டத்தின் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். அந்தக் காலக் கட்டத்தில் அரசு வழக்கறிஞர்களிடையே இவர்தான் இளையவர் என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். 18–12–1976 வரை, சுமார் $6^1/_2$ ஆண்டுகள்

அரசு வழக்கறிஞராக இவர் தொடர்ந்தார். 1980–ல் சில அரசு வழக்குகளில் வாதாட வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்ளை அரசு தனி அரசு வழக்கறிஞராக நியமித்தது. அந்தப் பதவியிலும் அவர் 3 ஆண்டுகள் தொடர்ந்தார். இவர் வழக்கறிஞர் பணியில் 2008 –ம் ஆண்டு பொன்விழா கண்டார்.

1986 –ம் ஆண்டு வழக்கறிஞர் P. தர்மராஜ் நாகர்கோவிலில் நகரசபைத் தலைவராக மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் அவர் 5 ஆண்டுகள் முழுமையாக அமர்ந்திருந்தார். நகரத்தந்தை என்ற முறையில் அவர் ஆற்றிய பணிகளை மக்கள் இன்னும் நினைவு கூருகின்றனர். ஆக்கிரமிப்புகளை அகற்றி முன்னாள் நகரத்தந்தை திரு. G. கிறிஸ்டோபர் பெயரில் வடசேரியில் ஒரு பிரமாண்டமான பேருந்து நிலையத்தை அமைத்துத் தந்தார். அண்ணா பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தித் தந்தார். நாகர்கோவிலில் கிறிஸ்தவக் கிராமத்தில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த பெதஸ்தா குளத்தை மனோகரமான பெதஸ்தா காம்ப்ளக்ஸ் ஆக மாற்றித்தந்தார். நகர எல்லைக்குள் பல வணிக வளாகங்களையும் மாளிகைகளையும் கட்டி நகரை அழகுபடுத்தினார். புறநகர் பகுதிகளில் 340 குழாய்க் கிணறுகளையும் இரண்டு மேல்நிலைத் தண்ணீர் தொட்டிகளையும் அமைத்து தண்ணீர் பற்றாக்குறைக்கு சவால் விட்டார். விடுதலைப்போர் முன்னணி தியாகி, திரு. A. சிதம்பரநாதன் நாடார் பெயரில் நினைவுச் சந்தை அமைத்து அவரைக் கௌரவப்படுத்தினார்.

வழக்கறிஞர் P. தர்மராஜ் அரசியல் ஈடுபாடு உடையவர். திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். இருமுறை அக்கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினராக இருந்தார். தி.மு.க. அரசு இவரை அரசு வழக்கறிஞராக நியமித்தது. தோவாளை கால்வாய் ஊழல் வழக்கை அரசு சார்பில் நடத்தி வெற்றிவாகை சூடினார். தி.மு.க. வேட்பாளராகவே நாகர்கோவில் நகரசபைத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்டார்.

மார்ஷல் A. நேசமணி அரசியல் ஈடுபாட்டுடன் குமரி சி.எஸ்.ஐ. பேராய நிர்வாகத்திலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தார். அது போலவே, வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களும் அரசியலுடன் குமரி சி.எஸ்.ஐ. பேராய நிர்வாகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 1970–ம் ஆண்டு குமரி சி.எஸ்.ஐ. பேராயத்தின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 27 ஆண்டுகள் அப்பணியில் இருந்துள்ளார்.

சி.எஸ்.ஐ. சினாட் செயற்குழு அலுவல்குழு ஆகியவற்றிலும் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார். சி.எஸ்.ஐ., டி.ஏ. செயற்குழுவில் 12 ஆண்டுகள் உறுப்பினராய் இருந்தார். 2003–ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட சினாட் சட்டம் மற்றும் விதிகள் (Constitution and Rules) மறுசீரமைப்புக் குழுவிலும் பணியாற்றினார்.

வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களின் மனைவி திருமதி. சுலோசனா தர்மராஜ் அவர்கள். இவர்களுக்கு ஒருமகனும் 3 மகள்களும் உண்டு. தர்மராஜ் அவர்களின் குடும்பம் ஒரு வக்கீல் குடும்பம். தந்தை திரு. P. பாக்கியநாதனைப் போல இவரும் இவரது இருசகோதரர்களும், இவரது ஒரு மகளும், சகோதரர் ஒருவரின் இருமகன்களும் வழக்கறிஞர்கள். இது அவருடைய சொந்த சமுதாயத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தின் அரசியல் வரலாறு (Political History) காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். அந்நிலையைத் தவிர்க்க கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றம் முயற்சி மேற்கொண்டது. அதன் ஒரு படியாக வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்களைப் பாராட்டி – பட்டமளித்து – சிறப்பு மலர் வெளியிட்டு வரலாறை பதிவு செய்ய முன் வந்தது. இது தொடர்பான ஆயத்தங்களுக்கு வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்கள் ஒத்துழைப்பு தராமல் தாக்காட்டிக் கொண்டேயிருந்தமையால் பாராட்டுவிழா நடத்த முடியவில்லை. அவருக்கு பட்டமளிக்க முடியவில்லை. சிறப்பு மலர் வெளியிடவும் முடியவில்லை.

வரலாறைத் தராமல், வரலாற்று மாணவர்களையும், மக்களையும் ஏமாற்றுவது முறையல்ல என்று கருதி, பொருட்செலவு மற்றும் நஷ்ட–லாபம் முதலியவைகளை கணக்கில் கொள்ளாமல், வரலாறை நூல் வடிவில் வெளியிட முன் வந்தது கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றம். எனவேதான், ***உரிமைகளின் பாதுகாவலர் Adv. P. தர்மராஜ்*** என்ற இந்தநூல். பெரும் முயற்சிகள் மேற்கொண்டும், வழக்கறிஞர் P. தர்மராஜ் அவர்கள் ஒத்துழைப்புத்தர ஒரு கூச்சப்பட்ட நிலையை வெளிப்படுத்தியதால் ***Adv. P. தர்மராஜ் : ஓர் அறிமுகம்*** என்ற இந்த தலைப்பின்கீழ் ஒரு முழுமையான விவரம் வாசகர்களுக்குத் தர முடியாமல் போயிற்று என்பதை மன்றம் அறிவிக்கிறது.

நாகர்கோவில்
05 மார்ச் 2010

டாக்டர் D. பீட்டர்
தலைவர், KIDS

பொருளடக்கம்

1 எல். எம். எஸ். - சி. எஸ். ஐ. வழக்கு - I

திரு. P. தர்மராஜ் அவர்கள் தக்கலையில் தன் வழக்கறிஞர் பணியைச் செய்து கொண்டிருக்கும்போது, குமரி சி.எஸ்.ஐ. பேராய நிர்வாகத்திற்குள் நுழையும் முன்பு இந்த வழக்கை வெற்றிகரமாக பேராயத்துக்கு நடத்தித் தந்தார். அவரை பாராட்டி முன்னாள் பேராயர் உயர் மறைதிரு. I.R.H. ஞானதாசன் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

வழக்கு எண்	:	ஓ.எஸ். எண். 1 / 1960
நீதிமன்றம்	:	நாகர்கோவில் துணை நீதிமன்றம்
நீதிபதி	:	திரு. M.K. சேது மாதவன், துணை நீதிபதி
வாதிகள் *(Plaintiffs)*	:	எல்.எம்.எஸ். சார்பாக திரு. W. R. ஸ்டீபன் முதற்கொண்டு 5 நபர்கள். வாதிபாகம் வழக்கறிஞர்: திரு. A. முத்துராமலிங்கம் பிள்ளை
பிரதிவாதிகள் *(Defendants)*	:	சி.எஸ்.ஐ. சார்பாக அருள் திரு. R.H.ஈஸ்டாப் முதற் கொண்டு 31 நபர்கள். 8- வது நபர் அருள்திரு. I.R.H. ஞான தாசன் - போதகர் நிலையில். 31-வது நபரும் அவரே - பிஷப் என்ற நிலையில்.

தீர்ப்பு தரப்பட்ட நாள் : 6 வருடங்களுக்குப் பின், 1-4-1967. தீர்ப்பு 397 பக்கங்களைக் கொண்டது - 138 பாராக்கள் - 45 விவாதத்துக்குரிய பொருள்கள் - வாதி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் 105 - பிரதிவாதி தரப்பில் 58 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

வாதிகளின் வேண்டுதல் : லண்டன் மிஷன் சபைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரதிவாதிகள் கைவசம் இருக்கின்றன. லண்டன் மிஷனை விட்டு வெளியேறி சி.எஸ்.ஐ. யில் சேர்ந்தவர்கள் எல்.எம்.எஸ் - க்கு அன்னியர்கள். எல்.எம்.எஸ். சொத்தை அனுபவிக்கும் தகுதியை இழந்து விட்டார்கள். எனவே அவர்கள் கைவசம் இருக்கும் சொத்துக்களை மீட்டுத்தரவேண்டும். வழக்கு முடிவது வரை அவர்கள் கைவசம் இருக்கும் சொத்துக்களின் பேரில் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் தர வேண்டும். வழக்குச் செலவையும் தர பிரதிவாதிகளுக்குக் கட்டளை இடவேண்டும்.

" This is a suit by the plaintiffs on behalf of themselves, the London Mission Churches, the London Mission Christians and the Trust. The suit is for a declaration that the plaint properties are Trust properties of the London Mission Church or the several churches in the Madras and Kerala States and the London Mission Christian community, that the plaintiffs and those who remain as London Mission Christians are alone entitled to the beneficiary rights to the plaint properties and those London Mission Christians who have joined the C.S.I. have thereby become aliens to the L.M. Churches and have forfeited all rights, interest and benefits over the plaint properties by the plaintiffs on behalf of the Travancore Church Council which are found in the possession of the defendants with future mesne profits at the rate of one lakh of rupees per annum, for an injunction restraining defendents 2 to 8 and their agents, commissioned, ordained or otherwise appointed, from entering upon the plaint L.M. properties, churches and cemetries (scheduled) and conducting divine services or officiating them from alienating the plaint L.M. properties and committing waste on the properties and for costs.

முடிவு : 31-ம் பிரதிவாதியான பிஷப் I.R.H. ஞான தாசன் தரப்பில் இந்த வழக்கு காலம் கடந்ததாகையால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதாடப்பட்டது. அதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். வழக்கை தள்ளுபடி செய்து வழக்குச் செலவை வாதிகள் பிரதிவாதிகளுக்குத் தர வேண்டும் என்று தீர்ப்பானது. முடிவாக கடைசி 8 பாராக்களில் சொல்லப்பட்டவை வருமாறு :

131. .... as such the plaintiffs are not competent to use

132. .... In the circumstances referred to by me the suit is not maintainable

133. .... In the circumstances referred to by me the plaintiffs are not entitled for the declaration

134. The suit is defective and ineffective, as the individual churches are not in record.

135. In the circumstances stated by me the suit is barred against the Church of South India. I have already averted to the date of succession and the formation of the C.S.I. It is evident from that, that the suit as against the Church of South India is barred by limitation. I find that the suit against the Church of South India is barred and that the plaintiffs are not entitled to any relief against the 31 st defendent (Bishop I.R.H. Gnanadhason)

136. The plaintiffs are not entitled to cost

137. The contesting defendants are entitled to costs of the contesting defendants.

***Mr. P. Dharmaraj, B.Sc.,B.L**, Advocate, Thuckalay*

Dear Mr. Dharmaraj

I gather that you successfully handled the above case. But unfortunately an appeal is being filed before the High Court, Madras

I am hereby authorising Mr.D.J. Victor to receive the case file from you so that we could send it to our lawyer at Madras.

If the Diocese has to make any payments to you in this regard, please let me know the same.

Yours Sincerely
I.R.H. Gnanadhason

இந்த வழக்கை நடத்திக் கொடுத்ததற்காக பேராயத்திலிருந்து கைமாறாக ஊதியம் எதுவும் திரு. P. தர்மராஜ் அவர்கள் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

2 எல். எம். எஸ். - சி. எஸ். ஐ. வழக்கு - II

வழக்கு எண் : ஏ. எஸ். எண். 592 of 1996 : எல்.எம்.எஸ். - சி.எஸ்.ஐ. வழக்கு விஷயமாக, இரண்டாவது மேல் முறையீடு வழக்குகள், ஏ. எஸ்.எண். 592 to 594 of 1996 என்ற எண்களில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பதிவான வழக்கு எண். A.S.No. 592 of 1996 நாகர்கோவில் நீதி மன்றத்தில், வடசேரி தொடர்பாக பதிவான O.S.No. 50 of 1977 -ல் இருந்து எழுகிறது. A.S.No.593 of 1996 பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் கிறிஸ்துகோவில் சபை தொடர்பாகப் பதிவான O.S. No.93 of 1977 -ல் இருந்து எழுகிறது. A.S.No. 594 of 1996 குழித்துறை நீதி மன்றத்தில் குழிக்கோடு சபை தொடர்பாகப் பதிவான O.S.No. 26 of 1979 -ல் இருந்து எழுகிறது. இந்த மூன்று இரண்டாவது மேல் முறையீடுகளும், 592, 593 & 594 ஒரே கோரிக்கை உடையவைகளாகையால், மூன்றையும் ஒன்றாக இணைத்து A.S. No. 592 of 1996 என்ற எண்ணில் விசாரிக்கப்படுகிறது.

நீதிமன்றம் : மதராஸ் உயர்நீதிமன்றம்

நீதிபதி : திரு. S.S. சுப்பிரமணி

வாதிகள் (Plaintiffs) : எல்.எம்.எஸ். சார்பாக திரு. V. ஆசீர்வாதம் முதற்கொண்டு 7 நபர்கள்

பிரதிவாதிகள் (Defendants) : சி.எஸ்.ஐ. சார்பாக பிஷப் G. கிறிஸ்துதாஸ் முதற்கொண்டு 7 பேர். திரு. P. தர்மராஜ் இரண்டாவது பிரதிவாதி.

தீர்ப்பு தரப்பட்ட நாள் : 3-7-1996. தீர்ப்பு 36 பக்கங்கள் - 38 பாராக்கள். விவாதத்துக்குரிய பொருள்கள் (Issues) 8

வாதிகளின் வேண்டுதல்கள் : வடசேரி சபையும், அதன் சொத்துக்களும், கிறிஸ்துகோவில் சபையும் அதன் சொத்துக்களும் குழிக்கோடு சபையும் அதன் சொத்துக்களும் தென்னிந்திய திருச்சபை வசம் இருப்பதை எல்.எம்.எஸ். சங்கத்துக்கு மீட்டுத் தரவேண்டும்.

" In O.S. No. 50 of 1977, the plaintiffs therein filed the suit for declaration of title of the Church of South India Trust Association, to the plaint schedule of property and for recovery of possession of the same on behalf of the Association and for consequential injunction. The subject matters in that suit is Vadasery Church and its properties. In O.S.No. 93 of 1977, the subject matter is Kristucoil Church and the relief sought for is to declare the right, title and possession of the Church of South India Trust and for a pernament prohibitary injunction. In O.S. No. 26 of 1979 the subject matter is Kuzhicode Church, which is also a suit filed by the Church of South India Trust Association for its right, title and interest being declared, and for pernament prohibitary injunction."

இந்த வழக்கின் விவரங்கள் : திருவிதாங் கூரிலுள்ள புரோட்டஸ்தாந்து சபைகள் லண்டன் மிஷன் சபைகள் என அழைக்கப்படுகின்றன. லண்டன் மிஷன் 1795-ல் ஸ்தாபிக்கப்பட்டது. அது அனுப்பிய மிஷனெரிகள் இங்கு வந்து அனேகரை கிறிஸ்தவர்களாக்கினார்கள். தங்கள் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக 1863-ல் ஒவ்வொரு மிஷன் மையங்களிலும் 'டிஸ்டிரிக்கட் கமிட்டி' களை ஏற்படுத்திக் கொண்டார்கள். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் 'சபை இணையம்' வேண்டும் என்ற சிந்தனை வலுப்பட்டது. மிக நீண்ட விவாதத்துக்குப்பின் 1946 -ல் இந்த சிந்தனை கைகூடியது. ஒரு மிகப்பெரிய பெரும்பான்மையுடன் இந்த தீர்மானம் நிறைவேறியதால் தென்னிந்தியத் திருச்சபை 26-9-1947-ல் உருவானது. கம்பனி சட்டத்தின் கீழ்பதிவும் ஆனது. எல். எம்.எஸ். இல்லா நிலையை அடைந்தது. சொத்துக்கள் யாவும் எல். எம். எஸ். என்ற தலைப்பை இழந்து சி.எஸ்.ஐ. என்ற தலைப்பைப் பெற்றன. இந்த இணைப்பை விரும்பாத சிலர், O.S.No. I of 1960 என்ற வழக்கை நாகர்கோவில் துணை நீதி மன்றத்தில் பதிவு செய்து C.S.I. சொத்துக்களை L.M.S. சொத்துக்கள் என பிரகடனப்படுத்த வேண்டினர்.

C.S.I. உருவாக எடுத்த தீர்மானம் முறையானது, செல்லுபடியாகும் என நாகர்கோவில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்கு பிரதிநிதித்துவமுறையில் பதிவானது செல்லாது எனவும் தீர்ப்பளித்தது. O.S.No. 1/1960 வழக்கு தள்ளுபடியானதும் உயர் நீதி மன்ற விசாரணைக்கு வந்தது. அந்த மேல் முறையீடு A.S. No. 23/1968 தள்ளுபடியானது. உச்சநீதிமன்றம் S.L.P. No. 1012 of 1985 என்று விசாரித்து வழக்கை தள்ளுபடி செய்தது.

இப்போதுள்ள 3 மேல் முறையீடு வழக்குகளும் O.S. No. 1 of 1960 தீர்ப்பின் அடிப்படையில் தனி சபைகளைக் கட்டுப்படுத்தாது என்பதாகும். காலம் காலமாக அந்தந்த சபைகள் அனுபவித்து வந்த சொத்துக்கள் வேண்டும் என்பதாகும்.

"The Protestant Churches in Travancore were originally known as London Mission Churches, since they were founded by missionaries sent out by London Missionary Society. The same was found in 1795. The first & second missionaries sent by the Society converted large number of persons in Travancore. In 1863, with a view to coordinate the activities of the missionaries and to ensure efficient working of the missions, the society directed the missionaries to form in all mission centres District Committees and issued general regulations in that behalf. By the end of 19th century there came into being a strong movement for the unity of churches in India."

"At a conference held in 1919, called the Tranquebar Conference, the possibility of a union with Episcopal Churches subject to certain cardinal principles was envisaged. Negotiations continued thereafter for a long time and after prolonged discussions in various committees and General Body meetings, a proposal emerged. This proposal was approved by a meeting of the Church Councils in 1946. The resolution for the union was placed before a General Assembly in September 1946 and was passed by an overwhelming majority, and the Church of South India was formed. It was inagurated on 26-9-1947. The Church of South India Association was incorporated Union under companies Act. After the formation of the Trust all the assets were

taken over by it and thus the London Missionary Society was wound up. Certain members who were against the merger of the L.M.S. with the newly formed C.S.I. Trust filed suits and one such suit was O.S. No. 1/1960 on the file of sub-ordinate judges court, Nagercoil. In that suit, the plaintiffs claimed a declaration that the plaint properties are trust properties of the L.M. Churches and for consequential reliefs."

"As per judgement the Resolution of 1947 is valid, the L.M.S. has no existence. It was further held the suit is bad. The dismissal of the suit was challenged before this court (High court) in A.S.No. 23 of 1968. The appeal was dismissed as abated. Special Leave Petition was filed before the Supreme court as S.L.P.No. 1012 of 1985. Same was also dismissed."

O.S. No. 1/1960 வழக்குக்கு பிரதி நிதித்துவ தகுதி கிடையாது என்று தீர்ப்பு வெளியானதும் தனி சபைகளை O.S.No. 1/1960 கட்டுப்படுத்தாது என எல்.எம்.எஸ். காரர்கள் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு சபை சபையாக வழக்குகள் தொடர்ந்தன. அவைகளில் சில, வடசேரி சபை, கிறிஸ்துகோவில் சபை, குழிக்கோடு சபை.

முடிவு : சி.எஸ்.ஐ. அறக்கட்டளைதான் சொத்துக்களுக்கு சொந்தம் கொண்டாட முடியும். அதில் தலையிட முடியாது. எனவே எல்லா இரண்டாம்மேல் முறையீடுகளும் தள்ளுபடியாகின்றன.

"I hold that the findings of the courts below that the Church of South India Trust Association are the owners of the properties and they are entitled to a declaration of title and are also entitled to manage the properties are not liable to be interfered with. In the result, all the second appeals are dismissed with costs. Consequenly the connected C.M.Ps are also dismissed.

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

3 எல். எம். எஸ். - சி. எஸ். ஐ. வழக்கு - III

வழக்குஎண் *: C.A.No. 3292 of 1993*

நீதிமன்றம் ***:*** உச்சநீதிமன்றம், புதுடெல்லி

நீதிபதி ***:*** திரு. J. ராஜேந்திரபாபு

வாதிகள் (Plaintiffs) : அன்பையா மற்றும்

பிரதி வாதிகள் (Defendents) : கிறிஸ்துதாஸ் மற்றும்

தீர்ப்பு நாள் : 19-02-2003, தீர்ப்பு 5 பக்கங்கள்

வாதிகளின் வேண்டுகோள் : உயர்நீதிமன்ற நீதிபதி A.S.No. 23 of 1968 -ஐ தள்ளுபடி செய்ததை செல்லுபடியாகாது என அறிவிக்க **தள்ளுபடியாகக் காரணம்? :** O.S. No. 1/1960-ம் நம்பர்வழக்கில் L.M.S. சபைகள் S.I.U.C. ஆனதும், S.I.U.C. சபைகள் C.S.I. ஆனதும் முறைப்படி நடந்த மாற்றங்கள். இந்த மாற்றங்கள் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியவை என்பது கீழ் கோர்ட் தீர்ப்பு. அது மேல்முறையீடு வழக்காக உயர் நீதி மன்றத்தின் A.S.No. 23 of 1968 நம்பர் -ல் இருக்கும் போது வாதிகள் ஒவ்வொன்றாக இறந்து விடுவதால் வழக்கு தள்ளுபடியாகிறது. அவர்களுக்குப் பதிலாக, எல்.எம்.எஸ். சார்பாக அன்பையாவும் தர்மக்கண்ணும் தங்களை வாதியாக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் மனு 13-03-1974 -ல் விசாரணைக்கு வருகிறது. காலாவதியாகி விட்டது என அவர்கள் மனு தள்ளுபடியாகிறது. எனவே A.S.No.23/1968 -ஐ மீண்டும் விசாரிக்கக் கட்டளை யிடுமாறு கேட்டு உச்சநீதி மன்றத்தில் C.A.No. 3292 of 1993 தாக்கலாகிறது.

தீர்ப்பு : கடைசிவாதி 7-10-1973 -ல் மரணமடைந்துள்ளார். அதிலிருந்து கணக்கிடும் போது அன்பையா-தர்மக்கண் மனுக்கள் காலாவதியாகவில்லை. அதனால் A.S.No. 23/1968 -ஐ விசாரிக்கலாம். சட்டப்படி விசாரித்து தீர்ப்பு வழங்க உயர்நீதி மன்றத்துக்கு வழிகாட்டுகிறது. எனவே மனு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

"If a suit had been filed in a representative capacity there can be no abatement on the death of any one of the plaintiffs or the appellants. Within the period set out there in an application for impleadment could be made in as much as no particular provision is made there as to the period within which such application can be made. If we recon the time from the time the last surviving appellant died that is from 7-10-1973 the application filed by Anbiah & Dharmakkon was within time and, therefore, the Division Bench could not have passed the order made on 10-12-1975 that the party concerned is not diligent in prosecuting the appeal even on the statement of law made by the High Court."

"Therefore, the application for setting aside the order of dismissal of appeals and for impleadment is filed within three years from the date of order of dismissal for non-prosecution and is thus within time. In that view of the matter, the observation of the High Court in the course of its order under apeal that the application to come on record is hopelessly barred by time and there was no scope to review the order made earlier in the appeal will not be correct."

Thus the appeal in A.S.No. 23/1968 stands restored and remitted to the High Court for Disposal in accordence with law. The matters be remitted to the High Court for fresh consideration in accordance with the law. In the Special Leave Petitions Leave is granted.

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

4 எல்.எம்.எஸ். தலைமைச் சங்கத்தின் நிலை

1949-ல் ஆரம்பித்த L.M.S. - C.S.I. நீதிமன்ற வழக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இச்செயலில் L.M.S. தலைமைச் சங்கத்துக்கு உடன்பாடு உண்டா? தலைமைச் சங்கம் இங்குள்ள L.M.S. அணியினரை ஆதரிக்கிறதா? இந்த கேள்விகளுக்கு விடை காண்பது சில தோல்விகளுக்குக் காரணம் என்ன என்பதற்கு விளக்கமாக அமையும்.

1795-ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் துவக்கப்பட்டதே லண்டன் மிஷனெரி சங்கம் (L.M.S). அது உலகத்தின் பல பாகங்களிலும், கடவுளின் வார்த்தை (Word of God) யை அறிவிக்க மிஷனெரிகளை அனுப்பியது. இயேசுவின் பெயரால் தங்களுக்கென்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது சங்கத்தின் நோக்கமல்ல. அதனால் மிஷனெரிகள் எந்தப்பிரிவு கிறிஸ்தவத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கேள்வி முக்கியமில்லாதிருந்தது. லுத்தரன் சபை, ஆங்கிளிக்கன்சபை, பிரிசிபிட்டேரியன் சபை, காங்கிரிகேஷனல்சபை என்று பல பிரிவு மிஷனெரிகள் தங்கள் திருப்பணியை திருவிதாங்கூரின் தென்பாகத்தில் 1806 முதலே ஆரம்பித்து செய்துவந்தார்கள்.

இங்ஙனம் செய்து வரவே பராமரிக்கப்பட வேண்டிய சபைகளின் எண்ணிக்கை வளர்ந்தது. அறிவைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் பள்ளிகளின் எண்ணிக்கையும் சரிசமமாக வளர்ந்து கொண்டு வந்தது. முதலில் மிஷனெரிகள் கொடுக்கும் அறிக்கைகளின் அடிப்படையில்

தலைமைச்சங்கம் சிலவழிகாட்டல்களைத் தந்து கொண்டிருந்தது. பின் இங்குள்ள செயல்பாடுகளைத் தனிகுழு அமைத்து ஆய்ந்து தலைமைச் சங்கம் வழிகாட்டியது.

தலைமைச் சங்கத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டது. எனவே சிலசபைகளுக்கு சுய ஆட்சியும் சுயபராமரிப்பும் கொடுத்தது. அப்படி சுயமாக இயங்கும் சபை அதைச் சார்ந்த சபைகள் என வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த வரலாற்றில் 1864, ஒரு முக்கிய திருப்பத்தைத் தருகின்றது. 4 நாட்டு ஐயர்கள் திருநிலைப் படுத்தப்பட்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

இந்தியாவில் சுதந்திர வேட்கை வலுவடைந்து வருவதை மிஷனெரிகள் உணர்ந்தனர். அவர்களுடைய பொறுப்புகளை விட்டு வெளியேறும் காலம் நெருங்குவதைக் கண்டனர். அப்படி இருக்கும் போது சபைகளின் இணைப்பு என்ற சிந்தனை உருவாகிறது. எல்.எம்.எஸ். தலைமைச் சங்கமும் அது நல்லது என்று கண்டது. அதன் மூலம் 1908-ல் சபை பிரிவுகள் ஒன்றாகி தென்னிந்திய சபை ஐக்கியம் (S.I.U.C.) உருவாகியது. அந்த பிரிவுகளாவன :

1. Travancore Church Council	- L.M.S.
2. Jaffna Church Council in Ceylon	- American Congregational
3. The Malabar Church Council	- Basel Mission in Switzerland
4. Madura Church Council	- American Mission
5. Madras Church Council	- American Dutch Presbyterian
	- Australian Presbyterian
	- Scotland Mission &
	- L.M.S. in Madras
6. Telugu Church Council	- American Mission
7. Kannada Church Council	- L.M.S.
8. North Tamil Church Council	- American Mission

இந்த 8 பிரிவுகளும் சபை ஐக்கியம் பற்றி எடுத்த முடிவுகள் வருமாறு:

REPORTS OF COUNCILS

Madura Church Council

The Madura Church Council being very desirable to have Church Union consummated in the near future, both because of the need for such Union not only in South India but also throughout all the world in this time of stress and tumult and war, is still confidently persuaded that the Proposed Scheme of Union prepared by the Joint Committee as it was passed in 1936 together with the subsequent modifications will meet the needs of our Church and provide a stronger and better Church which will more truly represent the Body of which Christ himself is the head and, by its increased union and strength, be able to proclaim the Gospel with greater power here in South India.

Malabar Church Council

This Council is grateful to note that the joint Committee on Union has substantially incorporated its proposals into the Scheme of Union. Remembering also the letter sent by the Home Board on this question it declares that it is ready to enter into Union without further amendments to the Scheme.

Madras Church Council

The Madras Council pledges itself to vote for Union on the basis of the Scheme as it shall have been modified by the above, or may be amended by general agreement of the negotiating Churches.

North Tamil Church Council

The North Tamil Church Council reaffirms its request for the practice of Inter-celebration and Inter-communion between the negotiating Churches and for the inclusion of lay Celebration of the Sacraments in the Scheme of Union so that the Councils may sanction it where necessary. With these modifications the N.T.C.C. is prepared to accept the Scheme of Union.

Kanarese Church Council

The Kanarese Church Council which two years ago accepted the proposed Scheme of Union, whether the amendments proposed by the General Assembly were secured or not, declares once again that it is prepared to enter the United Church on the basis of the Scheme as it now stands and earnestly hopes that the consummation of union may be brought about within as short a time as possible.

Jaffna Church Council

The Jaffna Church Council passed the following resolution on 14-2-'41:

"It has never been found necessary in the area of the Jaffna Church Council of the S.I.U.C. to resort to Lay Celebration but as it belives in the doctrine of the priesthood of the whole church we earnestly hope that the United Church of the future will be able to allow Lay Celebration with due safeguards in exceptional cases. We, however, urge that Lay Celebration should not stand in the way of Union."

The Travancore Church Council

The Council then resolved in favour of entering into organic union on the basis of the Proposed Scheme as it now stands. 65 voted in favour and 38 against, i.e., 63% of those present voted in favour of the Proposed Scheme. The question will thus be considered once more in the next meeting of the Council.

The South India Provincial Synod of the Methodist Church has declared in 1934 that it "unreservedly approves of the Basis of Union contained in the Scheme and is prepared immediately to unite on this foundation with the other negotiating churches" and added that "in view of the grave dangers of delay, the Synod suggests that every endeavour be made to bring about the consummation of the Union at the earliest possible date."

The Joint Committee resolved in 1941 October that "in view of the grievous and urgent need of the world for reconciliation, we affectionately suggest that where necessary power be sought to convene extraordinary meetings of councils and synods with a view to their reaching a definite decision by the spring of 1944" and that they "give thanks to God for the many signs that our Churches are nearer to union than they have ever been before."

(Church Union : Its Progress sofar - A. Nesamony)

இவ்வாறாக 1946-ல் தென்னிந்தியத் திருச்சபை (C.S.I.) உருவானது. தென்னிந்திய திருச்சபை பேராயர் ஆளுகையை ஏற்றுக்கொண்டதால், திருச்சபையார் ஆளுகைக்குக் குந்தகம் வந்துவிடும், மீண்டும் போப் ஆட்சி நிலை கொண்டு விடும் என்ற வாதத்தை சபை இணைப்பை விரும்பாதவர்கள் தந்தனர். இது L.M.S. - C.S.I. என்ற பெயர் மாற்றந்தான் - பேராயர் திருச்சபையால் தேர்ந்தெடுக்கப்படுவார் - பேராயர் பேராய சட்டத்துக்கு உட்பட்டவர் என்று பதில் தரப்பட்டது. இதை ஏற்றுக் கொள்ளாத சிறு கூட்டத்தினர் நாங்கள் L.M.S. - சொத்துக்கள் எங்களுடையது என வாதாடினர். வழக்கும் தொடர்ந்தது. அதனால் முதல் வழக்கு O.S.No.1/ 1124(1949) ஆக நாகர்கோவில் நீதிமன்றத்தில் D.M. தேவசகாயம் முதல் பேராக C.S.I.-க்கு எதிராகத் தொடரப்பட்டது. C.S.I.-யில் தென் கேரளா பேராயம் என்று இயங்கிக் கொண்டிருந்த முந்தைய L.M.S. சபைகள் 1956-ல் தமிழ்நாடு பிரிந்து, தென்கேரளா பேராயம் இரண்டாக 1959-ல் பிரிந்த பிறகும் இன்று வரை L.M.S. - C.S.I. வழக்குகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. L.M.S. தோல்வி மேல் தோல்வியைத் தழுவக்காரணம் என்ன? ஒன்று, முறையான இணைப்பு - இரண்டாவது L.M.S. -க்கு தலைமைச்சங்கம் ஆதரவு கொடுக்கவில்லை.

எல்.எம்.எஸ். தூண்களில் ஒருவரான திரு. சகரியா அவர்கள் தலைமைச் சங்கத்தாருக்கு எழுதி ஆதரவு கோரினார். அந்த சங்கம் 24 பெப். 1949-ல் திரு. சகரியா அவர்களுக்கு பதில் தந்துள்ளது. காணீர்...

Mr. Zachariah

Dr. Chirgwin has handed me your letter of January 14th.

I should make it quite plain to you that I have never been without concern for the troubles that have come to the Church in Travancore. I am very much concerned about them and would like to see them happily and satisfactorily cleared up. When I said there was no point in discussing your letter of 3-2-'48, I meant that it was no use for me to discuss with you the bitter disputes that have been going on in Travancore for so long. You and your friends and the Church of South India are the only ones who can settle those disputes.

But what I have tried to make plain and what I wish to make plain again is that the London Missionary Society is now in official relationship with the Church of South India generally, and with the South Travancore Diocese of that Church in particular. It was left to the old Travancore Church Council associated with the London Missionary Society to decide whether it would or would not enter into union with other Church bodies to form the Church of South India. The Travancorre Church Council decided formally and correctly in favour of union. The L.M.S. accepted that decision and has declared that its fellowship, its grants, and its service are to be devoted to the South Travancore Diocese of the C.S.I. in future. If you and your friends wish to stay out of that union we deeply regret it. We would persuade you to join the union if we could because we believe that a disunited Church in Travancore just now is weakened in its witness. But if you still refuse to join we have to accept the situation even though we are sorry about it.

But if you stay out of the Union you have no right whatever to claim that you are a Council in association with the London Missionary Society. And you have no right to use the name London Missionary Society in your title as if you and the Council of which you are

secretary were the body in Travancore which has the right to use that title as if you were in official relationship with the London Missionary Society. The Directors do not pronounce any views on the rightness or wrongness of your decision to stay out of union. That is a matter for your consciences alone. But the Directors do not recognise your Church Council as a body with which it can have official relationships. If we were to recognise you we should be encouraging disunity. We are bound by the decision of the Travancore Church Council to unite with others in the Church of South India. We are so bound because we recognised the absolute freedom of the Travancore Church Council to decide its own actions in connection with Church Union. If the Travancore Church Council had stayed out of the union our realtionship with it would be the same as it has been throughout the years. Since the Travancore Church Council decided for union and became in fact the South Travancore Diocese C.S.I. our relationship with the Diocesan Council is the same as it was with the old Travancore Church Council. Surely you must see that we cannot say to the Travancore Church Council "if you decide for union we will be in the same relationship with you as heretofore," and at the same time say to the body you represent, which not only stays out of union, but opposes union at every step. - "we will recognise you as the Travancore Church Council London Missionary Society."

What we must clearly face is that if you and the body you represent decide to stay out of union, we must sever our connection with you. We very deeply regret this. But there is no other way. It was for this as well as for other reasons the Directors asked you not to go on using the name London Missionary Society in your title. The Directors have made a clear and specific request to you in this connection. Why will you not do what they ask? Is it not being disrespectful to the Directors of the London Missionary Society to disregard their wishes in this way? **I ask you again, in behalf of the Directors, not to go**

on using the name of the London Missionary Society in the title of the Church Council you represent. We have no desire to break our Christian fellowship and friendship with you, but we do object to you using the name of the Society in a way that is misleading because it suggests an offcial relationship which in fact does not exist. All this does not deny in any way the freedom of the churches for which you speak to decide the way they want to follow. That again is your responsibility, not mine, and not the London Missionary Society's.

I do sincerely hope that the troubles in the Church in Travancore will soon disappear. While the troubles last the name of the Church will be greatly discredited.

I shall send a copy of this letter and of your letter to Bishop Legg for his information.

Yours sincerely,

Sd/- H.L. Hurst.

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

5 உரிமைப் போராட்டம் 1984 - 85

பாதிரியார் ஆட்சி (Papacy) சர்வநாசம் என்பதே திருச்சபை வரலாறு நமக்குத் தரும் பாடம் (கிறிஸ்தவம் நடந்து வந்தபாதை, டாக்டர். ஐவி பீட்டர்) போப் ஆட்சி உலகத்தை 1600 ஆண்டுகளுக்கு மேலாக இருட்டறைக்குள் தள்ளி வைத்திருந்தது. மார்ட்டின் லுத்தர் காலத்துக்குப் பின் திருச்சபை நிர்வாகத்தில் திருச்சபையாரின் (Lay-men) பங்கு வளர்ந்தது. அத்துடன் உலகம் வெளிச்சத்துக்கு வந்தது- வளர்ச்சியைக் கண்டது. நம் நாட்டின் இப்பகுதியில் காலூன்றிய மேலை நாட்டு புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகள் "திருச்சபையாரின் ஆளுமை" (Congregationalism) என்ற கொள்கையை வகுத்துக் கொண்டனர்.

மேலைநாட்டு மிஷனெரிகள் பொறுப்புகளை விட்டு விலக வேண்டிய காலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அவர்கள் வெளியேறிய பின் சபைகளை ஒருங்கிணைப்பது யார் என்ற கேள்வி எழுந்தது. "பிஷப்" என்ற பெயரில் ஒருங்கிணைப்பதற்கு ஒரு தலைவன் வேண்டுமா-வேண்டாமா? என்ற கேள்வி விவாதப் பொருளானது. நீண்ட நெடிய விவாதங்களுக்குப் பின் தலைவன் ஒருவன் வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கியது. தலைவனை ஏற்றுக் கொள்வது பாதிரியார் ஆட்சியை மீண்டும் அரவணைத்துக் கொண்டதாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத்துக்குக் கட்டுப்பட்ட (Elected Constitutional) பிஷப்பை ஏற்றுக் கொண்டார்கள். பேராயரின் அதிகாரங்கள் திருச்சபையாரின் ஆன்மிக காரியங்களுடன் முடிவடையும்.

பிஷப் என்று தேர்வாகி உரிய நாற்காலியில் அமர்ந்ததும் எல்லோரும் திருச்சபையாரின் அதிகாரங்களை அபகரிப்பதில் கண்ணாய் இருப்பதைக் காண முடிகிறது. இதனால் புரோட்டஸ்தாந்து மிஷனிலும் பாதிரியார் - திருச்சபையார் அதிகாரப் போராட்டம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. திருச்சபை ஆளுகை சட்டங்களுக்கு உட்பட்ட ஜனநாயக முறை என்று வரும் போது, ஆளும் கூட்டத்தாருக்கு எதிர் கூட்டம் ஒன்று எப்போதுமே இருந்து கொண்டிருக்கும். இந்த எதிர் கூட்டம் பேராயருடன் இணைந்து ஆளும் கூட்டத்தை கவிழ்க்க முயற்சி எடுக்கும். இந்த எதிர் கூட்டத்தின் துணையைப் பயன்படுத்தி பேராயர்கள் திருச்சபையாரின் அதிகாரங்களை அபகரிப்பதில் கருத்தாய் இருந்து வருகின்றனர். பேராயருக்கு உரிமைகளை பறிக்க உதவும் கூட்டம், மார்ட்டின் லுத்தருக்குப் பிறகும் குருமாருடன் தொடர்ந்து போராட வேண்டும் என்பதை உணராமல் இருந்து விடுகிறது. நம் தென்னிந்திய திருச்சபை அமைப்பில் ஒரு பேராயருக்கு ஒரு பேராயத்தில் 5 ஆண்டுகள் என்று கட்டுப்பாடு கொண்டு வரலாமா? பேராயர் சொந்த ஊரில் நியமனமாகக் கூடாது என்ற பொருள்கள் பற்றிய சிந்தனை எழுந்துள்ளது.

கன்னியாகுரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் அடிக்கடி சில சட்ட திருத்தங்கள் வருகின்றன. அவை பேராயரின் அதிகார வரம்பை விரிவுபடுத்திக் கொடுக்கின்றன. எனினும் வழக்கறிஞர் P. தர்மராஜ் பேராயத்தில் பல்லாண்டுகள் செயலராக இருப்பதால் பேராயர்களின் கட்டவிழ்ந்த போக்குக்கு முட்டுக்கட்டைகள் விழுந்து வேகம் கட்டுப்படுத்தப்படுகிறது. இது பெரும் பாக்கியமே. 1984 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் திரு.P. தர்மராஜ் அவர்கள் தலைமையில் குமரி சி.எஸ்.ஐ. பேராய மக்கள் நிகழ்த்திய பேராட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. தென்னிந்திய திருச்சபையிலுள்ள 22 பேராயங்களுக்கும் பாதிரியார் ஆட்சியிலிருந்து விடுதலை கிடைத்தது.

இந்த விடுதலை போராட்டத்தை (1984 - 85) மூன்று பாகங்களாக பகுத்துப் படிக்கலாம். முதல்பாகம் பிரச்சினையின் வேகம் பற்றிய மக்கள் கருத்து. இரண்டாம் பாகம் நீதிமன்றத் தீர்ப்புகள். மூன்றாம் பாகம் திருச்சபையாரின் மகிழ்ச்சிப்பெருக்கு.

பாகம் - I

நடந்தது என்ன ?

கன்னியாகுமரிப் பேராயத்தின் காரிய நிர்வாகக்குழு (Executive Committee) பேராய மாமன்றம் (Diocesan Council) ஆகியவை இயங்க முடியாத நிலையும், இயங்க மனமில்லாத நிலையும் ஏற்பட்டு விட்டதென்றும், தென்னிந்தியத் திருச்சபை பேராயத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், 1:2 முறையைப் பேராயத்தில் புகுத்தி ஆட்சியைக் கைப்பற்றுவதற்காவும் திட்டமிட்டு வேண்டுகோள் விடுத்தார். பிரதமப் பேராயருக்கு ஆதீன விவகாரங்களில் தலையிட உரிமை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றிய அதே பேராயர் கிறிஸ்துதாசின் அழைப்பை ஏற்று, தென் இந்திய திருச்சபை 3-10-1984 அன்று கன்னியாகுமரிப் பேராய ஆட்சிப் பொறுப்பை ஏற்றெடுத்திருப்பதாகப் பிரகடனம் செய்தது.

Dr. M. J. மோசஸ்
பேராய உபதலைவர்

தேசோபகாரி, நவ. 1985

ஒரு முன்னோட்டம்

1980 முதல் 1985 வரை : 1-05-1980 இல் மறைதிரு. ஜி. கிறிஸ்துதாஸ் அவர்கள் கன்னியாகுமரிப் பேராயத்தின் பேராயராகப் பொறுப்பேற்றார். அது முதலே அவர் ஒரு கட்சியை உண்டு பண்ணி ஜனநாயகத்தை நசுக்கத் தொடங்கினார்.

வழக்குகளின் ஆரம்பம் : 16-8-1980 - இல் கூடிய பேராய மாமன்றத்தில் காரிய நிர்வாகக் குழுவில் நிரந்தர அங்கத்தினர் களாயிருந்த (Ex. Officio Members) ஸ்தாபன மேலாளர்களை வெளியேற்ற வேண்டுமென்றும், பேராய உத்தியோகஸ்தர் (Office Bearers) ஆல் நியமனம் செய்யப்படும் காரிய நிர்வாகக்குழு அங்கத்தினர்களில் ஒருவர் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவராகத்தான் இருக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் (Constitution Amendment) கொண்டு வரப்பட்டது. முதல் இரண்டு முறை தீர்மானம் தோல்வி அடைந்த பின்னரும் பேராயர் மூன்றாவது

முறையாக இத்தீர்மானத்தை ஓட்டுக்குவிட்டு, பின்னர் ஒரு ஓட்டில் தீர்மானம் நிறைவேறி இருப்பதாகவும், உடனடியாக இது அமுலுக்கு வருமென்றும் அறிவித்தார். Ex-Officio அங்கத்தினர்களை உடனடியாக வெளியேற்றிய பேராயர், நியமன உறுப்பினர்கள் தனக்கு ஆதரவானவர்கள் என்பதால் நியமனம் செய்ய வேண்டியதில்லை எனக்கூறி, காரிய நிர்வாகக் குழுவைக் கூட்டி ஒரே ஓட்டு மெஜாரிட்டியின் மூலம் Dr. கிங்ஸிலி, திரு. Y. J. றாபின்சன் ஆகியோரை வெளியேற்றினார். நியமன உறுப்பினர்களைச் சட்ட அமுலின் அடிப்படையில் தெரிந்தெடுக்காததால் காரிய நிர்வாகக்குழு சட்டப்படி அமைக்கப்பட்டதல்ல என்று கோரி, திரு. பவுல் எனும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த ஒருவர் குழித்துறை சார்பு நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்து இடைக்கால தடையுத்தரவைப் பெற்றார். கன்னியாகுமரிப் பேராயத்தில் பேராயர் தன் வாக்குக்கு எதிராகவும், ஆதீன கவுன்ஸிலின் தீர்ப்புக்கு எதிராகவும் செயல்பட்டதால் வழக்குகள் ஆரம்பமாயின. தற்போது 40-க்கும் மேற்பட்ட வழக்குகள் நடந்துள்ளன.

பேராயரின் சட்ட மீறல்கள் :(a) Co-option : பேராய மாமன்ற அங்கத்தினர்களை (Diocesan Council Members) தேர்ந்தெடுக்கும் உரிமை சபைக்கமிட்டிக்கு மட்டுமே உண்டு. எனவே, சபைக் கமிட்டியில் தன் கட்சிக்கு மெஜாரிட்டி உண்டுபண்ணும் நோக்கத்தில் பேராயர் தன்னிச்சையாக சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்தார். Co-option என்பதன் அர்த்தம் அகராதியில் Elect into any body by the votes of its members என்று குறிக்கப்பட்டுள்ளது அத்துடன் முதன் முதலாக எழுதி வைக்கப்பட்ட தமிழ் சட்ட புத்தகத்தில் "சபை ஊழியரும் தெரிந்து கொள்ளப்படும் டீக்கன்மாரும் சேர்ந்து செய்யும் சிபாரிசின் மேல் அத்தியட்சர் பிரதிநிதித்துவம் இல்லாத பகுதிகளில் சேர்க்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பேராயரோ தன்னிச்சையாக வெளியிட்டுள்ள (Apri 1-1981) தேர்தலுக்கான சட்டங்கள் எனும் Booklet - இல் "சபை ஊழியரும் தெரிந்து கொள்ளப்படும் டீக்கன்மாரும் சேர்ந்து செய்யும் சிபாரிசின்மேல்" என்பதை எடுத்துவிட்டு அத்தியட்சர் பிரதிநிதித்துவம் இல்லாத பகுதியில் இருந்து டீக்கன்மாரை கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி சேர்க்கலாம் என்பதை மட்டும் அச்சடித்து வெளியிட்டார். அத்துடன் புதிதாகச் சட்டப் புத்தகம்

திருத்தப்பட வேண்டுமெனக்கூறி அதில் Co-option என்பதை எடுத்துவிட்டு Nomination என்று போட்டுள்ளார். இது அடிப்படை அங்கத்தினர்களில் இருந்தே தன் கட்சியை வளர்க்க, ஜனநாயகத்தை அழிக்க - பேராயர் செய்த இரண்டாவது சட்ட மீறலாகும்..

No-confidence Motion : திரு. Y. J. றாபின்சன் அவர்களை பொருளாளர் பதவியில் இருந்து நீக்கிய போது திரு. Y. J. றாபின்சன் அவர்களை வெளியேற்றிய பேராயர், திரு. குட்டிக்கண் அவர்கள் மீது காரிய நிர்வாகக்குழு நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தபோது சட்டத்தில் இடமில்லை என்று கூறி Stay செய்தார். தனக்கு வேண்டாதவர் எனும்போது சட்டத்தில் இடமிருக்கிறது என்று சொல்வது, தேவனண்டைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய பேராயருக்கு அழகில்லை.

Finance : நிதிநிலை குறித்து கணக்குக் கொடுக்கவும், வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கவும் பொருளாளர் நியமிக்கப்படுவார். அவர்தான் பணக்காரியங்களைக் கவனித்துக் கொள்ள சட்டப்படி உரிமையுள்ளவர். தென் இந்தியத் திருச்சபை சட்டம் Section 10. Chapter 4-ஐ பார்ப்போமானால் "The Bishop of the Diocese shall not as Bishop or as the President of the Diocesan Council have any separate controlling authority over the finance of the Diocese". என மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்கு நடப்பது என்ன? பேராயர் அனைத்து வங்கி (Banks) களுக்கும் எழுதுவதுடன் சபைகளிலிருந்து வரக்கூடிய லெவியைத் தன்னுடைய வீட்டில் வைத்து வாங்கிச் செலவு செய்து வருகிறார். Centralisation (மத்திய நிதி முறை) யை உடைக்கச் செயலரும், மற்றுள்ளோரும் முயன்று வருகிறார்கள் என்று பேராயரும், போதகர்களில் சிலரும் கூறி வருவதாக அறிகிறேன். பேராயத்திற்கென ஒரு அலுவலகம் இயங்கி வரும்போது அங்கு பணத்தை அடைக்ககூடாது என்று கூறி, தன்னுடைய வீட்டில் கொண்டு அடைக்கச் சொல்லும் அளவுக்குச் சட்டத்தை மீறி, மக்கள் பணத்தை தன்னிச்சையாகச் செலவு செய்யும் பேராயர், மக்கள் பணத்தை அடைக்க வேண்டிய இடத்தில் (ஆதின அலுவலகத்தில்) அடைக்காமல் பேராயர், வீட்டுக்குக் கொண்டு கொடுக்கும் போதகர்களில் சிலர் நாளை ஆலயக் காணிக்கைப் பணத்தை எங்கள் வீடுகளில் கொண்டு தரவேண்டும் என்று

அறிவிக்கமாட்டார்கள் என்று நிச்சயமாகக் கூற முடியுமா? இப்படி ஒரு சூழ்நிலை வரக்கூடாது எனும் முறையில் தான், பேராயர் சட்ட விரோதப் போக்கைக் கைவிட்டு வரவேண்டுமெனும் எண்ணத்தில் பேராயர் தன் வீட்டில் பணம் வாங்கும் வரை சபைகளில் போதகர்களுக்குச் சம்பளத்தைக் கொடுப்பது நல்லது என்று செயலர் அறிவித்தாரே ஒழிய மத்திய நிதி முறையை உடைக்க வேண்டும் எனும் எண்ணத்தில் அல்ல, பேராயர்தான் உண்மையில் சட்டத்தை மீறி மத்திய நிதி முறையைத் தன்னுடைய சட்டமீறல்களின் மூலம் திணிக்கிறார்.

ஊழியர்கள் வேலை நீக்கமும் - இடமாற்றமும் மறை மாவட்டச் சட்டத்தில் "Before a Presbyter is appointed in the Church or transferred the Bishop shall consult the Church Committee concerned and bring his recommendation also before the Ministerial Committee" என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பேராயரோ சபைக்கமிட்டியை கலந்தாலோசிக்காமல் மினிஸ்டீரியல் கமிட்டியின் ஒப்புதல் இன்றி, தனக்கு வேண்டியவர், வேண்டாதவர் அடிப்படையில் தன்னிச்சையாக ஆர்டினேஷன். டிரான்ஸ்பர், அப்பாயின்மெயின்ட் நடத்திப் பேராயச் சட்டத்தைத் தூக்கி எறிந்தார்.

Ex- Communication : நீதிக்காக நீதிமன்றம் செல்பவர்கள் சட்டப்படி (Section 43) தங்கள் அங்கத்துவத்தைத் தாங்களாகவே இழந்து விடுவார்கள் என்று என்னையும் வேறு பலரையும் சபைகளில் இருந்து நீக்கியதாக அறிவித்த அதே பேராயரும் அவருடைய சகாக்களான Rev.அசரியா, Rev.குணசீலன், திருமதி. ஜாய் ஞானதாசன், திரு.A.கிரான்ட் ஆகியோரும் பல வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர். பேராயருடைய கூற்றுப்படி பேராயர் தானாகவே விலகிக் கொள்ளுகிறார் என்று தானே அர்த்தம்? இல்லையெனில் Lay member-க்கு ஒரு சட்டம். அபிஷேகம் செய்யப்பட்டவர்களுக்கு மற்றொரு சட்டமா?

பேராயப் பெருமன்றமும் பேராயரும் : பேராய சட்டம், தென் இந்திய திருச்சபைச் சட்டம், காரிய நிர்வாகக்குழு எதையுமே மதிக்காது பேராயர் இருந்த சமயம், அதாவது 29-05-1984 அன்று பேராய மாமன்றம் கூட்டப்பட்டது.

அங்கத்துவப் பிரச்சனையும், பேராயரின் செயலும் : பேராய மாமன்ற அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சபைக்

கமிட்டிகளுக்கு மட்டுமே உண்டு. Home Church - இல் இருந்து பேராய மன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப் பட்டவர்கள் (Dr. S. கிங்ஸ்லி, திருமதி E.G.M. ஜாண்சன், திரு. Y. J. றாபின்சன், திரு. ஜோசப், திரு. எல்யட் கிறிஸ்டோபர், திரு. D.G.V.P. சேகர் உட்பட) 11 பேரும் பேராயரின் சட்ட விரோதப் போக்கை எதிர்ப்பவர்களாக இருந்தபடியால் பேராயர் அவர்களைக் கவுன்ஸிலுக்கு வரவிடாது தடை செய்ய முயன்று - சபைக் கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டதாக வேறு ஒன்பது பேரை (திரு. சிறில் லாங்டன், திருமதி. ஜெபமதி மனுவேல் உட்பட) அங்கத்தினர் என்று அறிவித்தார். செயலர் P. தர்மராஜ் அவர்கள் சட்டப்படி சபைக் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான் கவுன்ஸிலில் கலந்து கொள்ள முடியும் என வாதிட, Office Bearers (Rev. G. கிறிஸ்துதாஸ், திரு. P. தர்மராஜ், திரு. R. குட்டிக்கண், திரு. வில்சன் அப்பலோஸ்) ஆகியோர் சேர்ந்து கூட்டாக ஓர் அறிக்கையைக் கையொப்பமிட்டு வெளியிட்டனர். அந்த அறிக்கையில் சபைக் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 8 பேரும் பேராய மாமன்றம் யாரை உள்ளே வரலாம் என்று முடிவு செய்கிறதோ அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்றும் எழுதப்பட்டு இருக்கிறது. அங்கத்துவம் குறித்த பிரச்சனை எடுக்கப்பட்ட கொஞ்ச நேரத்தில் கவுன்ஸில் தனக்கு ஆதரவான எட்டு பேருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்காது என்று உணர்ந்த பேராயர், "எவ்வளவு மெஜாரிட்டி கூடி முடிவு எடுத்தாலும் நான் ஏற்க வேண்டிய அவசியமில்லை. நான் சட்டப்படிதான் நடப்பேன்" என்று கூறி ஓட்டுக்கு விடாமல் கவுன்ஸிலை அவமதித்து கவுன்ஸில் கூட்டத்தைக் கலைத்து விட்டு வெளியேறினார். தன்னுடைய கை எழுத்தையே வகை செய்யாத பேராயர், மற்றவர்களையோ ஆதீனச் சட்டத்தையோ வகை செய்வார் என்று நாம் எதிர்பார்ப்பது நமது அறிவீனமே!

ஸ்தாபனங்களின் விவகாரங்களில் தலையிடுதல் : கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அதன் அன்றாட வேலைகளைக் கவனிக்க ஆட்சிக்குழு உண்டு. முதல்வர்கள் நியமனத்தைப் பொறுத்த வரைக்கும் காரிய நிர்வாகக்குழுவே நியமன அதிகாரம் உடையது. மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. **E.G.M.** ஜாண்சன் அவர்களைக் காரிய நிர்வாகக்குழு தற்காலிக வேலை நீக்கம் செய்ததை அடுத்து அவர்கள் நீதி மன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்து தற்காலிகவேலை நீக்கத்தைத் தடை செய்து

உத்தரவு வாங்கினார்கள். அதன் பின்னர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டு அது தவறு என்றும் நீதிமன்றத்தில் உத்தரவைப் பெற்றார்கள். காரிய நிர்வாக குழுவில் 28 அங்கத்தினர்களில் 17 பேர் இனி வழக்கைத் தொடர வேண்டாமென்றும், திருமதி. E.G.M. ஜாண்சன் அவர்களே முதல்வராகத் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றும் முடிவு செய்து முடிவை எழுதிப் பேராயரிடம் சமர்ப்பித்தார்கள். ஆனால் பழிவாங்கும் எண்ணங்கொண்ட பேராயர் காரிய நிர்வாகக் குழு மெஜாரிட்டி அங்கத்தினர்களின் தீர்மானத்தை தூக்கி எறிந்துவிட்டு, திருமதி. பியூலா வில்சன்தான் முதல்வர் என எழுதிக் கொடுத்ததோடு வன்முறைகளையும் குண்டர்கள் வைத்து ஏவி விட்டார். ஆதீன கவுன்சில் கூடி, காரிய நிர்வாகக்குழுவின் முடிவை ஏற்றுக்கொண்டு மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வராக திருமதி. E.G.M. ஜாண்சன் அவர்கள் தொடர்ந்து பணிபுரியவும், வழக்குகளைப் பின்வலித்துக் கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றியது. இதையும் வகை செய்யாத பேராயர் "சுப்ரீம் கோர்ட் வரை விடமாட்டேன்" என்று கூறிச் செயல்பட்டு வருவது தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர் எனக்கூறும் பேராயருக்கு அழகில்லை.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர் A.J. பிராங்கிளின் ஓய்வு பெற்றவுடன் அந்த காலி இடத்தில் வேறு ஒரு முதல்வரை நியமனம் செய்யக் காரிய நிர்வாகக் குழு கூடியது. அதில் கலந்து கொள்ள மறுத்த பேராயர், தன் இஷ்டமாக ஒருவரை 'நீர்தான் முதல்வர்' என்று Appointment Order வழங்கினார். காரிய நிர்வாகக்குழு Dr. D. Peter - ஐ நியமித்தது. இதனால் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் பேராயர் குழப்பத்தை உண்டுபண்ணினார் என்றால் மிகையில்லை. Chapter XI - Page 32 Class 6- இல் கல்லூரிகளுக்கு முதல்வரை நியமனம் செய்ய காரிய நிர்வாகக் குழுவிற்கு மட்டுமே உரிமையுண்டு என மிகத்தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது.

Dr. M.J. மோசஸ்
பேராய உபதலைவர்

கதவைமூடினால் உள்ளே வரமுடியுமா?

பேராயத்தின் சட்டங்களைப் பேராயரே வகை செய்யாமல் 30-04-1984 முதல் காரிய நிர்வாகக்குழு கூட்டப்படுவதற்கு முட்டுக் கட்டையாக இருந்து, 28-05-1984 - இல் நடந்த பேராய மாமன்றத்தையும்

தனக்கு ஆதரவு இல்லை என்றவுடன் கலைப்பதாகக் கூறிச்சென்று, தென்னிந்திய திருச்சபையாரிடம் (Synod) காரிய நிர்வாகக்குழு, பேராய மாமன்றம் மற்றும் குழுக்கள் இயங்க முடியாத நிலையிலும் இயங்க மனமில்லாத நிலையில் இருப்பதாகவும் பொய்யாக எடுத்துக்கூறி 3-10-1984 - ல் சினாட் காரிய நிர்வாக குழுவின் மூலம் பேராய மாமன்றம், காரிய நிர்வாகக்குழு முதலியவற்றைக் கலைத்து, கன்னியாகுமரி பேராயத்தின் உள் விவகாரங்களில் தென்னிந்திய திருச்சபையைச் (Synod) சட்டத்துக்கு எதிராகத் தலையிடும் படிசெய்து, கன்னியாகுமரி பேராயத்தின் நிர்வாகத்தை சினாடே ஏற்றெடுத்திருப்பதாகவும், அதற்கு அமைக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டியில் இதே பேராயர்தான் தலைவராக இருப்பார் என்றும், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார். தான் ஒருவரே இருந்து சர்வாதிகாரியாக ஜனநாயக கோட்பாடுகளைக் குழிதோண்டிப் புதைத்து ஆதீன கவுன்சில், காரிய நிர்வாகக்குழு, முதலியவற்றைக் கூட்டவிடாமல் தடை செய்தார்.

திருச்சபை அங்கத்தினர்களும், ஸ்தாபனங்களில் தொழில் புரிபவர்களும், தங்கள் குறைகளை எடுத்தியம்பி நியாயம் தேடிக் கொள்ளப் பேராய வசதிகள் யாதெனில், பேராய மாமன்றத்துக்கோ காரிய நிர்வாகக்குழுவிற்கோ, குழுக்களுக்கோ குறைகளைத் தெரியப்படுத்தி நியாயங்களை பெற்றுக் கொள்ள உள்ள வாய்ப்பேயாகும். ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒருவர் தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என எண்ணும்போது, ஸ்தாபனத் தலைவர்களுக்கோ அல்லது ஸ்தாபனக்குழுவிற்கோ முதலில் மனு கொடுக்க வேண்டும். அங்கு அவருக்கு நியாயம் கிடைக்காவிட்டால் காரிய நிர்வாகக் குழுவில் நியாயம் கேட்டு, மனு அனுப்பலாம். காரிய நிர்வாகக் குழுவும் நீதி செய்யத் தவறினால், பேராய மாமன்றத்திடம் முறையிடும் உரிமையும் அவருக்கு உண்டு. இவைகளை மீறி சட்டத்தில் உள்ள வழிமுறைகளைக் கடைபிடிக்காது நீதி மன்றம் செல்பவர்களுக்கு மட்டுமே Section 43 என்பது பொருந்தும். சட்டம் 43-வது பிரிவில் கூறியுள்ள வழிமுறைகளைக் கடைபிடிக்க பேராய மாமன்றம், காரிய நிர்வாகக்குழு, குழுக்கள் ஒழுங்காகச் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாகும்.

பேராயரே ஆதீனகாரிய நிர்வாகக்குழு, கவுன்ஸில் முதலியவற்றை முடக்கிவைக்க, உத்தரவு பிறப்பித்துவிட்டு எப்படி காரிய நிர்வாகக்குழுவில் கேட்கப்படவில்லை, பேராய மாமன்றத்தில் அனுமதி பெறவில்லை என்று கூறமுடியும்? காரிய நிர்வாகக்குழு, பேராய மாமன்றம் முதலியவற்றில் பேராயர் கலந்து கொள்ளாமல் அனுமதி பெறப்படவில்லை என்றும் கூறுவது பேராயரின் அறியா தன்மையையே வெளிப்படுத்துகிறது. வழக்கு தொடர்ந்தவர்கள் அனைவருமே காரிய நிர்வாகக்குழுவின் அனுமதியையும், பேராய மாமன்ற அனுமதியையும் பெற்றிருக்கிறார்கள் என்பதை பேராயருக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

13-04-1985 - இல் நடைபெற்ற பேராய மாமன்றம் Section 43 குறித்து விவாதித்து, பேராய சட்டங்களைப் பேராயர் புறக்கணித்து செய்துள்ள நடவடிக்கைகளையும், Section 43-ன் அடிப்படையில் பேராயரால் அனுப்பப்பட்ட உத்தரவுகளையும் செல்லுபடியாகாதது என்றும், இல்லா நிலையது என்றும், தீர்மானம் போட்டுள்ளது.

Indiscriminate orders of excommunication

The council noted with great concern the attitude of the Bishop in indiscriminately passing orders of excommunications without rhyme or reason.

It was resolved that all such orders will have no validity whatsoever as Bishop Christudhas does not know under what circumstances this great weapon of excommunication is to be employed. It was further resolved that the suits are filed by persons to safeguard the interest of the Diocese and as such they continue as members of the various churches, bodies of the Diocese.

இவைகளின் அடிப்படையில் சட்டம் 43 பக்கம் 41 - இல் கூறியுள்ளபடி, பேராயர் சபைகளிலிருந்து சிலரை வழக்குத் தொடர்ந்திருப்பதால் வெளியேற்றியிருக்கிறேன் என்று எழுதியிருக்கும் கடிதம் செல்லு படியாகாதது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

N.A.G. தம்பிராஜ்,
வழக்கறிஞர்

போதகர்களின் பேராதரவு

மத அமைப்புகளில் நடக்கும் போராட்டங்களுக்கு குருமார்களின் ஆதரவு இல்லாமலிருந்தால், அது கடவுளுக்கு எதிரான செயல் என்று சொல்லி, மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மார்ட்டின் லூத்தர் ஒரு மதகுரு. அதனால் தான் அவருடைய போப் - க்கு எதிரான போராட்டம் வென்று காட்டியது. எனவே 1985 -ல் நடந்த உரிமைப் போராட்டத்தில் குமரி சி.எஸ்.ஐ போதகர்களின் பங்கைக் குறைத்து மதிப்பிட இயலாது.

தேசோபகாரி ஆசிரியர் அருள்திரு. C. சாமுவேல் அவர்கள் ஆசிரியர் கடிதம் என்ற தலைப்பில் பேராயரின் மக்கள் விரோதப் போக்கைப் படம் பிடித்துக்காட்டுகிறார் :

திருச்சபை நடத்துவதற்கு காலா காலங்களில் தேவன் நமக்குப் பிரியமானவர்களை (அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் - அல்லாதவர்களை) தெரிந்தெடுக்கிறார். அவர்களுக்குச் சிறிய, பெரிய பொறுப்புகள் கொடுக்கப்படுகின்றன. தெரிந்தெடுக்கும் தேவனுக்கும், மக்களுக்கும் கணக்கு ஒப்புவிக்க கடமைப் பட்டிருக்கிறார்கள். மனிதரை ஏமாற்றலாம். ஆனால் தேவனை ஏமாற்ற முடியாது. தேவன் பொறுமையாக இருக்கிறபடியால் தாங்கள் செய்வது யாவும் சரி என்று சொல்வதற்கில்லை. தேவன் சவுல் இராஜாவைத் தெரிந்தெடுத்தார். தேவனுக்குக் கீழ்படியாத வேளையில் அவனைத் தள்ளினார். ஆதலால் தேவன் தெரிந்து கொண்டார் என்று தம்பட்டம் அடிக்கிறவர்கள் அத்தனைபேரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தவறான வழியிலே பணத்தைச் சம்பாதித்த யூதாஸ் நான்று கொண்டு வயிறு வெடித்துச் செத்தான். சபைப்பணம், சமுதாயப்பணம், அரசுப்பணம் எதுவானாலும் தப்பிதமாகத் தன்னுடைய பணத்தோடு சேர்க்கலாகாது.

தீமையை எதிர்த்துப் போராட, தேவன் கற்பித்திருக்கிறார். மோசே தவறு செய்ததால் மக்கள் கலகம் பண்ணவில்லையா?. வேலை செய்யாமல் சாப்பிட உணவு கொடுத்த (மன்னா, காடை) மோசேக்கு எதிராகக்கலகம் பண்ணினார்கள். அடிமைத் தனத்தில் இருந்து விடுதலையாக்கி, சிவந்த சமுத்திரம் வழியாக நடத்திக்கொண்டு வந்த மோசேக்கு விரோதமாக கலகம் பண்ணினார்கள். எல்லாரையும் அடிமையாக்க விரும்புகிற

அத்தியட்சரின் செயல்கள் தவறு என்று கூறுவது கலகம் பண்ணுவது அல்ல. பேச்சு உரிமை, எழுத்து உரிமை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் உரிமை தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது. அதனைப் பறித்து எடுக்க விரும்புகிற மனிதா் யாராக இருந்தாலும் தவறு செய்கிறவர்களாகவே காணப்படுகிறார்கள். **நாங்கள் அடிமைகளல்ல, அடிமைகளாக இருக்க விரும்பவில்லை என்று கூறுவது கலகம் பண்ணுவது அல்ல.**

தனக்குக் குறிக்கப்பட்ட வேலை, கடமை முதலியவைகளை விட்டுவிட்டு வேறு ஆட்களுடைய வேலைகளில், தலையிடுவது தவறு ஆகும். அவ்வாறு செய்கிறபடியால் சமுதாயத்தில் சிலரை வெட்கப்படுத்த முயற்சிப்பது தலைவனுக்கு அழகல்ல. மனிதரை மனிதராக மதித்து நடக்காத வேளையில் மக்கள் சுட்டிக்காட்டுவது கலகம் அல்ல. சேவை செய்ய ஏற்படுத்தப் பட்டவர்கள், மற்ற யாவரும் தன்னுடைய வேலைக்காரர் என்று சொல்லும்போது தடுத்து நிறுத்துவது கலகம் அல்ல. அன்பினாலே அனைவரையும் அரவணைத்துச் செல்லுங்கள் என்று கூறுவது கலகம் அல்ல. அதிகாரக் குவியலின் காரணமாக ஓர வஞ்சனை செய்யக்கூடாது என்று கூறுவது கலகம் அல்ல. ஒரு தனி மனிதன், ஜனநாயகக் கொள்கைகளுக்கு இடம் கொடாமல், சமுதாயம் முழுவதையும் பகைப்பதே கலக குணம், வேத புத்தகத்துக்கும், திருச்சபைச் சட்டத்திற்கும், அரசியல் சட்டத்திற்கும் கீழ்ப்படியமாட்டேன் என்பது தான் கலக குணம். திருச்சபை மக்கள் தம்மில் சண்டையிட்டு இரத்தம் சிந்த பணம் கொடுத்து ஏவலாட்களை வைப்பது கலக குணம். எனவே யார் யார் இடத்தில் கலக குணம் இருக்கிறதோ அவர்கள் அதை விட வேண்டும்.

திருச்சபையை நடத்தத் தெரிந்து கொள்ளப்படுகிறவர்கள் சரியாகச் செயல் படாவிட்டால் திருச்சபையே அழிந்துவிடும். அது தான் சரித்திரம், சரியாகச் செய்யாவிட்டால் அவர்கள் தாங்களாகவே துன்பத்தை வருவித்துக் கொள்கிறவர்களாய்க் காணப்படுவார்கள். தலைவராக இருக்கின்ற காரணத்தினால் மற்றவர்களைத் துன்புறுத்துதல் கூடாது. நீதி, நியாயம், நேர்மை, அன்பு, மன்னிப்பு, சகிப்பு இவைகள் தலைவனுக்குத் தேவை. கலக

குணமுள்ள மக்களாகிய இஸ்ரவேலரை தேவன் அழிக்க முற்பட்ட வேளையில் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருள் வீரானால் மன்னித்தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப் போடும் என்று கூறுவதுதான் உண்மையாய் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவனாகிய மோசேயினுடைய நிலையாகும். ஓட்டுப் பிடித்து, உத்தியோகத்தை விலைக்கு வாங்குகிறவர்கள் தாங்கள் மட்டும் வாழ்ந்து, மற்றவர்கள் அழிந்து போக எண்ணுகிறார்கள். மக்கள் இல்லாவிட்டால் தலைவர்கள் இல்லை. கமிற்றி இல்லாவிட்டால் தலைவருடைய அதிகாரம் இல்லை. எனவே தேவன் தெரிந்து கொண்டார் என்று கூறி மக்களைத் திசை திருப்பி, திருச்சபையை அழிவுக்கு நேராகக் கொண்டு செல்வது மிகவும் தவறு ஆகும்.

நெய்யூரைச் சேர்ந்த திரு. சிசில் அவர்கள், தவறாக நடந்த போப்மார் காலங்களில், இரண்டு மூன்று பேர் ஒரே உத்தியோகத்தில் இருந்திருக்கிறார்கள் என்று கூறுவது நமது ஆதினத்தில் அவ்வாறு நடந்துவிடக் கூடாதே என்ற நோக்கத்திலேயே சரித்திரத்தை எழுதியுள்ளார்கள். **திருச்சபைத் தலைவர்கள் தவறும் போது எச்சரிக்க வேண்டியது தீர்க்கத்தரிசிகளின் கடமை.** எச்சரிக்கிறவர்களும் நல் எண்ணத்தோடும், சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்ற சிந்தையோடும் செயல்பட வேண்டும்.

ஊழியக்காரர்கள் போதிக்கிறவர்களாக மாத்திரமல்ல, சாதிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டும். உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (1 தீமோ. 4:12) அப்பொழுது விசுவாசிகள் கண்காணிக்கு அடங்கியிருப்பார்கள். பவுல் அப்போஸ்தலன், போதகர்கள் உதவிக்காரர்கள், கண்காணிகள், அனைவரும் எப்படி இருக்க வேண்டும் என்று மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஒருவரும் தன்னைப் பெரியவனாக எண்ணி மேன்மை பாராட்டி மமதை கொண்டு மந்தையை இறுமாப்பாய், இழிவான ஆதாயத்துக்காய், சுய நன்மைக்காய் ஆளுகை செய்யக்கூடாது. எரேமியா 23-ம்

அதிகாரத்தை நன்றாக மறுபடியும் மறுபடியும் வாசியுங்கள். ஊழியர்கள் எந்நிலையில் உள்ளவர்களாகக் காணப்பட்டாலும் தன்னுடைய கையில் கொடுக்கப்பட்ட சிறிய-பெரிய மந்தையை சிதறடிக்கக்கூடாது. ஆனால் மேய்த்து காத்து, அமர்ந்த தண்ணீர் அண்டையில் கொண்டுபோக வேண்டும். ஓநாய் வரும்போது துரத்த வேண்டும். ஆனால், தானே ஓநாயாக மாறிவிடக்கூடாது. அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாக இருக்கும்.

அருமை வாசகர்களே! கன்னியாகுமரி அத்தியட்சாதீனம் சிதறடிக்கப்பட்டுவிடாதபடி ஜெபியுங்கள். இந்த ஆதீனத்தின் பொறுப்பை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் தேவன் கேட்பார். திருச்சபை மக்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு ஜெபம் பண்ணாத காரணத்தினாலே, சபைகளில் பிளவுகள் ஏற்படுகின்றன. மக்களுக்கு ஆத்மீக போஜனம் சரியாக கிடைக்கிறதில்லை. எனவே வேறு குழுக்களுக்குச் செல்லுகிறார்கள். எனவே, இடைவிடாமல் சோர்ந்து போகாமல் விசுவாசத்தோடே ஜெபம் பண்ணுங்கள்.

திருச்சபையின் நலனுக்காக, சுயாதீனத்துக்காக, ஜனநாயக மரபு ஒழிந்து விடக்கூடாது என்று பாடுபடுகிறவர்களைத் திருச்சபையின் ஐக்கியத்திலிருந்து பிரிந்து செல்ல விரும்புகிறவர்கள் என்று சில சுயநலவாதிகளும், அதிகார வெறி பிடித்தவர்களும், பணத்தின் மேலேயே கண் வைத்திருக்கிறவர்களும் கூறுகிறார்கள். ஆனால் அது நியாயமல்ல. நாம் ஐக்கியத்திற்குள்ளே இருக்க விரும்புகிறோம். அடிமைகளாக இருக்க விரும்பவில்லை. சுவிசேஷத்தை மிகவும் திறமையோடு பிரசங்கிக்கவே ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டது. சுவிசேஷம் சொல்ல தடையாக வரும் ஐக்கியத்தை எதிர்க்கிறோம். தனிநபர்களின் சபைகளின், ஸ்தாபனங்களின் சுதந்திரத்தைப் பறிக்க விரும்பினால் எதிர்க்கிறோம்.

பாகம் - II

நீதி மன்ற வழக்குகள்

தென் இந்தியத் திருச்சபை கன்னியாகுமரி ஆதீன நிர்வாகத்தை ஏற்றெடுத்திருப்பதாக தீர்மானம் நிறைவேற்றி, பேராயத்தின் உள்விவகாரங்களில் தலையிடும் முக்கிய நோக்கமே **1:2** விகிதத்தை (ஒரு போதகருக்கு இரண்டு சாதாரண கவுன்ஸில் அங்கத்தினர் முறை) பேராயத்தில் புகுத்தி ஜனநாயக அடிப்படை யிலுள்ள சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்து, பேராயரின் எதேச்சாதிகார ஆட்சியின் கீழ் பேராயத்தை அடிமைப் படுத்தி, தென் இந்திய குருமார் திருச்சபையின் நிரந்தர அடிமைகளாய் பேராயத்தை ஆக்குவதற்கே பேராயச் சட்டத்தின் அடிப்படையில் பேராயத்தை நடத்த வேண்டும், குமரிப் பேராயம் மாற்றானுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது என்று நினைத்து ஜன நாயகத்தின்மேல் நம்பிக்கை கொண்ட சிலரால் O.S. 53/84, O.S. No. 455/85, O.S. No. 100/84, O.S. No. 106/84, O.S. No. 107/85 ஆகிய வழக்குகள் தொடரப்பட்டன. O.S. No. 53/84 எண்ணில் குழித்துறை சார்பு நீதிமன்றத்தில்தொடரப்பட்ட வழக்கிலுள்ள **I.A. 470/84 மனுவில் கோரியிருக்கின்றபடி தீர்ப்புகள் வழங்கப்பட்டதை எதிர்த்து பேராயர் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் C.M.A. 2/85 எண்ணில் மேல் முறையீடு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில் மட்டும் பேராயருக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் பேராயர் சர்வாதிகாரி ஆகியிருப்பார்.**

திரு. P. தர்மராஜ், *செயலர்*

தேசோபகாரி, நவ. 1985

திரு. P. தர்மராஜ் அவர்கள் தரும் அறிக்கையை உற்று நோக்கும்போது இருவழக்குகளை ஆய்வுக்காக எடுத்துக் கொள்ள வேண்டும். (1.) **O.S. No. 53/84** எண்ணில் குழித்துறை சார்புநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் **I.A. 470/84** மனுவில் கோரியிருக்கின்றபடி தீர்ப்புகள் வழங்கப்பட்டன. (2.) பேராயர் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் **C.M.A. 2/85.** எண்ணில் மேல்முறையீடு மற்றும் அது தொடர்பான

I.A. No. 151/85. (3.) மேலும் பெங்களூர், ஷிமோகா நீதிமன்றத்தில் பேராயர் G. கிறிஸ்துதாசுக்கு வேண்டி அங்குள்ள ஒருவர் தொடர்ந்த O.S. No. 98/85 தொடர்பான **I.A. No. 1/85.**

வழக்கு எண் : **I.A. 470/1984**

நீதிமன்றம் : குழித்துறைச் சார்பு நீதிமன்றம்

சார்பு நீதிபதி : திரு. V.S. ரெங்கசாமி

வாதிகள்* (Plaintiffs) *: திரு. D. சாம்ராஜ் மற்றும் தாசையா

பிரதி வாதிகள் (Defendants) : மாடரேட்டர் I. ஜேசுதாஸ் முதற்கொண்டு 41 நபர்கள். பேராயர் G. கிறிஸ்து தாஸ் 13 - வது நபர். பேராயச் செயலர் திரு. P. தர்மராஜ் 15 - வது நபர்.

தீர்ப்பு நாள் : 26 ,டிசம்பர் 1984, தீர்ப்பு 74 பக்கங்களையும் 25 பாராக்களையும் கொண்டது. வாதிதரப்பில் 3 ஆவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் 107 ஆவணங்களும் தாக்கலாகியுள்ளன.

வாதிகளின் வேண்டுதல் : கன்னியாகுமரி மறை மாவட்டம் ஆதீனசபை, செயற்குழு, பணிக் குழுக்கள் என பல்வேறு அமைப்புகளைக் கொண்டது. அதிகாரிகளுக்கிடையே குழப்பம் காணப்படுவதை பயன்படுத்தி 13 -வது எதிரி பிஷப் G. கிறிஸ்துதாஸ் பேராயரின் எதேச்சாதிகாரமான தடுப்பு உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார். குழுக்கள் தடங்கலின்றி செயல்ப்பட பேராயரின் தடுப்பு ஆணைகள் செல்லா நிலை என விளம்பல் செய்யக் கோரப்படுகிறது. 18-08-1984, 8-9-1984 ஆகிய தேதிகளில் கன்னியாகுமரி மறை மாவட்டத்தின் செயற்குழு போட்ட தீர்மானங்கள் சட்டப்படி செல்லத் தக்கவை என்று விளம்பல் செய்ய கோரப்படுகிறது. சினாட் நியமித்த நிர்வாகக்குழு கன்னியாகுமரி மறை மாவட்ட நிர்வாகத்தில் தலையிட எந்த உரிமையும் கிடையாது என ஒரு நிலைக் கால உறுத்துக் கட்டளை வழங்கக் கோரப்படுகிறது. சினாட் அமைப்புகளோ, பேராயர் **G.** கிறிஸ்துதாசோ சட்ட விரோதமாக கன்னியாகுமரி மறை மாவட்ட நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என ஒரு நிலைக் கால உறுத்துக்கட்டளை வழங்கக் கோரப்படுகிறது. பேராயர் தடுப்பு ஆணைகளைப் பிறப்பிக்காமல் இருக்க ஒரு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரப்படுகிறது.

தீர்ப்பின் சுருக்கம் : பிஷப் G. கிறிஸ்துதாஸ், எதிர்மனுதாரர் தரப்பில் கூறுவது எல்லாம், மறை மாவட்ட நிர்வாகத்தை தென்னிந்திய திருச்சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே என தோன்றுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தலில் நின்று அமையும் குழுக்களுக்கே நிர்வாகப் பொறுப்பை எடுக்க முடியும். மற்றப்படி சினாட் சட்டத்திலோ மறைமாவட்ட சட்டத்திலோ நிர்வாகப் பொறுப்பை அன்னியகுழு ஏற்றெடுக்க இடம் இல்லை. சட்ட விதிகளில் சொல்லப்படாத ஆட்சிக் குழுவை குருமார்சபை நியமித்தது செல்லாது என்றே இந்த நீதிமன்றம் அறிவிக்கிறது.

பிற மறைமாவட்டங்களில் குருமார்சபை ஒரு அன்னிய நிர்வாகக் குழுவை நியமித்த போது அதை ஏற்றுக்கொண்டது என்பதால் கன்னியாகுமரி மறைமாவட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. சட்டத்துக்கு விரோதமான ஒரு அன்னிய நிர்வாகக் குழுவை குருமார் சபை குமரி மறை மாவட்டத்தில் நியமித்ததா என்பதுதான் கேள்வி. எனவே பிற மறைமாவட்டங்கள் ஏற்றுக் கொண்டன என்பது வாதமல்ல என்றே நீதி மன்றம் கருதுகிறது.

கன்னியாகுமரி மறைமாவட்டத்தின் நிதி நிர்வாகத்தில் தலையிட தென்னிந்திய திருச்சபைக்கு அதிகாரம் இல்லை. நிதி அதிகாரத்தை எடுத்து இன்னொருவருக்குக் கொடுக்க சினாட் நியமித்த சட்ட விரோதமான நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

தென்னிந்திய திருச்சபையின் செயற்குழு நியமித்த நிர்வாகக்குழு சட்டப்படி செல்லுபடியாகக்கூடியதல்ல. அதனால் அந்த நிர்வாகக்குழு எடுத்த முடிவுகள் சட்டத்துக்குப் புறம்பானவை என்றும், இல்லா நிலையன என்றும் இந்த நீதிமன்றம் அறிவிக்கிறது.

6-10-1984 -ல் நிர்வாகக்குழு நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதால் மனு காலாவதியாகி விட்டது என எதிர் மனுதாரர் பேராயர் **G.** கிறிஸ்துதாஸ் வாதிடுகிறார். நிர்வாகக் குழுவே சட்டப்படி அமைந்ததாக இல்லாத போது, பொறுப்பேற்க தகுதியில்லாதபோது நியமனம் செல்லாது என்று அறிவிக்கக்கோரிய மனு காலாவதியாகி விட்டது என்று இந்த நீதி மன்றம் கூற முடியாது. எனவே இந்த மனு செல்லும் என அறிவிக்கப்படுகிறது.

குருமார் சபை நியமித்த நிர்வாகக்குழு சட்டத்துக்குப் புறம்பானது. அது எடுத்த முடிவுகள் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பானவையும் இல்லா நிலையானதுமாகும். மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக மனுதாரரின் மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வழக்கு முடியும்வரை கோரியுள்ளபடி இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்படுகிறது.

வழங்கு எண் : **C.M.A. No. 2 of 1985**

நீதிமன்றம் : மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில்

நீதிபதி : திரு. R. ரெத்தினசுவாமி

வாதிகள் : மாடரேட்டர் R. ஜேசுதாஸ் முதற் கொண்டு 20 பேர். 11 -வது நபர் பிஷப் G. கிறிஸ்துதாஸ்

பிரதிவாதிகள் : பேராயச் செயலர் P. தர்மராஜ் முதற்கொண்டு 26 நபர்கள்.

இது I. A. 470/1984 மற்றும் O.S. 53/1984, குழித்துறை சார்பு நீதிமன்ற வழக்குகளின் மேல்முறையீடு

தீர்ப்புநாள் : 16 ஆகஸ்ட் 1985. தீர்ப்பு 39 பக்கங்களையும் 42 பாராக்களையும் கொண்டது.

வாதிகளின் வாதம் : I.A.470/1985 வழக்கில் குழித்துறை நீதிமன்றம் தந்த தீர்ப்பு சரியல்ல. அதனால் மேல்முறையீடு

தீர்ப்பின் சுருக்கம் : பேராயர் நாள் தரவில்லை என்ற காரணத்துக்காக பேராய மாமன்றம் கூடாமல் செயல்படாமல் இருக்க முடியாது. குழுக்களில் ஏற்பட்ட சிறுசிறு சலசலப்புகள் இருந்தால் பேராய மாமன்றம் இயங்காத நிலை என்று எடுத்துக் கொள்ளமுடியாது. பேராய மாமன்றம் அடுத்த தேர்தல் மூலமாகத்தான் அமைய சட்டத்தில் இடம் இருக்கிறது. சினாட் நிர்வாகக்குழுவுக்கு பேராயத்தின் உள் நிர்வாகத்தில் தலையிட சட்டத்தில் இடமில்லை. அதனால் சினாட் நிர்வாகக்குழு தீர்மானங்கள் செல்லுபடியாகாது. சினாட் நிர்வாகக்குழு அதிகார வரம்புகளை மீறியுள்ளது. நடந்திருக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது சினாட் நல்லெண்ணத்தில் இவைகளை செய்ததாகத் தெரியவில்லை.

சினாட் நிர்வாகக்குழு பேராய மாமன்றத்துக்கு வாய்ப்புகள் தரவில்லை. அதனால் இயற்கை நீதி மறுக்கப்பட்டுள்ளது. பேராய பொருளாளரை நியமிக்க பேராய நிர்வாகக் குழுவுக்குமட்டுமே உரிமை

உண்டு. சினாட் நிர்வாகக் குழுவுக்கோ அது நியமித்த அன்னிய குழுவுக்கோ உரிமை இல்லை. பேராயர் குழுக்களின் தீர்மானங்களை தடை செய்து வைத்தாரே தவிர, போகும் வழிகளை கூறவில்லை. எனவே குழித்துறை சார்பு நீதிமன்ற தீர்ப்பு சரியானதே. அந்த தீர்ப்பில் தலையிட தகுதியான காரணங்கள் இல்லாததால் கீழ்கோர்ட் ஆணை உறுதி செய்யப்படுகிறது. மேல் முறையீட்டு மனு நிராகரிக்கப்படுகிறது.

"Refusal of the Bishop alone to suggest a date cannot and does not in law amount to any inability of the Diocese and council to function as per the constitution."

"Even if there has been some disturbances in some of the committee meetings, the same cannot and does not lead to the interference that the Diocesan Council is unable to perform its functions."

"There was no basis at all for the Synod Executive Committee to come to the conclusion that the Diocesan Council of Kanyakumari Diocese is unable to perform its functions as per the constitution."

"As per the constitutions C.S.I. & K.K.D. the synod executive committee has not been empowered to prevent the constitution of a new Diocesan Council."

". . ., the synod Executive Committee had no powers to take over the internal management of a Diocese or to supersede and prevent the functioning and formation of the Diocesan Council and the various other bodies of the Diocese."

" The impugned resolutions by the Synod Working Committee are all void being beyond the competence of the synod working committee to pass such resolutions. There can therefore be no doubt, that the synod working committee had no jurisdiction to pass the impugned resolutions."

"Having regard to the circumstances mentioned above, and the history of the various events, that took place in the Diocese, empowering the Bishop to preside over the administrative committee,

after superseding all the elected bodies cannot held to have been done in good faith."

"... the various bodies of the K. K. Diocese were not given opportunity to make these representations against the said report. There had thus been complete disregard of the principles of natural justice."

"Unfortunately, after granting stay, the Bishop has not made any arrangement for deciding the matters in which he had granted stay, by the appropriate body".

"The trial court was therefore correct in coming to the conclusion that the impugned resolutions are not valid and are non-est and hence have to be ignored."

"The discretion exercised by the Trial Court is neither unreasonable nor capricious. I do not therefore find that there were any valid grounds for interfering with the discretion exercised by the Trial Court."

"In the result the order of the Trial Court is confirmed as stated above and this appeal is dismissed but in the peculiar circumstances of the case without costs.

வழக்கு எண் : **I. A. No. 151 of 1985**

நீதிமன்றம் : மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில்

நீதிபதி : திரு. R. ரெத்தினசுவாமி

வாதிகள் : பேராயர் G. கிறிஸ்துதாஸ் அணி

பிரதிவாதிகள் : செயலர் P. தர்மராஜ் அணி

இது மாவட்ட நீதிபதியின் C.M.A. 2/1985 தொடர்பான நீதிமன்ற ஆணைக்குத் தடைகோரல்.

தீர்ப்புநாள் : 17 செப்டம்பர் 1985. இரண்டு பக்கங்கள் மட்டும்

தீர்ப்பின் சுருக்கம் : சட்டப்படி இயங்கிக் கொண்டிருக்கும் பேராய அமைப்புகள் செயல்படாமல் தடுப்பதற்கே மனுதாரர் முயற்சிக்கிறார்.

பிஷப் மற்றும் சினாட் -ன் இந்த சட்ட விரோதமான செயல்கள் தொடரும். அதனால் C.M.A. 2/1985 -ல் பிறப்பித்த ஆணைக்கு தடைவிதிக்க முடியாது. மனுதாரரின் மனு தள்ளுபடியாகிறது.

"The Trial Court has held and this court has agreed that the elected bodies like the Diocesan Council, the Executive Committee and the other bodies have right to continue to function as such until they are replaced by validly elected bodies. There is also a concurrent finding that it was the Bishop who had been preventing the smooth functioning of the various elected bodies and that the Synod and the Church of South India are not competent to interfere in the internal affairs of the Diocese. There is also a concurrent finding that the impugned resolutions of the Synod Executive Committee are not valid. The Synod also does not have any powers to supersede the elected bodies of any Diocese. The petitioners in seeking a stay of operation of the order of this court are trying to prevent the lawfully elected bodies of the Diocese from functioning and to perpetuate the illegal actions in which the Bishop and the Synod had been engaging themselves. The inherent powers for perpetuating or permitting the continuance of such illegal acts. I do not therefore find any valid ground to stay the operation of the order of this Court.

In the result this application is dismissed with costs of the contesting respondents. Costs three sets. Advocate fees is fixed at Rs. 50/- for each set.

District Judge

வழக்கு எண் : **O.S. No. 98 of 1985**

நீதிமன்றம் : Additional Civil Judge, Shimoga, Karnataka

நீதிபதி : Sri. C.H. Nanjappa

வாதி (Plaintiff) : ஆல்பிரட் சம்பத்குமார், ஷிமோக

பிரதிவாதிகள் *(Defendents)* ***:*** P.தர்மராஜ், முதற்கொண்டு 14 நபர்கள்.

தீர்ப்புநாள் : 19 ஜூலை 1985 - 40 பக்கங்கள் 24 பாராக்கள்

மனுதாரரின்வாதம் : பிரதிவாதிகள் சிலர் C.S.I. உறுப்பினர்களல்ல என்றும், அவர்கள் பேராய தலைவர்களாக தொடர முடியாது என்றும், சினாட் குழு நியமித்த முதல்வர் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் தொடர்வதை தடை செய்யக்கூடாது என்றும், சிலர் தாளாளர்களாக பணியில் தொடரக்கூடாது என்றும், தடை ஆணை பிறப்பிக்க வேண்டும் என்பது மனுதாரரின் விண்ணப்பம்.

தீர்ப்பின் சுருக்கம் : சில விஷயங்களில் பேராயமே முழு அதிகாரம் பெற்றது. அவைகளில் தலையிட சினாட் நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் இல்லை. அதனால் கல்வி நிலையங்களை பொறுத்த மட்டில், உள் விவகாரமாகையால், சினாட் தலையிட முடியாது. இதில் நீதிமன்றம் தலையிடுவது உசிதமல்ல. கன்னியாகுமரி பேராயத்தின் உள் விவகாரங்களில் மனுதாரர் எந்த அளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறார் என்பதும் விளக்கப்படவில்லை. ஒரு கல்வி ஸ்தாபன உள் விவகாரங்களில் ஒவ்வொரு மனிதனும் மூக்கை நுழைத்தால் என்னவாகும்? மனுதாரருக்கு கன்னியாகுமரி **C.S.I.** பேராய கல்வி ஸ்தாபனங்களில் மூக்கை நுழைக்க உரிமை இல்லை. தடை ஆணை பிறப்பிக்கமுடியாது. ஒன்றுக்கு பலவழிகளில் தடை ஆணை பிறப்பிக்காமலிருக்க நியாயங்கள் உண்டு. எனவே எதிர்மனுதாரரின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

" I hold that the planitiff has failed to make out prima facie case to grant an order of temporary injunction during the pendency of the suit."

"It is for the Diocese and its Executive Committee to look into the affairs of the Educational Institutions in question. If the temporary injunction is not granted the plaintiff will loose nothing since the plaintiff has no rights or legal rights in the subject matter of the suit and he has no locus standi to seek such an order. The balance of convenience is not in favour of the plaintiff and the same is in favour of the contesting defendents to vacate the exparte order of injunction is granted."

"It becomes clear from above that the plaintiff had failed to establish both the ingredients to obtain an order of temporary injunction during the pendency of the suit. Hence hereby the temporary injunction granted infavour of the plaintiff is hereby vacated."

பாகம் : III

பாராட்டுகள்

வீரப்பெருமகனே! வெற்றியின் திருஉருவே! நீ வாழ்க! வெல்க!!

கழிந்த சில மாதங்களாக குமரிப் பேராயம் கொந்தளிக்கும் கடலாய், குமுறும் எரிமலையாய்க் காட்சி அளித்தது. பேராயர் செயலாளர் தகராறு என்று மக்கள் பேசிக் கொண்டனர். ஆனால் உள்ளபடியே கருத்து வேற்றுமையன்று. 12-ம் நூற்றாண்டு கொள்கையினை அதாவது திருச்சபையின் அதிகாரத்தை மக்களிடமிருந்து பறித்தெடுக்க பேராயர் முனைந்தார். ஆனால் செயலர் திரு. **P.** தர்மராஜ் அவர்கள் நமது பேராயக் குழுக்கள், செயற்குழு மற்றும் அமைப்புகள் அத்தனையும் ஜனநாயக அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று கூறிவந்தார். ஆகவே நடந்த போராட்டம் எதேச்சாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்குமிடையே நடந்த போராட்டமாகும். இப்போராட்டத்தினை நமது செயலாளர் அவர்கள் மிகவும் சிரமத்துடன் நடத்தி வெற்றி பெற்றுள்ளார். பலருடைய ஏச்சுக்கள், பேச்சுக்கள், பேராயரால் தூண்டப்பட்ட காலிகளால் வந்த தொல்லைகள், தொந்தரவுகள் இவற்றை சமாளித்தார், சாதனை புரிந்தார்.

வழக்குமன்றம் போகக்கூடாது எனக்கூறும் பேராயர் குழித்துறை நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு பேராயத்தில் அமைதியை ஏற்படுத்தவில்லை. (O.S. 53\ 84) வழக்கினை ஆராய்ந்த நீதிபதி விரிவான தீர்ப்பினை விவரமாக வெளியிட்டார். ஆனால் விவரம் இல்லாத பேராயர் மீண்டும் சிலரின் தூண்டுதலால் நாகர்கோவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த மேல் முறையீடு (C.M.A. 2/85) கழிந்த ஜூன், ஜூலை திங்களில் விவாதிக்கப்பட்டது. இருசார் வழக்கறிஞர்களும் தங்கள் விவாதங்களை எடுத்து வைத்தனர். திறமையினைக் காட்டினர். குமரிப் பேராய மக்கள் இந்த வழக்கின் இறுதியிலாவது அமைதி நம் பேராயத்தில் ஏற்படாதா என்று அங்கலாய்ப்புடன் இருந்தனர். இந்த வழக்கும் முடிவடைந்தது. "பேராயத்தின் நிர்வாகம் சட்டப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களால்தான் நடத்தப்பட வேண்டும்" என்று தீர்ப்பளித்தது. 16-08-1985 அன்று மாவட்ட நீதிபதி

தனது தீர்ப்பினைக் குறிப்பிட்டு பேராயர் மீது பேசப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கினைப் பின்வலித்திட செயலரை வருந்திக் கேட்டுக் கொண்டபோது, இவ்வாறு குறிப்பிட்டாராம். "இந்த தீர்ப்பு அவர்களை புரிய வைத்துவிடும்" என்று புகன்றாராம். (This judgement will appeal to their senses) ஆனால் யார் எதைச் சொன்னாலும் புரிந்துக் கொள்ளக்கூடிய அறிவில்லாத காரணத்தாலோ அல்லது ஆணவத்தாலோ பேராயர் நல்ல தீர்ப்பிற்கு தலை வணங்காது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை மாதிரி போட்டி அலுவலகத்தினை தனது வீட்டில் வைத்து நடத்திவருகிறார். இந்த வேடிக்கையான செயலை இந்தப் பேராயம் எத்தனை நாள் சகித்துக் கொண்டிருக்கப் போகிறதோ தெரியவில்லை. ஆனால் **இவ்வளவு இன்னல்களுக்கும் இழிச் சொல்லுக்குமிடையே எதையும் தாங்கும் இதயத்தோடு வழக்கினைத் திறமையாக நடத்தி வாகை சூடிய செயலர் திரு. P. தர்மராஜ் அவர்களை வாழ்த்துகிறோம்.**

உங்கள் தொண்டு தொடர்ந்திட, தொல்லைகள் நீங்கிட தூய உள்ளத்துடன் வாழ்த்துகிறோம்.

(நீலத்திரை - அக்டோபர் 85, பக்கம் 6,7)

நன்றி : தேசோபகாரி நவ. 1985.

A. Thankaraj Joseph, M.P.S.
Deputy Supt. of Police (Retd)
34, Vedananda Street, Nagercoil
18th September, 1985

Mr. P. Dharmaraj, B.Sc., B.L.
Secretary, K.K.Diocese, Nagercoil

My dear Mr. Dharmaraj,

Our thanks are to God for his wonderful guidance in helping us to get a favourable stand in the Diocese, which has really caused a fear to the opposite group headed by the Bishop and supported by Mr. Sathiyadhas, Mr. Dennis, Mr. Grant and others. Yesterday's decision by the Dt. & Sessions Judge on the stay operation prayer is a severe blow to the Bishop and Synod.

On behalf of the Home Church Congregation, I thank you for all the bold steps you have taken to prove your worth as **a dependable leader of the K.K. Diocese.**

We sincerely thank you for seeing Mrs. E.G.M. Johnson to be the Principal of Women's Christian College in helping her in the various cases in the courts.

Now we have built a good image in the K.K. Diocese and the Synod. This unity should be retained to achieve our object and prove that democracy will be established by us at all cost.

A.T. Joseph

தேசோ. நவ. 1985

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள செயலருக்கு

நமது பேராயர், ஒரு வரையறுக்கப் பட்ட சட்டத்திற்குட்பட்டு செயல்பட வேண்டியவர் என்பதை நீதிமன்றத்தின் வாயிலாக கிறிஸ்தவ உலகுக்கு எடுத்துக் காட்டிய உங்களுக்கு என் பாராட்டுகள். நீங்கள் இவ்விடுதலைப் பணியில் ஈடுபட்டிராமல் இருந்தால், பேராயர் சட்டத்திற்குட்பட்டவர் என்பதை சபைமக்கள் புரியாமல், அவர் கிறிஸ்துவின் பிரதிநிதி என்றும், அவரது பிரதிநிதியாகிய ஆயர்களுக்கு அடிமைப்பட்டிருப்பார்கள் என்பதற்கும் ஐயமில்லை. நமது ஆதீனத்தில் மட்டும் சபை ஜன நாயகத்தை நிலைநாட்ட தேவன் உங்களை பயன்படுத்தாமல், பிற பேராயங்களுக்கும் நமது பேராயம் ஓர் எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும் அமைந்திருப்பதற்காக தேவனுக்கு பணி புரிகின்ற உங்கள் அனைத்து முயற்சிகளையும் வாய்க்கப் பண்ணுவாராக, இன்னும் வெற்றிமேல் வெற்றியைக் கர்த்தர் உங்களுக்குத் தருவார் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகின்றேன். பழைய ஏற்பாட்டுக் கால மோசேயைப் போன்று விடுதலைக்காக செயல்பட்ட, செயல்படுகின்ற உங்களுக்கு மீண்டும் என் பாராட்டுகள்.

S. ஜோயல் செல்லத்துரை, ஆலன்கோட்டை

தேசோ. நவ. 1985

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

6 நீதிமன்றம் தலையிட முடியாது

வழக்குஎண் : *C.R.P.P.D.(M.D.) No. 485/2008*

நீதிமன்றம் : மதுரை உயர்நீதிமன்றகிளை

நீதிபதி : திருமதி R. பானுமதி

தீர்ப்புநாள் : 19 மார்ச் 2008 பக்கங்கள் 20 54 பாராக்கள்

மனுதாரர்கள் : அருள்திரு. K. M. தேவராஜ் முதற்கொண்டு 5 பேர். அவர்கள் வழக்கறிஞர் : திரு. K. N. தம்பி.

எதிர்மனுதாரர்கள் : திருமதி. E.G.M. ஜாண்சன் அவர்களும் பேராயரும் . இவர்கள் வழக்கறிஞர் : திரு. P. செல்வராஜ் மற்றும் திரு. K. ஸ்ரீகுமாரன் நாயர்.

பிரச்சினை என்ன? : மனுதாரர்களின் இடைக்கால தடை ஆணை கோரிக்கையை நாகர்கோவில் துணை நீதிபதி ஏற்கவில்லை.

"Non - grant of interim stay by the Appellate Court is the subject matter of challenge in this Revision Petition."

வழக்கு விவரம் : **திருமதி. E.G.M. ஜாண்சன் :** பதவி நீக்கம் செல்லாது - பேராய சட்டம் மீறப்பட்டுள்ளது. - இயற்கை நீதி வழங்கப் படவில்லை - பணத்தால் ஈடுகட்ட முடியாத அளவில் கௌரவ இழுக்கு.

மாவட்ட முன்சிப் : பேராயம் பக்கமே திரும்பாமல் திருமதி E.G.M. ஜாண்சன் அவர்கள் பக்கத்தை மட்டுமே பார்த்து நின்று பேராயத்தின் பதவி நீக்க ஆணைக்கு இடைக்கால தடை போட்டார்.

துணை நீதிபதி : ஆவணங்களை முழுமையாக பரிசீலிக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லி தடை ஆணைக்குத் தடை போட மறுத்துவிட்டார்.

ஆக, பேராயத்துக்குச் சொந்தமான மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியை நீதிமன்றம் அபகரித்துக் கொண்டது. நீதிமன்றம் தாளாளரை நியமித்தது. மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி பேராயத்தின் பிடியிலிருந்து நழுவியது. கல்லூரியைபறி கொடுத்த பேராயம் உயர் நீதிமன்றத்துக்குள் தஞ்சம் புகுந்தது. உயர் நீதிமன்றம் கல்லூரியை அபகரித்தவர்களை கண்டித்து பேராயத்துக்கு மீட்டுத்தந்தது.

உயர் நீதிமன்றம் : To avoid any further delay and inconvenience caused to the running of administration, I have examined the entire materials on record and documents and considered the contentious points raised by the parties and carefully examined the grounds of appeal in the C.M.A. No. 2/2008 and examined the correctness of the order passed by the learned District Munsiff in I.A. No. 1135/2007."

"In my considered view order the District Munsiff has caused great prejudice and injustice to the institution. The learned District Munsiff has ignored the materials on record and brushed aside the minutes of the Special meeting held on 15-10-2007, removing her from the correspondentship and that she her-self was a signatory in the minutes".

19-10-2007 -ல் நடந்த காரிய நிர்வாகக் குழுவில் E.G.M. ஜாண்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டார். கூட்டத்தில் அவரே ஆஜராகியிருந்தார். கூட்ட நடபடிகளில் அவரே கையெழுத்துப் போட்டுள்ளார். இந்த உண்மையை மஜிஸ்ட்ரேட் எடுத்துக் கொள்ளாதது ஒரு தலை பட்சம் மற்றும் அநீதி என உயர் நீதிமன்ற நீதிபதி காண்கிறார்.

"The resolution passed by the Executive Committee is more or less like orders ...They cannot be put on par with the court orders". " The standard adopted by that Executive Committee may have been far more strict than what the court...".

காரிய நிர்வாகக்குழு தீர்மானம் நீதிமன்ற ஆணையைவிட பெலன் வாய்ந்தது என்பது இங்கே தெளிவாகிறது.

"There has been fairness must refrain from interferring with the action taken of the voluntary Association of which the plaintiff chose to become a member of her own volition. Natural Justice in the conduct of such associations would not have the same degree of vigour, as those principles would have in matters which are required to be adjudicated upto before courts and tribunals."

E.G.M. ஜாண்சன் உறுப்பினராக இருக்கும் ஒரு அமைப்பின் செயல்பாட்டிலிருந்து நீதிமன்றம் விலகி நின்றிருக்க வேண்டும். இப்படிப்பட்ட அமைப்புகள் எடுக்கும் முடிவுகளுக்கு, இயற்கை நீதிக்கு அவ்வளவாக அழுத்தம் கொடுக்க தேவை இல்லை.

"In my considered opinion Executive Committee or Governing Board of the C.S.I. is entitled to carry on its affairs in accordence with its own rules. The courts below have committed serious and substantial error in upsetting the resolution of the Executive Committee."

காரிய நிர்வாகக்குழு தீர்மானத்தை புறந்தள்ளிவிட்டு தீர்ப்பு வழங்கிய கீழ் நீதிமன்றங்கள் மிகப்பெரிய தவறை இழைத்துவிட்டன என்பது நிருபணமாகிறது.

"Rules of Natural Justice are not a straight -jackct formula and not an unruly horse". "... that the plaintiff herself has participated in the executive committee on 15-10-2007 and she signed in the minutes of the meeting and charge of the correspondentship was handed over by the plaintiff on 16-10-2007. The grievance on violation of the principles of Natural Justice is baseless."

E.G.M. ஜாண்சன் காரிய நிர்வாகக் குழுவில் 15-10-2007 அன்று ஆஜர் ஆகியிருந்தார். அவருடைய பதவி நீக்க நடபடிகளில் கையெழுத்து இட்டிருக்கிறார். 16-10-2007 -ல் பதவியை கைமாற்றம் செய்திருக்கிறார். இதில் அம்மையார் எந்த இயற்கை நீதியை இழந்தார்? அந்தவாதம் அடிப்படையற்றது.

உயர் நீதிமன்ற தீர்ப்பு

"Since the Plaintiff herself it is participant of the Executive Committee meeting held on 15-10-2007 and she herself voluntarily

handed over charge and the new incumbent has already assumed charge the courts below ignored all the relevant aspects and committed serious error in ignoring the minutes of the meeting and other relevent aspects. In my considered view the order of the minutes of the learned District Munsiff in I.A.No. 1135/2007 is perverse. Unless the same is set aside, running of college administration would be in jeopardy and the **ultimate sufferers would be the institution and the students thereon.** In such view of the matter, exercising supervisory jurisdiction under act 227 of the Constitution of India, **the order of the learned District Munsiff in I.A.No. 1135/2007 in O.S.No. 554/2007 is liable to be set aside".**

In the result the revision petition submitted by the Diocese is allowed.

E.G.M. ஜாண்சன் அவர்களே பங்கு கொண்டு தன் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் அதில் கையெழுத்து இட்டிருந்ததாலும், பதவியை அவரே கைமாற்றம் செய்ததாலும் இயற்கை நீதி இழப்பு இல்லை.

பேராய உள்நிர்வாகத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது. அப்படி தலையிடுவது கல்லூரிக்கும் மாணவர்களுக்குமே முடிவான கேடுவிளைவிக்கும். அதனால் கீழ்கண்ட கோர்ட் ஆணைகள் விலக்கப்பட்டு பேராயத்தின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பதவி நீக்கம் பற்றி திருமதிக்கு எதுவும் தெரியாதா?

ஒரு இடத்தில் இப்படி வருகிறது : "The plaintiff came to know from the Manager of the Diocesan office that a resolution was passed in the meeting for the removal of the plaintiff from the office on 15-10-2007"

இன்னொரு இடத்தில் இப்படி வருகிறது : Plaintiff did not know about the happenings and that she visited her relative house and left Nagercoil on 16-10-2007 and returned only on 22-10-2007 and that the principal of the college informed her about the removal from the correspondentship.

ஆனால் நீதிபதி சொல்கிறார், திருமதி அவர்கள் 15-10-2007 காரிய நிர்வாககுழு கூட்டத்தில் கலந்து கொண்டார், குழு நடபடிகளில் கையொப்பம் இட்டிருக்கிறார். 16-10-2007 -ல் பதவியை டாக்டர் N. ராஜப்பனிடம் ஒப்புவித்திருக்கிறார். இதை கணக்கில் எடுக்காமல் கீழ் நீதிமன்றம் இடைக்கால தடை ஆணை பிறப்பித்து கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. இது திருமதி அவர்களின் உண்மை இருட்டடிப்பால் கிடைத்த வெற்றி.

நிர்வாகத்துக்கு இழப்பு

"The learned District Munsiff does not appear to have kept in view the larger interest of the institution and its administration".

"When the plaintiff has already handed over charge there was not irreparable loss likely to cause injury to the plaintiff if temporary injunction is not granted"

"Thrusting the management with the plaintiff as correspondent there would be irreparable injury to the administration of the college . . . The person who lost the trust and confidence of the Governing Board of the college cannot be thrust upon the administration by the order of the court, which has what happened in this case."

நிர்வாகத்தின் நம்பிக்கையை இழந்தவரை கீழ் நீதிமன்றம், நிர்வாகத்தின் வாயில் பெலவந்தமாக திணித்திருக்கிறது. அதனால் திருமதி பூட்டுடைத்து உள்ளே ஏறினார். தாளாளர் நாற்காலியை அபகரித்துக் கொண்டார்.

திருமதிக்கு வாய்ப்புத் தரப்பட்டதா? **:** பீனாவின் நியமன ஆணையை பின்வலிக்கக் கேட்டு பேராயர் அனுப்பினக் கடிதமும், 15-10-2007 நிர்வாகக்குழு கூட்டத்திற்கு திருமதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தையும் நீதிமன்றம் வாய்ப்புக் கொடுத்ததாக ஏற்றுக்கொண்டது. "Fair play in the action affording sufficient opportunity to the plaintiff".

திருமதி அவர்கள் தன் கடமையை செய்தாரா? "The Correspondent was duty bound to implement all the resolutions of the Governing Board of the College".

யாருடைய நியமனமும் நடக்கவில்லை. அதனால் பீனாவுக்கு கொடுத்த நியமன ஆணையை பின்வலிக்க ஆட்சிக்குழு தலைவர் கடிதம் எழுதியபோது அக்கடிதத்துக்கு திருமதி அவர்கள் பணிந்தார்களா? இல்லை.

ஒரு நீதிமன்ற ஆணை எப்போதிலிருந்து செயல்படும்? "The rights of the parties stand crystallised on the date of commencement of litigation and the right to relief should be decided by reference to the date on which the petitioner entered the portals of the court".

ஒருவர் கோர்ட்-ல் தன் மனுவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்துதான் அவருடைய விண்ணப்பத்துக்குத் தடங்கல் வராமல் என்ற ஆணை பிறப்பிக்கமுடியும். அந்த நாளிலிருந்து அவர் நிலை காப்பாற்றப்பட வேண்டும். திருமதி மாவட்ட முன்சிப்கோர்ட்க்குச் சென்றது தன் பதவியை கைமாற்றிய 8-வது நாள். அப்போது அவர் பதவியில் இல்லை. இது மறைக்கப்பட்டது. இதை கணக்கில் எடுக்காமல் முன்சிப் இடைக்கால தடை ஆணை பிறப்பித்து கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் துன்பங்களை வருவித்துவிட்டார். நீதிமன்றம் கல்லூரியின் உள்விவகாரத்தில் தலையிட்டுக் குழப்பிவிட்டது. ஒரே வளாகத்தில் முன்சிப் -ம் துணை நீதிபதியும் இருந்து கொண்டு துணை நீதிபதி எல்லா ஆவணங்களையும் பரிசீலிக்க வாய்ப்பு இல்லை. அதனால் தடை ஆணைக்கு தடையாணை தர முடியாது என்றது, பெரிய அபத்தம் மற்றும் கேடானது. E.G.M. ஜாண்சன் பதவியில் தொடர்ந்தால் . . .

"In my considered view the above observation of the appellate court would have the effect of perpetuating illegal act of the plaintiff assuming the office forcibly on the strength of interim order of the court."

முன்சிப்-ன் இடைக்கால தடை ஆணை தொடருமாயின் E.G.M. ஜாண்சனுடைய சட்ட விரோதச் செயல் அந்த ஆணையின் பலத்தில் தொடரும் என்பது நீதிபதியின் கருத்து.

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

7 மகராசனின் திருமுழுக்கு

கன்னியாகுமரி மாவட்டத்தில் லண்டன் மிஷனறி சங்கம் (L.M.S) ஸ்தாபித்த முதல் சபை, மயிலாடி. இந்த சபையின் முதல் உபதேசியார் மகராசன் என்ற வேதமாணிக்கம். இவர் ஞானஸ்நானம் பெற்ற இடம், தியதி ஆகியவற்றில் குளறுபடிகள் இருப்பதாகத் தெரிகிறது. மகராசனின் கொள்ளுப்பேரன், திரு. C.M. ஆகூர் ஆங்கிலத்தில் எழுதி வெளிவந்த (1903) "திருவிதாங்கூர் திருச்சபை வரலாறு" படிக்கும் போது இவ்வுண்மை தெரிய வருகிறது. அவர் இவ்வாறு கூறுகிறார் :

The first to be baptised were Vedamonickam's household and not Vedamonickam himself as erroneously stated in the book, "The Land of Charity," for Vedamonickam has already received his baptism at the hands of Mr. Kohlhoff at Tanjore. The next to be baptised were Gnanamuthu the head of the family to which Mr. Vedamonickam belonged and his household. In all Mr. Ringeltaube had the privilege of baptising that day forty persons (most of them being more or less near and distant relatives of Vedamonickam.)

கன்னியாகுமரி மாவட்டத்தில் லண்டன் மிஷனறி சங்கத்தின் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவ சபை ஸ்தாபிப்பதற்கு முழுமுதற் காரணரான மேலை நாட்டு திருத்தொண்டர், வில்லியம் தோபியாஸ் றிங்கல்தௌபே ஐயர், 1806-ல் ஏப்ரல் மாதம் முதன்முறையாக மைலாடிக்கு வந்தார். அங்கு 200-க்கு அதிகமானவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பார்கள் என எதிர்பார்த்தார். ஆனால் ஐயர் ஏமாற்ற மடைந்தார். அந்த மைலாடி மந்தையை பக்கத்து சபை

உபதேசியாரின் பொறுப்பில் விட்டுச் சென்றார். முதல் விஜயத்தின் போது எவருக்கும் திருமுழுக்குக் கொடுக்கவில்லை (ஆகூர்) 28-2-1807-ல் திரும்பவும் மயிலாடி வருகிறார். தான் உபதேசியிடம் ஒப்படைத்த அந்த சிறுமந்தை ஞானஸ்நானம் பெற தகுதி என்று கண்டு அன்றே 40 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்(ஆகூர்). இதுவே கன்னியாகுமரி மாவட்டத்தில் லண்டன் மிஷனறி சங்கம் சார்பாக நடந்த முதல் ஞானஸ்நான நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சி நடக்க காரணமாயிருந்தவர் றிங்கல்தௌபேயால் நியமிக்கப்பட்ட பக்கத்து சபை உபதேசி என்றும், ஞானஸ்நானம் பெற்றவர்களில் ஒருவர் வேதமாணிக்கம் என்றும், அவர் பின் மைலாடி சபையில் உபதேசியாராக நியமிக்கப் பட்டார் என்றும், இங்கு பணி செய்த பக்கத்து சபை உபதேசி றிங்கல்தௌபேயுடன் பாளையங்கோட்டைக்குத் திரும்பிப் போய் விட்டார் என்றும் "தர்மபூமி" (The Land of Charity) என்ற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. On his second visit to Meiladi, Ringeltaube had the privilege of baptising in one day forty persons, who had been instructed and led to the truth by the catechist whom he had left the charge on the work there .... Among those baptised was Maharasan, whose name was changed to Vethamonickam, and who was appointed catechist of Meiladi, the former teacher returning with Ringeltaube to Palayamcottai (Mateer).

"தர்மபூமி" என்ற புத்தகத்தின் ஆசிரியர், அருள்திரு. சாமுவேல் மேற்றீர் மிஷனறி. பல்லாண்டுகள் மலையாளம் மிஷனில் பணிபுரிந்தவர். திருவனந்தபுரத்தில் அவர் நினைவாக ஒரு பெரிய ஆலயமும் கட்டப்பட்டிருக்கிறது. மேற்றீர் ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியரும்கூட. இவர் எழுதிய வரலாற்று நூல்கள் வரலாற்று மாணவர்களால் முதல் தகவல் நூலாக இன்றும் பயன்படுத்தப்படுகிறது. விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று, உண்மைகளை வேதாந்தத்தில் புதைக்காமல் அல்லது மறுருபப்படுத்தாமல் வரலாறு எழுதுபவர் என்பதை அவர் வெளியீடுகளைப் படிக்கும் போது எந்த வரலாற்று மாணவனுக்கும் புலப்படும். "தர்ம பூமி" என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் குறித்து சாமுவேல் மேற்றீர் இவ்வாறு கூறுகிறார்.

Throughout this book we have aimed at special accuracy in every assertion that has been made at giving a fair, unvarnished statement of both sides of every question.

In the statistical chapters and in the history of our mission I have, where necessary, freely compiled from the Annual Reports of the various missionaries, ... (Mateer)

சாமுவேல் மேற்றீர் எழுதியதும், சில்வஸ்டர் ஹார்ண் என்பவர் எழுதிய "லண்டன் மிஷன் சங்க வரலாறு" கூறுவதும் ஒன்றாக இருக்கிறது என எஸ்.எ. அசறையா "றிங்கல்தௌபே" என்ற புத்தகத்தில் எழுதுகிறார். வேதமாணிக்கத்தின் ஞானஸ்நான இடத்தையும் காலத்தையும் குறித்து அலசி ஆராய்ந்த அசறையா மேலும் கூறுகையில், றிங்கல்தௌபே ஐயர் தரங்கம்பாடியிலிருந்து 4-10-1805 தேதியிட்ட ஒரு கடிதத்தை எழுதுகிறார்; அதில் About the time a heathen from Travancore called upon me, and assured me, that in his village there were upwards of two Hundred persons desirous to receive Christianity என்று குறிப்பிடுகிறார். றிங்கல்தௌபே குறிப்பிடும் திருவிதாங்கூர்காரன் வேத மாணிக்கம் என்றால் சாமுவேல் மேற்றீரும் சில்வஸ்டர் ஹார்ணும் கூறுவது உறுதியாகிறது என்கிறார் (அசறையா)

இவ்வளவு தெளிவாக சில வரன்முறைகளுக்குக் கட்டுப்பட்ட, வரலாற்றாசிரியர்கள் திரு. வேதமாணிக்கத்தின் ஞானஸ்நான இடம் மயிலாடி என்றும் ஞானஸ்நான தியதி 28-2-1807 என்றும் கூறும்போது, அதனை திரு. சி.எம். ஆகூர் மறுக்கிறார். அதற்கு அவர் பயன்படுத்தும் வார்த்தை "தவறு" (erroneous). வரலாற்று மாணவர்கள் இதனை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். காரணம்? "தர்மபூமி" வெளியான ஆண்டு 1870. 33 ஆண்டுகள் கழித்துதான் "திருவிதாங்கூர் திருச்சபை வரலாறு" என்ற புத்தகம் (1903-ல்) வெளியானது. ஆகவே ஆகூர் தன் கருத்தை நிலை நாட்ட தகுந்த ஆதாரங்களைத் தர வேண்டும்.

1799-ல் தஞ்சாவூர் போய் திரும்பிய வேதமாணிக்கம் மயிலாடி வந்தவுடன் தன் உறவினர்களில் 30 பேரின் பெயரை மாற்றிய விவரத்தை விலாவாரியாக பட்டியலிட்டு தர முடிந்த ஆகூர், தனது புத்தகத்தில், 1807-ல் நடந்த முதல் ஞானஸ்நான பட்டியலை தரவில்லை. திரு. வேதமாணிக்கம் அந்த பட்டியலில் அடங்கியவர் என்பது தான்

உண்மையா? நாகர்கோவில் கல்கோவில் கால் கோள்விழாவில் (1819) கலந்து கொண்டவர்களின் (உறவினர்கள்) பட்டியலை விலாவாரியாக தந்த ஆகூருக்கு ஏன் முதல் ஞானஸ்நான பட்டியலை தந்து சர்ச்சைக்குரிய விஷயத்தை தெளிவுபடுத்தியிருக்க முடியாது? வேதமாணிக்கம் 1807-ல் மைலாடியில் வைத்துதான் ஞானஸ்நானம் பெற்றார் என்ற உண்மை வெளியாகிவிடும் என்பதா?

மிஷனறிகளும் பிரபல வரலாற்றாசிரியர்களுமான கால்ட்வெல், சாமுவேல் மேற்றீர் ஆகியோருடைய கருத்துக்களை "தவறு" (erroneous) "சடுதியான" (hasty) முடிவு என்றெல்லாம் வர்ணிக்கும் ஆகூர், "திருவிதாங்கூரில் இயேசுவுக்கு முதற்கனி" வேதமாணிக்கம் என்று கூறுவது, தவறுதலான, சடுதியான முடிவல்லவா? அவர் கூறுகிறார்: So great was the earnestness and so firm was the faith of the new convert, that Mr. Kohlhoff hesitated not in due time to receive him into the community of Christians there "the first fruit of Travancore to Christ". (Agur)

வேதமாணிக்கத்தின் நேர்மையின் வலிமையையும் விசுவாசத்தின் ஆழத்தையும் கண்ட கோல்காப் ஐயர் அவர்கள், காலம் வந்த போது கிறிஸ்தவ சமுதாயத்தில் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்ததால் திருவிதாங்கூரில் இயேசுவுக்கு முதற் கனியானார் என்று கூறுகிறார் ஆகூர். இங்கேயும் வேதமாணிக்கம் ஞானஸ்நானம் பெற்றார் என்று திடமாகக் கூறப்படவில்லை. ஆனால் திரும்பவும் கூறுகிறார்.

Mr. Kohlhoff when he baptised the new converts changed the name Maha Rasan into Vedamonickam. "The Gem of the Bible" and the name of his nephew Sivagurunathan into Masilamoni, "The spotless Gem or Innocent." (Agur)

முதலில் வேதமாணிக்கத்தின் ஞானஸ்நானம் தெளிவில்லை யாயினும் தொடர்ந்து வரும் வரிகளிலிருந்து கோல்காப் ஐயர் ஞானஸ்நானம் கொடுத்ததாகத் தெரிகிறது. தன் உறவினன் மாசில்லாமணியும் கூட இருந்ததாகத் தெரிவதால் வேத மாணிக்கத்தின் முதல் தஞ்சாவூர் பயணத்தின் போது கோல்காப் ஐயரால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று யூகிக்க இடம் உண்டு. ஆனால் ஆகூர், வேதமாணிக்கத்தின் ஞானஸ்நானம் பற்றி

சர்ச்சைகள் முன்னர் எழுந்த போதும், தெளிவாய் தர இயலாமைக்குக் காரணம் தான் திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனி என்று நிலை நாட்ட வேண்டும் என்ற அவசரமாகவும் இருக்கலாம். ஆகூரின் இந்த கூற்று தவறானது (erroneous) மேலும் சடுதியானது (hasty)

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. ஒன்று, கடுமையான விதிமுறைகளை பின்பற்றி லுதரன் வழி பயிற்சி பெற்ற ஒரு மிஷனறி, கோல்காப் ஐயர், முன் பின் அறிமுகமில்லாத ஒரு தீவிர சிவபக்தனுக்கு இவ்வளவு சடுதியில் ஞானஸ்நானம் கொடுப்பாரா? (மேற்றீர்) இரண்டு, வேதமாணிக்கத்துக்கு முன்னர் திருவிதாங்கூரில் கிறிஸ்தவர்களே இல்லையா? அல்லது "புராட்டஸ்டான்ட்" கிறிஸ்தவர்களே இல்லையா?

வேதமாணிக்கம் தனக்கும் தன் இனத்தாருக்கும் சமுதாய அந்தஸ்து வேண்டுமென்று தேடி அலைந்தவர். பள்ளிப் பருவத்தில் உயர் ஜாதியினருடன் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. குல தெய்வமான இலங்காமணியனை வழிபட்டு வந்த வேதமாணிக்கம், தன் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள சுப்பிரமணியனை வழிபடத் துவங்கினார். பாம்பைக் கொல்லுவது கூட பாவம் என்று உணர்ந்த இந்த சிவபக்தன் புண்ணிய யாத்திரை செல்வது வழக்கம். ஒரு நாள் சிதம்பர தரிசனத்துக்குச் சென்றவர் தஞ்சாவூரிலிருக்கும் தன் உறவினர் வீட்டிற்குச் செல்கிறார். அவர் உறவினர்கள் கிறிஸ்தவர்கள். ஞாயிறு வந்த போது தன் உறவினர்களுடன் கிறிஸ்தவ ஆலய வழிபாட்டுக்குச் செல்லுகிறார். அங்கே, எஸ்.பி.ஸி.கே மிஷனை தஞ்சாவூர் முதல் கன்னியாகுமரி வரை நிர்வகித்துக் கொண்டிருக்கும் கோல்காப் ஐயரிடம் தான் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வதாக சூசகமாக வேதமாணிக்கம் கூறுகிறார். கோல்காப் ஐயரின் ஒரே ஒரு பிரசங்கம் இந்த தீவிர சிவபக்தனை வெகுவாக பாதித்து விட்டதாக கூறுகிறார். மனம் பூரித்துப் போன ஐயர் அவர்கள் "மெய்ஞானம்" என்ற புத்தகத்தை கொடுத்து எட்டு நாட்களில் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தச் சொன்னாராம். வேதமாணிக்கம் ஆறு நாட்களிலேயே தன் விசுவாசத்தை வெளிப்படுத்தியதால் கோல்காப் ஐயர் தாமதியாமல் வேதமாணிக்கத்தை கிறிஸ்தவ சமுதாயத்தில் சேர்த்துக் கொண்டாராம். இந்த நேரத்தில் வேதமாணிக்கத்தோடு ஞானஸ்நானம் பெற்ற மாசில்லாமணி என்ன ஆனார் என்பது தெரியவில்லை.

இவ்வளவு சடுதியில் லுதரன் வழிவந்த கோல்காப் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டார் என்பது ஆகூருக்குத் தெரியும். எனவே, வேதமாணிக்கம் தஞ்சாவூரில் சில காலம் தங்கி மிஷனரிகளின் போதனைகளை கவனமாய் கேட்டார் என்று ஆகூர் கூறுகிறார். அதே சமயம் சில மாதங்கள் தஞ்சாவூரில் தங்கி திருமறை கல்வி பெற கோல்காப் ஐயர் கேட்டதாகவும், அதனை ஏற்றுக் கொள்ளாமல் அவசரம் அவசரமாக வேதமாணிக்கம் மயிலாடி நோக்கி புறப்பட்டதாகவும் கூறுகிறார். லுதரன் வழி பயிற்சி பெற்று மிஷனரியான றிங்கல் தௌபே ஐயர், ஒருவனை எளிதில் கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பதற்கு ஆகூர் அவர்களே தனது "திருவிதாங்கூர் திருச்சபை வரலாறு" என்ற புத்தகத்தில் அநேக சம்பங்களைத்தருகிறார். அவற்றில் இரண்டு நிகழ்ச்சிகளை இங்கே கவனிக்கலாம். வேதமாணிக்கம் 1799-ல் தஞ்சாவூருக்குச் சென்று கிறிஸ்தவத்தை ஏற்று மைலாடி திரும்பி தன் இனத்தவருக்கு கிறிஸ்துவைப் பற்றி போதனையளித்தார். 30 உறவினர்களுக்கு கிறிஸ்தவப் பெயர்களை கொடுத்தார். திரும்பவும் 1805-ல் தஞ்சாவூருக்குச் சென்று ஏசுவடியான் உபதேசியாரையும் அவர் குடும்பத்தையும் மைலாடிக்குக் கொண்டு வந்து தன் உறவினர்களுக்குப் போதனையளித்தார். எனினும் 1806-ல் மைலாடிக்கு விஜயம் செய்த றிங்கல்தௌபே ஐயர், 7 ஆண்டுகளுக்கு மேலாக கிறிஸ்தவத்தை ஏற்று போதனைகளை கேட்டு தயாராக இருந்த வேத மாணிக்கத்தின் உறவினர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, ஐயர் அவர்கள் அந்த சிறு மைலாடி மந்தையை பக்கத்து ஊரிலிருந்து அவரை காண வந்த உபதேசியாரின் பராமரிப்பில் விட்டுச் சென்றார். றிங்கல்தௌபே இரண்டாவது முறை 1807-ல் விஜயம் செய்த போது வேதமாணிக்கத்தின் உறவினர்களிடமிருந்து பல உறுதி மொழிகளும் பெற்று 40 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்.

இன்னும் ஒரு சம்பவத்தைக் கூட இங்கே கூறலாம். ஆங்கிலேய அதிகாரி, கர்னல் மன்றோ 1813-ல் றிங்கல்தௌபேயிடம் மிஷன் பற்றிய 13 கேள்விகளைக் கேட்டார். அந்த கேள்விகளில் முதல் கேள்விக்கு விடையளிக்கும் போது இவ்வாறு எழுதுகிறார். "தலைவரியால் அவதிப்பட்ட 5000 நாடார்கள் ஒரு சமயம் என்னை அணுகினார்கள். கிறிஸ்தவர்களாகிவிட்டால் தலைவரி மற்றும்அதோடு சேர்ந்த இலவச

சேவைகளிலிருந்து விடுபடலாம் என்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது. அவர்களுக்கு மறுத்து அரசு அதிகாரிகளுக்கு கீழ்படியும்படி போதித்தேன்" என்கிறார்.

எனவே இவ்வளவு கண்டிப்பான லுதரன் வழிவந்த கோல்காப் ஐயர் போன்றவர்கள் சடுதியில் தெரியாத ஒரு சிவபக்தனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முன்வர மாட்டார்கள் என்று நம்ப இடம் இருப்பதால் ஆகூர் அவர்கள், சாமுவேல் மேற்றீர் அவர்களுடைய கூற்றை மறுக்க தகுந்த ஆதாரங்கள் தரவில்லை என்றே எண்ண முடிகிறது.

வேதமாணிக்கம் தஞ்சாவூரில் தனது முதல் விஜயத்தின் போது (1799) எஸ்.பி.ஸி.கே மிஷனறி, கோல்காப் ஐயரிடத்திலிருந்து ஞானஸ்நானம் பெற்றார் என்று உறுதியாக, வெளிப்படையாக ஆகூர் கூறவில்லை. எனினும் அவருடைய புத்தகம், "திருவிதாங்கூர் திருச்சபை வரலாறு" படிப்பவர்களை அவ்வாறு நம்ப வைக்க முயற்சிக்கிறது. எனவே ஆகூரின் கூற்றுக்கு சாதகமான சில கூற்றுக்களையும் பரிசீலிக்கலாம்.

நெய்யூர் தேவாரம் (மகராசனின் தம்பி மகன்) "பலவித ஞான போதகம்" என்ற புத்தகத்தை 1841-ல் வெளியிட்டார். அதில் அவர் சிறிது நாட்களிலேயே வேதமாணிக்கம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன் என்று வெளிப்படுத்தினார், உடனே ஞானஸ்நானம் பெற்றார் என்று கூறுகிறார். தேவாரம் வேதமாணிக்கம் தஞ்சாவூரில் தங்கியிருந்து மிஷனறிகளிடம் ஞான போதகம் பெற்றதாக கூறவில்லை. (அசறையா)

பவர் ஐயர் எழுதும் போது, வேதமாணிக்கம் தஞ்சாவூரில் கோல்காப் ஐயரை பார்த்து விட்டு தரங்கம்பாடி சென்று ஜோன் ஐயரை சந்தித்து விட்டு திரும்பவும் வந்து கோல்காப் ஐயர் அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றதாக கூறுகிறார்.

ஆனால் ஆகூர், வேதமாணிக்கம் கோல்காப் ஐயரிடமிருந்து ஞானஸ்நானம் பெற்ற பிறகு தரங்கம்பாடி சென்று ஜோன் ஐயரை கண்டு கிறிஸ்தவ புத்தகங்களைப் பெற்று திரும்பவும் தஞ்சாவூரில் வந்து கோல்காப் ஐயரிடம் விடை பெற்று மயிலாடி திரும்பியதாக கூறுகிறார். (ஆகூர்)

எனவே ஆகூரின் கூற்றுக்கு அணிசேர்க்கக் கூடிய ஆதாரங்களும் குழப்பபடியாகவே உள்ளன. இவை எல்லாவற்றிலும் வேதமாணிக்கத்துடன் ஞானஸ்நானம் பெற்ற மாசில்லாமணி இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவசரம் அவசரமாக தஞ்சாவூரிலிருந்து புறப்பட்ட வேதமாணிக்கத்திடம் சில மாதங்கள் தங்கியிருந்து இறையியல் கற்க கோல்காப் ஐயர் வேண்டிக் கொண்டதையும், முடியாத நிலையில் சில புத்தகங்களைக் கொடுத்து வழியனுப்பியதாகவும் ஆகூர் குறிப்பிடுவதையும் கவனிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட எல்லா ஆவணங்களையும் ஆராயும்போது, ஒன்றில் சாமுவேல் மேற்றீா், கூறுவதுபோல வேதமாணிக்கம் மைலாடியில் வைத்து 28-2-1807-ல் ஞானஸ்நானம் பெற்றார் என்பதை எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது வேதமாணிக்கத்தின் இரண்டாவது தஞ்சாவூர் விஜயத்தின் போது தஞ்சாவூரில் வைத்து பிப்ரவரி 1805-ல் ஞானஸ்நானம் பெற்றார் என்பதை எடுத்துக்கொள்ள வேண்டும். வரலாற்று மாணவர்கள், ஜாதி மத கட்டுப்பாடுகளுக்கப்பாற்பட்டவர்கள், சாமுவேல் மேற்றீரின் கருத்தையே ஒப்புக்கொள்வர். காரணம் சாமுவேல் மேற்றீரின் "தாம்பூமி" என்ற புத்தகம் ஒரு வரலாற்று நூலின் எல்லா குணங்களும் உள்ளடக்கியது.

இனி வேதமாணிக்கம் தான் திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனியா என்ற கேள்விக்கு விடை காணவேண்டும். நமக்குத் தெரிந்த வரையில் 1799- வரையிலும் நிச்சயமாக வேதமாணிக்கம் ஒரு சிவபக்தன்தான். 1807 வரையிலும் ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்தான். கிறிஸ்துவுக்குக் கனியானது 1807-ல் என்பதை நிச்சயமாகக் கூறலாம். 1799,1805 என்பதை நிச்சயமாகக் கூற முடியாது.

கி.பி. 52-ல் இயேசுக்கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான தோமா என்பவர் திருவிதாங்கூரில் திருப்பணியாற்றிய போது ஒருவருமே கிறிஸ்துவுக்கு முதற்கனியாகவில்லையா? 15-ம் நூற்றாண்டில் சேவியர் அனேக ஆயிரம் பேரை கிறிஸ்தவராக்கினார். அதிலும் ஒருவர் கூட கிறிஸ்தவுக்கு திருவிதாங் கூரில் முதற்கனியாக வில்லையா? டச்சுக்காரர்கள் தங்களது பண்டகசாலைகளை ஆங்காங்கே அமைத்திருந்தார்கள். அவர்கள் "புராட்டஸ்டாண்ட்" கிறிஸ்தவர்கள். கன்னியாகுமரியில் இருந்த பண்டகசாலை அதிகாரிகள், சிலரை

கிறிஸ்தவர்களாக்கினார்கள் என்று மிஷனறியும் பிரபல வரலாற்று ஆசிரியருமான கால்ட்வெல் குறிப்பிடுகிறார். அவர்களில் ஒருவர் திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனியாக முடியவில்லையா? ஞானப்பிரகாசம் உபதேசியார் திருவிதாங்கூரில் "புராட்டஸ்டான்ட்" கிறிஸ்தவர்கள் (1784-ல்) இருப்பதாக எழுதுகிறார். 1791-ல் ஜேனிக் ஐயர் கன்னியாகுமரி வரையுள்ள SPCK சபைகளை விசாரித்ததாகக் கூறப்படுகிறது. 1796-ல் திருவிதாங்கூரில் உள்பட்ட பிச்சைக் குடியிருப்பு நாடார் வகுப்பாரில் ஒருவருக்கு திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனியாக முடியவில்லையா? (ராபின்சன்) திரு. ஆகூரின் பூட்டனான, வேதமாணிக்கம் தான் திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனி என்பது விந்தையாக இருக்கிறது. லண்டன் மிஷன் சங்கத்தாரின் வழியாக கிறிஸ்துவுக்கு திருவிதாங்கூரில் கிடைத்த முதற்கனி என்று கூறினால் சில சமயங்களில் பொருந்தும். திருவிதாங்கூரில் லண்டன் மிஷனின் துவக்ககால வரலாற்றை எழுதிய சாமுவேல் மேற்றீர் The first convert in Travancore என்று கூறுகிறார். எல்.எம்.எஸ். மிஷனின் முதல் கிறிஸ்தவன் வேதமாணிக்கம் என்பதை கூறுகிறார். ஆகையால் ஆகூர் கூறிய "the first fruit to Christ in Travancore" என்பது ஏற்புடையதல்ல.

சமுதாய சிந்தனை, டிச.1998

டாக்டர் D. பீட்டர்

8 முதல் விடுதலைப் போராட்டம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், 1822 முதல் 1859 வரை, நம் நாட்டின் தென் கோடியில் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் நிகழ்த்திய ஒரு விடுதலைப் போராட்டம். அதை வரலாற்றாசிரியரான, வைக்கம் என். கே. ஜோஸ், சாணார் லகள என்ற தன் மலையாள மொழி நூலில், இந்த விடுதலைப் போராட்டத்தை, திருவிதாங்கூரில் பின்னர் நடந்த சமூக - பொருளாதார - அரசியல் போராட்டங்களுக் கெல்லாம் வழிகாட்டி என்று சிறப்பித்து எழுதியுள்ளார். இத்துணை சிறப்புமிக்க வரலாறு, அனேக ஆசிரியர்களின் கைவண்ணத்தில் நூல் வடிவம் பெற்றதுண்டு. A People's Revolt in Travancore, Upper Cloth Movement, நாடார் கலகம், தோள் சீலைப் போராட்டம், பெண்ணுரிமைப் போராட்டம் முதலிய தலைப்புகளும் அவற்றுள் அடங்கும். இவ்வளவு விரிவான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாயினும், அப்போராட்டத்துக்குரிய உண்மையான காரணங்களும், ஆழமான நிகழ்வுகளும், பயன்தரும் விளைவுகளும் இந்நாள்வரை போதிய அழுத்தம் பெறாதது வருத்தத்துக்குரியதே. வரலாறு, வருங்காலத்துக்கு ஒரு பாடமாக அமையவில்லை, மாணவர்களும் திசை திருப்பி விடப்பட்டு விட்டனர். இந்த விபத்திலிருந்து மீளவே இக்கட்டுரை.

பெண்களின் மேலாடை இந்நாட்களில் ஒரு உணர்வு பூர்வமான பொருள், சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை பெண்களின் மேலாடை, உணர்வுபூர்வமாக சிந்திக்கப்பட்ட ஒரு பொருள் அல்ல. அப்படியிருக்க, இந்நாட்களில் உணர்வு பூர்வமாக சிந்தித்தால் உண்மை புரண்டு பல விபத்துக்கள் நேரிட வாய்ப்பு உண்டு. எனவே உணர்வுபூர்வமாக சிந்திக்கும் வேகத்தைத் தணித்து உண்மைக்கு நேராக சிந்தனையை திருப்பி விடவே இக்கட்டுரை.

அடிப்படைக் கோட்பாடுகள் : ஆடை அணிவது காலநிலை - நாகரிகம் - பொருளாதாரம் முதலயவைகளை அடிப்படையாகக் கொண்டது. இத்திசையில் ஆராய்ந்தால் . . .? பண்டைய திருவிதாங்கூரின் தென்பகுதி அல்லது இன்றைய கன்னியாகுமரி மாவட்டம், பூமத்திய ரேகைக்கு அருகாமையில் அமைந்த ஒரு பிரதேசமாகும். இயற்கையாகவே இது ஒரு வெப்பம் கூடிய பிரதேசமாகும். குளிர்மிகுந்த பிரதேசங்களில் வாழும் மக்களைப் போன்று இப்பிரதேசத்தில் வாழும் மக்களும் உடல் முழுவதையும் மறைத்து ஆடை அணிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மேற்குக் கரையோரமாக பயணம் செய்த நெடுந்தூரப் பயணிகளான மார்க்கோபோலோ, வாஸ்கோடகாமா, பார்போசா, டெல்லவல்ல ஆகியோர் 13,15,16,17 ஆகிய நூற்றாண்டுகளில், இங்குள்ள மக்களை முழு நிர்வாணமாகவும் அரை நிர்வாணமாகவும் கண்டோம் என்று எழுதியதில் பொய் இருக்க நியாயமில்லை. சாதாரண ஆண்களும், பெண்களும் மட்டுமல்லாது மன்னர்களையும் மேலாடையின்றி கண்டதாக எழுதுகின்றனர். எனவே காலநிலையைப் பொறுத்தமட்டில் இடுப்பு முதல் கால் மூட்டு வரை நீண்டு நிற்கக்கூடிய ஒரு துண்டுத்துணி போதுமானதாக இருக்கலாம். (திருவிதாங்கூரில் சான்றோர் மக்கள் புரட்சி - தமிழாக்கம் - இளம் தோட்டம் கு. சுகுமாறன்).

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த காலநிலை கோட்பாடு மெல்ல மெல்ல நாகரிகக் கோட்பாட்டிற்கு நகர்ந்ததாக சான்றுகள் உள்ளன. 1680 -ல் முகிலன் என்ற ஒரு மொகலாயப் படைத் தலைவன் தென்திருவிதாங்கூருக்குள் நுழைந்தான் என்பது வரலாறு. அவன் தென்னகத்தில் பிடித்தடக்கிய பகுதிகளை சில ஆண்டுகள் நிர்வாகம் செய்தான். மொகலாயரின் படையெடுப்பு என்றால் மதமாற்றமும் கூடவே தொடருவது இயல்பு. முகிலன் இங்குள்ள பலரை மதம் மாற்றினான். பெண்களை மேலாடை அணிய வேண்டும்

என கட்டளையும் இட்டான். அவனுடைய குறுகிய கால ஆட்சிக்குப் பின் மக்கள் மேலாடை அணியும் பழக்கத்தைத் தொடரவில்லை. எனினும் ஆடை அணிவதில் மக்களின் சிந்தனை காலநிலை கோட்பாட்டைத் தாண்டி நாகரிகக் கோட்பாட்டுக்கு நேராக சிறகடிக்கத் துவங்கியது. (சுகுமாறன்)

ஒரு பொருளின் மீது ஆசை மட்டும் இருந்தால் போதாது. அதைப் பணம் கொடுத்து வாங்கி சொந்தமாக்கிக் கொள்ள வழி வகைகளும் வேண்டும். மேலாடை அணியும் ஆர்வத்துக்கு மக்கள் ஈர்க்கப்பட்டாலும் அதை வாங்கி அணியும் அளவுக்குப் பொருளாதார மேம்பாடு வேண்டும். அப்பொருளாதார மேம்பாடு அன்று, நாட்டு மக்கள் எல்லாரிடமும் இல்லாதிருந்தது. நில உடமையாளர்களும் உயர்ந்த ஜாதியினருமான நம்பூதிரிகளிடமும், நாயர்களிடமும், அவர்களைச் சார்ந்த வெள்ளாளர் களிடமுமே இருந்தது. அந்த உயர் ஜாதியினரின் நிலங்களில் பண்ணை வேலை (ஊழியம் அல்லது இலவச வேலை) செய்து வந்த நாடார் முதற்கொண்டுள்ள கீழ் ஜாதியினரிடம் வழிவகைகள் இல்லாமலிருந்தது. எனவே பெண்களின் மேலாடை உயர் ஜாதியினரின் பொருளாதார அந்தஸ்தின் அடையாளமாக மாறியது.

விடுதலையும் வளர்ச்சியும் : பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கம் முதலே திருவிதாங்கூரின் தென் எல்லை வழியாக, லண்டன் மிஷனெரி சொசைட்டியைச் சார்ந்த புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகள் வரத் துவங்கி விட்டார்கள். அவர்கள் கன்னியாகுமரி யிலிருந்து கொல்லம் வரையுள்ள பல இடங்களிலும் மிஷன் மையங்களை நிறுவினார்கள். மக்கள் பணியே இறைப்பணி - நுகத்தடிகளை நெகிழ்த்துவதே கிறிஸ்தவம் என நன்கு அறிந்து வைத்திருந்த இவர்களுக்கு நாடார் முதற்கொண்டுள்ள கீழ் ஜாதியினரிடம் நல்ல வரவேற்புக் கிடைத்தது. பெருவாரியான நாடார் மக்கள் மிஷனெரிகளின் மதமான புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினைத் தழுவினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

கிறிஸ்தவர்களுக்குக் கல்வியும் மருத்துவ சேவையும் தந்தார்கள். அறிவும் உடல் நலமும் தந்த மிஷனெரிகள், கிறிஸ்தவர்களின் பொருளாதார மேம்பாட்டை முன்னிட்டு வேலை

வாய்ப்பும் தந்தார்கள். கிறிஸ்தவம் தழுவிய பெண்கள் நாகரிகமாக நடமாட மேலாடைகளும் தைத்துத் தந்தார்கள். கீழ் ஜாதியினரின் குறிப்பாக, நாடார்மக்களின் வளர்ச்சி உயர் ஜாதியினருக்கு எரிச்சலைத் தந்தது. எனினும் அவர்களுடைய உறிஞ்சி வாழும் வாழ்க்கை தடைபடாததால் உயர் ஜாதியினர் கலவரங்களில் இறங்கவில்லை.

புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகள், கிறிஸ்தவம் தழுவியவர்கள் மேல் உயர் ஜாதியினரால் சுமத்தப்பட்ட நுகத்தடியை நெகிழ்த்தும்போது அவர்கள் தாமாகவே வெளிவர தயார் படுத்தியதோடு நிறைவடையவில்லை. நுகத்தடிகளை நெகிழ்த்தியும் தந்தார்கள். கிறிஸ்தவர்களை அனேக வரிகள் அழுத்திக் கொண்டிருந்தன. அவைகளிலிருந்து சட்ட உருவில் விடுதலை வாங்கித் தந்தனர். கிறிஸ்தவம் தழுவியவர்களுக்கு சொத்துரிமையும் வாரிசு உரிமையும் இல்லாதிருந்தது. ஒரு கிறிஸ்தவன் இறந்தால் அவனுடைய சொத்தை அவனுடைய பிள்ளைகள் சுதந்தரித்துக் கொள்ள முடியாது. உயர் ஜாதியினர் அபகரித்துக் கொள்வார்கள். இதற்கும் தடைவிதித்து, சொத்து உரிமையும், வாரிசு உரிமையும் வழங்கப்பட்டது. ஓய்வு நாட்களில் பண்ணை வேலை செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஊழியம் எனற பெயரில், இந்து கோவில்களுக்கும், அரசுக்கும் உயர் ஜாதியினருக்கும் கிறிஸ்தவம் தழுவியவர்கள் பண்ணை வேலை செய்வதிலிருந்து விலக்குப் பெற்றார்கள். செய்யும் வேலைக்குக் கூலி கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறந்தது. திருவிதாங்கூரில் அடிமை முறை ஒழிக்கப் பட்டது. கீழ் ஜாதியினருக்கு அளிக்கப்பட்ட இந்த விடுதலைகள் அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி கோலின. இந்நிலை உயர் ஜாதியினரை எரிச்சலூட்டியது.

கலகத்துக்குரிய முக்கிய காரணம்: நிலச் சுவான்தார்களான உயர் ஜாதியினருக்கு தங்கள் நிலங்களைப் பயிரிடவும், பலன்களை சேகரிக்கவும், எடுபிடி வேலைகள் செய்யவும் இலவச வேலையாட்கள் கிடைக்க வில்லை. இதுவே உயர் ஜாதியினரின் எரிச்சலுக்கும் பாய்ச்சலுக்கும் உரிய முக்கிய காரணம். இம்முடிவை திருவிதாங்கூரின் ஆங்கிலேய பிரதிநிதி (British Resident) ஜெனரல் கல்லன்

சான்றுரைக்கிறார். பார்க்க : " . . . the present disturbances are to be traced to the dissatisfied landed proprietors at the emancipation of their slaves . . . ". " I was frequently visited by large number of proprietors, complaining bitterly that they lost the services of their slaves on Sundays and that their slaves had in other respects proved very refractory". " Another subject of irritation has been the exemption on the part of all Shanars attached to the mission of Oolium duties on Sundays, and from work connected with Hindoo festivals or places of worship." கல்லன், கலகத்தின் உடனடி காரணம் கிறிஸ்தவ பெண்களின் மேலாடை அணியும் வழக்கம் என்று குறிப்பிடவில்லை.

கிறிஸ்தவர்கள் வெளிச்சம் அடைந்து விட்டால் இனி அவர்கள் கீழ்ப்படியமாட்டார்கள். பழைய நிலமைக்குத் திரும்ப மாட்டார்கள் என்று உயர் ஜாதியினர் உணர்ந்தார்கள். இந்நிலைக்குக் காரணம் கிறிஸ்தவம் என்பதால் அதை எதிர்த்தார்கள். பார்க்க : " Now the people have become more enlightened, they will not submit quietly to such impositions, and hence the opposition raised against Christianity, for it is thought to be the only barrier to a return to the old state of things." எனவே கலவரக்காரர்களின் தாக்குமையம் (Target of Attack) கிறிஸ்தவம் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

கிறிஸ்தவம் தாக்குமையம் ஆனதால் தாக்குதல், இரண்டு கிளைகளாகப்பிரிந்து காணப்படுகிறது. முதல் கிளை, கிறிஸ்தவத்தைக் கொண்டு வந்த புரோட்டஸ்தாந்து மிஷனெரிகள். இரண்டாவது கிளை, புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தைத் தழுவிய கீழ் ஜாதி மக்கள், பார்க்க : "What business have the gentlemen in this country? What can these 'Kaluvaries' do? If we burn down all the chapels so that not one should remain, these 'Kaluvaries' will return to their country." " . . . to spear the Padree residing at Mondakadoo with the spear used in hunting the wild hog and kill him, likewise to kill the white man and the sepoys in the fort at Oodagerry." ". . . Kaisapillai who boasted that he acts by authority and will root out all the X'ians who have embraced the white

people's religion". எனவே கலவரத்தின் முக்கிய காரணம் கிறிஸ்தவம் தழுவிய பெண்களின் மேலாடை அணிதல் அல்ல என்பது தெளிவு.

கலவரம் தொடர்பாக பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் பதிவான 67 வழக்குகளைப் பார்த்தால், இதில் தீ வைப்புகள், கொலைகள், சொத்துப் பறிப்புகள், கொள்ளைகள், துன்புறுத்தல்கள் எத்தனை எத்தனை என்றும், பாதிக்கப்பட்டவர்கள் யார் யார் என்றும் வகைப்படுத்தினால் பெண்களின் மேலாடை கிழிப்பு முக்கியத்துவம் பெறாது.

கலவரம் தொடர்பாக கேப்டன் சிபால்ட் தலைமையில் விசாரணை நடத்தப்பட்டது. அவரிடம் கிறிஸ்தவ மிஷனரி 13 பாராக்களை கொண்ட ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார். அந்த அறிக்கையை உற்று நோக்கினால், மற்றுள்ள நிகழ்வுகளோடு ஒப்பிடும்போது, பெண்களின் மேலாடை கிழிப்பு முக்கியத்துவம் பெறவில்லை என்பது தெளிவு.

***கனம் S. தேவசகாயம்* :** "இரண்டாம் துன்பம் (1855 - 1859) தமிழ் நாடெங்கும் பரவிப்பிடித்த சுவிசேடாக்கினி, பரிசுத்த அனந்தை நகரண்டையிலுஞ் சென்று ஜொலிக்கக் கண்ட இந்துக்கள் கலக்க முற்றனர். காக்ஸ் தேசிகரது அரிய முயற்சிகள் நற்பலனை அதிகமாய் பிறப்பித்தன. நெய்யாறு முதல் ஆற்றங்கால் வரையிலும் மலையாள நாட்டில் பல சபைகள் எழும்பின. சான்றோரிலும் ஈழவரிலும் திரள் பேர் ஏசுபெருமானை ஏற்றுக் கொண்டனர். அனந்தைபுரி இவ்விதம் தாக்கப்படுவதை சத்துருக்கள் தாங்கொணாது, சபைகளை அழிக்க கலகித் தெழும்பினர். இதோடு அடிமை நிவாரண நியமகம் உயர் குலத்தாரது எரிச்சலை எழுப்பிற்று. இது மிஷனெரிமாரின் முயற்சியின் பலனன்றோ. கிறிஸ்து மார்க்கம் நமது அடிமைகளை சுயாதீனப்படுத்தி பெரும் நஷ்டம் நமக்கு வருத்திற்றே. இழிகுலத்தார் உயர்தர உடைகளைத் தரித்து பிரபுக்கள் போல் விளங்குகின்றனர். இதென்ன கொடுமை கலிகால விந்தையன்றோ! என கொக்கரித்து சத்துருக்கள் போருக்குத் துணிந்தனர். எரிச்சலின் ஆவி உத்தியோகஸ்தரையும் நிரப்பிற்று. அவர்கள் சத்துருக்கட்கு உட்கையாள்களாயிருந்தார்கள். **மக மதியரும் இந்துக்களோடு சேர்ந்தார்கள். போதா குறைக்கு**

ரெசிடென்ட் துரையாயிருந்த ஜனரல் கல்லன் மிஷனெரி வேலைக்கு முழுப் பகைஞனாயிருந்தார். ஆதலின் சத்துருக்கள் அதிகபெலத்துடன் சற்றும் அச்சமோ இரக்கமோயின்றி போர் ஆரம்பித்தனர். மிஷனெரி சிகாமணிகளான காக்ஸ், பேலிஸ் முதலியோர் சற்றும் பின்னிடாது மந்தையைக் காத்து நின்றனர்."

"சத்துருக்கள் இருநூறு முன்னூறு பேர் ஒன்றாய் கூடி ஓய்வுநாட்களில் ஆராதனைக்கு வந்தவர்களை துரத்தியடித்து, ஸ்திரீகளை அவமானப்படுத்தி, கிறிஸ்தவ ஊழியர்களை கொள்ளையிட்டார்கள். ஏழைக் கிறிஸ்தவர்கள் அஞ்சியோடி ஒளித்தார்கள். ஆலயங்கள் தீக்கிரையாயின. ஸ்திரீகள் சந்தைக் கடைகளில் துரத்தியடிக்கப் பட்டார்கள். அவர்களுடைய தோள்ச்சீலைகளைக் கீறி மரங்களில் தொங்க வைத்தார்கள். நெய்யாற்றின்கரை சபையாரை அடித்து இம்சித்து அருளானந்தம் உபதேசியாருடைய மீசையை குறட்டினால் பிடுங்கினார்கள். தேவசகாயம் என்பவனை சிறைச் சாலையிலடைத்து சித்திரவதை செய்து கொன்று போட்டார்கள். பொருமான் என்னும் ஒருவனை குரூரமாய் அடித்ததினால் வாய்வழி உதிரம் பெருகுவதைக் கண்ட அதிகாரி, "அதோ கிறிஸ்துமார்க்கத்தை வாந்தி பண்ணுகிறான்" என்று பரிகாசம் செய்தான். ஆற்றங்கல் கிறிஸ்தவர்கள் மிகுதியாய் ஒடுக்கப்பட்டார்கள். கல்லங்குழி ஆலயத்தைத் தீக்கொழுத்தி, ஜனங்களை கடினமாய் இம்சித்தார்கள். நெய்யூர் சந்தையிலும் கோட்டாற்றுக் கடையிலும் கிறிஸ்தவ ஸ்திரீ புருஷர்கள் துரத்தி அடிக்கப்பட்டு பலர் கைதிகளானார்கள். குளத்துவிளை உபதேசியாரை அடித்து அவரது உடுப்பைக் கழற்றி துண்டு துண்டாய் கிழித்து அவரை காவலிலடைத்தார்கள். குமாரபுரம் உபதேசியாருக்கும் அப்படி செய்யப்பட்டது. ஆரல்வாய்மொழி, செம்பன்விளை, காட்டுப்புதூர் என்னும் சபைகளும் பயங்கரமாய் தாக்கப்பட்டு உபதேசிமாரும் இம்சிக்கப்பட்டார்கள். கிறிஸ்தவ வீடுகள் சுட்டெரிக்கப்பட்டன. பகற் கொள்ளை எங்கும் தைரியமாய் நடந்தது."

"கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் பொய் பிராதுகள் ஏற்படுத்தி அவர்களை காவலிலடைத்து கஷ்டப்படுத்தினார்கள். அவர்களுக்கு உதவி செய்ய போலீசும் இல்லை. அவர்களது சங்கடங்களைக் கேட்க கச்சேரிகளும் இல்லை. அதிகாரிகள் ஏகமாய் கட்டுப்பாடு பண்ணி தைரியமாய் துஷ்டரை ஏவிவிட்டார்கள். போதகன்மாரைப் பற்றி அச்சம்

அற்று போயிற்று. அவர்களது எழுத்துக்களை சர்க்கார் கவனிக்கவில்லை. ரெசிடென்ட் உத்தியோகஸ்தர்களுக்கு அனுகூலமாயிருந்தார். ஆகையால் பற்றி போதகன்மார் சென்னை கவர்ணருக்கு மனுக்கொடுத்தார்கள். காக்ஸ்போதகர் தைரியமாய் தேசத்தின் சீர்கேடுகளையும் அநீதியையும் காட்டி, கடிதங்கள் அச்சடித்து பிரசுரம் செய்தார். மேலும் சென்னை வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு ஒழுங்காய் இவ்விஷயங்களைப் பற்றி எழுதினார். சென்னை கவர்னர் உற்றாராய்ந்து சர்க்காரை கண்டித்தார். தகுந்த விசாரணை செய்ய இங்கிலீஷ் துரைத்தனம் தீர்மானித்தது, கலகமோ ஆறவில்லை."

"பாறச்சாலையில் 3 பள்ளிக் கூடங்களும் தீக்கிரையாயின. நெய்யூரை பெலமாய் சத்துருக்கள் தாக்கினார்கள். ஜனங்கள் மிஷனெரியின் பங்களாவுக்கோடி உயிர் தப்பினர். நாகர்கோவில் கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் கூடி இரவுபகலாய் தங்களையும் தங்கள் ஆலயத்தையும் பாதுகாத்து வந்தார்கள். பக்கத்து சபைகளில் 9 ஆலயங்களும் 3 பள்ளிக்கூடங்களும் அக்கினிக்கிரையாயின. பெரிய காரிருள் எங்கும் மூடிற்று. போதகன்மார் ஒன்றாய் சேர்ந்து வீரதீரமாய் தலைநகருக்குப் போய் காரியாதிகளை தெரிவித்தார்கள். இதனிடையில் புதிதாய் நியமனம் பெற்ற மாதவராயர் திவான் தென்னாட்டிற்குச் சென்று ஒரு நாயர் பட்டாளத்தையும் வரவழைத்தார். சென்னை கவர்னரும் பெலமாய் சர்க்காரை எச்சரித்தார். இதற்குப் பயந்து சமாதானத்துக்காக இராஜ விளம்பரம் ஒன்று பிறந்தது. இதன் பயனாய் கலகம் சற்றே அமர்ந்தது." (The United Church Herald: The organ of the SIUC. April 1817, pp.1&31)

இதிலிருந்து என்ன தெரிகிறது? பெண்களின் மேலாடை கிழிப்பு, உயர்ஜாதி மட்டுமல்ல, புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவரல்லாத அனைவரின் எதிர்ப்பின் சிறு அடையாளமேயல்லாமல் வேறல்ல.

மேலாடையின் முக்கியத்துவம் :பெண்களின் மேலாடைக்கு நம் நாட்டின் இப்பகுதிகளில் இருந்து வந்த முக்கியத்துவம் பற்றி ஆராய்வது நல்லது. நம்பூதிரிகளில் மேல் மட்டத்தவர் நம்பூதிரிப்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த முன்னாள் கேரள முதலமைச்சர் E.M.S. நம்பூதிரிப்பாட்டை யாவரும் அறிவர். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர், காணிப்பையூர் பண்டிதர், சங்கரன் நம்பூதிரிப்பாட் என்பவர். இவர் 1895-ல் பிறந்தவர். அவருடைய

இனத்தவரின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், ஆசாரங்கள் பற்றிய உண்மைகள் காலப் பழக்கத்தில் மறைந்து விடக்கூடாது என்று எண்ணி, என்னுடைய நினைவுகள் என்ற தலைப்பில் புத்தகம் எழுதி அதை மூன்று பாகங்களாக 1963-ல் வெளியிட்டுள்ளார். அந்நூலில் தன் சொந்த இன ஆண் - பெண்களின் (அந்தர் ஜனம்) ஆடை மற்றும் ஆபரணங்கள் படமாக இடம் பெற்றுள்ளன. ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி மேலாடையே கிடையாது. சிறுமிகளுக்கு இடையில் அரைமுடி என்ற ஒரு ஆபரணம் மட்டுமே உண்டு. சிறுவர்களுக்கு கோமணம் மட்டுமே உண்டு, இந்நிலையில், சமீபகாலம் வரை, கீழ் ஜாதி மக்களிடையே, இன்று இருப்பது போன்ற, மேலாடை பற்றிய ஒரு தீவிர உணர்வு இருந்திருக்க நியாயம் இல்லை.

தாழ்ந்த ஜாதிப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்றோ, உயர்ந்த ஜாதிப் பெண்கள்தான் மேலாடை அணியலாம் என்றோ திருவிதாங்கூரில் அன்று சட்டம் எதுவும் இல்லாதிருந்தது. ஆனால் உயர் ஜாதியினர் முன்பாக தாழ்ந்த ஜாதிப் பெண்கள் - நம்பூதிரிகள் முன்பாக நாயர் பெண்களும், நாயர்கள் முன்பாக நாடார் பெண்களும் - மேலாடை அணியும் வழக்கம் இல்லாதிருந்தது. இந்நிலையில் கிறிஸ்தவம் தழுவிய கீழ் ஜாதிப் பெண்கள் மேலாடை அணிந்து சகஜமாக நடமாடும்போது, மேல் ஜாதியினருக்கு எரிச்சல் வரலாம் என்று கருதிய மிஷனெரிகள், பாதுகாப்பாக, கிறிஸ்தவம் தழுவிய பெண்கள் மேலாடை அணிந்து கொள்ளலாம் என்று ஒரு அரசு ஆணையைப் பெற்றார்கள்.

யார் - யார்? : கிடைக்கப்பெற்ற முதல் நிலை ஆவணங்களை ஆராயும்போது, புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகளின் விடுதலைப் பணிகளால் பாதிக்கப்பட்டவர்கள் உயர் ஜாதியினர் என்றும் - பயனடைந்தவர்கள் கீழ் ஜாதியினர் என்றும் - களம் இறங்கிக் கலகம் விளைவித்தவர்கள் நாயர்களும், வெள்ளாளர்களும், அவர்களுடைய அடிவருடிகளும் என்றும் - கலகத்தால் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், பொருள் ரீதியாகவும், உறவு ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவம் தழுவிய நாடார் மக்கள் என்றும் தெளிவாகத் தெரிகிறது. பாதிக்கப்பட்ட நாடார் மக்களின் எழுச்சி நாயர் ஆதிக்கத்தின் வீழ்ச்சிக்கு வழி விட்டது.

ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் விடுதலை வாழ்வு ஒரு தொடர் போராட்டம் என்பது கோட்பாடு, நாடார் மக்களின் விடுதலை வாழ்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த இந்த போராட்டத்துடன் முடிவடைந்து விடவில்லை - இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலும் நிகழ்ந்தது. இவ்விரு போராட்டங்களையும் உள்ளடக்கியதே மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும் (Dr. Ivy Peter) என்ற நூல். முடிந்த அளவு முதல்நிலை ஆவணங்களால் தாங்கப்பட்டது என்பதே அந்நூலின் சிறப்பு. எனவே படிக்கும்போது எழுகின்ற எல்லா சந்தேகங்களையும் அந்நூல் நிவிர்த்தி செய்யும்.

டாக்டர் D. பீட்டர்

9 மறக்கப்பட்ட வரலாறு

[மெக்காலே - மன்றோ]

நம் நாட்டில் நாம் வாழ்ந்து வரும் இப்பகுதியில் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவம் கால்பதித்து - பரந்து- சிறந்தோங்க முழு முதற்காரணமாக இருந்த இருவர், கர்னல் மெக்காலே மற்றும் கர்னல் மன்றோ ஆவர். இவர்களை திருச்சபை வரலாறு மறந்து விட்டது. ஆனால் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷன் பணிகளால் மிகுந்த நன்மைகளைப் பெற்ற ஒரு மகாராசன் என்ற வேதமாணிக்கத்தை மிகைப்படுத்த நாம் நாளும் தவறுவதில்லை. இந்த வன்கொடுமையிலிருந்து மீள, இதோ! அந்த இருவர்.

1. திருவிதாங்கூரும், ஆங்கிலேயரும் : இந்தியாவோடு வாணிபத் தொடர்பு கொண்ட மேலை நாட்டினரில் மிகவும் முக்கியமானவர்கள் ஆங்கிலேயராவர். வணிகர்களாக வந்தவர்கள் இந்தியாவைத் தங்கள் ஆட்சியின் கீழ்கொண்டு வந்து இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தனர். கி.பி. 1600-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்தியக்கம்பெனி மூலமாக இந்தியாவில் வாணிபத்தை ஆரம்பித்து, பல இடங்களில் பண்டகசாலைகளை நிறுவினர்.

திருவிதாங்கூரில் ஆங்கிலேயர் முதலாவதாக திருவனந்த புரத்திற்குத் தெற்கே 10 கி.மீ. தூரத்திலுள்ள விழிஞம் என்ற இடத்தில் கி.பி 1644-ம் ஆண்டு வந்து குடியேறினர். கி.பி. 1684-ம் ஆண்டு திருவனந்தபுரத்திற்கு வடமேற்கிலுள்ள அஞ்செங்கோ என்ற இடத்தில்

ஒரு பண்டகசாலை அமைக்க ஆற்றிங்கல் அரசி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அனுமதி வழங்கினார். கி.பி. 1690-ல் இங்கு ஒரு கோட்டையும் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இங்கிருந்துதான் ஆங்கிலேயரின் செல்வாக்கும் ஆதிக்கமும் திருவிதாங்கூரில் பரவியது. விழிஞம், அஞ்செங்கோ தவிர கோவளத்திலும் ஆங்கிலேயர்களுக்கு பண்டகசாலை இருந்தது.

வணிகர்களாக இருந்து தங்கள் வாணிப முன்னேற்றத்திற்குரிய பல சலுகைகளையும் சுதேசி மன்னர்களிடமிருந்து பெற்று வந்த ஆங்கிலேயர் படிப்படியாக இந்திய அரசியலுக்குள் நுழைந்தனர். தேவையான நேரங்களில் அம்மன்னர்களுக்கு ஆலோசனை வழங்கும் நண்பர்களாக மாறி, பின் அவர்கள் நடத்திய போர்களில் அவர்களுக்கு உதவி செய்து தங்கள் பலத்தை நிரூபித்து மன்னர்களின் மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றனர். திருவிதாங்கூரின் மன்னரான இராமவர்மா (கி.பி. 1758 - 1798) வும் அவர்களின் நட்பை நாடினார். மைசூரோடு கிழக்கிந்தியக் கம்பெனி நடத்திய போர்களில் திருவிதாங்கூர் அரசர் ஆங்கிலேயருக்கு ராணுவ உதவி அளித்து ஆங்கிலேயரின் நட்பைப் பெற்றார்.

பின்னர் மகாராஜா இராமவர்மா மைசூர் மன்னன் திப்பு சுல்தானிடமிருந்து திருவிதாங்கூரைக் காப்பாற்ற ஆங்கிலேயரின் உதவியை நாடினார். கிழக்கிந்தியக் கம்பெனி தனது இராணுவத்தில் ஒரு பிரிவை திருவிதாங்கூரின் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தது. அந்த இராணுவத்திற்கான பராமரிப்புச் செலவை பணமாகவோ அல்லது அதற்குச் சமமான மதிப்புள்ள நல்லமிளகாகவோ கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் கி.பி. 1788-ம் ஆண்டு செய்யப்பட்டது. கி.பி. 1789-ல் திப்புசுல்தான் திருவிதாங்கூரின் மீது படையெடுத்தபோது கிழக்கிந்தியக் கம்பெனி திருவிதாங்கூரின் உதவிக்கு வந்தது. கி.பி. 1790-ல் கம்பெனி திப்புசுல்தான் மீது போர் தொடுத்து அவனைத் தோற்கடித்தது. கி.பி. 1792-ல் திப்பு சுல்தானோடு ஸ்ரீரங்க உடன்படிக்கை பண்ணப்பட்டது. திருவிதாங்கூர் திப்பு சுல்தானிடமிருந்து காப்பாற்றப்பட்டது. ஆனால் போர் செலவுக்காக திருவிதாங்கூர் அரசு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஒரு பெருந்தொகை கொடுக்க வேண்டியதிருந்தது. பின்னர் அந்நியப் படையெடுப்பிலிருந்து

திருவிதாங்கூரை பாதுகாத்துக் கொள்வதற்காக கிழக்கிந்தியக் கம்பெனியோடு ஒரு நிரந்தர உடன்படிக்கை பண்ணத் தீர்மானிக்கப்பட்டது. கி.பி. 1795-ல் பண்ணப்பட்ட இவ்வுடன்படிக்கையின்படி திருவிதாங்கூர் அரசு ஆண்டுதோறும் கம்பெனிக்கு ஒரு பெருந்தொகையை கப்பமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கை மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் திருவிதாங்கூருக்கும் அரசியல் தொடர்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கர்னல் மெக்காலே என்பவர் திருவிதாங்கூரின் முதல் ஆங்கிலப் பிரதிநிதியாக (Resident) நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் திருவிதாங்கூர் அரசு கம்பெனிக்குக்கொடுக்க வேண்டிய கப்பத்தொகையில் நிலுவை ஏற்பட்டது. இதைச் சரிக்கட்ட திருவிதாங்கூரின் தளவாயாக இருந்த வேலுத்தம்பி இராணுவச் செலவைக் குறைக்க எண்ணினார். நாயர் சிப்பாய்களுக்குக் கொடுத்து வந்த ஊதியத்தைக் குறைக்க முடிவெடுத்தார். இதற்கு ஆங்கிலப் பிரதிநிதியின் ஆதரவும் இருந்தது. இதை அறிந்த நாயர் சிப்பாய்கள் திருவிதாங்கூரிலிருந்து ஆங்கிலேயரை வெளியேற்றத் தீர்மானித்து, தளவாயையும், ஆங்கிலப் பிரதிநிதியையும் கொலை செய்யத் திட்டம் தீட்டிக் கலகம் செய்தனர். கலகம் அடக்கப்பட்ட தென்றாலும் ஆங்கிலேயர் விழித்துக் கொண்டனர். திருவிதாங்கூரில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பி திருவிதாங்கூரோடு இன்னொரு புது உடன்படிக்கை செய்ய விரும்பினர். கி.பி. 1805-ல் செய்யப்பட்ட புது உடன்படிக்கையின்படி திருவிதாங்கூரின் வெளிநாட்டுப் பாதுகாப்பு மட்டுமன்றி, உள்நாட்டுக் கலகங்களை அடக்கும் பொறுப்பும் கிழக்கிந்தியக் கம்பெனியின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக திருவிதாங்கூர் அரசு ஆண்டுதோறும் 8 லட்சம் ரூபாய் கப்பம் கட்ட சம்மதித்தது. இந்த உடன்படிக்கையானது திருவிதாங்கூர் ஆட்சியில் தலையிடும் உரிமையை கம்பெனிக்கு அளித்தது. ஆங்கிலப் பிரதிநிதிகளுக்குக் கூடுதல் அதிகாரம் கொடுக்கப்பட்டது. உயர்பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கும் போதும் முக்கியமான அரசியல் மாற்றங்கள் கொண்டு வரும்போதும் அரசர் ஆங்கில பிரதிநிதியின் சம்மதத்தைப் பெற்றாக வேண்டும். இவ்வாறு திருவிதாங்கூர் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

73

2. மெக்காலேயும், புராட்டஸ்டாண்ட் சமயமும் : ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ மிஷனறிகளின் வருகையை விரும்பவில்லை. சிப்பாய்க் கலகம் வரையிலும் அவர்களுடைய நிலை அவ்வாறாகவே இருந்தது. கலகத்திற்குப்பின் அவர்கள் மனம் மாறினார். மேலும் டாக்டர். புக்கனான், வில்பர்போர்ஸ், சகரிமெக்காலே போன்றோர் இந்தியர்களுக்கு ஆன்மிக போதனைகள் கொடுப்பதில் அரசு கவனம் செலுத்தி அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று இங்கிலாந்து பார்லிமென்டில் வற்புறத்தினா்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் மனோநிலை எதுவாக இருந்தாலும், திருவிதாங்கூரிலிருந்த அதன் பிரதிநிதிகளில் (British Residents) ஒரு சிலர் கிறிஸ்தவ மதத்திற்குப் பெருந்தொண்டாற்றினர். மெக்காலே, மன்றோ போன்ற ஆரம்ப காலப் பிரதிநிதிகள் கடவுளின் பிரதிநிதிகளாகவும் செயல்பட்டு, தங்கள் மதத்தைப் பரப்புவதிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்துவதிலும் ஆர்வம் காட்டினா். இங்கு வந்த புராட்டஸ்டானட் மிஷனறிகளுக்கு ஆதரவு கொடுத்து, சமுதாயத்தில் காணப்பட்ட சீர்கேடுகளைக் களைவதில் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் கைகொடுத்தனா். தங்களது செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி திருவிதாங்கூர் மன்னர்களையும் அதற்கு உடன்பட வைத்தனா்.

திருவிதாங்கூரின் முதல் ஆங்கில பிரதிநிதியாக கர்னல் மெக்காலே கி.பி. 1800-ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர் திருவிதாங்கூரிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவியதோடு புராட்டஸ்டான்ட் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினாா். இவருடைய காலத்தில்தான் தென்திருவிதாங்கூரில் (குமரி மாவட்டத்தில்) புராட்டஸ்டான்ட் மதம் வேரூன்றியது. திருவிதாங்கூரின் முதல் புரட்டஸ்டான்ட் மிஷனறி றிங்கல்தௌபே ஐயா் இங்கு வந்து ஊழியம் செய்வதற்கு எல்லா உதவிகளையும் செய்தவர் கா்னல் மெக்காலே ஆவாா். றிங்கல்தொளபே ஐயர் திருவிதாங்கூருக்கு வரத் தீர்மானித்தபோது, இங்கு வருவதற்கான அனுமதிச் சீட்டை (Passport) வழங்கி, திருநெல்வேலியிலிருந்து திருவிதாங்கூர் வழியாக கொச்சி

வந்து சேருவதற்கான பயணச் செலவையும் அவருக்குக் கொடுத்து உதவினார் மெக்காலே.

கி.பி. 1806-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி றிங்கல்தௌபே ஐயர் திருநெல்வேலியிலிருந்து திருவிதாங்கூருக்குப் புறப்பட்டார். ஏப்ரல் 25-ம் தேதி வடக்கன்குளம் வழியாக ஆரல்வாய்மொழி வந்து சேர்ந்தார். அங்கிருந்து புறப்பட்டு மயிலாடி வந்து ஏப்ரல் 30-ம் தேதி வரை அங்கு தங்கினார். பின்னர் கர்னல் மெக்காலேயைச் சந்திப்பதற்காகக் கொச்சிக்குப் புறப்பட்டார். மேய் 8-ம் தேதி கொச்சி வந்து சேர்ந்த றிங்கல்தௌபே ஐயரை கர்னல் மெக்காலே அன்புடன் வரவேற்றார். மெக்காலேயின் வீட்டில் தங்கியிருந்த 5 நாட்களில் அவர் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவர் என்பதை றிங்கல்தௌபே ஐயர் கண்டு கொண்டார்.

கொச்சியிலிருந்து டச்சு புராட்டஸ்டான்ட் கிறிஸ்தவர்களின் ஆன்மிக தேவையைப் பூர்த்திச் செய்வதற்கும், அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கவும் ஒரு போதகர் தேவைப்பட்ட படியால் றிங்கல்தௌபே ஐயர் கொச்சியில் தங்கியிருந்தால் நலமாயிருக்கும் என கர்னல் மெக்காலே விரும்பினார். தனது எண்ணத்தை அவரிடம் கூறி, கொச்சியில் ஒரு மிஷன் ஆரம்பித்தால் தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்வதாகக் கூறினார். ஆனால் ஐயரவர்கள் மெக்காலேயின் வேண்டுகோளை ஏற்கவில்லை. மாறாக மைலாடியில் ஒரு ஆலயம் கட்ட மெக்காலேயின் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசரிடம் அனுமதி வாங்கித் தருமாறு வேண்டினார். மெக்காலே அவ்வாறே செய்வதாக உறுதி அளித்தார். மேய் 13-ம் தேதி றிங்கல்தௌபே ஐயர் கொச்சியிலிருந்து புறப்பட்டு 15-ம் தேதி கொல்லம் வந்து சேர்ந்தார். அங்கு கர்னல் மெக்காலேயின் உறவினரான டாக்டர் கென்னத் மெக்காலே (Nephew of Col. Macaulay) யின் உதவியுடன் திவான் வேலுத்தம்பியைச் சந்தித்து மைலாடியில் ஆலயம் கட்ட அனுமதி கேட்டார். திவான் அனுமதி கொடுக்க மறத்துவிட்டார். ஐயருக்கு அது சிறிது ஏமாற்றத்தைக் கொடுத்தாலும் கர்னல் மெக்காலே அந்த அனுமதியை வாங்கிக் கொடுப்பாரென முழுமையாக நம்பினார்.

சில நாட்களுக்குப்பின் றிங்கல்தௌபே ஐயருக்கு மெக்காலேயிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் திவானை

கொச்சிக்கு அழைத்திருப்பதாகவும், அதன்பின் மயிலாடியில் ஆலயம் கட்டுவதைப்பற்றி பேசி முடிவெடிக்கலாம் என எழுதியிருந்தார். ஆகஸ்ட் மாதத்தில் ஐயருக்கு திவானிடமிருந்து ஒரு செய்தி வந்தது. அதில் அங்குள்ள கிறிஸ்தவர்களில் ஒருவரை திவானிடம் அனுப்பி வைக்குமாறும் அவரிடம் விசாரித்துவிட்டு ஆலயம் கட்டுவதற்கான அனுமதியை அளிப்பதாகவும் கூறி அனுப்பினார். றிங்கல்தௌபே ஐயர் மயிலாடியின் முதல் கிறிஸ்தவரான வேதமாணிக்கத்தைத் திவானிடம் அனுப்பி வைத்தார். திவான் வேதமாணிக்கத்திடம் மயிலாடியில் உள்ள கிறிஸ்தவர்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஆனால் ஆலயம் கட்ட அனுமதி அளிக்கவில்லை.

இதற்கிடையில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், திருவிதாங்கூருக்குமிடையில் கி.பி. 1809-ம் ஆண்டு போர் துவங்கிற்று. கப்பம் கட்டுவதில் பாக்கி ஏற்பட்டதால் வேலுத்தம்பி தளவாய்க்கும் கா்னல் மெக்காலேக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. மெக்காலேயையும், கிழக்கிந்தியக் கம்பெனியையும் திருவிதாங்கூரிலிருந்து விரட்ட நினைத்து திவான் வேலுத்தம்பி கலகம் ஆரம்பித்தார். எனவே கம்பெனிக்கும் திருவிதாங்கூருக்கும் போர் ஆரம்பமானது. இந்தப்போரில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். அநேகர் கொல்லப்பட்டனர். மயிலாடிக் கிறிஸ்தவர்கள் போர் முடியும் வரை மருந்துவாழ் மலையில் சென்று மறைந்திருந்தனர். 1809 -ம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் முடிவடைந்தது. வேலுத்தம்பி தளவாய் தன்னைத் தானே வெட்டிக்கொண்டு மரணமடைந்தார். கம்பெனியின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

போர் முடியும் வரை பாளயங்கோட்டையில் தங்கியிருந்த றிங்கல்தௌபே ஐயர் திரும்பவும் மயிலாடிக்கு வந்து கிறிஸ்தவர்களைச் சந்தித்து விட்டு கொல்லத்திற்குச் சென்று கா்னல் மெக்காலேயைச் சந்தித்துத் திரும்பவும் மயிலாடியில் ஆலயம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டார். பின்னர் மயிலாடிக்கு வந்து தனது ஊழியத்தைத் தொடர்ந்தார். வெகுசீக்கிரத்தில் அவர் எதிர்பார்த்த அனுமதி கிடைத்தது. 1809-ம் ஆண்டு மேய் மாதம் வேலை ஆரம்பிக்கப்பட்டு 4 மாதங்களில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இதுவே திருவிதாங்கூரில் கட்டப்பட்ட முதல் புராட்டஸ்டான்ட் ஆலயம் ஆகும்.

இவ்வாறு கர்னல் மெக்காலேயின் உதவியுடன் றிங்கல் தௌபே ஐயர் முதல் புராட்டஸ்டான்ட் ஆலயத்தை கட்டி முடித்தார். **தென் திருவிதாங்கூரில் மதத்தை ஸ்தாபிப்பதற்கு றிங்கல்தௌபே ஐயருக்கு ஊக்கமளித்த கர்னல் மெக்காலே கி.பி. 1810 -ம் ஆண்டு மார்ச் 4-ம் நாள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அவருடைய உதவியில்லாதிருந்தால் றிங்கல்தௌபேயோ அதைத் தொடர்ந்து பிற மிஷனறிகளோ திருவிதாங்கூரில் ஊழியம் செய்திருக்கவோ, சமுதாய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கவோ முடியாது. மெக்காலேயின் உதவியின்றி லண்டன் மிஷனறி சங்கத்தின் எந்த ஒரு மிஷனறியும் திருவிதாங்கூரில் காலடி எடுத்து வைத்திருக்க முடியாதென்று றிங்கல்தௌபே ஐயர் குறிப்பிடுகின்றார்.**

3. மன்றோவும் கிறிஸ்தவர்களின் விடுதலையும் : ராணி லட்சுமியாய் 1811-ல் திருவிதாங்கூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். தளவாய் வேலுத்தம்பியாலும், உம்மிணித்தம்யியாலும் நாடு குழப்பத்திலும், லஞ்ச லாவண்ணியத்திலும், அதிகார துஷ்பிரயோகத்திலும் உச்ச நிலையை எட்டி நின்றது. அப்போது கர்னல்மன்றோ, மெக்காலேக்குப்பிறகு திருவிதாங்கூரின் இரண்டாவது ஆங்கிலப் பிரதிநிதியாகப் பதவி ஏற்றார். இவரிடம் இருந்த நாணயம், நேர்மை, நீதி முதலியவை ராணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இவரை திருவிதாங்கூரின் திவானாக நியமிக்க அனுமதி கேட்டு ராணி கிழக்கிந்திய கம்பெனிக்கு கடிதம் எழுதினார் வேண்டுகோளை கம்பெனி ஏற்றதால் மன்றோ ஜுன் 1811 -ல் திருவிதாங்கூரின் திவானாக நியமிக்கப்பட்டார். 1814 -ல் மன்றோ அப்பதவியை இராஜினாமா செய்தார். ஆனால் 1819 வரை திருவிதாங்கூரின் ஆங்கிலப் பிரதிநிதியாகத் தொடர்ந்தார். எனினும் சுமார் 10 ஆண்டு கால இவருடைய ஆட்சி திருவிதாங்கூரில் நிலைத்து நின்றது.

மன்றோவைப் போன்று ஒரு சீரான ஆட்சியை வேறு எவரும் தரவில்லை என்பதே வரலாற்றாசிரியர்களின் கருத்து. 1819 -ல் பதவியை விட்டவர் 1858 -ல் தன் சொந்த நாட்டில் இறந்தார். சுமார் 40 ஆண்டுகள் தொடர்பில்லா இடைவெளியிருந்தும் திருவிதாங்கூர் மக்கள் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தார்கள். இன்றும் அவர் நினைவாக அரசு

கால்வாய்களிலும், காயல்களிலும் யாத்திரீகர்களுக்கு வசதியாக இரவு வேளையில்"மன்றோ விளக்குகளை" ஏற்றுகிறது. மன்றோ கிறிஸ்தவ மிஷன் பணிகளில் மிகுந்த ஆர்வம் உடையவர். அதனால் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு அவர் துணையாய் இருந்தார்.

மெக்காலேயேவிட மன்றோ கிறிஸ்தவ மதத்திற்குத் தொண்டு செய்வதில் அதிக தீவிரம் காட்டினார். கிறிஸ்தவ மிஷனறி சங்கங்களுக்கு உதவி செய்வதிலும் கிறிஸ்தவர்களின் நலனைக் காப்பதிலும் அவர் காட்டிய ஆர்வத்தினால் அவரைத் **திருவிதாங்கூரிலுள்ள கிறிஸ்தவ மிஷன்களின் தந்தை** என ஆகூர் கூறுகின்றார்.

திருவிதாங்கூரில் சமுதாய மாற்றங்களைக் கொண்டு வருவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். கர்னல் மன்றோ, பிரதிநிதியாக மட்டுமின்றி திவானாகவும் அவர் நியமிக்கப்பட்டது இதற்கு மிகவும் உதவியாக இருந்தது. மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பளிக்கக் கூடிய ஒரு நேர்மையான அரசை உருவாக்க மன்றோ விரும்பினார்.

வலிய சர்வாதிகாரியக்காரர் சர்வாதிகாரியக்காரர், பார்வத்திக்காரர் ஆகியவர்களே அரசின் நிர்வாகத்தை நடத்திய முக்கிய அரசு அதிகாரிகள். இவர்களில் காரியக்காரர் என்ற அதிகாரிகளே மக்களோடு நேரடித் தொடர்பு உடையவர்கள். இவர்கள் லஞ்ச ஊழல்களுக்கும், அதிகாரத் துர்ப்பிரயோகத்திற்கும், திறமையின்மைக்கும் பெயர் பெற்றவர்களாக இருந்தார்கள். நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதில் முதல் படியாக வலிய சர்வாதிகாரியக்காரர், சர்வாதிகாரியக்காரர் என்ற பதவிகளை மன்றோ ஒழித்தார். காரியக்காரர்களடமிருந்து நீதி வழங்கும் அதிகாரத்தைப் பறித்துவிட்டு வரிவசூலிக்கும் அதிகாரத்தை மட்டும் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு தாசில்தார் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தாசில்தார் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். நாட்டின் முக்கியமான ஐந்து இடங்களில் ஜில்லாக் கோர்ட்டுகளையும் (Zillah Courts) ஒரு மேல் முறையீடு நீதி மன்றத்தையும் (Court of Appeal) ஏற்படுத்தி நீதித் துறையைச் சீரமைத்தார். மன்றோ நாடு முழுவதும் சுற்றித் திரிந்து தவறு செய்யும் அதிகாரிகளைக் கண்டு பிடித்துத் தண்டனை அளித்தார். இவர் கடைபிடித்த கடுமையான முறைகளினால் நிர்வாகம் ஒரு வருடத்தில்

சீரடைந்தது. இவ்வாறு நிர்வாகத்தைச் சீரமைத்து சமுதாய மாற்றங்கள் கொண்டு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கினார்.

கீழ்சாதியினரிடமிருந்து தலைவரி, தாலிவரி, வலைவரி, செக்குவரி, தறிவரி, ஊர்க்காணி வரி, உப்புச் சுமை, யானைமடல், ஏணிக்காணம், தளைக்காணம் போன்ற நூற்றுக் கணக்கான வரிகள் வசூலிக்கப்பட்டன. இவ்வரிகளில் தலைவரியே அவர்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியது. ஒரு குடும்பத்தில் 16 வயது முதல் 60 வயது வரையுள்ள எல்லா ஆண்களிடமிருந்தும் இவ்வரி வசூலிக்கப்பட்டது. உயிரோடிருந்தவர்களுக்கு மாத்திரமல்ல இறந்து போனவர்களுக்கும் கூட இவ்வரியைக் கொடுக்க வேண்டியதிருந்தது.

திருவிதாங்கூருக்கு வந்த முதல் புராட்டஸ்டான்ட் மிஷனறி றிங்கல் தௌபே ஐயர் மயிலாடியில் தங்கி இறைப்பணி செய்து வந்தார். மயிலாடியிலும் அதை சுற்றியிருந்த கிராமங்களுக்கும் பிரயாணம் செய்து அங்குள்ள மக்களோடு பழகி அவர்களுக்கு பல உதவிகள் செய்தார். பலவிதமான வரிகளினாலும் ஊழிய வேலைகளினாலும் மக்கள் பட்ட துன்பங்களை அறிந்தார். தங்களுடைய கஷ்டங்களிலிருந்து விடுதலை வாங்கித் தருமாறு மக்கள் அவரிடம் முறையிட்டனர். மக்களை மதமாற்றம் செய்வது மட்டுமே தனது பணி என்று ஒதுங்கி விடாது அவர்களின் துயர் துடைக்க முன் வந்தார் றிங்கல் தௌபே.

கடுமையான வரி விதிப்பினால் மக்கள் அடைந்த துன்பங்களை கர்னல் மன்றோவுக்கு விளக்கினார் றிங்கல் தௌபே ஐயர், கர்னல் மன்றோ இவ்விஷயத்தை திருவிதாங்கூரின் ராணி கௌரி பார்வதிபாயின் கவனத்திற்குக் கொண்டு வந்து மக்களுக்கு உடனடியாக நிவராணம் அளிப்பதின் அவசியத்தை வலியுறுத்தினார். ராணியும் மக்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைத் தொடர்வது சரியல்ல என்று நினைத்து கீழ் சாதியினரை அவதிக்குள்ளாக்கிய பல வரிகளை ரத்து செய்யுமாறு ஆணை பிறப்பித்தார்.

கி.பி. 1814 -ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின் விளைவாக தலைவரி, வேலைப்பதிவு போன்ற வரிகளிலிருந்து முற்றிலுமாக விலக்கு அளிக்கப்பட்டது. இந்த வரிகளினால் அவதிப்பட்ட கீழ் சாதியினருக்கு இது பெரிய விடுதலையை அளித்தது. குறிப்பாக "சான்றார் குலத்தாருக்குக் கிடைத்த அநேக விடுதலைகளில் இதுவே

ஒருக்காலும் மறக்க கூடாத பெரிய விடுதலை" என்று சாமுவேல் சகரியா ஐயர் கூறுகிறார். இதைத் தொடர்ந்து ஒவ்வொன்றாக பல வரிகளும் நீக்கப்பட்டன. மன்றோவின் அனுமதியின்றி எந்த ஒரு அதிகாரியும் எந்த விதமான அபராதமும் விதிக்கக் கூடாது என ஆணையிட்டார். கீழ் சாதியினர் தங்கத்தாலும் வெள்ளியினாலும் ஆன அணிகலன்களை அணிய வேண்டுமானால் அரசுக்கு வரி கட்ட வேண்டும். அவ்வகை அணிகலன்களை வரி கட்டாமல் அணியலாம் என முதல் முறையாக கி.பி. 1818 -ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. கி.பி. 1864-ல் மாதவராவ் என்பவர் திவானாக இருந்தபோது இந்த ஆணை மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. அதே ஆண்டில் மேலும் 110 வரிகள் நீக்கப்பட்டதாக திருவிதாங்கூரின் நிர்வாக அறிக்கை (Administration Report for 1040 M.E.) தெரிவிக்கிறது.

திருவிதாங்கூரில் நடைமுறையிலிருந்த ஊழியம், விருத்தி என்ற வழக்கங்களினால் கீழ்சாதியினர் பலவித கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். அரசுக்கும் உயர் சாதியினருக்கும் ஊதியமில்லாமல் வேலை செய்ய வேண்டியிருந்தது. பண்டிகைக் காலங்களில் விருத்திக்காரர்கள் (ஊதியமில்லா வேலை செய்வதற்காகக் குறைந்த குத்தகைக்கு நிலத்தை விட்டுக் கொடுக்கும் முறைக்கு விருத்தி என்று பெயர். இம்முறையில் நிலத்தைப் பெற்றவர்கள் விருத்திக்காரர்கள் எனப்பட்டனர். தங்கள் கடமைகளைச் செய்யத் தவறிய விருத்திக்காரர்கள் தண்டிக்கப் பட்டனர். தொடர்ச்சியாக மூன்று தடவை தங்கள் கடமைகளைச் செய்யத் தவறியவர்களிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் பறிமுதல் செய்யப்பட்டது.) தங்கள் எஜமானர்களுக்குக் கோழிகள், முட்டைகள், காய்கறிகள் போன்றவற்றை இனாமாகக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே ஏழ்மையில் வாடிய மக்களுக்கு இவையெல்லாம் பெரிய பாரமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவர்களாக மாறிய கீழ்சாதியினர் இவற்றிலிருந்து விடுபடுவதற்கு றிங்கல் தௌபே ஐயரின் உதவியை நாடினர்.

இந்து கோவில்களில் வேலை செய்வதையும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஊழியம் செய்வதையும் இவர்கள் விரும்பவில்லை. றிங்கல்தௌபே கர்னல் மன்றோவின் உதவியை நாடினார். மன்றோவின் முயற்சியின் பலனாக கி.பி. 1815-ல் கிறிஸ்தவர்களை இந்து

கோவில்களுக்கு ஊழியம் செய்வதிலிருந்து விடுவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு ஆறு வருடங்கள் கழித்து மீட்ஐயர் கிறிஸ்தவர்களாக மாறிய நாடார் இனத்தவர்க்கு ஞாயிற்றுக் கிழமைகளில் ஊழியம் செய்வதிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும் அரசு அதிகாரிகளும் (பிராமணர்கள் அல்லது நாயர்கள் தான் அரசு அதிகாரிகளாகவும் இருந்தனர்.) உயர் சாதியினரும் முன்போலவே கிறிஸ்தவர்களிடம் வேலை வாங்கினர். ஆனால் கிறிஸ்தவர்களாக மாறிய கீழ் சாதியினர் முதல் முறையாக இதை எதிர்க்கத் துவங்கினர். இதனால் தகராறு மூண்டது; கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டனர்.

திருவிதாங்கூர் சமுதாயத்தில் காணப்பட்ட தீமைகளில் அடிமை முறையும் ஒன்று. கீழ்சாதியினர் என்று ஒதுக்கப் பட்டவர்களில் ஒரு சில இனத்தவர் அரசுக்கும், உயர் சாதியினருக்கும் அடிமைகளாக இருந்தனர். இவர்களில் முக்கியமானவர்கள் பறையரும் புலையருமாவார். இவர்கள் அடிமைகளாகப் பிறந்து, அடிமைகளாக வாழ்ந்து, அடிமைகளாகவே இறந்தனர். தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட இவர்களது வாழ்க்கை மிருகங்களை விடக் கேவலமாக இருந்தது. சிறு குற்றங்களுக்குக் கூட கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

எஜமானர்களிடமிருந்து தப்பி ஓட முயற்சித்தவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். வாழ்வில் எந்த சுகத்தையும் அனுபவிக்காத இம்மக்களுக்கு மரணம் ஒன்றே விடுதலை கொடுத்தது. இப்படிப்பட்ட மக்களை மனிதர்களாக வாழவைக்க பெருமுயற்சி எடுத்தவர்கள் மேலே நாட்டு மிஷனறிகளாவர்.

திருவிதாங்கூரில் சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கர்னல் மன்றோ முதன் முதலில் அடிமை வியாபாரத்தை ஒழிக்க முயற்சி எடுத்தார். அவருடைய முயற்சியின் விளைவாக கி.பி. 1812 -ம் ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி அடிமை வியாபாரத்தை ஒழிக்கும் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அடிமை வியாபாரம் தடை செய்யப்பட்ட பிறகும் அடிமை முறை தொடர்ந்து பழக்கத்திலிருந்தது. திருவிதாங்கூரில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே இறைப்பணி செய்து வந்த மிஷனறிகள் அடிமைகளை மீட்பதற்குப் பல வழிகளில் முயன்றனர். மீட் ஐயர்

81

அடிமைகளுக்குக் கல்வியறிவு கொடுத்து அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அடிமை முறையை பலவீனப்படுத்த முடியும் என்று நம்பினார். எனவே அடிமைப் பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்து வர ஆசிரியர்களை ஊக்குவித்தார். பள்ளிக்கு அழைத்து வரும் ஒவ்வொரு அடிமைப் பையனுக்கும் 1 பணம் வீதமும், ஒவ்வொரு அடிமைப் பெண் பிள்ளைக்கும் 1.5 பணம் வீதமும் ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தார். இதன் பயனாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்து. ஒரு வருடத்திற்குள்ளாக நெய்யூரில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடிமைப் பிள்ளைகள் கிறிஸ்தவ கல்வி நிலையங்களில் கல்வி பயில வந்தனர்.

மிஷனறிகளின் துணைவியர் தாங்கள் ஆரம்பித்த கல்வி நிறுவனங்களில் சில அடிமைப் பெண் பிள்ளைகளைக் கொண்டு வந்து வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுத்ததோடு தையல் வேலை செய்யவும் கற்றுக் கொடுத்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழ்சாதியைச் சார்ந்த அநேக மக்கள் மிஷனறிகளால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் அங்கு நிலவி வந்த சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிய முனைந்தனர். கீழ்சாதியினர் இடுப்புக்கு மேல் ஆடை அணியக்கூடாது என்பது அப்போது நடைமுறையிலிருந்த சாதிக் கட்டுப்பாடுகளில் ஒன்றாகும். கிறிஸ்தவர்களாக மாறிய கீழ்சாதிப் பெண்கள் மார்பை மறைத்து நாகரிகமாக உடை அணிய விரும்பினர். ஆனால் உயர் சாதியினர், முக்கியமாக நாயர் இனத்தவர் இதை எதிர்த்தனர். மார்பை மறைத்து உடை அணிந்து சென்றவர்களைத் துன்புறுத்தினர். இதைக் கேள்விப்பட்ட கர்னல் மன்றோ கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பெண்கள் மார்பை மறைத்து ஆடை அணிவதில் யாதொரு தடையும் வராமல் பார்த்துக் கொள்ளுமாறு கி.பி. 1812-ல் அதிகாரிகளுக்கு ஒரு ஆணை பிறப்பித்தார். இதை தொடர்ந்து கி.பி. 1815 -ல் கிறிஸ்தவர்களாக மாறிய ஈழவ, நாடார் மற்றும் கீழ்சாதியைச் சார்ந்த பெண்கள், தாங்கள் சார்ந்துள்ள மதத்தின் மரியாதையைக் காப்பாற்றுவதற்கேதுவான நாகரிகமான உடை அணியலாம் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் பாரம்பரிய பழக்க வழக்கங்களை நிலை

நாட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஆகவே கிறிஸ்தவப் பெண்களால் அவர்கள் விரும்பியது போன்று உடை அணிந்து திரிய முடியவில்லை. ஆனால் மீட் ஐயர் காலத்தில் அவர்களது கனவு நனவாயிற்று. மிஷனறிகளின் துணைவியர் இப்பெண்களுக்காகக் குப்பாயம் (Loose Jacket) என அழைக்கப்பட்ட கட்டையான கைகளுள்ள ஒரு வகை சாதாரண ஜேக்கற்றைத் தைத்துக் கொடுத்து அணிவித்தனர்.

சில கிறிஸ்தவ பெண்கள் நாயர் பெண்கள் அணிவது போன்று தோள்சீலை என்று சொல்லப்படுகிற ஒரு துணியை ஜேக்கற்றின் மேல் அணிந்து கொண்டார்கள். இது நாயர் பெண்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டிருந்த விசேஷ சலுகையாகும். இதனால் நாயர் சமூகத்தினர் வெகுண்டெழுந்தனர்.

இவற்றிற்கெல்லாம் காரணமாயிருந்த கிறிஸ்தவ மிஷனறிகள் மீதும், கிறிஸ்தவ மதத்தின் மீதும் அவர்கள் கோபம் திரும்பியது. பெரிய கலகம் ஆரம்பமாயிற்று. இது நாடார் கலகம் அல்லது தோள் சீலைக் கலகம் எனப்பட்டது.

1813 தென்திருவிதாங்கூர் புரோட்டஸ்தாந்து மிஷன் வளர்ச்சியில் ஒரு முக்கியமான ஆண்டு. கர்ணல் மன்றோ கிறிஸ்துவ மிஷன்களின் நிலைப்பாடுகளை அறிந்து அவைகளுக்கு உதவி செய்ய முன்வந்தார். மைலாடி மிஷனை நடத்திக் கொண்டிருந்த கனம் றிங்கல்தௌபே ஐயருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் 13 கேள்விகள் அடங்கியிருந்தன. மிஷனுக்கு அரசு நிலம் கிடைக்க உதவினார். உயர் ஜாதியினருக்கு இணையாக கிறிஸ்தவர்களில் படித்த இளைஞர்கள் அனேகருக்கு அரசு வேலை கொடுத்தார். கிறிஸ்தவர்களுக்கு நீதி கிடைக்க புரோட்டஸ்தாந்து இரண்டாம் மிஷனெரியான கனம் மீட் ஐயர் அவர்களை நீதிபதியாகவும் நியமித்தார். கிறிஸ்தவ கோயில்களை இடித்தவர்களைப் பிடித்து சிறையில் இட்டார். அதே சமயம் இந்துகோயில் நிலங்களை தனி யாரிடமிருந்து மீட்டெடுக்கவும் கோயில்களை பராமரிக்கவும் ஏற்பாடுகளைச் செய்தார்.

டாக்டர். ஐவி பீட்டர்

10 மறைக்கப்பட்ட வரலாறு

[ராமன்தம்பி]

யார் இவர் . . .?

திருமுழுக்குப் பெற்றவரல்ல திருவிருந்தில் கலந்து கொண்டவரல்ல, கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவரல்ல, ஆலய ஆராதனைகளில் கலந்து கொண்டவருமல்ல, முழுமையான இந்து குடும்பத்தில் பிறந்த ஒரு செல்வந்தர்

- ஆகையால் இவர் கிறிஸ்தவரல்ல!

ஆனால் . . . . .

திருப்பணிக்காக 24.5 ஏக்கர் நிலம் தானமாக வழங்கியவர், திருப்பணியாளர்களுக்கு அரணாக விளங்கியவர், திருப்பணியாளர்களுக்குப்பாடம் சொல்லித்தந்தவர், கிறிஸ்தவர்களை துன்புறுத்தல்களிலிருந்து காத்தவர், கிறிஸ்தவர்களுக்காக 7 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடியவர்

- இவர் கிறிஸ்தவரா...?

தீர்ப்பு உங்களுடையது ...!

1. திரு. ராமன் தம்பியும் மிஷனும்

நெய்யூருக்கு அருகாமையிலுள்ள மேக்கோடு என்னும் ஊரில் பெயரோடும் புகழோடும் வாழ்ந்த திரு. ராமன்தம்பி, நாயர் இனத்தைச் சேர்ந்த இந்து. நூற்றுக்கும் அதிகமான அடிமைகளை வைத்து வேலை செய்யுமளவுக்கு நிலம் வைத்திருந்த ஒரு செல்வந்தர். மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும், சட்டவியலிலும் பாண்டித்தியம்

பெற்றவர். அஞ்சாநெஞ்சமும் நாவன்மையும் படைத்த திரு. ராமன் தம்பி தாழ்த்தப்பட்ட இனமக்களின் ஒரு போர்வாளாக அந்நாட்களில் விளங்கினார்.

இவருடைய காலத்தில் கனம் மீட் ஐயர் அவர்கள் மண்டைக் காட்டில் வாழ்ந்து வந்தார்கள். கி.பி. 1828-ம் ஆண்டு ஜனவரி திங்கள் ஐயர் அவர்கள் தனது திருப்பணி மையத்தை நெய்யூருக்கு மாற்ற முயற்சிகள் மேற்கொண்டார்கள். அதற்காக ஐயர் அவர்கள் தேர்தெடுத்த நிலம் திரு. ராமன் தம்பி அவர்களுக்குச் சொந்தமானதாக இருந்தது. ஆகவே ஐயர் அவர்கள் ராமன் தம்பியை அணுகி, குறிப்பிட்ட நிலத்தைக் கிரயத்துக்குத்தருமாறு கேட்டார்கள். ஐயர் தர்மகாரியங்களுக்காக நிலத்தைக் கேட்டமையால் அந்த நிலத்தைப் பதிவு செய்து ஆவணங்களை ஐயர் அவர்களின் கரங்களில் ராமன்தம்பி ஒப்படைத்தார். மேலும், அவர்கொடுத்த பூமியின் மேல் எழுப்பப்பட்ட கட்டிடங்களைக்கட்டும் போது தம்பி அவர்கள் மேற்பார்வையும் செய்து கொடுத்தார்கள். ஆக, இன்று நெய்யூரில் அமைந்துள்ள பங்களாவும், பள்ளிக்கூடமும், கோவிலும் கொடைவள்ளல் ராமன் தம்பியின் தியாகவரலாற்றைக் கூறிக்கொண்டே நிற்கின்றன.

உயர் ஜாதியினர் அரசு அதிகாரிகளின் துணையோடு கிறிஸ்தவர்களுக்குத் துன்பங்கள் தந்து கொண்டே இருந்தனர். நாலாலு மூட்டுச் சந்தை (திங்கள்சந்தை)க்குச் சென்ற கிறிஸ்தவப் பெண்களின் மேலாடைகள் மேல் ஜாதியினரால் கிழிக்கப்பட்டன. கிறிஸ்தவ ஆலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அந்த நேரங்களிலெல்லாம் திரு. ராமன் தம்பி கிறிஸ்தவர்களின் பாகம் வக்கீலாக இருந்து மேலதிகாரிகளுடன் வாதாடி கிறிஸ்தவர்களையும் திருப்பணியாளர் களையும் காப்பாற்றி வந்தார்.

திரு. ராமன் தம்பியின் இச்செயல் அவரைப் போன்ற உயர் ஜாதியினருக்கும் உயர் அரசு அதிகாரிகளுக்கும் அவமதிப்பாகத் தோன்றவே பொய் வழக்குகள் அவர் மீது தொடுத்து ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்தனர். இப்படிப்பட்ட நீண்ட ஒரு சிறைத் தண்டனை எந்த ஒரு கிறிஸ்தவனும் மிஷனுக்காக அனுபவித்ததாக நமது திருச்சபை வரலாற்றில் இல்லை. இப்பெரும் தண்டனை அனுபவித்து வெளி வந்த ராமன் தம்பி முன்னைவிட பன்மடங்கு பலத்துடன் மிஷனுக்கு

உழைத்ததாக வரலாறு கூறுகிறது. அவர் நெய்யூர் மிஷன் பாடசாலையில் பண்டிதராகவும் பணிபுரிந்து வந்தார். அவருடைய பின் சந்ததியினரும் நமது மிஷனுக்குப் பல உதவிகள் செய்துள்ளனர். நமது மருத்துவமனைகளும் கல்வி நிலையங்களும் இன்றும் அக்குடும்பத்தின் புகழ்பாடி நிற்கின்றன. எந்த ஒரு பதவி (திவான்) திரு. ராமன் தம்பியைச் சிறையில் ஏழாண்டுகள் அடைத்ததோ அதே பதவியில் அவர் மருமகன், என். நாணுபிள்ளை அமர்ந்தார். அவர் நமது செமினரியில் படித்தவர். அவரும் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிக்குப் பெரிய நன்கொடை வழங்கியுள்ளார்.

2. திருச்சபை வரலாற்று நூற்களில் ராமன் தம்பி

திரு. ராமன் தம்பி குறித்து திருச்சபை வரலாற்றை எழுதியுள்ள ஆசிரியர்கள், மறைதிரு. S. சகரியா, திரு. C.M. ஆகூர், H.H. ஹாக்கர் ஆகியோர் கூறுவது ...

"ஐயர் (மீட்) மண்டைக்காட்டில் குடி இருக்கையில் . . . நெய்யூரில் பங்களா வைக்கும்படி தெரிந்து கொண்ட பூமியை கிரயத்துக்கு வாங்கவும் பங்களா முதலிய கட்டடங்களுக்கு தளவாடங்கள் சேகரப் படுத்தவும் வேண்டிய ஒழுங்குகள் செய்து வந்தார். பங்களா வைக்கும் ஸ்தலத்திலிருந்து அரைமைலுக்கு மேற்கிலிருக்கிற மேக்கோட்டில் வாசஞ்செய்த ராமன்தம்பி அப்பிரதேசத்தில் மிகவும் பேர் பிரஸ்தாபமும் செல்வாக்குமுள்ளவராயிருந்தார். அவருடைய பெரிய உதவியால் ஐயர் விரும்பின அனேக காரியங்கள் சித்தி பெற்றன. பங்களா கட்டத் தெரிந்து கொண்ட பூமியும் அவருடையதாகவேயிருந்தமையால், அவர் அதை மிஷனுக்குக் கிரயத்துக்குக் கொடுத்தார். அதைச் சூழ்ந்த சில பூமிகளையும் விலைக்கு வாங்க உதவி செய்தார். இவர் தேவனுடைய அளவற்ற கிருபையால் மிஷனுக்குப் பெரிய உபகாரியும், ஐயருக்கும், உபதேசிமாருக்கும் சிநேகிதனுமாகக் கிடைத்தாரென்று நம்பலாம்"

- S. சகரியா(1897)

"In January 1828 when Mr. Mead was desirous of having a Missionary residence near the town of Thiruvidancode he found a piece of ground belonging to this Raman Thamby to be well adopted for that object; and when he asked the latter whether he would dispose of it, Thamby observing that it was intended for charitable

puroposes refused to receive its value, but gave it over to the Mission free or at a nominal price. Mr. Mead then requested Raman Thamby to help him in superintending the Mission buildings in progress at Neyyoor, which he readily consented to do more with a charitable view for anything else."

- C.M. Agur (1903)

"The foundation of the Neyyoor Mission owes much to an enlightened Hindu Sudra, Raman Thampi, who gave land near to the old capital of Thiruvithancode, about 2 miles from Neyyoor and befriended Mr. Mead and other Missionaries in many ways. Raman Thampi was employed as Mr. Meads' Munshi, and soon became a marked man".

- H.H. Hacker (1930)

"...he (Raman Thampi) helped Mr. Mead and the Christians by placing his services under him (Mead) not only as his Malayalam and Sanskrit Munshee, but also as a vakil or pleader for all petty cases that were filed in the court on behalf of and against Christians."

- C.M. Agur

"இவர் அக்காலத்து சூத்திராட்களுக்குள் போர்க்கேள்வியான ஓர்பராக்கிரமசாலி"

- S. சகரியா

"While he was thus rendering assistance to the Mission, he was one day suddenly summoned to Quilon by the Dewan who brought some accusation against him (which was proved to be false) and put him under immediate arrest in the Tanna prison in that town in November 1828 ie. a month and a half before the real disturbances which took place between the Christians and the Pidagaycars of Attoor"

-C.M. Agur

"மிஷனரிகளுக்கு சிநேகிதனாயிருந்து நெய்யூரில் பங்களா முதலிய கட்டிடங்களுக்கு வேண்டிய பூமி கொடுத்த மேக்கோட்டு ராமன்

தம்பியின் மேல் பொய் பிராதுகள் உண்டாக்கி அவரை காவலில் வைத்தார்கள்"

-S.சகரியா

"Though he thus helped the Missionary he never caused the least offence either to His Highness the Raja or to any of his other subjects"

- C.M. Agur

"When however Mr. Mead procured the release of all the imprisoned Christians, he also tried his best for the release of this great friend of Christians, but without success"

- C.M. Agur

". . . Col. Morrison (British Resident) left Trvancore succeeded by Lt. Col. Cadogan. Before any native officers could prejudice his mind Mr. Mead had an interview with Col. Cadogan and explained to him the principal circumstances in Raman Thampy's case ...., such constant appeals to the benevolence of the Resident was not in vain, for some months after, the Thamby was released and he came and assisted Mr. Mead with double energy"

- C.M. Agur.

"அவர் ஏழுவருடத்துக்குப் பின்புதான் விடுதலையானார்"

-S. சகரியா

3. இராமன் தம்பி தொடர்பான கடிதப் போக்குவரத்துகள்

திருவிதாங்கூர் நாட்டில் அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த திவானுக்கும், ஆங்கிலேயப் பிரதிநிதிக்கும், கனம் மீட் ஐயர் அவர்களுக்குமிடையே திரு. இராமன் தம்பி தொடர்பாக நடந்த கடிதப் போக்குவரத்துச் செய்திகள்:

முதல் கடிதம் : "கிறிஸ்தவரல்லாத இராமன் தம்பி மாவட்ட ஆட்சி காரியங்களில் தலையிட்டு தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்கிறார்" என்று திருவிதாங்கூர் திவான் ஆங்கில பிரதிநிதிக்கு எழுதுகிறார்.

Letter of Vencata Row (வெங்கடராவ்), the Dewan of Travancore to the British Resident Col. W. Morrison

Quilon : dated 11 December 1828

"A man named Ramen Thamby / not Christian / calls himself to be the chief representative of all Christians, shows to the public that he is a person of great consequence and interferes much with the district authorities. Having ascertained his unauthorised connections and interference from his own notes to the public servants, which are now before me, I thought it proper to call the man to the Hoozoor by regular summons to explain his conduct"

இரண்டாம் கடிதம் : "கிறிஸ்தவர்களுக்குள் தங்கள் செல்வாக்கை வளர்க்க முயற்சிக்கும் இராமன் தம்பி போன்றோரைக் கண்டியுங்கள்" என்று கனம் மீட் ஐயர் அவர்களுக்கு ஆங்கிலப் பிரதிநிதி எழுதுகிறார்.

Letter of Col. Morrison
The British Resident in Travancore
To Rev. Charles Mead
The L.M.S Missionary in South Travancore
Quilon : dated 13 December 1828

"I recommend your admonishing all persons who may come to you for instruction, to discountenance any interference on the part of Raman Thampy or others, who may attempt to raise for themselves an influence with the Christian population, contrary to the rules of the Sircar"

மூன்றாம் கடிதம் : "கிறிஸ்தவர்களில் நசுக்கப்பட்ட தன் நண்பர்களுக்காக திரு. இராமன் தம்பி கெஞ்சுகிறார் - வாதாடுகிறார். இது தவிர வேறு உண்மை இல்லை" என்று ஆங்கில பிரதிநிதிக்குப் பதிலெழுதுகிறார் கனம் மீட் ஐயர்.

Letter of Rev. C. Mead to Col. W. Morrison, Mondakaudoo, dated 2 December 1828

"I beg further to add, that the only use which the Christians appear to have made of Raman Thampy's influence has merely been to request him to speak or write to his friends on their behalf when oppressed. In this way the either inhabitants are constantly in the habit of obtaining the aid of the higher castes as they are incapabable of pleading their own cause."

நான்காம் கடிதம் : "இராமன் தம்பியின் செல்வாக்குக்கு எந்த அவசியமும் இல்லை. அரசு பதவி இல்லாதவர்கள் மாவட்ட அதிகாரிகள் மற்றும் தாசில்தார்களுக்கு கடிதங்கள் எழுதுவது முறையல்ல. கனம் மீட் ஐயர் அந்த சாணார்களுக்கு செவிமடுக்காமல் எந்த பிரச்சினையானாலும் மாவட்ட அதிகாரிகள் அல்லது கச்சேரிக்கு அல்லது என்னிடம் அனுப்பும்படி செய்யுங்கள்" என்று திவான் திரும்பவும் ஆங்கில பிரதிநிதிக்கு எழுதுகிறார்.

Letter of Mr. Vencata Row to Col. W. Morrison

Quilon : dated 7 January 1829

I cannot really see any good reason for Raman Thampy's influence in the country. There are many inhabitants more poor and more ignorant than those that are converted Christians, and they are not known to have employed anybody like Raman Thampy to write to the public authorities, nor any other person writes like Raman Thampy, who possesses no authority nor any sort of license from the Sircar, freely to the Tahsildars, Tannah Naigs and others making use of the names of the missionaries. I therefore request your favourable interference with Rev. Mr. Mead to give no countenance whatever to those shanars whoever proceed to him with complaints, but to tell them to go to the proper District authorities, and if redress be not given, to proceed direct to the Huzoor Cutcherry, where I shall with the greatest pleasure hear and redress them without loss of time"

ஐந்தாம் கடிதம் : "இராமன்தம்பி மோசமானவர் என்றும், கிறிஸ்தவர் களில் அதிருப்தியாளர்களைத் திரட்டுகிறார் என்றும் குற்றம் சாட்டி, அவர் மிஷனின் சம்பளத்தில் இருக்கிறாரா, என்ற கேள்வியுடன், மிஷனின் ஆதரவு காட்டப்பட அவர் தகுதியற்றவர் என்ற தீர்ப்புடன் கண்டிப்புத் தொனியில் கனம் ஐயருக்குப் பதில் எழுதுகிறார் ஆங்கிலப் பிரதிநிதி.

Letter of Col. Morrison to Rev. C. Mead,

Trivandrum : dated 7 January 1829

" ... with reference to your explanation concerning the interference of Raman Thampy to state that I know him to be a turbulant and bad character, generally engaged in angry disputes with neighbours, and that I think it more than probable therefore that he has united himself with the discontented Christian converts, in order only to strengthen his party, and to enable him to maintain an improper influence in the country. Raman Thampy alleges, I hear, that he is in the service of the mission; and your letter of the 22nd of December shows that he has been employed, as I conceive irregularly. He is now understood to boast of this influence with the converted Christians and of the members of them, whom he can assemble"

"On these grounds then, I think it necessary to request, that you will explain whether he is or has been in the service of the Mission, or in what manner and to desire that the gentlemen of the Mission may not show him any countenance whatsoever."

திரு. இராமன்தம்பி செய்தது என்ன? தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை, பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி நிவாரணம் தேடத் தெரியாத - முயன்று தோற்ற - நசுக்கப்பட்ட மக்களுக்காக நீதி கிடைக்க அவர் பிரயாசப்பட்டார் - பேசினார் - எழுதினார் - சிபாரிசு செய்தார் - வாதாடினார். அவர் ஒரு நல்ல அயலானாகச் செயல்பட்டார்.

இந்த 5 கடிதங்களையும் படிக்கும்போது ஓர் உண்மை புலப்படுகிறதா? அன்று திருப்பணிக்காக இங்கு வந்த இறை மக்களுக்கும் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கும் உயர் ஜாதியினர் - உயர் அதிகாரிகள் மட்டுமல்ல ஆங்கிலேய அதிகாரிகளுள் பலரும் கூட துன்பங்களையே தந்து கொண்டிருந்தனர். கிறிஸ்தவ ஆங்கிலேய உயர் அதிகாரிகள் பலர் மிஷனெரிகளுக்குச் சாதகமாக இல்லாததைச் சுட்டும் பல சான்றுகள் மேலும் உள்ளன.

எப்படியும் திருவிதாங்கூர் அரசு சதி செய்து இராமன் தம்பியைச் சிறையில் தள்ளியது. "காவலில் அடைக்கப்பட்டிருந்தவர்களுக்காக அவர்களுடைய இனத்தாரும் மற்ற கிறிஸ்தவர்களும் மெத்த ஏக்கம் பிடித்தவர்களாயிருந்தார்கள். ஆகையால் மீட், மால்ட், தாம்சன் என்னும் மூன்று ஐயர்மாரும் ஏழு வருஷ காலமாய் அவர்களுடைய

விடுதலைக்காக பட்ட பிரயாசம் இன்ன மட்டென்றில்லை. 1827-ம் வருஷம் முதல் 1836-ம் வருஷம் வரைக்கும் ரெசிடன்ட் உத்தியோகம் செய்து வந்த கர்னல் மாறீசன், கடோகான், காச மேஜர் என்னும் மூன்று துரைமாரின் காலங்களில் கவர்ன்மென்றுக்கும் பல சங்கடங்களும், காகிதங்களும் எழுத வேண்டியதாயிற்று. ஜனங்கள் வெகு விசாரத்தோடு தங்கள் சிநேகிதருக்காகப் பேசுவதைக் கேட்பது, அவசரமான எழுத்துக்கள் செய்வதும் ஐயர்மாருக்கு இராப்பகலாய் ஓயாத கவலையுண்டாயிற்று."

-மறைதிரு. S. சகரியா (1897)

4. திரு. இராமன்தம்பியின் சிறைக்கடிதம்

"திரு. இராமன்தம்பி சிறையில் அடைக்கப் பட்டபின் குழப்பவாதிகள் என்ற பட்டியலில் இடம் பெற்று சிறை வாசம் அனுபவித்து வருபவர்களில் முக்கியமானவர்கள், புலிப்பனம் இசக்கிமாடன் தண்டல்காரன்; மருதூர்குறிச்சி குஞ்சன் தண்டல்காரன், கண்ணனூர் தச்சன்விளை வேதமாணிக்கம்; சடயன் தாளிவிளை காளி, பிச்சை, வீமன், ஆற்றூர் காளியம்விளை, கருமன், எருக்கலன்விளை மல்லன்; வலியதுறை ஞானப்பிரகாசம் ஆகியோர்."

- S. சகரியா

"விரோதிகள் உத்தியோகஸ்தருடைய சகாயத்தால், அந்த ஏழைக் கிறிஸ்தவர்களை (சிறையில் அடைக்கப்பட்டவர்களை) இரகசியமாய் காயலில் அமிழ்த்தி கொன்று போட யோசனையாய் இருந்தார்கள். அதை அறிந்த மீட் ஐயர் தருணம் அறிந்து, ரெசிடன்ட்துரைக்கு நடக்கப் போகும் சதி சற்பனைகளை அறிவித்தார். உடனே அவர் தமது பட்டாளச் சிப்பாய்களை அனுப்பி அவர்களை காயலுக்குக் கொண்டு போகும் வழியிலிருந்து திரும்பி, அவர்கள் விலங்குகளை வெட்டி விடுதலையாக்கினார்."

- S. சகரியா

"கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டும், ராமன்தம்பி அந்த சமயத்தில் விடுதலையாகவில்லை. சர்க்கார் அவரை மிகுதியும் ஒடுக்கி அடக்கத் தீர்மானித்து ஏழுவருஷகாவலில் போட்டிருந்தார்கள்."

- S. சகரியா

இவ்வாறு சிறைத்தண்டனை அனுபவித்து நோயுற்று இருந்த திரு. இராமன்தம்பி சிறையிலிருந்து கொண்டு ஆங்கில ரெசிடன்ட்-க்கு எழுதிய கடிதத்தின் சிலபாகங்கள் (ஆங்கிலத்தில்)

"During that time a Christian Shanar named Esakemaden of Pillepannam and others of Auttoor Adegarum of Kalkulam district complained to the said Dewan against the Pedagacarers of Auttoor, burning down two or three of the chapels and for beating, ill treating, & tearing the upper cloth of their Shanar women which they were privileged to wear by the decree of the court. The Dewan therefore went with the Catchary to Palpanavaram to make enquiry taking along with him your petitioner under an arrest - and on their arrival there, the Dewan ordered the Pedagacarars to assemble by a proclamation made by the beating of tom tom that if any person had complaints against the Christians and their adherents to come forward and the Dewan was in favour with the Pedagacarers and against the Christians while making equiry yet no one brought any complaint against your petitioner - on which the Pedagacarers of Auttoor told the Dewan to send your petitioner away lest he council with the Christians and the case of the Nairs should not succeed if your petitioner was kept at Palpanavaram"

- சமயத் தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பக்.215.

"On this the gate of the Dewan catchary was shut up and the peons were ordered to make him sign the keychit, when one of them took hold of his hand and with a blow on his back told him to sign it - but your petitioner folded his hands and said that even if they kill him he would not do it - on his saying thus the Harecares that they standing by the Dewan with the peons more than fifty in number came and pinioned and beat him, and not being able to bear the severe blows they gave him he fell down fainted. On this they loaded his hands & feet with heavy chains so that one person could not carry them and put him in the Huzoor prison - where he was lying for three days and was obliged to dismiss the call of nature in

that posture besides starving all the while. On the 5th day the chains of his feet were tied off and a few days after the hands'.

-சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும், பக்.216

கடிதத்தின் சில பாகங்கள் தமிழில் . . . .

"ஐந்தாண்டுகளுக்கு மேலாக விசாரணை யின்றி சிறையில் அடைக்கப் பட்டுள்ளேன். மகாராஜாவுக்கும், திவானுக்கும், ரெசிடன்ட்டுக்கும் மனுக்கள் அனுப்பியும் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு 60 மைல்களுக்கப்பால் இருக்கிறேன்."

"பாதிரிசாகிப் (மீட் ஐயர்) வேண்டுகோளுக்கிணங்கி மிஷன் பங்களா முதலியவைகள் கட்டுவதற்குரிய நிலத்தை விலை பெறாமல் பதிவு செய்து கொடுத்தேன். என்னுடைய சகோதரர் மிஷனின் சமஸ்கிருத ஆசிரியராக வேலை பார்க்கிறார். என்னுடைய வீடு மிஷன் வேலை நடக்கும் இடத்துக்கு அருகாமையில் உள்ளது. ஆகவே பங்களா முதலியன கட்டும் பணியில் மிஷனுக்கு உதவினேன். நான் மிஷனிலிருந்து எந்த சம்பளமும் வாங்காமல் உதவினேன். அரசு அதிகாரிகளோ நான் மிஷனிலிருந்து சம்பளம் வாங்குவதாக குற்றம் சாட்டினார்கள்."

"1004 - ம் ஆண்டு மார்கழி மாதம் முன்னாள் திவான் (வெங்கட ராவ்) நான் மகாராஜாவின் விருப்பத்துக்கு மாறாக துணிந்து மிஷனுக்கு உதவியதாகக் கூறி குற்றம் சாட்டினார். நான் மாறாக, மகாராணியாரே தர்மகாரியங்களுக்காக பேருதவி செய்யும் போது, நான் செய்யும் உதவி சிறிதே எனக்கூற திவான் உடனே என்னை கொல்லம் சிறையிலிட்டார். இந்நேரத்தில் நீதிமன்ற ஆணைப்படி மேலாடை அணிந்த சாணார் பெண்களை துன்புறுத்தி, உயர் ஜாதியினர் மேலாடைகளைக் கிழித்ததற்கும். கிறிஸ்தவ கோவில்களை எரித்ததற்கும், அவர்களை அடித்துத் துன்புறுத்தியதற்கும் புலிப்பனம் இசக்கிமாடன் என்ற கிறிஸ்தவ சாணாரும், ஆற்றூர் அதிகாரத்துக்கு உட்பட்ட சில கிறிஸ்தவர்களும் திவானுக்குப்புகார் கொடுத்தனர். எனவே திவான் விசாரணைக்காக பத்மனாபபுரம் வந்தார். பிடாகைக்காரர்களுக்கு சாதகமான திவான், கொட்டு அடித்து கிறிஸ்தவர் களுக்கு எதிராக சாட்சி சொல்ல மக்களை அழைத்தார். ஆனாலும் ஒருவருமே எனக்கு (ராமன்தம்பி) எதிராக சாட்சி சொல்லவில்லை. பத்மனாபபுரத்தில் நானிருந்தால்

நாயர்களுக்கு வெற்றி கிடைக்காது என்று எண்ணி என்னைத் திருவனந்தபுரத்துக்கு கொண்டு போய்விடத் துணிந்தனர். என் முன்னிலையில் குற்றச் சாட்டுகளை விசாரிக்கச் சொன்ன போது, திருவனந்தபுரத்தில் வைத்து விடுவிப்பதாக திவான் கூறினார்."

"நான் சிறையில் இருக்கும் போது இசக்கிமாடனும் வேறுபலரும் பிடாகைக் காரர்களால் கோர்ட்க்குக் கொண்டு செல்லப்பட்டு மணல் சுமக்கும் தண்டனை பெற்றுத்தரப்பட்டது. தெருக்கள் வழியாக நடத்திச் செல்லப்பட்டு அடிக்கப்பட்டனர். ரெசிடன்டின் தலையீட்டால் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவை இப்படியிருக்க நாலாலு மூட்டுச்சந்தை (திங்கள் சந்தை) கலவரத்தில் நான் எந்த தீங்கும் இழைத்ததாக எவரும் குற்றம் சாட்டவில்லை."

"இந்த நேரத்தில் திவானும் ரெசிடன்ட்-ம் மாற்றலானார்கள். தீயசக்திகளின் முயற்சியால் திரும்பவும் திருவனந்தபுரம் சிறையிலிருந்து கொல்லம் சிறைக்கு மாற்றப்பட்டேன்."

"சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாக, அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நான் சொல்லொணா துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய சகோதரன் மூலமாக எத்தனையோ மனுக்கள் திவானுக்குத் தந்தும் அவை பயனற்றுப் போய்விட்டன. இந்த வருடம் வைகாசி மாதம் கொல்லத்திலிருந்து ஒரு கடை நிலை ஊழியன் மூலமாக கொண்டு செல்லப்பட்டு திவான், திவான் பேஷ்கார், காரியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரர்கள், ஆக 50 பேர் கூடியிருந்த கச்சேரி (Court) யில் நிறுத்தப்பட்டேன். நாலாலுமூட்டுச்சந்தையில் நானும் பாதிரியும் (மீட் - ஐயரும்) சாணார் கிறிஸ்தவர்களும் சேர்ந்து கலகம் விளை வித்ததாக ஒரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எழுதிக் கொடுக்க திவான் கூறினார். புகார் கொடுத்தவர்கள் சாட்சிகளுடன் நிரூபிக்கப் படட்டும், நான் எந்த குற்றமும் செய்யவில்லை என்று தாழ்மையுடன் கூறினேன்."

"இப்படி வாதாடிக் கொண்டிருக்கையில் கோர்ட் எழுத்தர் கொச்சுராமன் பிள்ளை ஒரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை எழுதி என்னிடம் கொண்டு வந்தார். அதில் கையெழுத்திட திவான் கூறினார். நான் பணிவுடன் மறுக்கவே கோர்ட் வாசல்கள் மூடப்பட்டன. என்னிடமிருந்து கையொப்பம் பெற ஊழியர்களுக்கு திவான்

ஆணையிட்டார். ஒருவர் உடனே என் முதுகில் மடக்கின கையால் ஓங்கி குத்திவிட்டு, கொன்று விடுவேன் கையொப்பம் போடு என்றார். பின் அங்கு நின்று கொண்டிருந்த காரியக் காரர்களும் மற்றவர்களும் சேர்ந்து என்னைத் தாக்கி, அடித்து உதைத்தனர். தாங்கிக் கொள்ள முடியாமல் மயங்கி விழுந்தேன். தனி ஒரு நபரால் தூக்கிக்கொள்ள முடியாத பாரமான சங்கிலிகளால் என் கால்களும் கைகளும் கட்டப்பட்டன. மூன்று நாட்கள் அதே நிலையில் கிடந்தேன். பட்டினியால் வாடினேன். கிடந்த நிலையிலேயே மல-ஜலம் தானாகக் கழிந்தது. ஐந்தாம் நாள் கால் சங்கிலிகளும் இன்னும் சில நாட்கள் கழித்து கைச்சங்கிலிகளும் அவிழ்க்கப்பட்டன".

"பின்னர் திவானால் நான் ஜில்லா கோர்ட்-க்கு அனுப்பப்பட்டேன். நான் கையெழுத் திட்டதாகக் கூறி அங்கு ஒரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டது. கச்சேரியில் திவானிடம் தவறாக நடந்ததாகவும் கூறப்பட்டது. நான் நடந்த உண்மைகளைக் கூறினேன். நான் கூறியதற்கு ஆதாரங்களோ சாட்சிகளோ உண்டா? என என்னிடம் கேட்கப்பட்டது. திவான் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி எத்தனை குற்றங்களும் சுமத்தலாம். அவைகளைச் சாட்சிகளை உருவாக்கி நிரூபிக்கவும் செய்யலாம், நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றச்சாட்டுகளை ஏற்கவும் முடியாது என்று பதிலளித்தேன்."

"நான் கூறிய யாவும் 5 ஓலைகளில் எழுதப்பட்டு எனது கையொப்பம் பெறப்பட்டது. இந்தக் கையொப்பமும் சரி பார்க்கப்பட்டது. இரண்டு கையொப்பங்களும் ஒன்றல்ல என நிரூபணமாகியது. இன்னும் மிஷன் பங்களா கட்டிய வேலைக்குரிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டு, கோர்ட் பரிசீலனை செய்தது. உண்மை வெளிச்சமானது. எனினும் நான் விடுவிக்கப்படவில்லை."

"கடைசியாக எழுதுகிறேன், நான் இரக்கமில்லாத முறையில் என் குடும்பம் சொத்து முதலியவற்றிலிருந்து பிரிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வைக்கப்பட்டுள்ளேன். அருவருக்கத்தக்க, வெட்கப்படக்கூடிய காட்டுமிராண்டித் தனமான வேதனையை அனுபவிக்கிறேன். மணல் சுமக்கும் உத்தரவுக்குள்ளாகி இருட்டறையில் குற்றவாளிகளுடன் அடைக்கப்பட்டுள்ளேன். என் இழிவான நிலையை பரிவுடன் மனதில் கொண்டு நீதி வழங்குமாறு

கேட்டுக் கொள்கிறேன். வேறு எந்த வழியிலும் நீதி கிடைக்க வாய்ப்பில்லை. எல்லா நிலைகளிலுமுள்ள அரசு அதிகாரிகள் என்னிடம் மிகுந்த பகைமை கொண்டுள்ளனர்".

திரு. இராமன் தம்பி ஒரு கிறிஸ்தவரா?

- இன்னும் உங்களால் ஒரு முடிவுக்கு வர இயலவில்லையா?
- இயன்றும், வெளியில் சொல்ல முடியாத தயக்கமா?
- கிறிஸ்தவ அடையாளங்கள் இல்லையே என்கிறீர்களா?
- கிறிஸ்தவத்துக்காக தன்னை ஒப்புக் கொடுத்ததால் தயக்கமா?
- மரணப்படுக்கை வாக்கு மூலம் முடிவெடுக்க உதவுமா? பாருங்கள் . . .

திரு. இராமன் தம்பியின் நெருங்கிய நண்பரான கனம் மீட் ஐயர் தமது 35 ஆண்டு கால மிஷன் பணியை 1852 - ம் ஆண்டு முடித்து விட்டு நீங்கிக் கொண்டார். மறு ஆண்டு பெப்ரவரி 15-ம் நாள் கனம் லீச் ஐயர் அவர்கள் நெய்யூருக்கு வந்து மருத்துவ மிஷனெரியாகப் பொறுப்பேற்றார்கள். சில நாட்களில் திரு. இராமன் தம்பியை லீச் ஐயர் அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது அவர் மரணப்படுக்கையில் இருந்தார். சந்திப்புக்குப்பின் கனம் லீச் ஐயர் அவர்கள் . . . ?

"சில நாட்களுக்கு முன்னே, நூற்றுக் கதிகமான அடிமைகள் வேலை செய்யும் காணிபூமியுள்ள ஒரு சூத்திரனின் மரணசமயத்தில் பார்க்கப்போயிருந்தேன். அவருடைய முன்சரித்திரம் அப்போது எனக்குத் தெரியாதிருந்தபடியால் ஸ்னானம் செய்கிறதினாலும், மிகுதியான தானதர்மம் கொடுப்பதினாலும் பாவ நிவாரணம் கிடையாதென்று அவருக்குக் காண்பித்து யேசுநாதர் செலுத்தின ஒன்றானபலியே பாவத்தை நிவாரணம் பண்ணுறதற்கு தகுந்த வழியென்று அறிவித்தேன். அப்போது அவர் இந்து மார்க்கத்தாரான தன் உறவின் முறையார் கேட்கத்தக்கதாக கிறிஸ்து நாதர் செலுத்தின பாவ பலியினாலேயே அன்றி மற்றொன்றினாலும் பாவம் தொலையமாட்டாதென்று நான் அறிந்திருக்கிறேன். அதை சத்தியமென்று விசுவாசிக்கிறேன் என்றார். பின்பு நான் தன்னைக் கிறிஸ்தவனாகக் காண்பியாதிருந்தாலும் அனேக வருஷமாய் அந்தரங்கக் கிறிஸ்தவனாயிருந்தாரென்று அறிந்து கொண்டேன்."

- S. சகரியா

ஆம் முடிவெடுக்க மிஷனெரி உதவிவிட்டார்.

அன்பு உள்ளங்களே!

திரு. இராமன் தம்பி அவர்கள் கத்தோலிக்கத் திருச்சபைக்காக இப்படி ஒரு தியாகம் செய்திருந்தால் அவர் இன்று, தேவசகாயம் பிள்ளையைப் போல, புனிதர் பட்டத்துக்குத் தகுதியுடையவராய் திகழ்ந்திருப்பார் - கடவுளாகியிருப்பார். கடவுளாக்கும் திருப்பணி புரோட்டஸ்தாந்து அஜன்டாவில் பொதுவாக இல்லை. அதனால் இராமன் தம்பியை புனிதர் ஆக்க அல்லது கடவுளாக்க முயற்சி எடுக்கவில்லை. அவர் மரணமடைந்த வேளையில் அவருடைய நிலத்தில் கட்டி எழுப்பப்பட்ட நெய்யூர் கஸ்பாசபை மணிகூட ஒலித்திருக்க நியாயம் இல்லை. இப்படி இருக்க மகராசனையும் ஈஸ்வர பாக்கியத்தையும் கடவுளாக்க முயற்சி எடுத்துக் கொண்டவர்கள் எப்படி? ஏன்? திரு. இராமன் தம்பியை மறைத்தார்கள்? சிந்தியுங்கள்!

தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

11 நிம்மதியைத் தந்த பெரும் பிரிவினைகள்

பிரிவு என்பது வேதனைதான். ஆனால் அதுவே பிரச்சனை களுக்குத் தீர்வாக அமையும் போது நிம்மதி தானே? நம் திருச்சபை வரலாற்றைப்படிக்கும் போது, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் நாம் இருபெரும் பிரிவினைகளைச் சந்தித்ததாக அறிய முடிகிறது. அந்தப் பிரிவினைகள் வேதனையளிப்பதாக இருந்தாலும் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம் இன்று நிம்மதியுடன் செயல்பட அந்தப் பிரிவினைகள் உதவியிருக்கின்றன என்பதாகக் காண்கிறோம். கிறிஸ்தவத்தை ஏற்று விடுதலை பெற்றுக் கொண்டவர்களில் பெரும்பான்மையினர் கீழ் ஜாதிக்காரர்கள். நாளடைவில் இவர்கள் ஜாதிவாரியாகப் பிரிந்து புதிய அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தன்மானத்துடன் வாழத் தொடங்கினார்கள். இந்தப் பிரிவினைகளுக்கு முக்கிய காரணம் திருச்சபைக்குள் நிலவி வந்த ஜாதிப் பிரச்சனை. ஒருவன் தன் மதத்தை விட்டு கிறிஸ்தவத்தில் இணைந்தாலும் அவனுடைய ஜாதி அடையாளம் மாறுவதில்லை. இதைப்பற்றி பழைய ஆவணம் ஒன்றிலிருந்து திரட்டப்பட்டச் செய்தி :

"மகமதியர் மத விஷயத்தில் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களே". ஒரு பறையனைப் பார்த்து கிறிஸ்தவர்களுடைய நடத்துதலையும், மகமதியருடைய நடத்துதலையும் சொல்லி அப்பா எந்த மார்க்கத்தில் சேருவது உனக்குப்பிரியம் என்று கேட்டால் அதற்கு உத்தரமாக, ஐயா நான் மகமதிய மார்க்கத்திலே சேர்ந்து கொள்கிறேன்

என்பான். ஏன்? நேற்றுப் பறையன் இன்று அந்த மார்க்கத்தில் சேர்ந்த பின் துலுக்கன் என்னப்படுவான். அவனுடன் சாப்பிட, தங்கள் பெண்ணை அவனுக்குக் கொடுக்க, அவனுடைய ஆபத்தில் உதவக் கூடியவர் களாயிருக்கிறார்கள். ஆனால் நாமோ நேற்று பறையன் என்போம் இன்றைக்குப் பறைய கிறிஸ்தவன் என்போம். அவனுடன் வேறெவ்வித சம்பந்தமும் செய்யமாட்டோம். ஆக மகமதியரைக் காட்டிலும் கிறிஸ்தவர்களை இவ்விஷயத்தில் குறைவுள்ளவர்களாகக் காட்டுவதற்குக் காரணம் ஜாதி என்னும் கொள்கையே, சபைகளிலே ஜாதியிருப்பதனால் கட்சிகள் ஏற்பட்டு அதன் பயனாக கலகங்கள் ஏற்படுகின்றன." (The United Church Herald, June 1919, P.117.)

திருச்சபைக்குள் ஜாதிப் பிரச்சனை மிஷனெரிகளுக்கு மந்தையில் ஆடுகளை சேர்ப்பதில் ஒரு பெரிய சவாலாக அமைந்தது. மிஷனெரிகள், கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களின் இந்து பெயர்களை மாற்றினார்கள். பெயர்களில், ஜாதி அடையாளம் இல்லாமல் ஆக்கப்பட்டது. பள்ளி- சபை-பத்திரங்கள் முதலியவைகளில் ஜாதிப் பெயர்களை தவிர்த்தார்கள். மிஷனெரிகள் மாநாடுகள், இங்கிலாந்து பாராளுமன்றம் முதலியவைகளில் இவ்விஷயம் முக்கிய விவாதப் பொருளாய் அமைந்ததுண்டு. சமுதாய அமைப்பில் மூக்கை நுழைப்பது ஆபத்தானது என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. நல்ல சமாரியன் கதையைச் சொன்னார்கள். மத்தேயுவின் வீட்டில் இயேசு பந்தியிருந்ததைச் சொன்னார்கள். யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை என கதை அளந்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. மரியாதையாக தலித் கிறிஸ்தவர்கள் என்று விலாசப்படுத்தினார்கள். அவர்களோ இல்லை நாங்கள் சாம்பவன், காணி என்று விலாசப்படுத்தக் கேட்கிறார்கள். ஆக திருச்சபைக்குள் ஜாதிப்பிரச்சனை- பிரிவினை ஆகியவற்றைத் தடுக்க இயலவில்லை.

ஜாதியை ஒழிக்க ஒரு புறம் பாடுபட்டாலும் திருச்சபைக்குள் ஜாதிப் பிரச்சினை என்னென்ன பலா பலன்களைத் தந்திருக்கிறது என்பதை ஆராயலாம். பிரிவினை வேதனை என்றாலும் அது நிம்மதியை உத்தரவாதம் செய்ததா? என்பது தான் கேள்வி. வேதாகமத்தில் பிரிவினைகளைக் காண்கிறோம். அவைகளே பிரச்சினைக்குத் தீர்வு என்பதையும் காண்கிறோம். வடக்கன்குளம் கத்தோலிக்கத் திருச்சபை வரலாறு, பிரிவினை ஒரு தீர்வு என்ற பாடத்தைத் தானே தருகிறது?.

1806-ல் L.M.S. முதல் மிஷனெரி கனம் றிங்கல்தௌபே நம் நாட்டின் இப்பகுதிக்கு வந்தார். மைலாடியில் சாம்பவர் மத்தியில் தன் திருப்பணியைத் துவங்கினார். இரண்டாமாண்டு முதல் பக்கத்து ஊர்களில் நாடார்களுக்கிடையில் தன் திருப்பணியை விரிவுபடுத்தினார். இவர் காலத்திலும் இவர் பின்காமி கனம் சார்ல்ஸ் மீட் ஐயர் காலத்திலும் நாடார் இனத்தவர் சாரை சாரையாகக் கிறிஸ்தவத்தில் வந்து இணைந்தனர். நாடார் கிறிஸ்தவர்கள் மந்தையில் பெரும்பான்மையாகவே, சபை மற்றும் எல்லா மிஷன் நடபடிகளிலும் நாடார் கிறிஸ்தவர்களின் கை ஓங்கி நின்றது. இதனால் ஏற்பட்ட பூசல்களுக்கு மிஷனெரிகள் எப்படி எப்படி எல்லாமோ தீர்வு காண முயற்சித்தனர். அந்த முயற்சிகளில் முக்கியமானது கலப்புத் திருமணம். இரண்டு ஜாதி ஒன்று சேர்ந்தால் மூன்றாவது ஒரு ஜாதி உருவாகும் என்பதை அவர்கள் நினைக்கவில்லை. திருச்சபையின் தலைவலி வலுப்பட்டது. அதன் இடிபாடுகள் இன்றும் நாகர்கோவில் கிறிஸ்தவ சமுதாயத்தில் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வைத் தந்தது பிரிவினை. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் எல்.எம்.எஸ்- க்குப் போட்டியாக துவங்கப்பட்ட லுத்தர் மிஷன் மற்றும் இரட்சண்ணிய சேனை அமைப்புகள் ஜாதி அடிப்படையில் ஒரு பிரிவு L.M.S. காரர்களை கவர்ந்து கொண்டு சென்றன. தன்மானத்தையும் விடுதலையையும் விரும்பிய சாம்பவர் சமுதாயத்தவரில் பெரும் பகுதியினர் பிரிந்து சென்றனர். லுத்தர் மிஷன் பிரிவினை பற்றி அருள் திரு.J.V.திலகதாஸ் போதகர் அவர்கள் தன் M.Th. ஆய்வுக் கட்டுரையில் எழுதியதை ஈண்டு காண்போம்.

"Many Sambavar caste Christians left the London Mission Church and joined the Lutheran Church. When the leadership of the church slowly fell on the Indian Christians, only the Nadar caste christians could become the leaders and institutional heads. The Sambavar Christians did not like to be second class members in Nadar congregations. They were waiting for a chance to break away from the London Mission Church. The work of the Missouri Mission in South Travancore was strengthened after 1920. In February 1922 the General conference of the Missouri Mission

met at Nagercoil and started the work for a Seminary in Nagercoil. When the Missouri Mission Church was established in South Travancore, many Sambavar Christians left the London mission Church and joined the Lutheran Church. This affected the London Mission Church to a great extent.

இரட்சண்ணிய சேனைக்குப் பிரிந்து சென்ற L.M.S. கிறிஸ்தவர்களைப் பற்றி தலைமை சங்கத்தாருக்கு ஜூலை 1925-ல் நாகர்கோவில் மிஷன் மைய போதகர் ஜாண் M.கேசரி எழுதிய கடிதம். பாரீர்....

On the whole , I agree with Rev.G.Parker. But it is painful to see the work of a Missionary Society pulled down by another Society just to build up its own. We do not expect a Missionary Society to keep out of a part of a country where another is working. Such respectable conditions, as those between the L.M.S. and C.M.S. can exist only in memory. At present our desire and expectation are that when a Society is carrying on Christian work in a village according to the needs of the place another should not enter into that village and create complications, and appropriate the result of their work as if it were their own.

2. The havoc played among the London Mission Churches in the Nagerkoil Mission District will be plain to a certain extent from lists Nos. i, ii and iii that I am sending herewith, During the last 35 years the Salvation Army has appropriated-rather misappropriated 38 Sambavar Churches and more than 1500 London Mission Christians. Now the real struggle is going on in the 18 churches in list No.iii. I drop Tittuvilei from that list as they had taken all the Sambavars there almost at the beginning of their operations. Of the places given in list No.iv, they are occasionally attacking two places.

3. " During the last 35 years", said I in the last para. There seems to be little doubt about the time of their arrival in Travancore. Dr.Duthie publishes in his Tittuvilei Report that it

was in 1889 that the Salvation Army Officers first paid their visit to the Olivers. But according to the knowledge of some of our old Agents they were paying very occasional visits to this country in 1887 and 1888- more like the twelve of Moses. It was in 1889 that they began their activities in this country. I myself was present in some of those meetings. There is no room for any doubt that the 38 churches in lists Nos. i & ii were started and maintained by the London Mission Missionaries, at least some three decades before the arrival of the Salvation Army.

4. To hear that L.M.S. was in the early years almost entirely concerned with the Nadars is surprising. The L.M.S. was concerned with all castes in the beginning. Not only with Sambavars and Nadars but also with Vellalas and Chetties. They opened schools for the benefit of all these classes. From the lists appended it is evident-- that they had established more than 60 churches among Sambavars alone. Even now they have some 60 churches among Nadars in the Nagerkoil Mission District.

5. Almost all the members of the Mission Council seem to be convinced the S.A. will be persistent in its methods. When we place any one under discipline they will admit him at once. If there be split in a church, one party can have free access to the S.A. Hall.. If the local Treasurer of a L.M. church be not inclined to pay the money in this hands to the church, the S.A. doors will open as freely to him as those of a city of refuge in the days of yore. Quiet churches will be even offered new church or school buildings. We see the effect of these in our districts. Is it not time for us to consider and save our churches in the future? Some understanding with the S.A. seems absolutely necessary.

6. I may say a word about myself. I did not open this subject voluntarily nor did I speak any word to any member of the last Deputation before I was asked about it. When they sought for particulars I supplied them what they wanted according to their request. About marriage between the L.M. & S.A. people, even

when the Deputation met the Nagerkoil District Council, some of the Pastors wanted that system to cease. In spite of the advice given by them to the contrary, the matter was again and again brought to the council and resolution was passed against it. But when it was found that the resolution was not acceptable to some of those people it was cancelled by the District Council but very reluctantly indeed. In the opinion of the District Council to enter into marriage relationship, is a suicidal policy. To them the past seems to have furnished ample proof in support of this opinion.

7. In Father Beschi's days some Missionaries put on Brahmin clothes and worked among the high caste people and others clad in rags worked among the outcaste poor. But the L.M.Society is not so in God's purpose. It is a mission meant for all castes and races. Some of the people that are benefitted by it may have more energy and strength and others may be weaker. Some may have unjustifiable prejudices and others over sensitiveness. Does it follow, therefore, that they should belong to separate missions. If the London Mission in Travancore is to be only for Nadars it will rob the workers at once of a certain part of their interest in the work and of their vigour. Hence it is our duty to devise all methods possible to carry on the work successfully among all and not to give room for encroachments to others.

8. We should supply, our foreign Secretary with all facts necessary in order to help him to secure us a healthy condition here and to save our energy from this struggle for Gospel work among the poor and the well to do. This is not a matter that can be dropped. With the exception of one or two all feel the loss. Quilon feels it. Attingal is not free from trouble. In Trivandram this has been called " The soft job". Parachaley has its grievances. But no other place feels it keenly as Nagerkoil, as this District was the battle ground from 1889. I fully hope and pray that our Secretary's effort will be successful and there will be peace and good understanding between the Army and the L.M.Society in future and the past wrongs will be redressed.

L.M. Churches with schools taken away by the Salvation Army in the Nagerkoil Mission District.

Name of the Church	No. of Christians
1. Payodu	50
2. Vilayam	5
3. Gnalam	70
4. Ettamadi	20
5. Puliankulam	-
6. Veemanagari.	10
7. Thidal.	100
8. Mannadi.	25
9. Aladi.	30
10. Thiruppathisaram.	20
11. Nangandi.	10
12. Seethapal.	15
13. Theroor.	10
14. Nilathamarakulam.	70
15. Perumal puram.	-

N.B. These Churches were in existence sixty years ago

L.M. Churches without schools taken away by the Salvation Army in the Nagerkoil Mission District.

Name of the Church	No. of Christians
1. KandanKuzhi	20
2. Thellanthi	20
3. Pantikuzhi	10
4. Kadampadivilakam	15
5. Ulavadi	10

6. Thiradu.	40
7. Parakkai Kannankulam	15
8. Manthanamputhore.	30
9. Vellamadam Karayankuzhi.	20
10. Karinchankodu.	
11. Brahmanakonam.	9
12. Chettikonam.	13
13. Chempakaramenputhore.	35
14. Kattuputhore.	40
15. *Thittuvilei.	60
16. Preakulam.	15
17. Kalluvilei.	80
18. Atthiadicheri.	10
19. Parasseri.	25
20. Palkulam.	15
21. **Salakulam.	150
22. Elankadi	
23. Kaniarkulam.	10

** Thittuvilei was included in list No.III, my first list given at the request of some of the members of the last Deputation; but that is included in this list also, as all the Sambavars were taken away by the S.A. and their number is now found to be nearly 60.*

** This is comparatively a new church*

N.B. **These Churches were in existence 60 years ago.

அன்று அப்படி லுத்தர் மிஷன் என்றும் இரட்சணிய சேனை என்றும் சாம்பவர் கிறிஸ்தவர்கள் L.M.S. ஐ விட்டு பிரிந்து சென்றிருக்கா விட்டால் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயம் ஜாதி பிரச்சனையால் ஒரு

போர்களமாகத் திகழ்ந்திருக்கும். சமாதானமற்றதாக இருந்திருக்கும். எனவே அந்த இரு பிரிவினைகளும் நன்மையாகவே இருக்கின்றன. நாடார் ஆதிக்கம் செலுத்தும் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் வேறு ஜாதியினரும் உண்டு. பேராயத்தில் சட்டரீதியாக இந்த சிறுபான்மையினருக்கு சில பாதுகாப்புகள் தரப்பட்டுள்ளன. எனினும் சமாதானமின்மையை காண்கிறோம். சிறுபான்மையினருக்குரிய நியாயமான பங்கு கிடைக்கிறதா? அவர்களின் சுய மரியாதை பாதுகாக்கப் படுகிறதா? இந்த சிறுபான்மையினர் தந்த மனுக்கள் அவர்கள் திருப்தியாக இல்லை என்பதைக் காட்டுகிறது. பார்க்க.................

த – த் கிறிஸ்தவர்களின் கோரிக்கை :

"கன்னியாகுமரி சி.எஸ். ஐ. தலித் கிறிஸ்தவர் இயக்கம்" நாட்டுச் சட்டப்படி 1994-ஆம் ஆண்டு பதிவு பெற்றுள்ளது. இந்த இயக்கம், தலித் கிறிஸ்தவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி அவைகளை நிறைவு செய்ய, அன்றையப் பேராயர், உயர்மறை திரு. G. கிறிஸ்துதாஸ் அவர்களிடம், 31-7-1994 -தேதியிட்ட ஒரு மனு சமர்ப்பித்தது. இயக்கத்தின்வேண்டுதல்களுக்கு விடிவு கிடைக்காததால், 28-11-1998-ல் வடசேரி, P.S.திருமண மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தி 6 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. *அவையாவன :*

1. நமது குமரி C.S.I பேராயத்தில் தலித் கிறிஸ்தவர்களுக்கென்று வடசேரியைத் தலைமை இடமாகக் கொண்ட ஒரு தனிசேகரம் அமைத்துத் தந்து தலித் கிறிஸ்தவர்கள் பங்கு பெறும் வகையில் அனைத்துப் பேராய கமிட்டிகளிலும், காரிய நிர்வாகக் குழுவிலும் தலித்களுக்கென்று தனிஇடம் ஒதுக்கப்பட வேண்டுமென இத்தீர்மானத்தின் முலம் வேண்டிக் கொள்கிறோம்.

2. தலித் கிறிஸ்தவர்களின் கல்வி, சமூக வளர்ச்சிக்காக பேராயத்தின் மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்வதுடன், இத்திட்டங்களை நிறைவேற்றவும், மேற்பார்வை இடவும் பேராயர் தலைமையில் தலித் கிறிஸ்தவர்களைக் கொண்ட சிறுபான்மையினர் குழு ஒன்று ஏற்படுத்தவேண்டும்.

3. சிறுபான்மையினர் உரிமையைப் பெற்று அனுபவிக்கும் நமது ஸ்தாபனங்கள் சிறுபான்மை இன தலித் மக்களுக்கு பள்ளி, கல்லூரிகளில் சிறப்பு அனுமதிச் சலுகையும், வேலைவாய்ப்பு களில் ஒதுக்கீடும் 15 சதவீதமாக நிர்ணயித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

4. பி.டி. படிப்பிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது குறைந்த பட்சம் 10 சதவீதம் தலித் இனத்தவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

5. வேலூர் மருத்துவக்கல்லூரி சார்பில் நடத்தப்படும் மருத்துவப் பயிற்சிகளுக்கு ஸ்பான்சர்சிப் அளிப்பதில் தலித் கிறிஸ்தவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்

6. பேராயத்திலுள்ள பொறியியல் கல்லூரிக்கு முதற்கனியான மகாராசன் வேதமாணிக்கம் தேசிகர் பெயரைச் சூட்டி கௌரவிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது

கன்வீனர்

தலித் கிறிஸ்தவ இயக்கம்

(சமுதாய சிந்தனை, மேய் 1999)

மயிலாடி மெமராண்டம்

"சி.எஸ்.ஐ. கன்னியாகுமரி தலித் கிறிஸ்தவர் இயக்கம்" 31-7-1994-ல் பிஷப் G. கிறிஸ்து தாஸ் அவர்களிடம் அளித்த மயிலாடி மெமராண்டத்தில் கண்ட வேண்டுதல்கள்.

1. In our Diocese we want a District, exclusively for the Dalit Christians making any Dalit Church as its Head quarters.
2. Representation to every board of our Diocese including the Executive to Dalit Christians to each Board.
3. Appropriation of 25% of the income of the Kanyakumari Diocese - placed at the disposal of a minority Dalit Christians Board elected by its members for carrying out the welfare measures among the Dalit Christians
4. Reservation of 20% seats to the Dalit students in the institutions of our Diocese run under minority right.

5. Reservation of 20 % in the employment of all institutions run by the Diocese, maintaining a separate seniority list.
6. Priority of the Dalit students in B.D and other Theological studies in the Diocese.
7. Special Educational Scholarships available in our Diocese, and the Scholarship available in the Synod be provided to the deserving dalit students.
8. Sponsorship should be given to the Dalit students to Medical Courses, whereever possible.
9. 25% of the capitation fee only should be levied to the Dalit pupils who secure admission in our Diocese institutions. Such as Colleges, Polytechnics, Engineering, ITI, Nursing Course and Paramedical studies.
10. The Community Hall, under construction in our Diocese-be named after "Maharajan Vethamonickam" to perpetuate his memory.
11. Suitable amendments to be carried in our Constitution to accomodate the above demands.

General Secretary

மகராசன் என்ற ஒரு தலித்தின் செல்வத்தாலும், உழைப்பாலும் இன்று உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கும் குமரிப் பேராயம் மகராசன் இனத்தவர்களைப் புறகணித்து வைத்திருக்கின்றது என்ற குரலில், மேலும் அந்த மெமராண்டம் கூறுகிறது, இதற்குக் காரணம் தலித் அல்லாதவர்களால் இன்று பேராயம் நடத்தப்படுவதே!

The reason for this state of affairs is simple. Firstly the converts still continue to have Hindu mentality. Secondly the leadership in the Church is in the hands of Non-Dalits.

The people of Kanyakumari District received the "Vibuthi"- Christianity - thanks to dalit Mr. Maharajan Vethamonickam. He and his family offered their own land at Mylaudy to build the first church against much odds, laying foundation over which the Kanyakumari Diocese - what we see today in all its splendour stands, the spirituality

the toil and sweat of that poor Dalit is manifested in the wealth and health of this Diocese and it is there for all to see. The man who builds the house receives more honour than the house itself, but it is not so because Mr. Maharajan Vethamonickam happens to be a Dalit.

But the Dalits of Kanyakumari Diocese have become minority a fact of life because it is the result of demography. But what we regret is the condition of the Dalits in Kanyakumari remains what it is among the Hindu Dalits. The Dalit Christians are twice discriminated both by the political reservation / Welfare benefits. The Church Government remains indifferent to their cause.

குமரிப் பேராய தலித் கிறிஸ்தவர்கள் இன்றும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதற்கு இருகாரணங்கள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. ஒன்று, மதம் மாறியவர்கள் இன்றும் இந்து மனப்போக்கில் (ஜாதி பாகுபாடு) இருந்து மாறவே இல்லை. இரண்டு, குமரிப் பேராயம் தலித் அல்லாதவர் (நாடார்) களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. (மெமராண்டத்தில் காணப்படும் இந்த கணிப்புகளை எவரும் மறுப்பதற்கில்லை)

மகராசன் வேத மாணிக்கம் என்ற தலித் இடமிருந்து "விபூதி" பெற்றவர்கள் குமரிக் கிறிஸ்தவர்கள். அன்று மகராசனும் அவர் குடும்பமும் பல இன்னல்களுக்கு மத்தியில் முதல் சபையைக் கட்டி எழுப்ப மைலாடியில் தங்கள் சொந்த நிலத்தைத் தந்தனர். அதுவே, இன்று எழுந்து ஓங்கி நிற்கும் இந்த மனோகரமான பேராயத்துக்கு அடித்தளமாக அமைந்தது. அந்த ஏழை தலித்தின் பக்தி வைராக்கியத்திலும், உழைப்பிலும், வியர்வையிலும் உருவானதே இன்றைய பேராயத்தின் சொத்தும் சுகமும். வீட்டை விட வீட்டைக் கட்டினவனே அதிகமாகக் கனம் பண்ணப்படவேண்டியவன். ஆனால் மகராசன் வேத மாணிக்கத்தைப் பொறுத்த மட்டில் அப்படி இல்லை. காரணம் வேத மாணிக்கம் ஒரு தலித்.

(மெமராண்டத்தில் கண்ட இந்த கூற்றுக்களில் கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றத்திற்கு உடன் பாடில்லை. மறுத்து, அனேக தொடர் கட்டுரைகள் "சமுதாய சிந்தனை" பத்திரிகையிலும் வெளி வந்தன. திருச்சபை வரலாறு எழுதிய ஆசிரியர்களையும் கடுமையாக விமர்சித்து கட்டுரைகள் வெளியிடப்பட்டது. ஆனால். . . .)

திருச்சபை வரலாற்றை எழுதிய திரு. மகராசனின் கொள்ளுப்பேரன் திரு. C.M. ஆகூர் "குமரிக் கிறிஸ்தவமே மயிலாடி வேத மாணிக்கம், மயிலாடி வேத மாணிக்கமே குமரிக் கிறிஸ்தவம்" என்று பொருள்படும்படி கூறுகிறார். தொடர்ந்து, திருச்சபை வரலாற்றோடு தங்கள் குடும்பக் கதையையும் இடைச் சொருக முயன்ற வரலாற்றாசிரியர்களும் ஆகூரின் கனவுக் காட்சிகளை அப்படியே தந்துள்ளனர். பேராயத்தின் முத்திரை பெற்று திருச்சபை வரலாற்றை வெளியிட்ட இரு முனைவர்களும் ஆகூரின் கூற்றுக்களை மறு பதிப்பு (copy) செய்து புத்தகமாக வெளியிட்டு, பேராயத்தின் பிஞ்சு உள்ளங்களிலும் தவறான திருச்சபை வரலாற்றை பதிவு செய்து கொண்டிருக் கின்றனர். கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றம் எத்தனை திடமான ஆதாரங்களுடன் மறுத்தாலும் பேராயத்தின் முத்திரை பெற்ற வரலாறே ஒப்புக் கொள்ளப்படும். ஆகவே மெமராண்டத்தில் கண்ட இந்த கூற்றுக்களும் ஒப்புக் கொள்ள வேண்டியவைகளே. (ஆக ஒரு ஏழை தலித்தின் சொத்தை அபகரித்து தலித் அல்லாதவர்கள் அனுபவித்து வருகின்றனர் என்பது முடிவு. அபகரித்த சொத்தை வேதமாணிக்கத்தின் பின்காமிகளிடம் ஒப்படைப்பது தான் முறைமை மட்டுமல்ல கிறிஸ்தவமும் கூட)

காலம் செல்லச் செல்ல தலித்கள் குமரிப் பேராயத்தில் சிறு பான்மையினர் ஆகி விட்டனர். வருந்தத்தக்க நிலையாதெனில் இந்து தலித்களைப் போல் கிறிஸ்தவ தலித்களும் ஏழ்மை நிலையிலேயே உள்ளனர். தலித் கிறிஸ்தவர்கள் இந்து தலித்களைப் போலல்லாது இரு வழிகளிலும் வஞ்சிக்கப்படுகின்றனர். அரசியல் மற்றும் நலத் திட்டங்களில் ஒதுக்கீடுகள் தராமல் அரசு வஞ்சிக்கிறது. திருச்சபைத் தலைவர்களும் தலித்கிறிஸ்தவர்களின் கோரிக்கைகளுக்குப் பாராமுகமாக இருந்து விடுகின்றனர். (இந்தக் கூற்றையும் ஒப்புக் கொள்ள வேண்டியது தான். மறுப்பதற்கு முகாந்திரங்கள் இல்லை)

ஒருஅமைப்புத்தோன்றினால் அந்த அமைப்புக்கு ஒரு வளர்ச்சியும், அந்த வளர்ச்சிக்கு ஒரு உச்சகட்டமும் நிச்சயம் உண்டு. எதிலும் ஜாதி அடிப்படையிலும் மதத்தின் அடிப்படையிலும் எழும் அமைப்புகள் அணையாமல் என்றும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு

தான் இருக்கும். இந்த உண்மையை அறிந்து கொள்ள இயலாத குமரிப் பேராய தலித் அல்லாத அதிகாரவர்க்கம் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. தலித் கிறிஸ்தவ இயக்கத்தின் வலிமையை துச்சமாகத்தான் எண்ணும். ஆனால் இந்த அதிகார வர்க்கம் தலித் கிறிஸ்தவர்களின் கோரிக்கைகளுக்கு அடிபணியப் போவது நிச்சயம்.

தலித் சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களுக்கு இந்த சூழ்நிலையில் திறந்திருக்கும் ஒரு வழி, முன்னர் நடந்தது போல, தங்கள் இனத்தவர் பெரும்பான்மை பெற்றிருக்கும் இரட்சண்ய சேனை, லுத்தர் மிஷன் போன்ற கிறிஸ்தவப் பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்வது. இந்த வழியைத் திறந்து அங்கே சென்று அடைக்கலம் புக சாத்தியக் கூறுகள் இல்லை. இரண்டாவது வழி, வடக்கன்குளம், தர்மபுரி ஆகிய இடங்களில் மதம் மாறி இந்து குடும்பங்களோடு சேர்ந்தது போல குமரி சி.எஸ்.ஐ. தலித்களும் இந்துக்களாக மாறுவது. அப்படி செய்தால் அவர்களுக்கு அரசு சலுகைகள் கிடைக்கும். ஆனால் இந்த வழியையும் திறக்கமாட்டார்கள். காரணம் குமரிப் பேராய ஆதிக்க இனத்தவரிடமிருந்து தங்கள் உரிமைகளைப் பெற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இப்போது தலித் கிறிஸ்தவர்கள் காகிதப் போரட்டம் செய்து வருகிறார்கள். அடுத்த நடவடிக்கையாக தெருவில் இறங்கி கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவார்கள். அந்தப் போராட்டம் வலுப்பெறும் போது சினாட் தலையிடும். சினாட் தலித் கிறிஸ்தவர்களின் கையில் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். தலித் கோரிக்கைகளை நிறை வேற்ற சினாட் நெருக்குதல்களைத் தரும். பொருளாதாரத் தடைகள் வரலாம். வேறு வழியின்றி குமரி சி.எஸ்.ஐ. பேராயம் தலித் கிறிஸ்தவர்களின் எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றத்தான் போகிறது.

தலித்கள் பேராயத்திடம் பிச்சை கேட்கவில்லை.உரிமையை கேட்கிறார்கள். பரிதாபப்படவோ, விட்டுக் கொடுக்கவோ வேண்டியதில்லை. அவர்கள் உரிமையை பறிக்காதே என்றுதான் கூறுகிறார்கள். அவர்கள் இன்னும் அறிவிலிகளல்ல, யாசகமாகப் பெற. தங்களுக்கு உரிமைப் பட்டவைகளைத் தாங்களாகவே எடுத்துக் கொள்ளும் காலம் நெருங்குகிறது. இந்தக் காட்சியை பெரும்பான்மையினர் வெகு சீக்கிரம் காண்பார்கள்.

பேராயத்தின் மிக உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு, மிக உயர்ந்த ஊதியமும் சலுகைகளும் பெற்றுக்கொண்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி, கண்டகண்ட கட்டிடங்களிலும், கல்லூரிகளிலும் பெயர் பதித்து விட்டு வரலாற்று நாயகன் ஆகி விடப் பார்க்கிறோம். பதினேழு ஆண்டு இருண்ட காலத்துக்குச் சொந்தக்காரனாக இருந்ததைத் தவிர சமுதாயத்துக்குச் என்ன பங்களிப்பு இருந்தது? எனினும் தன் மனைவியின் பெயரை பொறியியல் கல்லூரி வளாகத்துக்குச் சூட்டினோம். "மகராசா! மகராசா!" என்று கத்தி முதலைக் கண்ணீர் வடிப்பவர்கள், "எல்லாம் மகராசனே எனக்கெல்லாம் மகாராசனே" என்று பாடுபவர்கள் ஏன் மகராசனின் மனைவி சத்தியாயின் பெயரை எஞ்சினியரிங் கல்லூரிக்குச் சூட்டக் கூடாது? பத்து இடத்தில் உங்கள் பெயரைச் சூட்டினால் அல்லது பெயரைக் கல்லில் கொத்திப் பதித்தால் ஒரு இடத்திலாவது ஒரு தலித்தின் பெயர் இடம் பெறச் செய்யலாமே. முதற்கனி, அடிமை விலங்கு உடைத்தவர், இன்றைய திருச்சபை அவர் இட்ட பிச்சை, பேராயர், பிரதம பேராயர் என்றெல்லாம் சொல்கிறோமே பாலிடெக்னிக்கின் பெயரை மகராசனின் மகள் பாக்கியாயிக்கு அற்பணம் செய்திருக்கலாமே.

இந்தியப் பிரதமராக ஒரு தலித் வர வேண்டும் என்று ஆசைப் படுகிறோம். குடியரசுத் தலைவர் வந்துவிட்டார். நமது பேராயத்தில் நான்கு நாடார் பிஷப்கள் ஆண்டு முடித்து விட்டார்கள் அல்லவா? ஏன் ஐந்தாவது பிஷப் ஒரு தலித் ஆக இருக்கக் கூடாது? சுற்று முறையில் இதைச் செய்து காட்டாமல், "யூதனென்றும் இல்லை, கிரேக்கனென்றும் இல்லை", "கொஞ்சம் விட்டுக் கொடுத்து" என்றெல்லாம் பேசுவது வெறும் படம். இதைத் தலித் கிறிஸ்தவர்கள் நன்றாகவே அறிவர். காரணம் வேதனையை அனுபவிப்பவர்கள் அவர்கள் தானே.

சமுதாய சிந்தனை, ஜுன் 1999

த – த் கிறிஸ்தவர்கள் தூங்கவில்லை :

11-06-1999 தேதியிட்டு குமரி தலித் சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களின் நலன் காக்கும் இயக்கமான "Dalit Christian Movement, குமரி சி.எஸ்.ஐ. பேராயருக்கு சமர்பித்த மனு பின் வருமாறு :

I do recall that in the month of January 1999, a team on behalf of our movement had the privilege of having an audience with the Bishop and submitted a memorandum, listing our 'demands that was in the resolution passed in one of our Conferences.

Hopefully believe that this memorandum is receiving your pro-active consideration, even though we remain in wait to receive the acknowledgement of this.

It is really a matter of pride that the Kanyakumari Diocese has grown in full to blossom.

1. Providing employment to more than 3500 people.
2. Running Educational Institutions both technical, medical and general.
3. Owning lot of properties including business complexes and also sponsoring missionary works outside the Diocese all these involving a budget running to crores.

Our Diocese engages itself in all these activities with full protection of 'minority right' guaranteed in the constitution.

Our Diocese has members from 'Sambavar' Dalit Community - a term used by the untouchables now notified by the government as scheduled caste for their identification.

It would not be out of context, when I say that members from the community are the pioneers and a member of the community Mr. Veda Manickam, 'Periya Ubadhesiar' is the first convert to Protestant Christianity - Protestant in South Travancore and they are the people who have had built the majestic edifice of the Diocese brick by brick with their suffering and sacrifice.

Our Kanyakumari Diocese - registered under company act - is enjoying the 'minority right', because they are Christians and so stand not qualified to these concessions - 'state protection' and specially structured welfare measures like 18% reservation in employment and in admission in the educational institutions run by the Government - and so on provided by the Government.

The wisdom of the government has devised these schemes to do justice to the Dalit because of the historical wrongs and injustice done to them in the past. Our Diocese is not without fault in doing justice to them.

I refrain going into the details of the 'status of Sambavar Dalit Christians' in the Diocese and because it would be a list of 'accusation' and would prefer to remain making a statement that the Dalit, in the Diocese are treated as 'the least' - 'the last' and 'the lost'.

தென்திருவிதாங்கூர் எல்.எம்.எஸ். சபைகள் மீது ஒரு எழுதப்பட்ட சட்டத் தொகுப்பு ஏற்படுத்தப்பட்ட முதல் நிகழ்ச்சி 1849 - ஆம் ஆண்டில் நடைபெற்றது. அப்போது பாறச்சாலை சேகரத்தின் மிஷனரிப் பொறுப்பாளராக இருந்த ஜாண் ஆப்ஸ் ஐயர் தனது சேகரத்தில் பணிபுரிந்த ஊழியர்களையும் கிறிஸ்தவர்களையும் கட்டுப்படுத்தும் 184 விதிகளை ஏற்படுத்தி அவற்றை ஒரு சிற்றேடாக அச்சிட்டு தனது சேகரத்தில் இருந்த அனைத்து சபைகளுக்கும் விநியோகித்தார். திருவிதாங்கூரின் எல்.எம்.எஸ். கிறிஸ்தவர்கள் மீது மிஷனரிகள் ஏற்படுத்திய முதல் சட்டத் தொகுப்பு இதுவே. ஆனால் அவ்விதிகளில் எதுவுமே சபை நிர்வாக முறைபற்றியதோ, ஆராதனை ஒழுங்கு முறைபற்றியதோ அல்ல, அவை முழுக்க முழுக்க கிறிஸ்தவர்களும் மிஷன் ஊழியர்களும் கடைபிடிக்க வேண்டிய சன்மார்க்கம் மற்றும் ஒழுக்க நெறிகள் பற்றியனவே. எனவே அவற்றை எல். எம். எஸ். சபைகளைக் கட்டுப்படுத்திய ஒரு அமைப்புச் சட்டம் (Constitution) எனக் கருதமுடியாது. மேலும் அவை தென்திருவிதாங்கூர் திருச் சபைகள் அனைத்திற்கும் உரியன அல்ல, அவை பாறச்சாலை சேகர வரம்பிற்கு மட்டுமே உரியன.[20]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்திருவிதாங்கூரில் புராட்டஸ்டான்ட் கிறிஸ்தவம் நன்முறையில் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. 1818 -ல் வெறும் ஏழுசபைகளைக் கொண்டிருந்த இம்மிஷனில் 1851 -ல் 148 சபைகள் அமைந்திருந்தன.[21] இங்ஙனம் இப்பகுதியின் ஒடுக்கப்பட்ட மக்களிடையே கிறிஸ்தவம் உறுதிப்பட்டது. அம்மக்கள் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் பெரும் முன்னேற்றங்களை அடைய வழி ஏற்படுத்தியது. 1857-59 -ல் நடைபெற்ற மூன்றாம் மேலாடைக் கலவரங்கள் அம்மக்கள் அடைந்திருந்த சமூக விழிப்புணர்ச்சியின் ஒரு தெளிவான வெளிப்பாடே. மிஷனரிகள் கிறிஸ்தவர்களுக்கு பொதுக்கல்வியும் தொழிற் கல்வியும்

அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கினர். விளைவு, கிறிஸ்தவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடையத் தொடங்கி, நற்செய்திப் பணியாளர்களாகவும், போதகர்களாகவும் ஆசிரியர்களாகவும், எஸ்டேட் உரிமையாளர்களாகவும் மிளிர்ந்தனர். அவர்களின் இம்முன்னேற்றம் அவர்கள் தங்கள் ஆலயங்களுக்குப் படைத்துவந்த காணிக்கைகளின் அளவிலும் வெளிப்பட்டது. 1861 -ல் தென்திருவிதாங்கூர் எல். எம். எஸ். கிறிஸ்தவர்கள் தங்கள் ஆலயங்களுக்குப் படைத்த காணிக்கைகளின் மதிப்பு ரூபாய் 3,622.[22] அடுத்த பத்தாண்டுகளில் இது 12,047 ரூபாயாக உயர்ந்திருந்தது[23]. 1890 -ல் அது ரூபாய் 15,441 ஆக உயர்ந்தது.[24]

மேற்கூறிய பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் மிஷனரிகள் அரவணைப்பிலும் வழிகாட்டுதலிலும் இருந்த தென்திருவிதாங்கூர் சபைகளைச் சுதந்தரமான தன்னாட்சி காங்கிரிகேஷனல் சபைகளாக நிலை நிறுத்துவதற்கான பணிகளை மிஷனரிகள் தொடங்கினர். அதற்கு முன்னோடியாக 1860 -ல் நாகர்கோவில் சபையும்[25] 1865-ல் நெய்யூர் சபையும்[26] மிஷனின் நிதியுதவி எதுவும் பெறாமல் தங்கள் சபை ஊழியர்களை நியமித்து அவர்களுக்கான ஊதியத்தையும் வழங்கி நிர்வாகம் முழுமையும் ஏற்றுக் கொள்ளத் தீர்மானம் இயற்றின. தொடர்ந்து அவ்விரு சபைகளும் 1866-ல் பாஸ்டரேட் (Pastorate) என்னும் தன்னாட்சி சபைகளாக நிலைப்படுத்தப்பட்டன. தங்களுக்கான பாஸ்டர்களை அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்குரிய ஊதியத்தை வழங்கவும் அச்சபைகள் அதிகாரம் பெற்றிருந்தன. அதன்படி நாகர்கோவில் சபையார் கூடி தங்கள் சபையில் அப்போது சுவிசேஷகராகப் பணிபுரிந்து கொண்டிருந்த நீலகண்டன் தேவதாசன் என்பவரை தங்கள் தன்னாட்சி சபையின் முதல் பாஸ்டராக "ஒருமனதோடே தெரிந்து கொண்டார்கள்".[27] நெய்யூர் சபைக்கும் அதன் சுவிசேஷகராகப் பணிபுரிந்து கொண்டிருந்த சாமுவேல் சகரியா என்பவரைப் போதகராக அமர்த்த அம்மையத்தின் மிஷனரி பிரடரிக் பேலிஸ் முன்வைத்த பிரேரணைக்கு சபையார் 'ஒப்புதல் அளித்தனர்.[28] மேற்கூறிய முக்கிய நிகழ்ச்சிகளில் அவ்விரு தன்னாட்சி சபைகளும் தங்களுக்கான பாஸ்டரை நியமித்துக் கொள்வதற்கான உரிமையை அச்சபைகளே கொண்டிருந்தன என்பது கவனிக்கத்தக்கது. 1867 -ஆம் ஆண்டு

முதற்கொண்டு சபைகளில் டீக்கன்மார் தேர்வு செய்யப்பட்டு சபைகளின் செயற்குழுவாக அது செயல்பட்டது.[29] இங்ஙனம் சபையாரால் தேர்வு செய்யப்பட்ட செயற்குழுவிற்கும், சபையின் பொதுக் குழுவிற்கும் பாஸ்டர் எப்போதுமே தலைவராக அமர்த்தப்படவில்லை. சபையாரால் பாஸ்டராக பணியமர்த்தப்படும் ஒருவர் எங்ஙனம் அதன் தலைவராக அல்லது எஜமானாக இருந்திருக்க முடியும்? எனவே சபை தொடர்பான அனைத்து அமைப்பு விதிகளிலும் அவர் ஆசனாபதி (Chairman) என்றே அழைக்கப்பட்டார்.[30] அவர் சபைக் கூட்டத்தையும் சபைச் செயற் குழுவையும் முன்னின்று நடத்திய பணியாளரேயன்றி அதன் தலைவர் அல்ல என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இந்நிலையில் 1874 - ஆம் ஆண்டு அனைத்து தன்னாட்சி சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், போதகாபிஷேகம் பெற்றிருந்த பாஸ்டர்களும் அடங்கிய திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் (The Travancore Church Council) என்னும் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. தனித்தனி தன்னாட்சி சபைகளாகச் செயல்பட்டு வந்த திருவிதாங்கூரின் எல். எம். எஸ். சபைகளை ஒன்றோடொன்று ஒற்றுமை கொண்டவையாக செயல்பட வைக்க மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இதுவே. ஆயினும், "சுவிசேஷ பிரபல்யத்திற்கும் கர்த்தருடைய வேலை ஒற்றுமையாக நடப்பதற்கும் ஏதுவான விஷயங்களை ஆலோசிப்பதும்", "இந்நாட்டு சபையார் தாங்களே தங்களை நடத்திக்கொள்ள பழக்கப்படுத்துவதுமே" அதன் நோக்கமாய் இருந்தது.[31] தனித்தனி சபைகளை ஆட்சி செய்யும் ஒரு உயர் மன்றமாக அது இருக்கவில்லை. சபைகள், குறிப்பாக பாஸ்டரேட்டுக்கள் முன்போலவே தன்னாட்சி சபைகளாகவே செயல்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் லண்டன் மிஷனரிச் சங்கம் பெரும் நிதி நெருக்கடிகளைச் சந்தித்தது.[32] எனவே அதன் தலைமை தென் திருவிதாங்கூரின் சபைகளை தன்னாட்சி சபைகளாக நிலைநிறுத்த மேற்கொண்ட முயற்சிகளை விட அவற்றை சுய ஆதரிப்பு சபைகளாக நிலை நிறுத்தவே முன்னுரிமை அளிக்கத் தொடங்கியது. சுய ஆதரிப்பு சபைகள் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இருந்ததால் அனைத்து சபைகளையும் ஒரு பொதுவான

மன்றத்தில் இணைத்து அவைகள் ஒன்றையொன்று தாங்கிக் கொள்ளும் வழி முறை ஒன்றை ஏற்படுத்தினர். அதுதான் 'பாஸ்டரேட் வட்டம்' (Pastorate Circle) என்னும்முறை. இதன்படி ஒவ்வொரு சுய ஆதரிப்பு பாஸ்டரேட்டின் கீழும் அருகிலுள்ள சுய ஆதரிப்பு சக்தியற்ற சிறு சபைகள் தொடர்புபடுத்தப்பட்டு அவை பாஸ்டரேட் வட்டங்களாக அமைக்கப்பட்டன.[33] பாஸ்டரேட் வட்டத்திற்குள் அடங்கிய சிறுசபைகள் கிளைச் சபைகள் என அறியப்பட்டன. அக்கிளைச் சபைகள் பாஸ்டரேட்டின் ஆதரவில் வந்ததால், அவற்றை ஆதரிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து ட்டி.டி.சி. ஓரளவிற்குத் தனது நிதிச்சுமையைக் குறைத்துக் கொண்டது. இதனால் எல். எம். எஸ். -ன் நிதிச்சுமையும் சற்று குறைந்தது. ஆனால் தென்திருவிதாங்கூரின் திருச்சபை வரலாற்றில் முதன் முதலாய் சிறிய சபைகள் பாஸ்டரேட் என்னும் சுய ஆதரிப்புச் சபைகளுக்குக் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலையை மேற்கண்ட நிகழ்ச்சி ஏற்படுத்தியது.

தொடர்ந்து பாஸ்டரேட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்து 1906 -ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை 17 ஆகியது. அவற்றுள் ஆறு சிறிய சபைகளும் இருந்தன. பல சபைகளில் ஒரே பாஸ்டர் தொடர்ந்து பல வருடங்கள் பணிபுரிந்தார். எடுத்துக்காட்டாக சாமுவேல் சகரியா ஐயர் நெய்யூர் பாஸ்டரேட்டில் 39 ஆண்டுகள் பணிபுரிந்தார். யோசுவா ஐயர் நாகர்கோவில் பாஸ்டரேட்டில் 22 ஆண்டுகள் பணிபுரிந்தார்.[34] இதனால் பல சபைகளில் பாஸ்டர்களுக்கும் சபையாருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.[35] இது போன்ற காரணங்களால் பாஸ்டர்களை நியமித்து, பணியமர்த்துவது, இடமாற்றம் செய்வது, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது போன்றவை தொடர்பான பல பிரச்சனைகள் மிஷனரிகளின் ட்டி.டி.சி. முன்னர் வந்தன. ஆனால் அவற்றை தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் பெற்ற எந்தவொரு அமைப்பும் அப்போது தென் திருவிதாங்கூர் சபைகளிடையே இல்லை.

மேற்கூறிய பிரச்சனைகளுக்குத் தீர்வு ஏற்படுத்த 1904 - ஆம் வருடம் ட்டி.டி.சி கூடி தென்திருவிதாங்கூர் சபை ஒன்றியம் (The South Travancore Church Union) என்னும் பாஸ்டரேட் சபைகளின் பிரதிநிதித்துவ அமைப்பை ஏற்படுத்தியது. இதில் பாஸ்டரேட் சபைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருந்ததால் அது

பாஸ்டரேட் ஒன்றியம் (Pastorate Union) என்னும் பெயராலும் அறியப்பட்டு வந்தது. பாஸ்டரேட் வட்டத்திற்குள் வராத சபைகள் தொடர்ந்து ட்டி. டி. சி-யின் கண்காணிப்பில் சுய ஆட்சி சபைகளாகவே இருந்தன. "திருவிதாங்கூர் மிஷனைச் சேர்ந்த எல்லா பாஸ்டரேட்களும் போதகர் நியமனம், மாற்றம், சிட்சை முதலிய விஷயங்களில் சேர்ந்து உழைக்க வேண்டும்" என்பது மட்டுமே மேற்கூறிய பாஸ்டரேட் ஒன்றியத்தின் நோக்கமாய் இருந்தது[36]. இம்மன்றம் பாஸ்டரேட் சபைகளின் இதர நிர்வாக காரியங்களைக் கட்டுப்படுத்தவில்லையெனினும், பாஸ்டர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை போன்ற அதிகாரங்களை பாஸ்டரேட் சபைகளிடமிருந்து பறித்து அவற்றை தன் வசமாக்கிக் கொண்டது. தென்திருவிதாங்கூர் திருச்சபைகளின் வரலாற்றில் பாஸ்டர்கள் தங்களுக்கு ஊதியம் வழங்கும் சபையாருக்குக் கட்டுப்படாமல் தன்னிச்சையாக நடந்து கொள்ளக் காரணமான சம்பவங்கள் ஏற்பட இந்நிகழ்ச்சியே தொடக்கமாக அமைந்தது. மேலும் இவ்வதிகாரமாற்றம் தென்திருவிதாங்கூர் திருச்சபையை காங்கிரிகேஷனல் பாதை யினின்று திருப்பி பிரிஸ்பிட்டேரியன் பாதைக்கு நேராக வழி நடத்தியது. ஆயினும் "அந்தந்தச் சபைக்கு அல்லது சபைகளுக்குத் தாங்கள் ஆசிக்கிற பாஸ்டர் அல்லது போதகர் இன்னாரென்று சொல்லுகிற கிறிஸ்தவ சுயாதீனம் உண்டு" என்னும் அழுத்தமான காங்கிரிகேஷனல் கோட்பாட்டை திருவிதாங்கூர் சபை ஒன்றியத்தின் அமைப்புச் சட்டம் அங்கீகரித்தது. எனவே நடைமுறையில் ஒரு சபையில் ஒரு பாஸ்டரை நியமிக்கும் முன்னர் அச்சபை பொதுக் குழுவிடமிருந்து அவருக்கான அழைப்பை பாஸ்டரேட் ஒன்றியம் பெற்ற பின்னரே அவரை அச்சபைக்கான பாஸ்டராக அது நியமித்து வந்தது.[37]

தென்திருவிதாங்கூர் திருச்சபை இக்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்த இதர ஒத்தக்கருத்துடைய சபைப்பிரிவுகளுடனும் தொடர்பை வளர்த்துக் கொண்டது. அதன் விளைவாக 1905 - ஆம் ஆண்டில் தென்னிந்தியாவில் இருந்த எல்.எம்.எஸ்., அமெரிக்கன் மதுரை மிஷன் மற்றும் அமெரிக்கன் யாழ்ப்பாணம் மிஷன் ஆகிய மூன்று காங்கிரிகேஷனல் பிரிவு மிஷன்களைச் சேர்ந்த சபைகள்

தொடர்புபடுத்தப்பட்டு" தென்னிந்திய ஐக்கிய திருச்சபைகளின் பொதுக் கூட்டமைப்பு" (General Union of the United Churches of South India) என்னும் அமைப்பு உருவாக்கப் ˙பட்டது.[38] தொடர்ந்து, 1904 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருந்த 'இந்திய பிரிஸ்பிட்டேரியன் திருச்சபை' யின் தென்னிந்திய பிரிவிற்கும், மேற்கூறிய தென்னிந்திய ஐக்கிய திருச்சபைகளின் பொதுக்கூட்டமைப்பிற்கும் இடையே கருத்தொற்றுமைகள் காணப்பட்டு அவை இரண்டும் 1908 -ஆம் ஆண்டில் 'தென்னிந்திய ஐக்கிய திருச்சபை (South India United Church - S.I.U.C.) என்னும் பெயரில் இணைந்து செயல்பட்டன.[39] அப்போது தென் திருவிதாங்கூர் திருச்சபை ஒன்றியம் தனது பெயரை திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் (The Travancore Church Council) எனமாற்றி அமைத்துக்கொண்டு எஸ்.ஐ.யூ.சி. -யில் அங்கமாயிற்று.[40] அதன் காரணமாக 1874 -முதல் கூடத்தொடங்கிய பழைய திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் தானாகவே மறைந்து போயிற்று. புதிய சபாலோசனைச் சங்கமாகச் செயல்படத் தொடங்கிய திருவிதாங்கூர் திருச்சபை ஒன்றியத்தில் தொடர்ந்து பாஸ்டரேட் சபைகள் மட்டுமே பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. பாஸ்டரேட் அல்லாத சபைகளும் திருச்சபை நிறுவனங்களும் தொடர்ந்து ட்டி.டி.சி. மேற் பார்வையிலேயே சுதந்திரமான சபைகளாய் செயல்பட்டு வந்தன.[41]

1920 - ஆம் வருடத்தில் திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கத்தின் அமைப்பு முறையில் பெரும் மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டு, அது அனைத்து பாஸ்டரேட் மற்றும் பாஸ்டரேட் அல்லாத சுமார் 411 எல்.எம்.எஸ். சபைகளின் பிரதிநிதித்துவ அமைப்பாக உருப்பெற்றது. அப்போது இம்மன்றத்தின் நிர்வாகத்தின்கீழ் திருச்சபையின் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளும் கொண்டுவரப்பட்டன.[42] அனைத்து மிஷனரிகளையும், சபாலோசனைச் சங்கத்தால் தெரிந்து கொள்ளப்பட்ட சில இந்திய பிரதிநிதிகளையும் உள்ளடக்கி புதிதாகத் தொடங்கப்பட்ட மிஷன் கவுன்சில் (Mission Council) உயர்கல்வி நிறுவனங்களையும், தொழிற்கூடங்களையும், மருத்துவ மிஷனையும் நிர்வகித்தது. ட்டி.டி.சி. இது முதல் நின்று போயிற்று[43]. 1920-ஆம் வருடத்திய சபை அமைப்புச் சட்டம் 1928, 1939 ஆகிய ஆண்டுகளில் மாற்றி அமைப்பட்டது. ஆனால் அம்மாற்றங்கள் சபாலோசனைச்

சங்கத்தின் மேல்மட்ட விஷயங்கள் பற்றியனவேயன்றி தனித்தனித் திருச்சபைகளின் உள்விவகாரங்களில் அவை பெரிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. இவ்வமைப்பு முறை 1947-ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

1920 முதல் 1947 வரை நடைமுறையில் இருந்த தென்திருவிதாங்கூர் திருச்சபை அமைப்புச்சட்டங்களில் காங்கிரிகேஷனல் கோட்பாட்டிற்கெதிரான சில அம்சங்கள் இருந்தன என்பது உண்மையே. அச்சட்டங்களின்படி அனைத்துத் திருச்சபைகளும் ஒரு பொதுவான ஆட்சிமன்றமான திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் என்னும் அமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டிருந்தது ஒரு தெளிவான பிரிஸ்பிட்டேரியன் முறையே ஆகும். மேலும் அனைத்துச் சபாலோசனைச் சங்கங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த எஸ்.ஐ.யூ.சி -யின் பொது மன்றமும் (General Assembly of the S.I.U.C.) திருவிதாங்கூர் சபைகளின் உயர்மட்ட அமைப்பாய்க் கருதப்பட்டதால், அக்கண்ணோட்டத்திலும் திருவிதாங்கூர் திருச்சபை நிர்வாகமுறை பிரிஸ்பிட்டேரியன் சார்புடையதே. ஆயினும், எஸ்.ஐ.யூ.சி-யின் உயர் மன்றம் "General Assembly" என்னும் காங்கிரிகேஷனல் சொல்லாலேயே அழைக்கப்பட்டது[44].

இக்கால கட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு பிரிஸ்பிட்டரியன் முறை சபைகள் மீது விதிக்கப்பட்ட 'அசஸ்மெண்டு' முறை ஆகும்[45]. 1920-ஆம் வருடச்சட்டத்தில் முதல் முறையாக சபைகள் தங்கள் வருவாயில் ஒரு விழுக்காட்டை சபாலோசனைச் சங்கத்திற்கு லெவியாகச் செலுத்தவேண்டும் என்னும் விதிபுகுத்தப் பட்டது. பின்னர் இது மூன்று விழுக்காடாக உயர்த்தப்பட்டது[46]. இதுவும் தன்னாட்சி சபைகளின் மேல் சபாலோசனைச் சங்கம் கொண்டிருந்த ஒரு மேலாதிக்க அடையாளமே.

ஆனால் சபாலோசனைச் சங்கம் கொண்டிருந்த மேற்கூறிய அதிகாரங்கள் சபைகளின் தன்னாட்சி உரிமைகளைப் பெரிய அளவில் பாதிக்கவில்லை என்றே கூறவேண்டும். பாஸ்டர்களை சபாலோசனைச் சங்கமே பணியமர்த்தி வந்ததெனினும், சபைகள் தங்களுக்கு இசைவான போதகர் யார் என்பதனைத் தீர்மானித்து அவர்களை அழைத்துக் கொள்ளும் காங்கிரிகேஷனல் உரிமை 1920-ஆம் வருடச்

சட்டத்திலும்[47], 1928-ஆம் வருடச் சட்டத்திலும்[48], 1939-ஆம் வருடச் சட்டத்திலும்[49] அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி தன்னாட்சி பாஸ்டரேட்டு சபைகளின் பொதுக்குழு கூடி தங்களுக்கு ஏற்புடைய பாஸ்டருக்கான அழைப்பை விடுத்த பின்னரே அப்பாஸ்டரை அச்சபைக்குப் போதகராக சபாலோசனைச் சங்கத்தின் மினிஸ்டீரியல் கமிட்டி பணியமர்த்தி வந்தது. அதுபோல பாஸ்டர்களின் ஊழியங்கள் திருப்திகரமாக இல்லாத வேளையில் அவர்களைத் தங்கள் சபையினின்று திரும்ப அழைத்துக் கொள்ள சபைக்குழுக்கள் விடுத்துவந்த கோரிக்கைகளையும் சபாலோசனைச் சங்கமும் அதன் நிலைக் குழுக்களும் உரியவாறு கவனித்தே வந்தன. அக்கால சபாலோசனைச் சங்க அறிக்கைகளைப் பார்வையிடும் போது இது தெளிவாகிறது.

இக்கால ஆலய ஆராதனைகளும் காங்கிரிகேஷனல் ஒழுங்கின்படியே தான் நடத்தப்பட்டன. பாஸ்டர்கள் சாதாரண மக்களைப் போன்று வேட்டி, சட்டை, அணிந்தோ, பேண்ட் மற்றும் கோட் அணிந்து கொண்டோ தான் ஆராதனைகளைத் தலைமை தாங்கி நடத்தினர்[50]. அக்காலங்களில் கட்டப்பட்ட எந்த ஆலயத்திலும் ஆல்ட்டர் என்னும் பலிபீடம் அமைக்கப்படவில்லை. ஆலயங்களில் நற்செய்தி அறிவித்தலே முக்கிய பணி என்பதன் அடையாளமாக புல்பிட் (Pulpit) களே நடுநாயகமாக அமைக்கப்பட்டன. அக்காலங்களில் கட்டப்பட்ட ஆலயங்களில் எதிலும் ஆங்கிளிக்கன் தோற்றம் கொண்ட ஊசிக்கோபுரங்களைப் பார்க்க முடியாது. கடமலைக்குன்று, கிறிஸ்து கோயில், மார்த்தாண்டம் போன்ற ஆலயக் கோபுரங்கள் இன்றும் அதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

இக்காலங்களில் அனைத்து சபைகளும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய பொதுவான ஆராதனை ஒழுங்கு ஒன்று சபைகள் மீது திணிக்கப்படவில்லை. குறிப்பாக அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம், நிசேயா விசுவாசப் பிரமாணம் போன்ற எந்த விசுவாசப் பிரமாணமும் சபைகளுக்கு கட்டாயமாக்கப் படவில்லை. ஞானஸ்நானம், திருவிருந்து, போதகாபிஷேகம் போன்ற முக்கிய ஆராதனைகளின் போது கூட எந்தவொரு குறிப்பிட்ட ஆராதனை ஒழுங்கோ, விசுவாசப் பிரமாணமோ கட்டாயமாக்கப்படவில்லை. சபையார் இயேசு கிறிஸ்துவின்

மேல் கொண்டிருந்த நம்பிக்கையை மட்டுமே அறிக்கையிட்டு வந்தார்கள்[51]. காங்கிரிகேஷனல் ஒழுங்கின்படி போதகர்கள் ஆலய ஆராதனைகளை சந்தர்ப்பத்திற்கு இசைந்தாற்போல் அமைத்துக் கொண்டார்கள். இக்காலத்தில் வெளியிடப்பட்ட சில ஆராதனைக் கையேடுகள் திருவிதாங்கூர் சபை ஊழியர்களால் பின்பற்றப்பட்டன என்பது உண்மையே. அவற்றில் சில பின்வருமாறு :

1. சிறுவர்கள் ஆராதனை நூல், டாஸ் பிறஸ், நாகர்கோவில் (1926)
2. தேவாலய ஆராதனை முறை, (n.d.)
3. தேவாலய ஆராதனை, C.L.S., Madras (1928).
4. ஓய்வுநாள் ஆராதனை ஒழுங்கு, L.M.S. Press, நாகர்கோவில் (1942)
5. ஜாண் எம். கேசரி, தேவ ஆராதனை முறை, L.M.S. Press, Nagercoil, (1926)
6. தென்னிந்திய ஐக்கிய சபை, திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம், ஆரம்ப ஆராதனைக்கான ஜெபங்களும் கீதங்களும், B.V. Printing Works, Trivandrum (1926)

இவற்றில் கடைசியாகக் குறிப்பிடப் பட்டுள்ள நூல் மட்டுமே திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்க வெளியீடு; மற்ற அனைத்தும் தனி மனிதர்கள் அல்லது ஊழியர்களின் முயற்சியே. கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள நூல் உட்பட எந்த ஆராதனை ஒழுங்கும் திருச்சபைகளைக் கட்டுப்படுத்துவனவாக அறிவிக்கப்படவில்லை. மேற்கூறிய உண்மைகளிலிருந்து 1920 முதல் 1947 வரை தென்திருவிதாங்கூர் சபைகளில் நிலவிவந்த நிர்வாக மற்றும் ஆராதனை முறைகளில் ஒரு சில பிரிஸ்பிட்டேரியன் அம்சங்கள் கலந்திருந்தனவெனினும், காங்கிரிகேஷனல் முறையே அவற்றில் மேலோங்கி நின்றன என்பது தெளிவு.

ஆனால் 1947-ல் தென்னிந்திய திருச்சபை (சி.எஸ்.ஐ.) என்னும் அமைப்பில் தென்திருவிதாங்கூர் எல்.எம்.எஸ் சபைகள் இணைந்ததன் மூலம் அவை பாரம்பரியமாகக் கொண்டிருந்த தன்னாட்சி உரிமைகளையும் காங்கிரிகேஷனல் கோட்பாடுகளையும் முற்றிலுமாக இழந்து பேராயர் ஆட்சி முறைக்கும் குருத்துவ மேலாதிக்கத்திற்கும் அடிமைப்படத் தொடங்கின. சி.எஸ்.ஐ.

அமைக்கப்படுவதற்கான சபை ஐக்கிய பேச்சுவார்த்தைகள் 1919-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் தொடங்கியது. இத்தொடக்கக் கூட்டத்தில் வெஸ்லியன் மெதடிஸ்டு, லூதரன், எஸ்.ஐ.யூ.சி., மற்றும் ஆங்கிளிக்கன் ஆகிய சபைப் பிரதிநிதிகள் அதிகாரமற்ற முறையில் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட தோர்ணக்கல் ஆங்கிளிக்கன் பேராயர் வி.எஸ். அசரியா சபை ஒருமைப்பாட்டிற்கான அடிப்படை, பேராயர் ஆட்சிமுறையே என தெளிவுபடுத்தினர். இதனை ஏற்க மறுத்த லூதரன் சபையினர் கூட்டத்தை விட்டு வெளியேறிவிட்டனர். வெஸ்லியன்மெதடிஸ்ட் பிரிவினர் எந்த முடிவையும் அறிவிக்கும் நிலையில் அப்போது இருக்கவில்லை. ஆனால் எஸ்.ஐ.யூ.சி. பிரதிநிதிகள் பேராயராளுகையை ஏற்றுக் கொள்ளும் மனநிலையையே வெளிப்படுத்தினர்[52].

பேராயராளுகை முறையை பிறசபைகள் மீது திணிக்க ஆங்கிளிக்கன் பிரதிநிதிகள் தொடக்ககால பேச்சு வார்த்தைகளின் போது கண்டுபிடித்து வெளியிட்ட ஒரு சூழ்ச்சிவலை 'சட்டத்திற்குட்பட்ட பேராயர் ஆட்சிமுறை' (Constitutional Episcopacy) என்பதாகும்[53]. இவ்வலையில் மெதடிஸ்டுகளும், எஸ்.ஐ.யூ.சி. சபையினரும் அகப்பட்டதும் அவர்கள் தங்கள் திட்டத்தை 'சட்டத்திற்குட்பட்ட வரலாற்று பூர்வ பேராயராளுகை முறை' (Historic Episcopacy in Constitutional Form) எனத்திருத்தம் செய்து கொண்டனர்[54]. 1947 வரை நடைபெற்ற இதற்கான பேச்சுவார்த்தைகளின் போது காங்கிரிகேஷனல் சபைக் கோட்பாடுகளான 'சபை ஆட்சிமுறை', 'அனைத்து விசுவாசிகளின் குருத்துவம்', லே மனிதர்கள் திருவிருந்து பரிமாறும் கோட்பாடு, போன்றவை ஒன்றன் பின் ஒன்றாக ஆங்கிளிக்கன் பலிபீடத்தில் (Anglican Alter) பலியிடப்பட்டு பேராயர் ஆட்சிமுறை என்னும் அக்கினியில் தகனிக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக் கட்டத்தில் காங்கிரிகேஷனல் கோட்பாடுகளில் மிக உறுதியாக இருந்த H.C. லெப்பீவர், H.V. மார்ட்டின் போன்ற மிஷனரி இறையியல் மேதைகள் கூட பிற்பாடு தங்கள் நிலைப்பாடுகளில் சமரசம் காண்பிக்கத் தொடங்கினர். இங்ஙனம் மிஷனரிகள் தரப்பில் சமரசப்போக்குக் கடைபிடிக்கப் பட்டதற்குக் காரணம், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளின்

மிஷனரித் தலைமைகள் தாங்கள் தென்னிந்தியாவெங்கும் ஸ்தாபித்திருந்த சபைகளை ஒன்றிணைக்கும் கருத்தைக் கொண்டிருந்ததே ஆகும். இந்நோக்கத்திற்கு முன்னுரிமை அளித்த அவர்கள் தத்தம் இறையியல் கோட்பாடுகளைக் கூட தியாகம் செய்ய தயார் ஆகிவிட்டார்கள். இவ்வணுகுமுறைக்கு அவர்கள் வருவதற்கான உண்மைக்காரணம், இந்தியா தன்னாட்சியை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த அந்நாட்களில் காங்கிரசும்,காந்தியாரும் மிஷனரி நடவடிக்கைகளுக்கு எதிராக வெளிப்படையாகவே பகைமை பாராட்டி வந்ததாகும். 1946-47-ஆம் ஆண்டுகளில் இந்தியத் திருச்சபைகளைப் பார்வையிட்ட லண்டன் மிஷனரிச் சங்க நிர்வாகி லியோனார்டு ஹார்ஸ்டு இவ்வாறு அறிக்கை சமர்ப்பித்தார்.

'கிறிஸ்தவ மிஷன்களுக்கும் திருச் சபைக்கும் நேராகச் சுதந்தர இந்திய அரசின் அணுகுமுறைகள் எதுவாய் இருக்கும் என்பது பற்றிய விவரம் தெளிவற்ற நிலையிலும் யூகங்களை ஏற்படுத்துவதுமாகவே அமைந்துள்ளது. பொதுவாகத் திருச்சபை தடைகளையும் துன்புறுத்தல்களையும் எதிர்நோக்கியே உள்ளது'[55].

அப்பொழுது பெரும்பாலான மிஷனரி அமைப்புக்களும் இக்கருத்தையே கொண்டிருந்தன. அதன்காரணமாக எஸ்.ஐ.யூசி., மற்றும் மெதடிஸ்டு சபைகளைத் தாங்கிக் கொண்டிருந்த மிஷனரிகள் சபை ஐக்கிய முயற்சிக்கு முன்னுரிமை அளித்து இறையியல் கோட்பாடுகளைப் பின்னுக்குத்தள்ளினர்.

அன்று எஸ்.ஐ.யூ.சி-யில் முக்கிய-லே தலைவர்களாக விளங்கின G.V. ஜோப், P. செஞ்சையா, வி. சர்க்கரை, D.M. தேவசகாயம், S. ஜேசுதாசன், எட்டி ஆசீர்வாதம், A.N. சுதரிசனம் போன்றவர்கள் இணைந்த 'Bangalore Conference Continuation' என்னும் அமைப்பை ஏற்படுத்தி சபை ஐக்கிய முயற்சியை இறையியல் அடிப்படையில் பலமாக எதிர்த்தனர். இவர்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி 1939-ஆம் ஆண்டில் வெளியிட்ட Rethinking Christianity in India என்னும் நூல் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ இறையிய லாளர்களின் கவனத்தை ஈர்த்தது. அதே வேளையில் பேராயராளுகை முறை மூலம் தங்கள் ஆதிக்கம் வலுவடையும் என்பதை உணர்ந்திருந்த போதகர்கள் அனைவரும் எஸ்.ஐ.யூ.சி-யை பேராயர் ஆளுகை வரம்பில்

கொண்டுவருவதில் முனைப்புடன் செயல்பட்டனர். லே தலைவர்களுக்கும் போதகர்களுக்கும் இடையே இங்ஙனம் நடைபெற்ற முரண்பாட்டின் இறுதியில் போதகர்களே வெற்றி பெற்றனர். இதற்குக்காரணம் சாதாரண கிறிஸ்தவர்கள் சபை ஐக்கியம் பற்றிய உண்மைகளைப் புரிந்து கொள்ளாததாகும். அதன்காரணமாக சி.எஸ்.ஐ.-யில் இணைய இறுதித்தீர்மானம் எடுத்த ஒருங்கிணைப்புக் குழு (Joint Committee)-வில் எஸ்.ஐ.யூ.சி.-யை பிரதிநிதித்துவப்படுத்திய 15 உறுப்பினர் குழுவில் 11 இடங்களைப் போதகர்களே பிடித்தனர்[56].

திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கத்தைப் பொறுத்த வரையில் 1921-ஆம் வருடமே 'சபை ஐக்கியம்' பற்றிய விவாதம் ஆரம்பமானது. ஆனால் அப்போது தான் சபாலோசனைச் சங்கம் பல்வேறு அமைப்பு மாறுதல்களுக்குள்ளாகியிருந்ததால், 'சபை ஐக்கியம்' பற்றிய விஷயங்களை தள்ளி வைத்து தீர்மானம் இயற்றியது[57]. ஆயினும் அது தொடர்பாக எஸ்.ஐ.யூ.சி.-யின் உயர்மட்ட அளவில் நடைபெற்ற அனைத்து ஆலோசனைகளிலும் திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்க செயலாளரான பால்டேனியல் கலந்து கொண்டார்[58]. 1921-ஆம் வருடம் கூடிய எஸ்.ஐ.யூ.சி. பொதுமன்றம் சுயாதீன திருச்சபைகளின் கோட்பாடான 'இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவம்' (Evangelical Christendom) என்பதற்கு எவ்விதத்திலும் பங்கம் ஏற்படாத வண்ணம் 'சட்டத்திற்குட்பட்ட பேராயர் முறையை (Constitutional Episcopacy) ஏற்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாம் எனத் தீர்மானித்தது. அதன்படி சபை ஐக்கிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குத் தனது பிரதிநிதிகளை அனுப்பவும் தொடங்கியது[59].

ஆங்கிலிக்கன், மெதடிஸ்டு மற்றும் எஸ்.ஐ.யூ.சி. ஆகிய சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒருங்கிணைப்புக்குழு 1920-க்கும் 1929-க்கும் இடையே எட்டு முறை கூடி 'சபை ஐக்கிய ஏற்பாடு' '(Proposed Scheme of Union) என்னும் பொதுத்திட்டத்தைத் தயாரித்து சம்பந்தப்பட்ட சபைகளின் பரிசீலனைக்கு சமர்ப்பித்தது[60]. இத்திட்டம் தொடர் விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு 1934, 1935, 1936, 1941 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டு

1942-ஆம் ஆண்டில் இறுதி வடிவம் பெற்றது. மேற்கூறிய மூன்று சபைகளாலும் 1947-ல் ஒப்புக்கொள்ளப்பட்ட இத்திட்டமே தற்போது தென்னிந்திய திருச்சபையின் 'ஐக்கிய உடன்பாடு' (Basis of Union) எனவும் 'சட்ட அமைப்பு' (Constitution) எனவும் அழைக்கப்படும் இருபிரிவுகளடங்கிய சட்ட புத்தகம்.

1929-ஆம் வருடம் அக்டோபர் 4-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரை பெங்களூரில் கூடிய எஸ்.ஐ.யூ.சி.-யின் பொதுமன்றம் இத்திட்டம் பற்றிய தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு அதன் அனைத்து சபாலோசனைச் சங்கங்களையும் கேட்டுக்கொண்டது[61]. 1931-ஆம் வருடம் ஜனவரி 15-ஆம் நாள் கூடிய திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் மேற்கூறிய திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டது[62]. 1935-ஆம் ஆண்டுவரை பலமுறை திருத்தப்பட்ட 'சபை ஐக்கிய ஏற்பாடு' மீண்டும் 1936-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கத்தின் பரிசீலனைக்கு வந்தது. இம்முறையும் அதனை ஏற்க அம்மன்றம் மறுத்துவிட்டது[63]. மீண்டும் பலமுறை திருத்தம் செய்யப்பட்ட 'சபை ஐக்கிய ஏற்பாடு' மறுபடியும் 1944-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கத்தின் பரிசீலனைக்கு வந்தது. அப்போது 'ஐக்கிய ஏற்பாட்டை' ஆதரித்து 75 விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவு எப்போது பெறப்படுகிறதோ, அப்போது அதனை ஏற்றுக் கொள்வது எனத் திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கத்தின் செயற்குழு 1944-ல் தீர்மானித்தது[64]. இச்சபை ஐக்கிய ஏற்பாட்டிற்கான 75 விழுக்காடு ஆதரவு 1947 பெப்ரவரி 4-ஆம் நாள் கூடிய சபாலோசனைச் சங்கத்தில் பெறப்பட்டது[65]. இதனைத் தொடர்ந்து திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கமும் மிஷன் கவுன்சிலும் ஒன்றிணைக்கப்பட்டது[66]. எஸ்.ஐ.யூ.சி.-யும் 1947 செப்டம்பர் 26-ஆம் நாள் சென்னை தாம்பரத்தில் இறுதியாகக் கூடி தன் ஆயுளை முடித்துக்கொண்டது[67]. மேற்கூறிய 'சபை ஐக்கிய ஏற்பாட்டின்' முடிவாக 1947 செப்டம்பர் 27-ஆம் நாள் தென்னிந்தியாவின் வெஸ்லியன் மெதடிஸ்டு சபைகளும், எஸ்.ஐ.யூ.சி.-யும், ஆங்கிளிக்கன் சபைகளும் இணைந்து தென் இந்திய திருச்சபை - சி.எஸ்.ஐ. தொடங்கப்பட்டது[68].

மேற்கூறிய ஏற்பாட்டின்படி தென் திருவிதாங்கூரில் தன்னாட்சி சபைகளாக இயங்கிக் கொண்டிருந்த எல்.எம்.எஸ். சபைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து 1947 அக்டோபர் 13-ஆம் நாள் திருவனந்தபுரம் மெற்றீர் மெம்மோரியல் ஆலயத்தில் வைத்து தென்திருவிதாங்கூர் பேராயம் தொடங்கி வைக்கப்பட்டது. புதிய பேராயத்தின் பேராய மன்றம் (Diocesan Council) 1948 ஜனவரி 15-ஆம் நாள் மெற்றீர் மெம்மோரியல் ஆலயத்தில் கூடியது. முன்னதாக இப்பேராயத்தின் பேராயராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த A.H.லெக் அதனைத் தலைமையேற்று நடத்தினார்[69]. இங்ஙனம் திருவிதாங்கூர் எல்.எம்.எஸ். சபைகளின் தன்னாட்சி அதிகாரங்கள் முடிவுகட்டப்பட்டு அவை பேராயராட்சி வரம்பிற்குள் தள்ளப்பட்டன.

தென்னிந்திய திருச்சபையின் கோட்பாடுகள் எனக் கூறப்பட்டுள்ள பல இறையியல் நிலைப் பாடுகள் எல்.எம்.எஸ். சபைகளின் பாரம்பரிய காங்கிரிகேஷனல் நம்பிக்கைகளினின்று பெரிதும் மாறுபட்டவை ஆகும். சி.எஸ்.ஐ. சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரலாற்று அடிப்படையிலான பேராயர் முறை (Historic Episcopacy), திருச்சபை பற்றிய கருத்தோட்டம் (The Conception of the Church), அனைத்து விசுவாசிகளின் குருத்துவம் (Priesthood of all Believers), நற்செய்தியாளர்களின் சமத்துவம் (Equality of Ministers), பேராயர் தொடங்கி கீழ்மட்டம் வரை வெவ்வேறு படிநிலைகளில் உள்ள ஊழியர் முறை (Heirarchy of Ministers) அருட்பொழிவின் போது பரிசுத்தாவியானவரின் செயல்பாடு (Conception of the Conveyance of the Holy Spirit in Ordination), குருவானவர் களின் மத்தியஸ்தப்பணி (Mediatorial Function of Ministry), ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்தைப் பற்றிய கண்ணோட்டம் போன்றவை எல்.எம்.எஸ். சபைகளின் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறையியல் நம்பிக்கைகளினின்று முற்றிலும் மாறுபட்டவை ஆகும். தென்னிந்திய திருச்சபை, வேத அடிப்படையில் தங்கள் நம்பிக்கையை அமைத்துக்கொள்ள மக்களுக்குள்ள உரிமையை மறுத்து அவர்கள் மீது அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம், நிசேயா விசுவாசப் பிரமாணம் என்பனவற்றைத் திணிக்கிறது[70]. தங்கள் சபைகளின் ஆராதனை முறைகளைத்

தீர்மானிப்பதற்கு மக்களுக்குள்ள உரிமையைப் பறித்து 'பொது வழிபாட்டு நூலை' (Book of Common Worship) சபைகள் மீது திணித்துள்ளது[71].

திருவிதாங்கூர் எல்.எம்.எஸ். சபைகள் மேற்கூறிய இறையியல் திரிபுகளுக்கு நேராகச் சென்று கொண்டிருந்தவேளையில் தீரமுடன் அதனை எதிர்த்துப் போராடிய இறையியலாளர்கள் இருவர். முதலாமவர் அருள்திரு. N.H. ஹாரிஸ். பெங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியின் முதற்தொகுதி மாணாக்கர்களில் ஒருவரான இவர், கண்ணமூலை இறையியல் செமினரியில் ஆசிரியராகவும், மார்த்தாண்டம் உட்பட பல சபைகளில்போதகராகவும் பணிபுரிந்தவர். தென் திருவிதாங்கூர் சபைகள் தடம்புரள்வதற்கெதிராகக்குரல் கொடுத்த மற்றொருவர் D.M. தேவசகாயம் என்னும் நாகர்கோவிலைச் சேர்ந்த கிறிஸ்தவர். செராம்பூர் சென்று பயின்று இறையியல் பட்டம் பெற்ற இவர் திருச்சபை செயல்பாட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஒரு லே தலைவராக விளங்கினார். தென்திருவிதாங்கூர் திருச்சபை இவருக்கிணையான ஒரு சிறந்த இறையியலாளரை இன்றுவரை தோற்றுவிக்க வில்லை என்றே கூறவேண்டும். திருச்சபை ஐக்கியம் பற்றி மக்களை எச்சரித்து இவர் வெளியிட்ட நூல்களும், சிற்றேடுகளும் ஏராளம். மேற்கூறிய தலைவர்களின் எதிர்ப்புக்களையும் மிஞ்சி சபை ஐக்கியம் நிறைவேறிவிட்டதும், அவர்கள் இருவரும் இறைவனின் சித்தத்திற்கு திருச்சபைகளை ஒப்படைத்து விட்டு ஒதுங்கி விட்டனர். வெகு சீக்கிரத்திற்குள் அவர்கள் உழைத்த இப்போராட்ட சபையை விட்டு (Church Militant) அவர்கள் வாஞ்சித்த வெற்றிச்சபைக்கு (Church Triumphant), எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

சபைகள் மட்டத்திலும் மேற்கூறிய சபை ஐக்கிய ஏற்பாட்டிற்கெதிராக சில சபைகளில் எதிர்ப்புகள் தோன்றவே செய்தன[72]. நாகர்கோவில் கஸ்பா சபை, தாமரைகுளம், கிறிஸ்துகோயில், கடமலைக்குன்று போன்ற முக்கிய பாஸ்டரேட் சபைகள் அப்போது சி.எஸ்.ஐ. அமைக்கப்பட்டதற்கெதிராகக் குரல் கொடுத்தன. அது தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றம் வரைச்சென்றன. ஆனால் சபை ஐக்கிய எதிர்ப்பாளர்களுக்கு உரிய தலைமையும், போதியப் பணப்பலமும், எல்.எம்.எஸ். தலைமைக் கழகத்தாரின் அனுதாபமும்

இல்லாததால் அவர்களது எதிர்ப்பு பலனற்றுப் போய்விட்டது. அதே வேளையில் சி.எஸ்.ஐ. கட்டமைப்பிற்கு மார்ஷல் நேசமணியின் தலைமையும், பேராய மாமன்றத்தின் அதிகார பலமும், எல்.எம்.எஸ். தலைமைச் சங்கத்தாரின் பேராதரவும் இருந்ததால் அது வெற்றிக் கொடி நாட்டியது. இதுவே தன்னாட்சி அதிகாரம் பெற்றிருந்த திருவிதாங்கூரின் எல்.எம்.எஸ். சபைகள் சி.எஸ்.ஐ. என்னும் பேராயர் ஆட்சி முறைக்கு அடிமைப்பட்ட வரலாறு.

தென் திருவிதாங்கூர் பேராயத்தின் முதல் பேராயராக தெரிவு செய்யப்பட்டு 1947 முதல் 1967 வரை பணிபுரிந்த A.H. லெக் காங்கிரிகேஷனல் கோட்பாட்டில் இறுதிவரை உறுதியாகவே இருந்தார். குறிப்பாக இவர் கிறிஸ்தவ கோட்பாடுகளில் சிறந்த தெளிவு பெற்றவர். அப்பேராயத்தை அவர் வழிநடத்தி வந்தது வரை சி.எஸ்.ஐ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருச்சபைகளின் பாரம்பரிய தன்னாட்சி உரிமைகளில் கை வைக்கப்படவில்லை. குறிப்பாக போதகர் நியமனங்களில் சபைக் குழுக்களை கலந்து முடிவெடுத்துவந்தார்.

1959-ல் தென்திருவிதாங்கூர் பேராயம் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு இப்போதைய கன்னியாகுமரிப் பேராயம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் பேராயராக I.R.H. ஞானதாசன் 1972 வரைப் பணிபுரிந்தார். இவர் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து சபைகளை இறைவனின் வருகைக்காக ஆயத்தப்படுத்துவதை விட்டு விட்டு, தமது வசீகரமான பேச்சுக்கள் மூலம் மக்களைக் கவர முயன்றவர். இவர் காலத்தின் பெரும்பாலான வருடங்களில் மார்ஷல் நேசமணி அவர்களே பேராயத்தின் துணைத்தலைவராய் இருந்தார். ஆனால் அவர் அப்போது தன் வாழ்வின் இறுதிப்பகுதியில் இருந்ததால் அவரது அப்பழுக்கற்ற நேர்மையும் நற்பெயரும் பேராயத்தில் இடம் பெற்றிருந்ததே தவிர அவர் பேராய நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிட வில்லை. விளைவு, பேராயச் செயலாளர் A. குணமணி, ஜாய் ஞானதாசன், A. கிராண்ட் ஆகியோர் கொண்ட மூவரணி (Triumvirate) பேராயத்தை ஆட்சி செய்தது. இக்காலத்தில் தான் சபைகள் மீது அவற்றின் விருப்பத்திற்கு மாறாக எவரையும் போதகர்களாகத் திணிக்கும் முறையும், சபைகளைக் கலந்தாலோசிக்காமலேயே அவற்றின் மீது அசஸ்மென்று விதிக்கும் வழக்கமும் தொடங்கப் பட்டது.

சமீபத்தில் ஜாய் ஞானதாசன் வெளியிட்ட 'மங்களாவடி கதைகள்' என்னும் நூல் அவா் திருச்சபையை எத்தகைய ஓா் கேலிப் பொருளாகக் கருதினாா் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு.

தொடாந்து 1973-ஆம் வருடம் பேராயராகத் தெரிவு செய்யப்பட்ட C. செல்வமணி திருச்சபை ஊழியத்தில் குறைந்த அளவே அனுபவம் உள்ளவா். ஞானதாசன் காலத்தில் புரையோடி யிருந்த நிா்வாகச் சீரழிவு செல்வமணி அவா்கள் காலத்தில் வெடித்துச் சிதறியது. விளைவு, அவா் பதவியை விட்டு விலகினாா். இவருக்குப்பின் பேராயா் நாற்காலியில் அமா்ந்த கிறிஸ்துதாஸ், நமது சபைகளின் காங்கிரிகேஷனல் கோட்பாடுகளை மறந்துவிட்ட ஒரு தலைமுறையில் தோன்றியவா். வரலாற்று பூா்வமான பேராயா் ஆட்சிமுறையை (Historic Episcopacy) நமது சபைகள் மீது திணிக்க பெரும் முயற்சி எடுத்தவா் இவா். அதன் ஒரு பகுதியாக 1985-ஆம் வருடம் குமரிப்பேராயத்தின் நிா்வாகத்தை சி.எஸ்.ஐ. யின் சினாட் மன்றத்திடம் தாரைவாா்த்து, அதன் மூலம் தங்கு தடையற்ற பேராயா் சா்வாதிகாரத்தை நிலை நாட்ட முயன்றாா். ஆனால் அப்போதையப் பேராயச் செயலா் திரு. P. தா்மராஜ் அவா்கள் தலைமையில் போராடிய லே - தலைமை பேராயத்தின் உரிமைகளை நிலைநாட்டியது.

என்னதான் நமது லே - தலைவா்கள் பேராயா்களின் சா்வாதிகார ஆட்சிகளை எதிா்த்து வந்தாலும், சபைகளின் ஆன்மீக தரமிறக்கத்திற்குக் காரணமான போதகா்களின் வரம்பற்ற போக்குக்களைத் தடுத்து நிறுத்த அவா்கள் இதுவரை எந்த முயற்சியும் தொடங்கவில்லை என்பது நமது பேராயத்தில் நிலவும் ஒரு ஆபத்தான அம்சமாகும். நமது மிஷனரிகள் காலத்தில் திருப்பணிவிடை யாளா்களாய் தெரிந்து கொள்ளப்பட்டவா்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் முதல்தர மாணவா்களாய் விளங்கியவா்கள், ஆனால் தற்போது திருப்பணிவிடைக்கென வருவோா் வேறு எந்த வேலைவாய்ப்புகளையும் பெறத்தகுதியற்ற கடைநிலை மாணவா்கள். முன்னா் நமது ஊழியா்களைப் பயிற்றுவித்தவா்கள் சிறந்த கிறிஸ்தவ நம்பிக்கையும் தோ்ந்த இறையியல் அறிவும் பெற்றிருந்த மிஷனரிகள், இன்று நமது ஊழியா்களைப் பயிற்றுவிப்போா் கிறிஸ்தவ நம்பிக்கை துளிகூட

இல்லாத வேதப்புரட்டர்கள். குறிப்பாக பெங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியும், மதுரை அரசரடி இறையியல் செமினரியும் இவ்வேதப்புரட்டர்களின் உல்லாசபுரி ஆகிவிட்டன. இவர்களிடம் பயிற்சி பெற்ற கடைநிலை மனிதர்களை சபைகளின் எந்த நேர்காணலும் ஒப்புதலும் இன்றி பேராய மினிஸ்டீரியல் கமிட்டி அவைகள் மீது போதகர்களாகத் திணிக்கின்றது. அவர்கள் சுயமாக ஒரு ஜெபம் கூட ஏறெடுக்கத் திராணியற்று, முழு ஆராதனையையும் எழுதி வைத்து படித்து முடிக்கிறார்கள். இப்படி ஒரு பணியைச் செய்து முடிக்க நம் சபைகள் 30 ஆயிரம், 40 ஆயிரம் ரூபாய் என பேராயத்திற்கு அசஸ்மென்ட் செலுத்தி ஆள் அமர்த்த வேண்டுமா? நம்மில் ஒருவர் - அவர் கிறிஸ்தவ நம்பிக்கையோ அறிவோ இல்லாதவராக இருந்தால் கூட - அதனைச் செய்து முடிக்கலாமே. மேலும் இவர்களில் பெரும்பாலோர் தங்கள் வாய்ஜாலங்களை அருளுரை எனவும் உளறல்களை இறையியல் சித்தாந்தம் எனவும் பிரசங்கப்பீடங்களில் கொட்டித் தீர்க்கிறார்கள். அபூர்வமாக ஏதேனும் ஒரு போதகர் அழகான அறநெறி வாழ்வியல் கோட்பாடுகளையோ, மனிதனின் அறிவுப் பெருக்காகிய தத்துவக் கருத்துக்களையோ அடுக்கு மொழிகளில் உதிர்த்துவிட்டால் நாம், "ஆகா எவ்வளவு அழகான பிரசங்கம்" எனப்புகழ்கிறோம். இவர்கள் உண்மையான கிறிஸ்தவ நற்செய்தியை நமக்கு அறிவிக்காததால் நாமும் நற்செய்தி என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ள இயலாத குருடர்கள் ஆகிவிட்டதே இதற்குக் காரணம். விளைவு, தென்னிந்திய திருச்சபைத் திருப்பணியாளர்களின் திருப்பணி என்பது குருடர்களுக்குக் குருடர்கள் வழிக்காட்டும் முறை என்பதாகி விட்டது.

Notes

1. Leonard Hodgson (Ed.), Convictions, London, 1934, pp.48-53
2. L.G. Brandon, History of England, Madras, 1931 p. 192
3. ஜாண் ஏ. ஜேக்கப், தென்திருவிதாங்கூர் லண்டன் மிஷனரி சங்க சரித்திரம், நாகர்கோவில், 1956, ப.19.
4. Leonard Hodgson, op.cit.
5. ஜாண் ஏ. ஜேக்கப், மு.நூ., ப.19.

6. மேலது, ப.144.
7. Richard Lovett, The History of the London Missionary Society 1795-1895. Vol.II, London, 1899, pp.688-689.
8. Norman Goodal, A History of the London Missionary Society, 1895-1945, London, p.576.
9. L.M.S., Report by Rev. G.E. Philips After a Secretarial Visit to India, September 1933 - April 1934, London, 1934, p.100.
10. www. mundus.ac.uk/cats/4/251.htm.
11. Julius Richter, A History of the Missions in India, London, 1908, p.125.
12. C.M. Agur, Church History of Travancore, Madras, 1903, p.641.
13. Ibid, pp.648-650
14. Ibid, p.701.
15. Ibid, p.727.
16. J.L. Wyatt (Ed), Bishop Caldwell's Reminiscences, London, 1894, p.181.
17. சாமுவேல் சகரியா, தென்திருவிதாங்கோட்டு திருச்சபைச் சரித்திரச் சுருக்கம், I பங்கு, நாகர்கோவில், 1897, ப.166.
18. General Regulation of the L.M.S. 1864, (Clause 3)
19. ஜாண் ஏ. ஜேக்கப், மு.நூ., ப,112.
20 சாமுவேல் சகரியா, மு.நூ., ப.249-250.
21. மேலது, ப.226.
22. சாமுவேல் சகரியா, மு.நூ., IIபங்கு, ப.31.
23. Samuel Mateer, The Land of Charity, London, 1871, ப.367.
24. சாமுவேல் சகரியா, மு,நூ, II பங்கு, ப.157.
25. A.Vethacan, The Life of the Rev. N. Devadasan, Madras, 1887, pp.92-96.
26. சாமுவேல் சகரியா, மு.நூ.,II பங்கு, ப.249.

27. A. Vethacan, op.cit., p.98.
28. சாமுவேல் சகரியா, மு.நூ. IIபங்கு, ப.249.
29. மேலது, ப.61.
30. திருவிதாங்கூர் சபாலோசனை சங்கம் அமைப்பும் சட்டங்களும், ப.9.
31. சாமுவேல் சகரியா, மு.நூ. II பங்கு, ப.65.
32. www. mundus.ac.uk/cats/4/251.htm.
33. I.H. Hacker, A Hundred Years in Travancore, London, 1908, p.100.
34. ஜாண் ஏ. ஜேக்கப், மு.நூ. ப.95,96.
35. சாமுவேல் சகரியா, மு.நூ., II பங்கு, ப.209, 214-217.
36. ஜாண் ஏ. ஜேக்கப், மு.நூ., ப.113.
37. Constitution and Rules for a Church Union for the Establishment and Control of Postorates, Nagercoil, 1904.
38. First General Assembly of the General Union of the United Churches of South India, Madura, July 1905, p.2.
39. The First General Assembly of the S.I.U.C., Madras, July 1908, p.16.
40. Handbook of the South India United Church, Madras, 1918, p.24.
41. The S.I.U.C., Minutes of the Fourth General Assembly, Madura, September 1913, pp.23-24.
42. The Travancore Church Council (L.M.S.), Minutes of the Council held at Nagercoil on 15th of December 1922, pp.1-3.
43. L.M.S., Ten Years of Church and Mission in Travancore 1921-1930. p.1.
44. Handbook of the S.I.U.C., pp.5-6.
45. S.I.U.C., Travancore Church Council (L.M.S.), Constitution and Rules, 1920, pp.12-13.
46. S.I.U.C., Travancore Church Council (L.M.S.), Constitution and Rules, 1939, p.8.
47. Constitution and Rules, 1920, p.7

48. Ibid, p.131-132.

49. Ibid, 1939, p.45.

50. Leonard Hodgson(Ed.), op.cit, p.130.

51. Ibid, p.131-132.

52. V.S. Dornakal. 'What Happened in Tranquebar in 1919', Church Union News and Views,Vol.I No.4 (January 1931) pp.144-145

53. Church Union News and Views, Vol.I.No.1 (July 1930), p.7.

54. Proposed Scheme of Church Union in South India, C.L.S. (1942), p.31.

55. L.M.S., Report by Leonard Hurst After a Secretarial Visit to India, July 1946 - March1947,p.17.

56. The S.I,U.C., Minutes of the Twentieth General Assembly, Held at Tambaram 27th to 30th September, 1946, p.365.

57. Minutes of the Annual Meeting of the Travancore Church Council held at Trivandrum on Tuesday the 16th of August 1921, p.5.

58. Minutes of the Seventh General Assembly of the S.I.U.C., Calicut, September 26th - 30th, 1919, p.10-11.

59. Church Union News and Views, Vol.I, No:1, (July 1930), pp.8-9.

60. Ibid., pp.8-12.

61. The S.I.U.C., Minutes of the Twelfth General Assembly, 1929, p.11.

62. S.I.U.C., Travancore Church Council, Minutes from Sept.1930 to Feb.1931, p.10.

63. Ibid., Minutes from September 1935 to January 1936, p.16.

64. Ibid, Minutes from August to December 1944, p.16.

65. Ibid, Minutes from January to May 1947, p.16.

66. R.H. Eastaff, The L.M.S. in Travancore (1806-1947), p.15,

67. The S.I.U.C., Twenty First General Assembly, held at Tambaram on the 25th and 26th Sept. 1947, p.4.

68. C.S. Milford, South India's New Church, London, 1947, p.1.

69. C.S.I., South Travancore Diocesan Council, Minutes of the Special Meeting held at Trivandrum on 15th January 1948, p.2.

70. C.S.I. Constitution, Part I, Basis of Union. pp.1-22.

71. C.S.I., Minutes of Proceedings of the First Synod, Madura, March 6 to 10, 1948, pp.15-16.

72. C.S. Milford, op.cit., p.15.

M. மார்ட்டின் டேனியல் தாஸ்

14 பேராயர் சர்வாதிகாரி ஆனார்

"கத்தோலிக்கத் திருச்சபையில் மலிந்து காணப்பட்ட ஊழல்களும், சீர்கேடுகளும், போப்புகளும் மத குருமார்களும் நடத்திய சுகபோக வாழ்க்கையும், அவர்களது ஒழுக்கக் கேடான வாழ்க்கை முறையுமே இப்புரட்சி (சமயச் சீர்திருத்தப் புரட்சி) தோன்றுவதற்கு மூல காரணங்களாகும்" **(அறிவர் ஐவி பீட்டர் - கிறிஸ்தவம் நடந்து வந்த பாதை** - 2006 - பக்கம்171)

இப்புரட்சிக்கு முன்பு சுமார் 1600 ஆண்டுகள் உலகை இருட்டறையில் பூட்டி வைத்து, பல்லாயிரக்கணக்கான மக்களையும், புரட்சியாளர்களையும் கொன்று குவித்த பெருமை கத்தோலிக்கத் திருச்சபைக்கு உண்டு. இருப்பினும் போப்புகளின் அழுக்கடைந்த ஆட்சிக்கு எதிராகவும், மக்களின் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் குரல் ஒலிக்க அன்றும் தவறவில்லை. இதற்கென களம் இறங்கியவர்கள் அனேகர் என்றாலும், திருச்சபைச் சீர்திருத்தத்திற்கு முன்னோடிகளாக பீட்டர் வால்டஸ், ஜாண் வைக்கிளிப் போன்றோர்களைக் குறிப்பிடலாம். அந்நாள் வரை விவிலியத்தை இலத்தீன் மொழியில் மட்டும் வைத்துக் கொண்டு மக்களுக்குத் தராமல் இருட்டறையில் பதுக்கி வந்த நிலை ஜாண் வைக்கிளிப்பால் மாறிற்று. இவர் முதல் முதலாக விவிலியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இதனால் மக்கள் தாங்களாகவே கற்று அதன் கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு விவிலியம் உதவியது. அன்று முதல் கிறிஸ்தவத்தில் சீர்திருத்தம் உருவாகி, தீயென ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலும் பரவியது. 1384-ல் வைக்கிளிப்

காலமானார். வைக்கிளிப் மரணமடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த கான்ஸ்டன்ஸ் பேரவையில் இவரைச் சமயத் துரோகி என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பிஷப் பிளமிங் என்பவர் வைக்கிளிப்பின் எலும்புகளைத் தோண்டி எடுத்து எரித்து சாம்பலை ஆற்றில் வீசி எறிந்தார். அந்த அளவுக்கு பேராயர்கள் இரும்பு இருதயம் படைத்த சர்வாதிகாரிகளாக விளங்கினர்.

இவர் மரணமடைந்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மார்டின் லுத்தர் என்பவர் ஜெர்மனியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் 1483-ம் ஆண்டு நவம்பர் 10-ம் நாள் பிறந்தார். கல்வியில் சிறந்த இவர் 1502-ல் இளங்கலைப் பட்டமும், 1505-ல் முதுகலைப் பட்டமும் பெற்று பிறகு சட்டம் கற்பதற்குத் தொடங்கினார். அப்படிப்பில் பிடிப்பில்லாத அவர் ஆன்மீகத்தைக் குறித்து சிந்திக்கத் தொடங்கி 1505 ஜூலை 16-ம் நாள் தனது பல்கலைக் கழகப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, அடுத்த நாளே புனித அகஸ்டீன் துறவியர் மடத்தில் சேர்ந்தார். 1507-ல் இவரை மதகுருவாக அபிஷேகம் பண்ணினர். தொடர்ந்து படித்து இறையியலில் அறிவர் பட்டமும் பெற்று, ஆன்மீகத்தைக் குறித்து ஆழமாக சிந்திக்கத் தொடங்கினார். இவர் ஒரு மத குருவாக மட்டுமின்றி சிந்திக்கும் திறனுடைய ஒரு பேராசிரியருமாக இருந்தமையால் அவர் ஒரு சமயப் புரட்சிவாதியாகவும்,சீர்திருத்தவாதியாகவும் மாறுவதற்கு காரணமாக அமைந்தது. ***(அறிவர் ஜவி பீட்டர்)***

இத்தருணத்தில் 1511 - ல் அகஸ்டீன் துறவியர், மடங்களின் சார்பாக லுத்தரை ரோமுக்கு அனுப்பி வைத்தனர். மிகுந்த எதிர்பார்ப்புடன் ரோமுக்குச் சென்ற லுத்தருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. போப்பாண்டகையை இவ்வுலகில் இறைவனின் தூதுவராகவும், ரோமை புனிதத்தின் உறைவிடமாகவும் கருதியிருந்த அவர் ரோமாபுரி கொள்ளையர்களின் குகையாகவும், இறைப்பணியாளர்களை அசிங்க மனிதர்களாகவும் கண்டார். போப்புகளைக் குறித்து அவர் கேள்விப்பட்ட கேவலமான செய்திகள் அவரைத் திடுக்கிட வைத்தன. மத குருமார்கள் அறிவற்ற மூடர்களாகவும், மூடநம்பிக்கைகளின் மொத்த உருவங்களாகவும் உலா வந்தனர். இக்காட்சிகளை யெல்லாம் கண்டு கொண்டு நான்கு வாரங்கள் ரோமில் தங்கியிருந்த லுத்தர் சோர்வுற்று, உடைந்த உள்ளத்துடனே ஊர் திரும்பினார். ***(அறிவர் ஜவி பீட்டர்).***

திருச்சபையில் மலிந்து காணப்பட்ட ஊழல்கள் மற்றும் சீர்கேடுகளால் லூத்தர் அதிருப்தியடைந்திருந்தார் என்றாலும், திருச்சபையை எதிர்த்து சீர்திருத்தப் புரட்சியை தொடங்குவதற்கு இயலாதவராகவே காணப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் தான் 1513 -ம் ஆண்டு பதவிக்கு வந்த போப் பத்தாம் லியோவின் பாவ மன்னிப்புச் சீட்டு விற்பனைக்கு வெளிவந்தது. அது லூத்தரை சீர்திருத்தப் புரட்சியில் துணிவுடனே குதிப்பதற்கு வழிவகுத்தது. ஒவ்வொரு வகை பாவத்திற்கும் இவ்வளவு பணம் என்று நிர்ணயம் செய்து, கூவிக் கூவி சீட்டு விற்கப்பட்டது. பில்லி சூனியம் செய்த குற்றத்திற்கு 2 தங்க டுக்கட்டுகளும், பல பெண்களை மணந்த குற்றத்திற்கு 6 தங்க டுக்கட்டுகளும், கொலைக் குற்றத்திற்கு 8 தங்க டுக்கட்டுகளும், ஆலயங்களைக் கொள்ளை அடித்தல், பொய் சாட்சியம், நம்பிக்கைத் துரோகம் போன்ற குற்றங்களுக்கு 9 தங்க டுக்கட்டுகளும் (1 தங்க டுக்கட்டு என்பது 2 டாலர் மதிப்புடையது) என போப்பின் பிரதிநிதிகள் விற்றனர். மக்களோ உனக்கு எனக்கு என போட்டி போட்டு பாவ மன்னிப்புச் சீட்டை வாங்கினர். தங்களுக்கு மட்டுமின்றி இறந்து போன தங்களது மூதாதையர் களுக்கும் சேர்த்து மக்கள் சீட்டு வாங்கினர். படித்தவர் படிக்காதவர், சீமான்கள், வறியோர், பாமரர், முதியோர், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவரும் பெரும் பணம் கொடுத்து பாவ மன்னிப்புச் சீட்டு வாங்கினர். இதன் மூலம் போப்புக்கும், பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும் கணக்கிலடங்கா பணம் சேர்ந்தமையால் அவர்கள் சுகபோக வாழ்க்கையினை விரிவாக்கிக் கொண்டு வாழலாயினர். லூத்தரோ இதனால் அளவற்ற மன வேதனை அடைந்தார். எவ்வாறாயினும் இப்பிரச்சினைக்கு முடிவு கட்டத் துணிந்தார்.

தீவிர சிந்தனைக்குப் பிறகு சர்ச்சைக்குரிய இப்பிரச்சினை குறித்து பொது விவாதத்திற்கு விடுவதென லூத்தர் முடிவெடுத்து, இந்த பண வசூலுக்கு எதிராக 95 கேள்விகளை எழுப்பி, அவைகளை எழுதி 1517 - ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 - ம் நாள் நண்பகலில் விட்டன்பர்க் ஆலயத்தின் நுழைவாயிலில் ஆணி அடித்துப் பதித்தார். இவரது இந்த 95 கோட்பாடுகள் கிறிஸ்தவ மக்களது கவனத்தை

வெகுவாக ஈர்த்தன. தவிரவும் அதைப் பிரதிகள் எடுத்து, மொழி பெயர்த்து, அச்சிட்டு ஐரோப்பா முழுவதும் பரப்பப்பட்டது. இது கிறிஸ்தவ உலகை உலுக்கி எடுக்கப் போவதை எவரும் அன்று அறிந்து கொள்ளவில்லை.

மதத்தலைமையை எதிர்த்து புரட்சி செய்தவர் எவரும் அதிக நாட்கள் உயிர்வாழ்ந்த தில்லை என்பது வரலாறு. இதற்கிணங்கவே இயேசு நாதரும் தனது 32 -வது வயதில் உயிர் துறக்க நேர்ந்தது. ஜெர்மனியில் மையம் கொண்டிருந்த இப்புரட்சி, விரைவாக ஐரோப்பா முழுவதும் பரவியது. லுத்தரை பின்பற்றி சுவிங்கிலி, ஜாண் கால்வின் போன்ற அறிவர்கள் சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் சமயச் சீர்திருத்த இயக்கங்களை தோற்றுவித்து போப்பின் அநீதிகளுக்கு எதிராகப் புரட்சி குரல் எழுப்பினர். இதனால் அழிந்து விடுகின்ற சூழ்நிலையில் இருந்து போப் ஆட்சியை தூக்கி நிறுத்துவதற்காக பேரரசர் ஐந்தாம் சார்லஸ் ஜெர்மன் பாராளுமன்றத்தை கூடி வரச்செய்து, அனைத்து மக்களும் மன்னர்களும் லுத்தரின் போதகத்தை தள்ளி விட்டு, போப்பின் ஆளுகைக்கு மட்டும் கட்டுப்பட வேண்டும் என ஆணை பிறப்பித்தார். ஆனால் ஜெர்மனியில் காணப்பட்ட சிற்றரசர்கள் தங்களுக்கு சமய சுதந்திரம் வேண்டும் என்று கோரி பேரரசரின் ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்ததனால் அவர்கள் எதிர்ப்பவர்கள் (Protestants) என்று முத்திரை குத்தப்பட்டனர். இவர்களையே புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் என்று அழைக்கத் தொடங்கினர். லுத்தரின் வாழ் நாட்களிலேயே ஜெர்மனி, இங்கிலாந்து, டென்மார்க், நார்வே, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இங்கிலாந்தில் கத்தோலிக்க சமயத் தலைவராக செயலாற்றி வந்த Arch Bishop of Canterbury-யை, தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒரு சீர்திருத்த திருச்சபையை உருவாக்குவதற்காக மன்னர் எட்டாம் ஹென்றி (1509 - 1547) தேர்வு செய்தார். அந்நாள் Arch பிஷப்பாக இருந்த கிரான்மர் இங்கிலாந்தில் சீர்திருத்த சபை உருவாகுவதற்கு மன்னருக்குத்

துணை புரிந்தார். அவருக்குப் பிறகு அரசியார் முதலாம் எலிசபெத் (1558-1603) காலத்தில் The Act of Supremacy - 1559 என்ற சட்டத்தை நிறைவேற்றி அரசியே இங்கிலாந்து திருச்சபையின் தலைவர் என்று அறிவிக்கப்பட்டு, Arch Bishop of Canterbury-யை திருச்சபையின் ஆன்மீகத் தலைவராக நியமித்தார். இவ்வாறு முதலாம் எலிசபெத்தால் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட புரோட்டஸ்டான்று திருச்சபை The Anglican Church (ஆங்கிளிக்கன் திருச்சபை) என்று அழைக்கப்பட்டது. திருச்சபையின் தலைவராக பேராயர் செயல்பட்டாலும், அதன் தலைமை இன்றும் அரசரிடமே தொடர்கின்றது.***(அறிவர் ஜவி பீட்டர்)***

இவ்வாறு புரோட்டஸ்தாந்து சபையின் ஆன்மீகத் தலைவராக கத்தோலிக்க பாரம்பரிய கோட்பாட்டைப் போன்ற பேராயர் ஒருவரை திருச்சபையின் தலைமை குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றாலும், இங்கிலாந்தில் இயங்கி வந்த பல சுதந்திர கிறிஸ்தவ சபைகள் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாது அவைகள் தனித்து நின்று (Independent Congregational) சுதந்திர சபைகளாக செயல்படத் தொடங்கின.

Congregational சபை என்பது மக்களே தங்களது சபை காரியங்களை, பிறருக்கு கட்டுப்படாமல் தனித்து நின்று இயங்கும் தன்மையுடையதாகும். "பேராயர்" என்றொரு பதவி இந்த சபை அமைப்புக்குக் கிடையாது. தவிரவும், "பேராயர்" பதவியை சர்வாதிகார பதவியாக இந்த காங்கிரிகேஷனல் சபையினர் கருதினர். எனவே ஆங்கிளிக்கன் சபையுடன் இவர்கள் இணையாமல் சுதந்திர சபைகளாக செயல்பட்டனர். இச்சூழ்நிலையில் இயேசுவின் போதனைகளை அகிலமெல்லாம் பரவச் செய்வதற்கென இவர்கள் ஒன்று கூடி ஒரு அமைப்பை 1795-ம் ஆண்டு நிறுவினர். இந்த அமைப்பை "லண்டன் மிஷனரி சங்கம்" (London Mission any Society) என்று அழைத்தனர். லண்டன் காஸ்போர்ட்டைச் சார்ந்த காங்கிரிகேஷனல் போதகரான டேவிட்போக் என்பவரின் முயற்சியால் இச்சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் சார்பில் தென் திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்ட முதல் L.M.S. மிஷனரி கனம் றிங்கல்தௌபே ஆவார்.

இவரது ஊழிய காலத்தில் தென் திருவிதாங்கூரில் மயிலாடி, தாமரைகுளம், புத்தளம், ஆத்திக்காடு, கோவில்விளை, அனந்தநாடான்குடியிருப்பு மற்றும் ஈத்தாமொழி போன்ற ஏழு இடங்களில் சீர்திருத்த கிறிஸ்தவ எல்.எம்.எஸ். சபைகள் நிறுவப்பட்டன. இன்று ஜேம்ஸ்டவுண் என்றறியப்படுகின்ற பிச்சைக் குடியிருப்பில் றிங்கல்தௌபே தென் திருவிதாங்கூருக்கு வருவதற்கு முன்பே, திருநெல்வேலி சீமையில் இயங்கி வந்த எஸ். பி.சி.கே (Society for Propagation of Christian Knowledge) யினரால் சீர்திருத்த சபை நிறுவப்பட்டது. றிங்கல்தௌபே காலத்தில் இச்சபையும் அவரது பார்வையின் கீழ் வந்தது. இந்த எட்டு சபைகளும் காங்கிரிகேஷனல் சபைகளாக, தனித்தன்மையுடன் செவ்வனே செயல்புரிந்து சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களை (Heathens) சீர்திருத்தக் கிறிஸ்தவத்திற்குள் கொண்டு வந்தன. **(கிறிஸ்துவுக்கு முதற்கனி, கு. சுகுமாறன்)**

கனம் றிங்கல்தௌபே ஐயருக்குப் பிறகு இப்பணியை தொடர்ந்த கனம் சார்லஸ் மீடு ஐயரின் காலத்தில் சபைகளின் எண்ணிக்கை பன் மடங்காயிற்று. எனவே இவைகளையெல்லாம் ஒருங்கிணைத்து, சுதேசிகளாலும், மிஷனரிகளாலும் சேர்ந்து ஐக்கியமாக சபை பரிபாலனம் செய்வதற்கென்று ஒரு அமைப்பை, எல்.எம்.எஸ். சபையின் வழிகாட்டலின் அடிப்படையில் 1928-ல் உருவாக்கினர். இது லண்டன் மிஷன் சங்கத்தைச் சார்ந்ததும், தென் இந்திய ஐக்கிய சபையோடு (S.I.U.C.) சம்பந்தப்பட்டதுமான "திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம்" என்று அழைக்கப்பட்டது. இச்சங்கம் தங்களின் கீழ் இயங்கி வருகின்ற அனைத்து எல்.எம்.எஸ். காங்கிரிகேஷனல் சபைகளை வழிமுறைப்படுத்துவதற்காக 1928-ல் ஒரு "அமைப்பும் - சட்டங்களும்" என்ற சட்டப் புத்தகத்தை (Constitution) உருவாக்கியது. இந்த சட்ட விதிகளின்படி, தென் திருவிதாங்கூர் சபைகளுக்கு "பேராயர்" அல்லது அதைப் போன்ற Presbyterian தலைவர் பதவி உருவாக்கப்படவில்லை. தவிரவும் ஒரு சபைக்கு தாங்கள் விரும்புகின்ற ஒரு போதகரை கேட்பதற்கும் அல்லது விரும்பாதவரை வெளியேற்று வதற்கும் உரிமை இருந்தது. விரும்பாத ஒருவரை ஒரு சபைக்கு போதகராக திணிப்பதற்கு சபை ஆலோசனை சங்கத்தாருக்கு உரிமை தரப்படவில்லை என்பது இதன் சிறப்பு ஆகும்.

". . . . . அந்த சபைக்கு அல்லது சபைகளுக்குத் தாங்கள் ஆசிக்கின்ற பாஸ்ற்றா் அல்லது போதகா் இன்னாரென்று சொல்லுகிற கிறிஸ்தவ சுயாதீனம் உண்டு." (திருவிதாங்கூா் சபாலோசனை சங்க அமைப்பும் - சட்டங்களும் - 1928 அனுபந்தம் 1 - 1b - பக்கம் 11)

இந்த சட்ட விதிகளின்படி சபாலோசனை சங்கத்திற்கு ஒரு ஆசனாதிபதியும், துணை ஆசனாதிபதியும், ஒரு செயலரும், ஒரு பொக்கிஷதாரும் உண்டு, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இவா்கள் தோ்ந்தெடுக்கப்படுவா்.

இந்த வேளையில் இந்தியா முழுவதும் சுதந்திர அரசியல் விழிப்பு உருவாகி வருகிற சமயமாகக் காணப்பட்டது. இந்தியா்களுக்கு ஆங்கில ஆட்சியாளா்கள் மீது வெறுப்பு உருவாகிக் கொண்டு இருப்பதால், இந்தியாவில் இயங்கிய அனைத்துப் பிரிவு சீா்திருத்த சபைகளின் நலன்களை காத்திடுவதற்காக அவைகளை ஒருங்கிணைத்து ஒரு பொது அமைப்பு உருவாக்கிட வேண்டும் என்ற கட்டாயம் அன்று உருவாயிற்று. தென்னிந்தியாவில் எல்.எம்.எஸ்., ஆங்கிளிக்கன், பிரிஸ்பிட்டேரியன், லுத்தரன் மற்றும் மெதடிஸ்டு போன்ற சீா்திருத்த கிறிஸ்தவ சபைகள் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் இவைகள் ஒன்றோடொன்று தொடா்பு அல்லது இணக்கம் இல்லாமல் தனித்து நின்று செயல்பட்டு வந்தன. இவைகளை ஒருங்கிணைத்து 1908-ம் ஆண்டு தென்னிந்திய ஐக்கிய சபை (South India United Churches - S.I.U.C) என்ற அமைப்பை உருவாக்கினா். இந்த அமைப்பில் திருவிதாங்கூா் எல்.எம்.எஸ். சபையின் திருவிதாங்கூா் சபை ஆலோசனைச் சங்கம் (Travancore Chruch Council) ஓா் அங்கமாயிற்று. எனினும் அதன் Congregational தன்மையை அது விட்டுக் கொடுக்கவில்லை. இதனடிப்படையில் எல்.எம்.எஸ். சபைக்கு உட்பட்ட திருவிதாங்கூா் சபை ஆலோசனைக் கவுன்சில் (Travancore Chruch Council) தனியாக ஒரு சபை நியமத்தை (Constitution and Rules) 1939-ம் ஆண்டு இயற்றியது. இந்தச் சட்டமும் முழுமையான காங்கிரிகேஷனல் கோட்பாட்டை கொண்டதாக இருந்தது. இந்த சட்ட விதிகளின்படியும் சபைகளின் தலைவராக பேராயா் (Bishop) என்ற பதவியை உருவாக்கிடவில்லை.

காலத்தின் கட்டாயத்தால் இந்திய கிறிஸ்தவ சபைகளின் ஐக்கியம் மிகவும் இன்றியமையாததாகி விட்ட நிலையில், 1947 ஆகஸ்டு 15-ம் நாள் இந்தியா சுதந்திர நாடாகியது. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடனேயே பல்வேறு பிரிவுகளாக இயங்கி வந்த சீர்திருத்த கிறிஸ்தவ சபைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அதனதன் தனித்தன்மைகளை சற்று விட்டுக் கொடுத்து தென்னிந்திய திருச்சபை (Church of South India -C.S.I.) என்ற அமைப்பை உருவாக்கின. இந்த அமைப்பு 1947 செப்டம்பர் மாதம் 27-ம் நாள் அமலுக்கு வந்தது. இந்த அமைப்பில் தென் திருவிதாங்கூரில் இயங்கி வந்த திருவிதாங்கூர் சபையாலோசனைச் சங்கம் (எல்.எம்.எஸ்.) வட திருவிதாங்கூர் கிறிஸ்தவ மிஷனெரிச் சங்க (CMS) தமிழ் நாட்டிலுள்ள ஆங்கிளிக்கன் சபைகள், மெதடிஸ்டு சபைகள் அனைத்தும் ஒருங்கிணைந்தன. இதில் சென்னை, மதுரை, மலபார், ஜாப்னா, கன்னடம், தெலுங்கு தேசங்களில் உள்ள அனைத்து சீர்திருத்த சபைகளும் அடங்கும். 1950-ல் பர்மா மற்றும் இலங்கை சபைகளும் வந்து இணைந்தன.

இவைகள் இணைந்த உடனே அதற்கென ஒரு சட்ட அமைப்பை உருவாக்கினர். எல்.எம்.எஸ். சபைகள் தமது காங்கிரிகேஷனல் கோட்பாட்டை இழந்து, பேராயர் (Bishop) ஆட்சியையும், குருமார்களின் சபையையும் (Synod) ஏற்றுக் கொண்டது. காங்கிரிகேஷனல் கோட்பாட்டிலிருந்து குருமார்களின் ஆட்சி முறையை (Episcopal form) ஏற்றதினால் சபைகள் அனைத்தும் குருமார்களின் போஷிப்புக்காக மட்டும் செயல்பட வேண்டியதாயிற்று. இதனால் பேராயர் ஒரு சர்வாதிகாரியாகவும், குருமார்கள் அவரின் கீழ் பணியாற்றுகின்ற உயர் அதிகாரிகளாகவும் மாறினர். 1947-ம் ஆண்டு வரையறுத்துக் கொள்ளப்படட C.S.I. சட்டத்தில் பேராயருக்கு என பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. மக்களே அதிக அதிகாரம் படைத்தவர்களாக கருதப்படுகின்றனர். இந்த மாபெரும் நாட்டிற்கு குடியரசுத் தலைவர் தலைமைத் தாங்குவதைப் போன்று, மாநிலங்களில் அன்னாரின் பிரதிநிதியாக ஆளுநர் ஒருவர் ஆட்சி பீடத்தில் உள்ளார். இருப்பினும் பாராளுமன்ற கூட்டங்களுக்கு இவர் தலைமை தாங்குவதில்லை. அதே போன்று மாநில சட்ட

சபைகளுக்கும், ஆளுநர்கள் தலைமை தாங்குவதில்லை. பாராளுமன்ற இரு சபைகளின் கூட்டு கூட்டத்தில் குடியரசு தலைவர் அரசின் கொள்கை விளக்க உரையை வருடத்திற்கு ஒரு முறை நிகழ்த்துவதைப் போன்று, மாநில சட்டமன்றத்திலும் ஆளுநர் கொள்கை விளக்க உரையை வருடத்திற்கு ஒரு முறை நிகழ்த்துவது மரபு. ஆனால் சீர்திருத்த கிறிஸ்தவர்களின் காரியத்தில் இந்த ஜனநாயக விதிமுறைகள் எதையும் பின்பற்றாமல், பேராயரின் எதேச்சாதிகார ஆட்சி முறை பின்பற்றப்படுகின்றது. பேராயர் என்பவர் ஆதீன மாமன்றத்தில் கொள்கை விளக்கம் அல்லது செயல்திட்ட விளக்கம் போன்ற உரைகள் எதுவும் செய்யாமல், எல்லா மாமன்ற கூட்டங்களிலும் தலைவராக இருந்து செயல்படுகிறார். இந்த முறை இந்திய ஜனநாயக கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிர்மறையானதாகும்.

இந்த ஜனநாயக ஆட்சியில் ஒரு பேராயர் மக்களால் தேர்வு செய்யப்பட்டாலும், அவர் "Constitutional Bishop" ஆகாமல் ஒரு "Despot" (Constitution 1952) ஆக செயலாற்றுவதற்கு சினாடு சட்டம் முதலில் வழிவகுத்தது. பாகிஸ்தான் நாட்டு ஜனாதிபதியாக இருந்த பர்வேஷ் முஷாரப் போன்று அளவில்லாத அதிகாரப் பிரியராக இருந்து வருகிறார் நமது பேராயர் என்றால் மிகையாகாது. C.S.I. Constitution (1952) படி பேராயரின் அதிகாரங்கள் என்ன என்று முதல் முதலாக வரையறுக்கப்பட்டன.

பேராயத்தின் பார்லிமென்ட் என்ற தோரணையில் செயல்படுகின்ற பேராய மாமன்றத்தின் தலைவராக இருப்பதனால் அவர் எந்த கமிற்றியிலும், குழுவிலும் அல்லது அவைகளிலும் கலந்து கொள்ளலாம் என்ற உரிமை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தேவையென்றால், சட்டத்திற்கு உட்பட்டு மாமன்றத்தின் தீர்மானத்தை நிறுத்தி வைப்பதற்கும் அவருக்கு உரிமை வழங்கப் பட்டுள்ளது.

"The Bishop of the Diocese shall be ex-officio President of the Diocesan Council and shall have the right to take part in the proceedings of any standing committee." (Chapter - VII - Rule 2 - Page 53 of C.S.I. Synod Constitution 1952)

"The Bishop of the Diocese shall have the right of suspending the operation of decisions or resolutions of the Diocesan Council . . . . . ." (Ibid - Page 55)

இந்த உரிமையை பேராயர் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இச்சட்டம் வழி வகுக்கின்றது. இதேபோன்ற சரத்து ஒன்று தென் திருவிதாங்கூர் பேராய சட்டத் திட்டத்திலும் புகுத்தப்பட்டுள்ளது. "The Bishop shall have the right to suspend the operation of decisions or resolutions of the Diocesan Council (Sub Rule VI of Church of South India - South Travancore Diocesan Council - Constitution and Rules1947 - Page 40)

"As President of the Diocesan Council, the Bishop is authorised (a) to attend and take part in the proceedings of any council, board, committee sub-committee, or Church meeting . . . . . " Ibid - Page 40)

ஆனால் மற்ற Committee அல்லது Council அல்லது Board கூட்டங்களில் பொதுவாக அவர் கலந்து கொண்டு தலைமை தாங்குவதில்லை என்றொரு நெறியையும் அதில் கூறப்பட்டுள்ளது (He shall not ordinarily preside, but may do so, if for some special reason the usual chairman so requests;). ஆனால் சில பேராயர்கள் அவ்வாறு செய்யாமல் இந்த சரத்தை நீக்கம் செய்வதற்கு முயன்று பிற்காலத்தில் வெற்றியும் பெற்றுள்ளனர். தற்சமயம், இவர் கக்கூஸ் கமிட்டியிலிருந்து பேராய மாமன்றம் வரையிலான அனைத்து கூட்டங்களிலும் தலைமை வகித்து தனது பொன்னான சமயத்தை வீணடித்து வருகின்றார். இதனால் பேராயர் ஒரு நீதிபதியாக அத்தியட்சாதீனத்தில் செயல்பட முடியாத நிலையில் தொடர்ந்தாலும், அதிலிருந்து தன்னை விடுவித்து கொள்வதற்கு விரும்பாமல், தன்னிகரில்லாத "Despot" ஆக செயலாற்றுவதையே விரும்புகின்றார்.

தவிரவும், C.S.I. சட்டம் 1982-ன் படி பேராயருக்கு அத்தியட்சாதீன பண விஷயங்களில் எவ்வித அடக்கியாளுமையும் கிடையாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. (See Rule 10-Finance- பக்கம் 26 of the Constitution of C.S.I. 1982). "The Bishop of the Diocese shall not as Bishop or as President of the Diocesan Council have any separate controlling authority over the finance of the Diocese".

இந்த சரத்து C.S.I. தென் திருவிதாங்கூர் சட்டப் புத்தகம் 1947-ல் சொல்லப்படவில்லை என்பதால் பண விஷயத்தில் பேராயருக்கு எவ்வித மேலாண்மையும் இல்லை என்பதையே அது வெளிப்படுத்துகிறது. இந்த பொறுப்பு முழுவதும் பேராய பொக்கிஷதார் (Diocesan Treasurer)-க்கு தரப்பட்டுள்ளது. (See Rule 85 of the Constitution and Rules 1947 of the C.S.I. South Travancore Diocesan Council Page - 41)

ஆனால் 2003-ல் C.S.I. Synod (குருமார்களின் சபை) இந்த நிலையை சற்று மாற்றியமைத்து, பேராயருக்கு பேராயத்தின் பண விஷயங்களில் ஒரு மேலாக்கியத்தை அளித்து அவரது நிலையை உயர்த்தியது.

"10 Finance : The Bishop of the Diocese shall have a general oversight of the financial administration of the Diocese but shall not exercise any direct control over the finances" (Rule 10 of chapter V of the Constitution of the C.S.I. - 2003 - Page 37)

"அதனால் தான் பழைய காலத்தில் பிஷப்மார்கள் தங்கள் இஷ்டம் போல் டையோசிஸ் பணத்தை செலவு செய்ய முடியாமல் போனதால் அவர்கள் காலத்தில் பண ஊழல் நடக்கவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தை 2003-ம் ஆண்டு திருத்தி அமைத்துக் கொண்டதால் இப்போது கமிட்டி கூட்டாமல், அதற்கென்று உள்ள நிர்வாக கமிட்டியின் அனுமதியும் பெறாமலே பிஷப்மார் கமிட்டியில் உள்ள சிலரை தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு தங்கள் இஷ்டம் போல் டையோசிசிலிருந்து பணத்தைக் கையாடல் செய்து விட்டு, பிறகு கமிட்டி மெம்பர்களிடம் தனித்தனியாக கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். மேலும் பிஷப்மார்கள் அவரவர் டையோசிஸ்களில் தனி அதிகாரம் பெற்றவர்களாக இருப்பதால் C.S.I. டையோசிஸ் பிஷப்மாரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு பிஷப் தன் 'வீட்டோ' அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினாலும் கோர்ட் (Court) பிஷப்மாரை தண்டிக்க C.S.I. சட்டம் இடம் கொடுக்கவில்லை". (ஜாமக்காரன் - அக்டோபர் 2008 - பக்கம் 13)

இருப்பினும் அண்மையில் குமரிப் பேராயத்தில் நடந்த பண சம்மந்தமான பிரச்சினையில் பேராயர் மறைதிரு. தேவகடாட்சம் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டு செயல்பட்டிருக்கிறார்.

தவிரவும் இவருக்கு பின் துணையாக நிர்விசாரிகளான 'லே' அங்கத்தினர்கள் பெருவாரியாக நின்று துணை புரிந்துள்ளனர் என்பதால், இவர் பண விஷயங்களிலும் ஒரு சர்வாதிகாரியாகச் செயல்பட்டுள்ளார் என்பது தெளிவு.

தவிரவும் போதகர்களுக்கு போதகாபிஷேகம் செய்து வைப்பதில் கூட பேராயருக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது. சபை மக்கள் (Congregation) பரிந்துரைப்பவர்களை பேராயர் அருட்பொழிவு செய்யலாம் என்று சினாடு சட்டம் கூறுகிறது.

"Such rules shall always provide that one stage or other there shall be recommendation by or consultation with the congregation or pastorate to which the candidate belongs as well as such other bodies or persons (the latter including lay men and not less than three presbyters) as the rules may provide and also acceptance of the candidate both by the Bishop and by the Diocesan Council or some Diocesan body appointed for the purspose."***(See Rule 4 to the Constitution of the C.S.I. 1952 & 1982 - Page 45)***

ஆனால் இந்த முறையை 2003-ல் உருவாக்கப்பட்ட C.S.I. சினாடு சட்டம் மாற்றிவிட்டது.

"The Bishop of the Diocese will accept candidates for ordination and ordain them, acting in these matters in accordance with the rules . . . . ." என்று திருத்தப்பட்டுள்ளது. (See chapter V Section A-I-sub-Rule 5 in Page 35 of the Constitution of the C.S.I. 2003)

இந்த திருத்தப்பட்ட சட்டச்சரத்துப்படி, போதகர்களாக அருட்பொழிவு தருவதற்கு முன்பு சபை போதகரையும், பேராய மாமன்றத்தையும், ஏனைய சபைகளையும், சபையாரையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நியதியை முற்றிலுமாக களைந்து விட்டு, பேராயரே நேரடியாக போதகர்களுக்கு அருட்பொழிவு செய்யலாம் என்று சட்ட திருத்தம் செய்து அவரை மீண்டும் பலம் வாய்ந்த ஒரு "Despot" ஆக்கியது குருமார்களின் சபை (Synod).

இவ்வாறு "பேராயர்" என்பவரை ஒரு சர்வாதிகாரியாக்கி சினாடு சட்டம் உருவாக்கப்பட்டது என்றாலும் மேலும் அன்னாரை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு ஒரு Despot ஆக்கியது கன்னியாகுமரி C.S.I. பேராயமும் அதன் 'லே' தலைவர்களும்.

முன் கூறியிருப்பதைப் போன்று,1809-ம் ஆண்டு முதல் 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபத்தி ஏழாம் நாள் வரை L.M.S. சபைகள் காங்கிரிகேஷனல் (சுதந்திர சபை) சபைகளாக இயங்கி வந்தன. அதற்கு பிறகு இந்நாள் வரை நம் மீது பேராயர் ஆட்சியை திணித்தது C.S.I. synod (Episcopic method). இந்த பரிணாமங்களுக்கு மக்கள் தலைவர்கள் மறைமுக பொறுப்பாளர்கள் ஆவர். அவர்களின் அறியாமையை பயன் படுத்துவதற்கு பேராயர்கள் என்றும் தவறவில்லை.

27-09-1947-ல் தென்னிந்திய திருச்சபை உருவானபோது இன்றைய கன்னியாகுமரிப் பேராயம் தென் திருவிதாங்கூர் பேராயத்தின் கீழ் இயங்கி வந்தது. 01-11-1956-ல் மொழி வழி மாநிலங்கள் உருவானதைத் தொடர்ந்து, தென் திருவிதாங்கூர் பேராயத்திலிருந்து பிரிந்து 19-12-1959-ல் கன்னியாகுமரி பேராயமாக தனித்து நின்று இயங்கத் தொடங்கியது. அன்றைய நாளிலேயே ஒரு புதிய Constitution எழுதப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. C.S.I. (Synod) Constitution அடிப்படையில் பேராயங்களில் ஒரு உதவி பேராயர் நியமனம் செய்யலாம் என்று கூறுகிறது. ஆனால் இந்தப் பதவியை கன்னியாகுமரி C.S.I. பேராய சட்ட விதிகளில் சேர்த்துக் கொள்ளவில்லை. பேராயரின் செயல் முறைகள் மற்றும் கடமைகளை தென் திருவிதாங்கூர் பேராயச் சட்ட திட்டங்கள் (1947) போன்றே இங்கும் வகுத்துக் கொள்ளப்பட்டன. இந்த சட்ட திட்டத்தின் அடிப்படையில் (1959) பேராயர், பேராய மாமன்றத்துக்கு தலைமை தாங்குவதோடு மற்ற குழுக்களுக்கும் தேவையை முன்னிட்டு அதன் கூடுகையில் கலந்து கொள்ளலாம். அனால் பண நிர்வாகத்தில் பேராயருக்கு அதிகாரமோ அல்லது விலக்கோ கூறப்படவில்லை. பேராய பொருளாளருக்குத் தான் நிதி நிர்வாகத்தில் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதால் பேராயருக்கு நிதி நிர்வாகத்தில் எவ்வித பொறுப்பும் இந்த Constitution-ல் வழங்கப்படவில்லை.

பொருளாளரைத் தவிர, அவருக்கு உதவியாக நின்று செயல்பட ஒரு உதவிப் பொருளாளர் பதவியும் உருவாக்கப் பட்டுள்ளது. இது Synod Constitution-ல் சொல்லப்படவில்லை என்றாலும், பேராயத்தின் நலன்களை கருத்தில் கொண்டு இங்கே இதை நடைமுறை படுத்தினர் அன்றைய அறிவு படைத்த 'லே' தலைவர்கள்.

இதைத் தொடர்ந்து 1960 கன்னியாகுமரிப் பேராயத்திற்கு திருத்திய சட்ட விதிகள் (Constitution) ஒன்று இயற்றப்பட்டது. இதில் ஒரு சில கருத்துக்கள் திருத்தப்பட்டாலும், அது Synod Constitution னைப் போன்றே அமைந்திருந்தது. 1993 ஜனவரி மாதம் 16-ம் நாள் பேராய மாமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திருத்தங்கள்தான் ஓரளவுக்காவது மிதவாதியாக இருந்த பேராயரை ஒரு கொடுங்கோல் மன்னனைப் போன்று உருவாக்கி விட்டது. இந்த சட்டத் திருத்தங்களை தாங்கி 1993-ல் புதிய Constitution and Rules அமலுக்கு வந்தது.

1959 கன்னியாகுமரிப் பேராய சட்ட விதிகளிலும், 1960 சட்ட விதிகளிலும் பேராய கணக்கு வழக்குகளில் பொருளாளருக்கு உதவியாக ஒரு உதவி பொருளாளரை நியமித்துக் கொள்வதற்கான புதிய சரத்து உருவாக்கப்பட்டிருந்தது. பணம் பட்டுவாடா செய்வதற்கு முன்பாக அப்பணப்பட்டுவாடா உண்மையானதுதானா, தேவையானதுதானா, நியாயமானதுதானா? என்ற தன்மைகளை ஆராய்ந்து தருகின்ற பொறுப்பு இந்த உதவி பொருளாளருக்குத் தரப்பட்டிருந்தது. பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் ஆட்சி காலத்தில் திரு. கிறிஸ்டோபர் (றேஞ்சர்) என்பவர் உதவிப் பொருளாளராக இருந்தமையால் பேராயருக்கும், ஆதீன பொறியாளருக்கும் இஷ்டம்போல் பணம் பெறுவதற்கு இயலாமற் போயிற்று. இவர் தேவையற்ற, வீணான பண விரயத்தைத் தவிர்த்தார். எனவே இந்த பதவியை ஒழிப்பதற்கு பேராயர் விரும்பினார். நிதி நிர்வாக முறைகளை முழுமையாக அறிந்தவர் பொருளாளர் அல்ல. நிதி நிர்வாகத்தில் திறமையுடையவர் உதவி பொருளாளர் தான். உதவி பொருளாளர் இருந்தமையால், ஆதீன சுகவாசிகள் விரும்பியபோதெல்லாம் பணம் கிடைப்பதில் தடங்கல்கள் உருவாயின. எனவே இந்த பதவி பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் காலத்தில் ஒழிக்கப்பட்டு, அன்னார் மீண்டும் நிதி நிர்வாகத்திலும் ஒரு சர்வாதிகாரி ஆகி விட்டார். இந்த ஒழிப்பின் பின்விளைவுகள் எவ்வாறிருக்கும்

என்பதை உணர்ந்து கொள்வதற்கு நுட்பத் திறன் அற்ற ஆட்டு மந்தைகளுக்கு அன்று முடியில்லை 1993-ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட சட்டப் புத்தகத்தில் இந்த சரத் நீக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். பண முறை கேடுகளை தடுப்பதற்காக மதி நுட்பமுடைய தலைவர்களான மார்ஷல் எ. நேசமணி, திரு. குணமணி, திரு. சி.கே. தாஸ், டாக்டர். மத்தியாஸ், ஆயில் கடை றாபின்சன் போன்றோர்கள் உருவாக்கி வைத்திருந்த இந்த தடைக் கல்லை, பேராய மாமன்றத்தில் நிர்விசாரிகளான 'லே' அங்கத்தினர்களும், அதன் தலைவர்களும் தகர்த்தெறிந்து பேராயரை மீண்டும் பலம் வாய்ந்த ஒரு சர்வாதிகாரியாக்குவதற்கான முதற் கல்லை வைத்தனர்.

அடுத்த முயற்சி கமிற்றி, கவுன்சிலுகளில் பேராயர் நிரந்தர தலைவர் ஆவார் என்ற சட்டத் திருத்தமாகும். C.S.I. Synod-ன் படி,

" . . . . . . the Bishop of the Diocese shall be exofficio President of the Diocesan Council, and shall have the right to take part in the proceeding of any standing committee, board or council of the diocese." (Chapter VIII - Rule 2)

இதனடிப்படையில் தேவையின் பொருட்டு எந்த கமிட்டியிலோ, குழுவிலோ அல்லது சபையிலோ பங்கேற்க பேராயருக்கு உரிமையுண்டு. ஆனால் அவ்விடங்களில் தலைமையேற்றுக் கொள்வதற்கு அவருக்கு உரிமை தரப்படவில்லை. ஆனால் 1993 ஜனவரி மாதம் 15 மற்றும் 16-ம் நாட்களில் கூடி கன்னியாகுமரி பேராய மாமன்றத்தில் நடந்தேறிய சட்ட திருத்தத்தால், ஒரு சில முக்கியத்துவமில்லாத கமிட்டிகளைத் தவிர்த்து மற்றெல்லா Committees, Boards, Councils களிலும் "பேராயரே தலைவர்" என்ற முறை முதன்முதலாக கன்னியாகுமரிப் பேராயத்தில் அமலாக்கப்பட்டது. இந்த சட்ட திருத்தம் Synod சட்டத்திற்கு முற்றிலும் எதிரான செயல் ஆகும். ஆனால் இதற்கு எதிராக எந்த 'லே' தலைவரோ அல்லது உறுப்பினரோ தனது "எதிர்ப்பை" இந்நாள் வரை தெரிவிக்கவோ, பதிவு செய்யவோ இல்லை. இந்த "வரத்தை" லே அங்கத்தினர்களே வலுக்கட்டாயமாக பேராயருக்கு வழங்கிவிட்டனர். இதன் பின் விளைவுகள் பேராயத்தில் பல்வேறு குழப்பங்களுக்கும், நீதிமன்ற தலையீடு களுக்கும் வழிகோலியது. தவிரவும் பேராயர் ஒரு உயர்நீதிமன்ற நீதிஅரசர் என்ற

நிலையிலிருந்து தரம் தாழ்ந்து கா்வமுடைய ஒரு அரசியல் தாதாவாக கீழ் இறங்கினாா். குண்டோதரன் விரும்பிய வரங்களை யெல்லாம் அருளிய சிவபெருமான், அவனின் வெறித் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மூன்று லோகங்களிலும் ஓடி ஒளிய வேண்டியதானதைப் போன்று பேராய மக்கள் நீதிக்காக அனைத்து நீதிமன்றப் படிகளிலும் தவம் கிடக்கின்றனா். இது அவா்களாகவே வரவழைத்துக்கொண்ட வினைகள் ஆகும்.

இச்சட்டத் திருத்தத்தால் பேராயா் தலைவா் ஆன குழுக்களின் விபரம்

1. Church Board & its standing committee
2. Ministerial Committee
3. Committee on Missions
4. Conference of Presbyters
5. The Board of School Education
6. The Board of Matriculation School
7. The Board of School for the Blind
8. The Board of School for the Deaf
9. The Board of Technical Education
10. The Governing Board of Scott Christian College
11. The Governing Board of N.M.C. College.
12. The Governing Board of W.C. College.
13. The Board of Health, etc.
14. The Board of Embroidery
15. The Board of Properties
16. The Board of Shopping Centre.
17. The Board of Printing Press.
18. The Board of Book Depots
19. The Board of Children's Home.

20. The Board of Day Care Centres
21. The Board of CSI Rehabilitation & Training Centre.
22. The Board of Projects.
23. Finance Sub-Committee, etc.,

ஆனால் சினாடு சட்டம் VII 10-ன்படி நான்கு Committee-களில் மட்டுமே தலைவராக இருப்பதற்கு உரிமை வழங்கப்பட்டது.

"The Bishop of the Diocese shall be the president of the Executive Committee, Ministerial Committee, Finance Committee and Property Committee. For other Boards and Committees, the Executive Committee shall appoint suitable clergy or lay members of the church as chairpersons . . . " (C.S.I. Constitution - 2003 - Page 72) இந்த விதியை நமது பேராயர் புறம் தள்ளிவிட்டு, அவர் அனைத்து குழுக்களிலும் சென்று ஒட்டி விட்டு தனது அபிலாஷைகளுக்கு இணங்க செயலாற்றி வருகிறார். இதற்கு நமது "லே" அங்கத்தினர் விளக்குப் பிடிக்கின்றனர்.

பேராயரின் அதிகார மோகத்தைப் பார்த்தால் Toilet Cleaning Committee (துப்புரவுத் தொழில்) என்று ஒன்று இருக்குமேயானால் அதற்கும் தலைவராக இருப்பதை இவர் தவிர்க்க மாட்டார் என்பது இதனால் உறுதியாகிறது. அந்த அளவுக்கு பேராயரின் பதவியின் தரம் தாழ்ந்து விட்டது. வெட்கம்! அவருக்கு அல்ல! நமக்கு!!

அண்மையில் பேராயத்தில் ஒரு சட்டச் சிக்கல் உருவாயிற்று. பேராய பொருளாளர் டாக்டர் M.J. மோசஸ் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் வெளிநாடு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் தனது பொறுப்பை யாரிடம் ஒப்படைத்துவிட்டு செல்வார்? இதற்கென சட்டத்தில் விதிமுறைகள் காணப்படவில்லை. ரத்து செய்யப்பட்ட உதவி பொருளாளர் பதவி ரத்து செய்யப்படாமல் இருந்திருந்தால் கூட அவரிடம் தனது பொறுப்பை கொடுத்துவிட்டு வெளிநாடு செல்வதற்கு வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் அந்த பதவி ரத்து செய்யப்பட்டு விட்டப்படியால் டாக்டர் மோசஸ் பொருளாளர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உருவாயிற்று. அவரும் பதவியை ராஜினாமா செய்து

விட்டார். பதவி காலியாக இருந்தமையால் அத்தியட்சாதீன நிதியை சரிவர கணக்கு வைக்க முடியாமற் போய்விட்டது. இதனால் பணத்தை வங்கியில் கட்டாமல் கையில் வைத்துக் கொண்டு கண்டபடி வரவு செலவுகள் செய்தனர். ஆனால் உதவி பொருளாளர் ஒருவர் இருந்திருப்பாரேயாகில் பொருளாளர் பொறுப்பை அவர் சரியாக கவனித்திருப்பார் அல்லவா? அவ்வாறாயின் மோசஸ் வெளிநாடு செல்வதற்காக தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலை எழாதது மட்டுமின்றி, அவர் திரும்பி வந்த உடன் மீண்டும் பொறுப்பை ஏற்று, பொருளாளராக செயலாற்றியிருக்கலாமல்லவா? அறிவிலிகள் மேற்கொண்ட நடவடிக்கையால் இன்று இதன்பால் நீதிமன்ற வழக்குகள் பல தாக்கலாகியுள்ளன. இந்த பதவியை காலி செய்வதற்கு முன்னாள் பேராயர் ஜி. கிறிஸ்துதாஸ் தான் முன்கை எடுத்தவர் என்பது கவனத்திற்குரியது. இதனால் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று தலைவர்கள் இன்று படியேறித் திரிகின்றனர்.

வெளிநாடு சென்றிருந்த டாக்டர் மோசஸ் இந்தியா வந்த வேளையில், பேராயர் அவர்கள் இங்கிலாந்தில் "லாம்பத்" என்ற அரண்மனையில் நடந்த அகில உலக பேராயர்களின் மாநாட்டுக்குச் செல்ல வேண்டிய திரக்கில் இருந்துள்ளார். ஆகையால் தான் இல்லாத நேரத்தில் புதிய பொருளாளர் ஒருவரை காரிய நிர்வாகக் குழு தேர்வு செய்யக்கூடாது என்றும், வங்கி கணக்குகளை அத்தகைய புதிய பொருளாளர் இயக்கக் கூடாது என்றும் ஓர் உறுத்துக் கட்டளையைப் பிறப்பித்து விட்டுச் சென்றார். இத்தகைய உறுத்துக் கட்டளை பிறப்பிப்பதற்கு பேராயருக்கு உரிமையோ, அதிகாரமோ கிடையாது. வேண்டுமென்றால் காரிய நிர்வாகக்குழுவின் நடவடிக்கை சட்டத்திற்கு புறம்பானது என்று கண்டால் அதன் நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ அவருக்கு அதிகாரம் உண்டு. இதற்கும் அவர் அந்த சபை நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும். தவிரவும் Synod Constitution-ல் கூட இத்தகைய உரிமை பேராயருக்குத் தரப்படவில்லை. (See VII -ii of Synod Constitution - Page 73). அதிலும் நிதி சார்புடைய காரியங்களுக்கு Diocesan Council-க்குக் கூட எவ்வித உரிமையும்

இல்லை என்று அதே சட்டப் பிரிவு தெளிவுப்படுத்தியுள்ளது. அதற்கு முழு பொறுப்பாளி காரிய நிர்வாக குழு தான். (See Rule 6 to Chapter VIII - Page 71 of C.S.I. Constitution - 2003) அந்த குழுவுக்கு பொருளாளரை நியமிப்பதற்கான உரிமை உண்டு. அதன் உரிமையை நிறைவேற்றிய போது, அதை பேராயர் தடை செய்துள்ளார். இதனால் தலைவர்கள் நீதிமன்றம் செல்ல வேண்டியதாயிற்று.

கன்னியாகுமரி பேராயத்தில் துணைத் தலைவர் பதவியையும் உருவாக்கப்பட்டுள்ளது. தலைவர் இல்லாத காலங்களில் அன்னாரது பணியை இடர்பாடு இல்லாமல் செய்வதே இவரின் முக்கிய கடமையாகும்.

"The Vice President - shall act for the president in his absence." (Subrule 7 to Rule 65 of Chapter XXX - Page 73 of Constitution of K. K. Diocese)

தலைவர் இல்லாத காலங்களில் இவரது பணியை ஒழுங்கு செய்வதற்கு பேராயருக்கு உரிமையில்லை. தலைவரது பணிகள் அனைத்தையும் இவர் செய்வதற்கு சட்டப்படி எத்தகைய தடையும் இல்லை. துணைத் தலைவர் ஒரு அபிஷேகம் பெற்ற போதகராக இருந்தால் அன்னார் Ministerial கடமைகளைக் கூட நிறைவேற்றலாம். அதைத் தடை செய்வதற்கும் இவருக்கு தார்மீக உரிமை இல்லை.

பேராயர் ஜி. தேவகடாட்சம் குமரிப் பேராயத்தில் இல்லாதிருக்கின்ற வேளைகளில், துணைத் தரைவரான அருட்திரு. K. M. தேவராஜ் தலைவராக இருந்து செயல்படுவதை ஏன் இவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை? தனது உரிமைகள் பறிபோய் விடும் என்ற அச்சமோ? என்னவோ. அதேபோன்று டாக்டர் மோசஸ் மீண்டும் பொருளாளர் ஆவதில் பேராயர் ஜி. தேவகடாட்சத்திற்கு ஏன் இசைவு இல்லை? இவைகள் அனைத்தும் பேராயர் ஒரு தன்னலம் நாடுகின்ற சர்வாதிகாரி என்பதையல்லவா சுட்டி நிற்கிறது? ஒரு ஜனநாயக நாட்டில் இப்பேர்பட்ட மதத் தலைவர்களால் குழப்பங்கள் தான் அதிகமாகிவிடும். எனவே இப்பேர்ப்பட்டவர்களை ஜனநாயக அடிப்படையில் நாட்டின் நலன் கருதி அடக்கி வைக்க வேண்டியது இன்றைய தேவையாகிறது. ஒரு காண்டாமிருகத்திற்கு

மூக்கணாங்கயிறு மாட்டுவது என்பது இயலாத காரியம். ஆனால் அதை இன்னொரு காண்டாமிருகத்தைக் கொண்டு கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். அதேபோன்று மதம்பிடித்த யானையை இன்னொரு யானையால் தான் சாந்தப் படுத்துவதற்கு இயலும். இதைப் போன்ற நடவடிக்கைகள் தான் குமரிப் பேராயத்தின் இன்றைய உடனடித் தேவை. இதற்குரிய சட்ட திருத்தங்களை "லே" அங்கத்தினர்கள். விருப்பு, வெறுப்பு, கட்சி பாகுபாடின்றி செய்தே ஆக வேண்டும். அதற்கு சினாடு சட்டம் நமக்கு உரிமை வழங்கியுள்ளது.

C.S.I. கோட்பாட்டைத் துணிந்து மிதித்தெறிந்த செயலை பேராயர் ஜி. தேவகடாட்சம்... அன்று செய்தார். அதுதான் பெந்தேகோஸ்து பிரதர் யோகன்னானின் பேராயர் அருட்பொழிவு நிகழ்ச்சி. வட நாட்டு பேராயர்களோடு பேராயர் ஜி. தேவகடாட்சமும் அந்த ஆடம்பர அருட்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு யோகன்னான் தலையில் கை வைத்து அருட்பொழிவு நடத்தினார். இது C.S.I. அமைப்பிற்கே இழுக்கு. பேராயரின் இந்த இழிச்செயலை கன்னியாகுமரிப் பேராயமோ, அதன் உறுப்பினர்களோ, தலைவர்களோ, இன்றளவும் கண்டு கொள்ளாமல், அவருக்கு வெண்சாமரை வீசுகின்றனர். ஆனால் வட நாட்டுப் பேராயங்களிலிருந்து வந்து (C.N.I.) மேற்படி அருட்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இரண்டு பேராயர்களையும் அங்கே நிரந்தர பதவி நீக்கம் செய்தனர். நமக்கோ! மானமும் இல்லை, வெட்கமும் இல்லை. 'லாஸ் வோகாஸ்' பண்பாடு தான் இங்கேயும் காணப்படுகிறது. இந்த இழிவை தட்டிக் கேட்பதற்கு துணிச்சல் இல்லாத இந்தப் பேராயத்தை ஜி. தேவகடாட்சம் மிதித்து துவசம் செய்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அந்த அளவிற்கு பேராயர் சர்வாதிகாரம் படைத்த பணியாளராகியுள்ளார். பேராயத்துக்கு தானமாக கிடைத்த சொத்தை வேறொரு பேராயர் தனதாக்கி கோடிகளை சம்பாதித்துக் கொண்டதையும் நாம் சீரணித்துக் கொண்டோமே! வெளிநாட்டு பண உதவியை தவறாகப் பயன்படுத்தி தனது பெயருக்கு (பினாமி என்று கூட சொல்லப்படுகிறது) நிலபுலன்கள் வாங்கி சுகவாழ்வு வாழ்கின்ற போதகருக்கும் நாம் பாத சேவை செய்யத் தவறவில்லையே? நாம் என்ன கரக்குட்டிகளா? தகப்பன் பெயர் தெரியாதவர்களா? சிந்திக்கக்கக் கூடாதா? இவைகளுக்கு முடிவுதான் என்ன?

"5. Every Diocesan Council has the power to make rules and pass resolutions and take executive action for the general Management and good Government of the church in the diocese . . . . ." (Rule 5 to Chapter VIII of C.S.I. constitution - 2003 - Page 70)

இதன் முதற்படியாக ஒரு துணை பேராயர் பதவியை குமரிப் பேராயத்திற்கு உருவாக்கிட வேண்டும். பேராயர் வெளிநாடு செல்லும்போது அவரது பணியை இவரால் தங்கு தடையின்றி கவனிக்க முடியும். அதே போன்ற ஒரு உதவி பொருளாளர் பதவியையும் உருவாக்கிட வேண்டும். இவரால் பொருளாளருக்கு மிகவும் உதவியாக செயலாற்றிட இயலும். தவிரவும் பொருளாளர் வெளிநாடு செல்வதென்றாலும் பொருளாளர் பொறுப்பை இவர் ஏற்கலாம். அதேபோன்று ஒரு இணைச் செயலரும் தேவை.

சினாடு சட்டத்தில் கூறப்பட்டிருப்பதைப் போன்று பேராயர் பேராய மாமன்றம், காரிய நிர்வாகக்குழு, மினிஸ்டீரியல் கமிற்றி, நிதிக்குழு மற்றும் சொத்து பரிபாலனக் குழுக்களில் மட்டும் தலைவராக இருந்து செயலாற்றும் வகையில் கன்னியாகுமரி அத்தியட்சாதீன சட்டப் புத்தகத்தில் (1993) உடனடி திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

பேராயத்தில் சீராக நிதி நிர்வாகம் செய்யும் பொருட்டு, அதன் பொருளாளர் மற்றும் உதவி பொருளாளர்களை, மாமன்றமே, மற்ற நிர்வாகிகளைத் தேர்வு செய்வதைப் போன்று, நேரடியாக தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறாயின் நிதி நிர்வாகம் எத்தகைய நெருக்குதலுக்கும், தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கும், இரையாகாமல் தனித்து நின்று நேர்மையாக நடக்கும். அது போலவே இணைச் செயலரும் வேண்டும். இதற்கு பேராயரும், சில லே - அங்கத்தினர்களும் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதன் நோக்கம் என்ன என்று புரியவில்லை. புளிப்பானையில் விரல் விட்டு நக்குவதற்கு இயலாது என்பதால் இருக்கலாமோ? என்னவோ?

பேராய மாமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை இன்றைய எண்ணிக்கையை விட மூன்றில் ஒரு பங்காக குறைப்பது நல்லது. அதே போன்று போதகர்களின் எண்ணிக்கையையும் கணிசமாக குறைத்திட வேண்டும். District Ministers, Pastorate Ministers,

Ordained Minisers, Unordained Church Workers என்று அவர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, விகிதாச்சார முறையில் அவர்களுக்கு பிரதி நிதித்துவம் அளிக்கப்படுவது சாலச் சிறந்தது. அங்கி போட்டவர்கள் அனைவரும் மாமன்ற உறுப்பினர்கள் என்ற ஜனநாயக விரோத முறையை மாற்றித்தான் ஆக வேண்டும்.

ஆனால் இத்தகைய சட்டத் திருத்தங்கள் நிறை வேற்றுவதற்கு பேராயரும், போதகப் பிரதிநிதிகளும் இசைவு தரமாட்டார்கள். ஏனென்றால் 'பேராயம் பேராயருக்குரியது' என்ற சித்தாந்தத்திற்கு சில கட்டுப்பாடுகள் வந்துவிடும் என்பதால் இசைவு தர முன் வரமாட்டார்கள். ஆனால் அத்தியட்சாதீனத்தின் நலன் கருதி 'லே' அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு மனதுடன் நின்று இந்த மாற்றங்களை கட்டாயம் கொண்டு வந்தே ஆக வேண்டும். அவ்வாறாயின் ஜனநாயக முறை ஆட்சி இந்த பேராயத்தில் மீண்டும் மிளிர்ந்து, வளர்ச்சிப் பாதையில் குமரிப் பேராயம் விரைந்து முன்னேறும் என்பது உறுதி. சபையோர்கள் சிந்திப்பது சாலச் சிறந்தது. C.S.I. நாடார் கிறிஸ்தவ சங்கமாவது இதைக் குறித்துச் சிந்திக்குமா?

இளந்தோட்டம் கு. சுகுமாறன்

15 சி.எஸ்.ஐ. நம்பூதிரிகளும் நாயர்களும்

நம் நாட்டின் இப்பகுதியில், உயர் ஜாதியினர் என விலாசப்படுத்திக் கொண்டு சமுதாய அடுக்கின் மேல் தட்டில் அமர்ந்து, கீழ் ஜாதி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி சுக போகங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் நம்பூதிரி பிராமணர்களும் அவர்களுக்கடுத்த படியில் அமர்ந்திருந்த நாயர் இன மக்களுமாவர் என்பதை வரலாறு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. நம்பூதிரி-நாயர் ஆதிக்கம் 1956-ல் ஒரு முடிவுக்கு வந்தது. எனினும் கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராய மக்களுக்கு வேறொரு உருவில் இன்றும் நம்பூதிரி-நாயர் ஆதிக்கம் தொடரவே தொடர்கிறது. காரணம், அவர்களுக்குள் நம்பூதிரிகளும்-நாயர்களும் தோன்றியுள்ளார்கள்.

சி.எஸ்.ஐ. மக்களுக்கு, சபை அமைப்பு (Church Organisation) ஓர் உயிர்நாடி. காரணம், அதன் வாழ்வும் தாழ்வும் இவர்களுக்கு நேரிடைத் தொடர்புடையன. அந்த அமைப்பை ஆளுபவர்கள், மதப்பிரதிநிதிகளும் (பேராயர் மற்றும் போதகர்கள்) லே-பிரதிநிதிகளுமாவர். மதப்பிரதிநிதிகளை நம்பூதிரிகள் என்றும் லே-பிரதிநிதிகளை நாயர்கள் என்றும் அழைக்கலாம்.

பேராய அமைப்பு ஒரு ஜனநாயக அமைப்பு. ஒரு ஜனநாயக அமைப்பின் வளர்ச்சியின் திறவுகோல் எதிர்கட்சியின் விழிப்பான செயல்பாடு. அந்த திறவுகோல் துருப்பிடித்து அதன் கூர்மையை இழந்து விட்டால் ஜனநாயக அமைப்பே மக்கள் விரோத சக்தியாக மாறிவிடும். பேராயம் ஒரு ஜனநாயக

அமைப்பாக இருந்தாலும் தேர்தல் முடிந்ததும், எதிர்கட்சி திரைமறைவில் சென்று விடுகிறது - அடுத்த தேர்தல் வரும் போது தான் மீண்டும் தலையை நீட்டும். அதனால் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் அராஜகச் செயல்களில் ஈடுபடுகிறது. பேராயச் சீரழிவுக்கு பொறுப்பு யார்? கடமை தவறியவர் யார்? எதிர் கட்சி தானே? அக்கட்சிக்கு சமுதாயத்தின் மீது எந்த அக்கறையும் இல்லை - பேராயப்பதவி சுகம் மீது மட்டுமே அக்கறை. ஆனால் சமுதாயச் சிந்தனையும் அதனோடு தோழமை கொண்ட உடன்பிறப்புகளும் மட்டுமே ஒரு எதிர்கட்சியாக இருந்து செயல்பட்டு ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றி வருவதை அறிவீர்கள்.

எதிர்கட்சி இல்லாத இடைவெளியை நிரப்ப சபையார் முன்வர வேண்டும் என்பது ஒரு கட்டாயமே. மக்கள் முன்வரவில்லை யானால் சி.எஸ்.ஐ. - லும் கத்தோலிக்கத் திருச்சபைபோல குருமார் ஆட்சியே நடைபெறும் அல்லது மன்னராட்சியே நடைபெறும். மக்களாட்சி நடைபெறாது. நம்பூதிரிகளையும் நாயர்களையும் கண்டு பயந்து பயந்துதான் அன்றாட வாழ்க்கை உருளும். ஓட்டுப்போட்டு நாமே அமர்த்திய பேராயர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் முதலியவர்கள், யாவரும் கேள்வி கேட்க முடியாத நம்பூதிரியும் தறவாட்டு நாயர்களுமாகிவிடுகிறார்கள்.

முன் காலத்தில் சபைமக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராகச் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு வரலாறு இருக்கிறது. குற்றம் சாட்டப்படுபவர் யார்? எந்த நிலையில் உள்ளவர்? என்ற கேள்வியே இல்லை. முகம் பாராமல் குற்றத்தைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வந்தனர். சிவபெருமானையே எதிர்த்து "குற்றம் குற்றமே" என்று சொன்ன நக்கீரனுக்கு ஒப்பாக மக்கள் செயல்பட்டிருந்திருக் கிறார்கள். அதனால் தான் வளர்ச்சியடைந்தோம்.

எப்பேர்பட்ட மாமனிதர் ஒருவரை பதவியில் இருந்து இறக்க நாகர்கோவில் கஸ்பா சபை மக்கள் துணிந்திருக்கிறார்கள் என்பதை அறிய நாம் ஆச்சரியப்படுவோம். நாகர்கோவில் கஸ்பா சபையில் அவர் டீக்கனார் - செயலர். ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர் - அதிபர். பெரிய செல்வந்தர் - சிறந்த சமூக சிந்தனையாளர். இவருடைய அறிவு இல்லாமல் மணிமேடைக்கு மேற்கு அமைந்த கிறிஸ்தவ கிராமத்தில் ஒரு காக்காய் கூடப்பறக்காதாம் - அதாவது

திருவிதாங்கூர் போலிஸ் நுழையாதாம். திருவிதாங்கூர் மகாராஜா அடிக்கடி பெயர் சொல்லி அழைத்து மக்கள் பிரச்சினைகளை இவரிடம் கேட்டறிவாராம். இவருடன் கலக்காமல் தென்திருவிதாங்கூருக்கு எந்த அரசுத் திட்டமும் இறுதிவடிவம் பெறாதாம். அவர் தான் திரு. D.C. ஜோசப் என்பவர்.

தென்திருவிதாங்கூரில் 1840-ல் "பாலதீபிகை " என்ற ஒரு தமிழ் பத்திரிகையை கிறிஸ்தவர்கள் வெளியிட்டார்கள். இந்தியாவிலேயே சிறுவர்களுக்கான முதல் பத்திரிகை இது. கனம் பேலீஸ் ஐயர் 1861-ல் "தேசோபகாரி" என்ற ஒரு தமிழ் பத்திரிகையை வெளியிட்டார். இப்பத்திரிகை பல்வேறு வகையான பொது நல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருந்தது. 1876-ல் "திருவிதாங்கூர் அபிமானி" என்ற தமிழ் பத்திரிகையும், Travancore Times என்ற ஆங்கில வார இதழும் வெளி வந்தன. இவ்விரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர் திரு. D.C. ஜோசப் அவர்களின் தந்தை திரு. P. C. ஜோசப் ஆவார். 1888-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற அகில உலக பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டில் 34 ஆயிரம் பேர் பங்கு கொண்டனர். இந்திய அளவில் இருவர் அழைக்கப்பட்டு கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் திரு. P.C. ஜோசப் அவர்கள். பத்திரிகைத்தொழிலில் அந்த அளவுக்குப் புகழ் பெற்றவர்.

இன்று யார் ஆட்சி செய்கிறார்கள்? யார் அதிகாரம் செலுத்துகிறார்கள்? பத்திரிகை போன்ற 'மீடியா' - க்களை கையில் வைத்திருப்பவர்களே என்பதை கண் கூடாகக் காண்கிறோம். கேரளாவில், "மலையாள மனோரமா" பத்திரிகையையும் அதைச் சார்ந்த வெளியீடுகளையும் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் சிரியானி கிறிஸ்தவர்கள். இந்த சமுதாயம் கேரள அரசியலில் ஒரு சரிக்கு சமமான வலுகொண்டதாக விளங்குகிறது. நாயர் தாக்குதல் களுக்கு கிறிஸ்தவ முதலமைச்சர்கள் ஈடுகொடுத்து நிற்கிறார்கள் என்றால் பின்பலம் "மலையாள மனோரமா" பத்திரிகை என்பதை நாம் அறிய வேண்டும். அது போலவே நாடார் சமுதாயம் தமிழ் நாட்டில் தலைதூக்கி நிற்கக்காரணமாக இருப்பது "தினத்தந்தி" குடும்பம் என்பதை நாம் அறிய வேண்டும். குமரித்தந்தை மார்ஷல் நேசமணியின் புகழைத் திரைப்போட்டு மறைத்துக் கொண்டிருப்பதும் ஒரு பத்திரிகை. திருவிதாங்கூர் தேசாபிமானியும் திருவிதாங்கூர் டைம்ஸ்ம் இன்று நம்முடன் இருந்து ஆல்போல் வளர்ந்து படர்ந்து நின்றிருக்குமாயின்..?

போகட்டும்! அவ்விருபத்திரிகைகளும் தனியாருக்குச் சொந்தமானவை. 1861-ல் ஆரம்பித்த தேசோபகாரியை வளர்த்தெடுத்து சிறகுகளை விரித்துப் பறக்கவிட்டிருந்தால் கன்னியாகுரி சி.எஸ்.ஐ. மக்களை பிற சமுதாயங்களும் உலகும் அண்ணார்ந்துதான் பார்த்துக் கொண்டிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை

திரு. P. C. ஜோசப் பற்றி நாகர்கோவில் கஸ்பா சபை ஜூபிலிமலர் தரும் செய்தியைப் பார்ப்போம்:

"நாகர்கோவில் செமினரி வகுப்புகளில் கனம் ஓயிற்ஹவுஸ் ஐயரிடம் இவர் ஆங்கிலம் கற்றார். தொழில் பயிலும் ஆசை இவரை மேற்கொள்ளவே, இவர் நாகர்கோவில் லண்டன் மிஷன் அச்சகத்தில் தொழில் பயிலும்படியாக இடம் பெற்றார். அக்காலத்தில் ஆங்கிலம் கற்றறிந்த தொழிலாளி இவர் ஒருவரே. இவரது திறமையை நன்கறிந்த கனம் டென்னிஸ் ஐயர் இவரைக் 'கம்பாஸிற்றர்' ஆகப்பதவி உயர்த்தி, அன்னாரைத் தயவுடனும், அன்புடனும் நடத்தி வந்தார். தொழிலாளிகளின் தலைவராக நின்று அவர்களின் பலன் பெறச் செய்தார்."

"கனம் பி.டி. தேவசகாயம் மானேஜரின் உதவியால் 1874-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட விக்டோரியா பிறஸ் திரு. பி. ஸி. ஜோசப் அவர்களால் திறம்பட நடத்தப்பட்டது. அன்னாரின் திறமையினால் 1-10-1876-ல் "திருவிதாங்கூர் டைம்ஸ்" (Travancore Times) என்னும் ஆங்கிலப் பத்திரிகையும் "திருவிதாங்கூர் அபிமானி" என்னும் தமிழ் பத்திரிகையும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இவை பத்திராதிபருடைய சிறந்த லக்ஷணங்களுக்கு நற்சான்றாக விளங்கின. சர்க்காரின் நன்மதிப்பைப்பெற்ற இவர், காருண்ய மகா ராஜாவாலும் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தார். மக்கள் சங்கடங்களைப் பத்திரிகைகளில் எடுத்துக்கூறி அவற்றிற்குப்பரிகாரம் செய்து வந்தார். இவரே தான் திருவிதாங்கூரில் முதல் பத்திராதிபர். 1882-ம் வருடம் அமெரிக்காவில் அச்சிடப்பட்ட உலக பத்திரிகா டைரக்டரி புத்தகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட 13 பத்திராதிபர்களின் படங்கள் அடங்கிய அதன் முகப்புப் படத்தில், இவரது படம் முதலிடம் பெற்றிருப்பது புகழத்தக்கதே."

"இவர் சன்மார்க்க விஷயங்களில் உள்ளான வாஞ்சையுடையவர். பலசபைகளுக்கும் வைத்திய மிஷனுக்கும் வேதாகம சங்கத்திற்கும் இவர் தாராளமாய் பண உதவி செய்து வந்தார். ஏழை எளியவர்களின்

பரம சகாயி. இரக்கமும், அன்பும் நீதியும் இவரது அடிப்படையான குணங்கள்; சலிப்பின்றி தா்மம் வழங்கினாா். ஓய்வுநாள் ஆசரிப்பில் ஒரு போதும் தவறாா். ஓய்வு நாள் பாட வகுப்புக்களில் முதியோா் பகுதிக்குத் திறமையுடன் பாடம் கற்பித்தாா். தென் திருவிதாங்கூா் சபாலோசனைச் சங்கத்தின் மானேஜராக இவா் பணியாற்றியதாக அறிக்கை கூறுகிறது. பெண் பள்ளிக்கூடம், மால்ற் மிஷன் இவற்றின் காரியங்களையும் திறம்பட மேற்பாா்வை செய்தாா். இவா் 14 வருடங்கள் (1881-1895 வரை) நமது கஸ்பா சபையின் டீக்கனாக இருந்து சபைக்காகச் செய்த அருந்தொண்டுகள் மிக. தமது 17-வது வயதிலேயே இவா் இயற்றிய பாக்களில் பல, மதிப்புக்கிடமாய் நமது ஞான கீா்த்தனைப் புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. சங்கம், வருஷப் பிறப்பு முதலிய பண்டிகை நாட்களில் பிள்ளைகளுக்குப் போட்டி விளையாட்டுகளை உற்சாகமாக நடத்தி அவா்களைக் களிப்பூட்டுவாா்."

"இவரது பேச்சு சாதுரியம் களங்கமற்றது. தீா்க்காலோசனை செய்தே எதையும் செய்வாா். பேர் பிரஸ்தாபத்துக்குரிய அனேக நற்கிரியைகளையெல்லாம் இவா் தன் பத்திரிகை வாயிலாகவும் செய்து முடித்து தமது 48-வது குறை வயதில் 25-11-1895-ல் விண்ணுல கெய்தினாா்."

திருச்சபைக்கும் மக்களுக்கும் இதுவரை எவரும் செய்திராத நற்செயலைச் செய்து இயேசுவின் திருநாமத்துக்கு மகிமை சோ்த்த மாமனிதா் P. C. ஜோசப் காலமான பிறகு அவரது மகன் D. C. ஜோசப் தந்தை விட்டுச் சென்ற பணியைத் தொடா்ந்தாா். அவரைப் பற்றி கஸ்பா சபை ஜூபிலிமலா் என்ன சொல்கிறது?

"இவா் திரு. பி.ஸி. ஜோசப் அவா்கள் புதல்வா். இவரது தாயாா் பெயா் ஏசுவடியாள் மாா்த்தாள். இவரது மனைவியாா் ஸ்காட் பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரும் முன்னாள் பல காலம் நம் சபை டீக்கனாருமாயிருந்த கனம் பால்டானியல் அவா்களுடைய மூத்த மகள் லூயிசாள் ஆவாா். இவா் விக்டோரியா அச்சுக்கூடத்தின் அதிபரும் இந்தியாவில் முதல் தோன்றின இந்திய மொழிப் பத்திரிகையான "திருவிதாங்கூா் அபிமானி" என்றும் பின்னால் "தியாக நாடு" என்றும் அழைக்கப்பட்ட பத்திரிகையுடயவும், திருவிதாங்கூரில் முதல் முதல் தோன்றின ஆங்கல பத்திரிகையாகிய "Travancore

Times" உடையவும் பத்திராதிபரும் உரிமையாளருமாவார். 1930-ம் வருடம் நாகர்கோவில் சபை டீக்கனாகத் தெரிந்தெடுக்கப்பட்டு சுமார் 29 ஆண்டுகள் டீக்கனாராகவும் பல வருஷங்கள் செயலாளராகவும் பள்ளி மேனேஜராகவும் செயலாற்றி வந்தார். நாகர்கோவில் கிறிஸ்தவக் கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும், இந்திய விதவை உதவிச் சங்கத்தின் தலைவராகவும் செயலாற்றியவர். பிறர் நலன் கருதி அவர் செய்த அரும் பணிகள் பல. அனேகருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அவர் மிக உதவியாக இருந்தார் என்றால் மிகையாகாது. சீர்திருத்த வாஞ்சையினால் துணிந்து செயலாற்றி மக்களுக்கோர் எடுத்துக்காட்டாய் இருந்தார்."

"வாலிபரின் நலனுக்காகப் பல திட்டங்களிலும் முன்நின்று உழைத்தார். ஒய்.எம்.ஸி.ஏ., யூத்ஸ் யூனியன் முதலியவற்றுடன் பெரும் தொடர்பு கொண்டிருந்தார். தென் திருவிதாங்கூர் வாலிபர் தியானக் கூட்டங்களில் தவறாது உற்சாகத்துடன் பங்கு கொண்டார்."

"ஏழைகளுக்காகப் பாடுபடுவதினால், இன்னல் இடுக்கண் அடைந்தோர்க்குத் துணை நின்று தொண்டாற்றுவதிலும் மிகுந்த ஆவலுடையவர். 1959-ம் வருடம் இவ்வுலக வாழ்க்கையை நீத்து மறுமை எய்தினார்."

இப்படிப்பட்ட மாமனிதரையும் கஸ்பா சபை மக்கள் விட்டு வைக்கவில்லை. நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தார்கள். இது தான் ஜனநாயகம். கையாலாகாத ஒன்றுக்கும் உதவாத பேராயர் மற்றும் லே-தலைவர்கள் மீது நாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோமா? இல்லை! ஏன்? திருச்சபையின் மீது நமக்கு அன்பு இல்லை. நம்பூதிரிகளையும் தறவாட்டு நாயர்களையும் கண்டு பயம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் காண்போம்....

No-confidence motion against the Secretary Mr. D.C. Joseph.

The present confusions and party-strifes in the church are due chiefly if not entirely to the impulsive, impolitic and rash conduct of the Secretary in his relations to the Church Committee. His chief cause of irritation against the Deacons is that they are strict with him in his money transactions with the Church.

A.1. The transaction between him and the Church Committee in respect of the printing of children's song-book, more than three years ago still remains unsettled in spite of repeated reminders. A sum of Rs.25/- is still due from him to the church on that account.

2. When Song-Books were printed, a second time (last year) the church committee refused to have any dealings with him and the Assistant Mr. Jesudhas under-took the responsibility of printing and selling the song-books at 2 chs. per copy at his own responsibility. Though Mr. Jesudhas had arranged for printing the song-books with Doss Brothers, he made him cancel the contract and accepted the contract from Mr. Jesudhas agreeing to be paid for the printing as the books were sold. Contrary to this agreement he pressed Mr. Jesudhas for the payment of the whole price in a lump which of course Mr. Jesudhas refused. Then he approached the church-committee for money against the express terms contained in the resolution. The church-committee refused to consider his request. Then he showed his resentment in various ways threatened to resign and continued worrying the church-committee for payment. To be free from the worry and out of pity for his condition, the church committee reluctantly decided to pay him the price of thousand copies and gave him an advance of fifty rupees to relieve him from certain financial embarrassments. He has given only 100 copies till now though he was paid the advance six months ago.

3. He has not rendered full accounts for the money he realised under the first auction sale of old materials of the old Bungalow six months ago.

4. He has not paid the price (1 Re) of a bundle of cadjan leaves he purchased five months ago.

5. Though he was made the convenor of the building committee, he refused to co-operate with the committee but on the other hand tried to put obstructions in the way of the building committee.

He refused to be a member of the decoration committee and declined the share alotted to him in the service in connection with the opening function. His chief grievance is that he was not given a prominent part in the expenditure of money for building work. He was asked to go to Trivandrum for the purchase of electrical bulbs and shades and was entrusted with the money. Subsequently he sent back the money saying that we have misappropriated a large sum in connection with electric installation. His chief supporter one Mr. S. Muthiah has issued a pamphlet alleging misappropriation to the extent of more than 150 Rs. in connection with electric fitting.

B.1. On two occasions he refused to convene special meetings when requisitioned by the chairman of the church committee. When the chairman convened the meeting with his permission, he impeached the validity of the meetings.

2. He tried to obstruct the opening of the Allan Memorial Hall by refusing to initial the payment order for fifteen rupees sanctioned by the church-committee for the above purpose.

3. One occasion he drew two sums of money without the knowledge and consent of the financial Secretary by signing the payment order against the financial secretary's name and when remonstrated he sent a humble apology.

C.1. In the Law suit pending against the church he refuses to co-operate with us. He twice refused to sign petitions taken to him by the Vakil's clerk. We have strong reasons to believe that he instigated the civil case promising to depose in favour of the plaintiffs.

2. In the church meeting dated 12th September 1934 a resolution was passed to the effect that a sum of Rs.510/- be sanctioned for the completion of the building. In the minutes he has added "dropping all other items" after the word building. When this was found by the church committee he was requested to omit these

words but he obstinately refused saying that he would abide by the decision of the church meeting.

In the chruch meeting held on the 16th November 1934 this question evoked heated discussion and finally the church by a majority of 71 agaist 26 decided in favour of adopting the minutes deleting the words in dispute.

The Secretary rejected the verdict of the majority and refused to read the minutes even though the chairman called upon him several times to read the minutes. On account of the Secretary's conduct and the boisterous conduct of his supporter, the meeting ended in uproar and disorder without doing any business.

3. He is in the habit of leaving church committee meetings in anger when questioned about his irregularities.

4. During Mr. Kesari's farewell, his conduct was about to cause a riot. He arranged a procession at about 8 O'clock in the night the time fixed for dinner in honour of his farewell.

5. There is a small party in the church which always opposes and misrepresents the actions of the church committee. The secretary is used by this party as their tool. He causes misunderstanding among the people by misrepresenting the action of the church committee with a view to bring discredit upon the church committee and to increase his popularity.

6. In the last church meeting he said openly that five deacons are always opposed to him and that it has become impossible for him to co-operate with them and that he has to say a lot of things against them when a proper opportunity would come.

7. The party referred to above, headed by the secretary, Mr. V. Solomon, Mr. J.V. John, Mr. S. Muthiah, Mr. S. Paul and others came to the church meeting of 16th November 1934 with the determined object of wrecking it. When they found that the

minutes were passed by a majority with the omission of the words "dropping all other items", Mr. D. C. Joseph's supporter adopted obstruction methods such as shouting, using abusive languages, upsetting benches, insulting the chair-man, etc. The meeting had therefore to be closed in the midst of disorder.

After the meeting a few of the young men of the Endeavour Society receiving inspiration from the Secretary made demonstration on the road singing funeral songs and shouting shame against the Deacons.

On the succeeding Sunday the same young men showed disorderly behaviour in the church by refusing to put their copper coins into the collection bag.

We seem to be much offended with Mr. M. N. Charles for his candour in telling the people that the words "dropping all other items" were not part of the resolution, and he told Mr. Charles to his face that he (Charles) was the cause of all the trouble and that he was nothing without the secretary's help. A few of the young men of the endeavour society are pursuing Mr. Charles with the object of annoying him and doing violence to his person. The secretary, was seen with Mr. Solomon standing on the road when a group of young men went to Mr. Charles house to give trouble to him.

Not content with this, the Secretary has instigated Mr. V. Solomon to file a petition before the District Council making false and malicious allegations against Mr. Frederick, one of the Deacons and his relations.

For the foregoing reasons we are of opinion that the Secretary Mr. D. C. Joseph has forfeited the confidence of the church-committee and has rendered himself unfit to carry on the responsibilities of the church secretary.

16 ஆண்டவர் வல்லமையாய் உபயோகித்த கருவி

மக்கள் தலைவர் மார்ஷல் ஏ. நேசமணி

"திருவிதாங்கூரின் தமிழ் மக்களில் நூற்றுக்கெண்பது பேர் ஒரே குலத்தினர் ஆவர். அவர்களில் ***கிறிஸ்தவர்கள் கல்வியில் முன்னேறினர். பிறர் இவர்களுடன் கூடி உரிமைகளுக்காய்ப் போராடினர்.*** *தமிழகத்துடன் சேர வேண்டுமென்ற ஒரு இயக்கத்தை அன்று இவர்கள் தொடங்கினர். இவர்களைப் போகவிடாதபடி மலையாளிகள் முயற்சி செய்தனர். அதிகாரம் மலையாளிகளின் கையில் இருந்ததால் அவர்கள் அன்று அதை அடக்குமுறையில் பிரயோகித்தனர். பல தமிழர் முகாந்திரமின்றிப் பொய் வழக்குகளில் மாட்டப்பட்டனர். சிறையிலடைக்கப்பட்டனர். துப்பாக்கிக்கும் ஒரு சிலர் இரையாயினர். அன்று* ***குமரி மாவட்டத்தின் மக்களுக்கு விடுதலை கிடைக்க ஆண்டவர் வல்லமையாய் உபயோகித்த கருவிதான் நமது பெருமைக்குரிய திரு. நேசமணி. அவரைக் குறித்து முஸ்லீம் நண்பர் ஒருவர் எழுதிய வரலாற்றைக் கீழே காணவும்" - தேசோபகாரி, நூற்றாண்டு மலர், 1963.***

அன்பில் தோய்ந்த அமைதி; அறிவு கொழிக்கும் ஆற்றல் உறுதிகொண்ட உழைப்பு; உண்மை மலிந்த எதிர்ப்பு; தென் இந்தியத் திருச்சபையின் செல்வன்; ஆனால் குமரி வாழ் மக்கள் அனைவரின் உள்ளத்திலும் வீற்றிருக்கும் வேந்தன், அழிவு பாதையை வெறுப்பார், ஆனால் அறப்போருக்கு அஞ்சார். வழக்கு மன்றத்தில் நீதிக்கு வாதிடுவார்; அரச சபையில் உரிமைக்குப் போரிடுவார்.

வெற்றி சுடர்விடும் அவர் வாழ்க்கையில்; ஆனால் துன்பம் சில சமயம் அதைச் சூழ்ந்து கொள்ளும். ஆயினும் நிலை தவறமாட்டார்; வயிரமுடையது அவர் நெஞ்சு.

இந்த இயல்புக்குத் தனி உரிமை பெற்றவர் திரு. ஏ. நேசமணி. அவர் 1895-ம் வருடம் ஜூன் திங்கள் பன்னிரண்டாம் நாள், விளவங்கோடு பள்ளியாடியில் அப்பலோஸ்-ஞானம்மாள் தம்பதிகளின் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

நாகர்கோவிலில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்து, நெல்லை கல்லூரியில் இடைநிலைப் பரீட்சையில் தேறி, திருவனந்தையில் படித்துப்பட்டதாரியானதும், அங்கேயே ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டே, சட்டக் கல்லூரியிலும் படித்து பி.எல். பட்டதாரியானார்.

திரு. நேசமணியின் வாழ்வில் புயலும், தென்றலும் மாறி மாறி வீசிக்கொண்டிருக்கும், ஆனால் எதையும் இன்முகத்துடன்ஏற்று, அவருக்கு ஊக்கமும் உள்வலிமையும் ஊட்டிக் கொடுத்தவர், அவர் மனைவி கரோலின் அம்மையார். நாகர்கோவிலில் உயர்குடியிற் பிறந்த அவரை 1914-ம் வருடம் செப்டம்பர் திங்களில் திரு. நேசமணி, தம் வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டு, 1921-ம் வருடத்தில், நாகர்கோவிலில் வழக்கறிஞராக வாழ்க்கையை ஆரம்பித்தார். நீதிமன்றங்களில் அவரது குரல் கம்பீரமாக ஒலித்தது. இனிமையும் இங்கிதமும் அதில் இழையோடின. அவரின் சட்ட நுணுக்க அறிவும் விவாதத் திறமையும் பல இடங்களில் எதிரொலித்தது. மக்கள் மன்றத்தில் அவருக்குத் தனியிடம் கிடைத்தது. **திருச்சபை அவரைப் பணிபுரிய அழைத்தது.** 1933-ம் வருடம் நெய்யூர் சேகரத்தில் செயலாளராகப் பொறுப்பேற்று, அதே ஆண்டில் மிஷன் கவுன்ஸில் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை, சுமார் முப்பது வருஷங்களாக திருச்சபையின், பல கமிற்றிகளிலும் உபகமிற்றிகளிலும் அங்கமாக இருந்து வருகிறார்.

திருச்சபையின் சேகர உபதலைவராகப் பல வருடங்களாகச் செயல்பட்டு கொண்டிருந்த திரு. நேசமணி, கன்னியாகுமரி ஆதீனம் தோற்றுவிக்கப்பட்டது முதல் ஆதின உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றுவரை அப்பதவியைத் திறமையுடன் வகித்துக் கொண்டிருக்கிறார்.

திருச்சபையின் வளர்ச்சியில் திரு. நேசமணி காட்டும் ஆர்வமும் அந்த ஆர்வத்தைச் செயல்படுத்த அவருக்கிருக்கும் ஊக்கமும், நேர்மையும், பொறுப்புள்ள பல பெரும் பணிகளை, திருச்சபை அவரிடம் ஒப்படைக்க காரணமாக இருந்தன.

பல லட்சம் ரூபாய் விலைமதிப்புடையதும். ஆண்டுதோறும் பதினாயிரக்கணக்கில் வருவாயுடையதுமான, தாமரைகுளம் மிஷன் சொத்துகளின் மேற்பார்வையாளராக 1945-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நியமனம் பெற்றார். அன்று முதல் இன்று வரை அப்பதவி அவருடையதாகவே இருக்கின்றது. அப்பதவிக்கும் முதல் இந்தியர் அவரே. மேற்பார்வையாளர் என்ற நிலையில், மிஷன் சொத்துக்களின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும், அபிவிருத்தியிலும், திரு. நேசமணி காட்டிவரும் அக்கரை, திருச்சபையில் பற்றுக்கொண்ட எவருக்கும் மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

சுமார் ஆறு ஆண்டுகளுக்குமுன், அவரது முயற்சியால் நடப்பட்ட தென்னைகளிலிருந்து இப்பொழுது நல்ல மகசூல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதுவரை அவரால் சுமார் 900 தென்னைகள் நடப்பட்டிருக்கின்றன. திரு. நேசமணி அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆரம்பத்தில் 5,255 ரூபாய்க்கு குத்தகைக்கு விடப்பட்ட தென்னை மரத்தோப்பு, இவ்வாண்டில் 24,400 ரூபாய்க்கு பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பொறுப்புகளுடன் 1949-ம் வருட முற்பகுதியில், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி திட்டக் குழுவின் தலைமைப் பகுதியை திரு. நேசமணி ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. கவர்ச்சியில்லாச் சிறிய கட்டிடத்தில், இன்டர்மீடியட் வகுப்பை மட்டும் கொண்டிருந்த ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியை எல்லா நவீன கல்வி வாய்ப்புகளையும் கொண்ட முதல்தரக் கல்லூரியாக மாற்றுவதற்கான பெரும் திட்டம் அது.

பணக்குறைவு அதிகமாயிருந்த அந்நாட்களில் பலமுறைகளில் கல்லூரிக்காய்ப் பொருள் தேடி, யுத்தத்தின் காரணமாக ஏற்பட்டிருந்த கட்டுப்பாடுகளின் மத்தியில் தமது செல்வாக்கினாலும், திறமையாலும் சிமிண்ட், இரும்பு, மரம், ஆய்வுக்கூடக்கருவிகள் முதலியவற்றையும் வருவித்துக் கல்லூரிக் கட்டிடத்தைக் கட்டி முடித்தார்.

1939-ம் வருடத்தில் எழுதப்பட்ட திருச்சபைச் சட்டம் திரு. நேசமணியின் சிருஷ்டியேயாகும்.

தென் இந்தியத் திருச்சபை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு வழக்குகளை டில்லி சுப்ரீம் கோர்ட் வரை நடத்தி வெற்றி தேடித்தந்த பெருமை அவரையே சாரும். இவற்றின் மத்தியில் தேசப்பணிக்கும் அவர் அழைக்கப்பட்டார். முதல் அழைப்பு நாகர்கோவில் மக்களிடமிருந்து கிடைத்தது.

1943-ம் வருடத்தில் நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், அதே வருடத்தில், நாகர்கோவில் நகர சபைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறிய அளவில், அபிவிருத்திக்கான நிதி வாய்ப்புகள் அற்றதாய் இருந்த நாகர்கோவில் நகரம் திரு. நேசமணியின் தலைமையில் மறுமலர்ச்சி அடைந்தது. விஸ்தரிக்கப்பட்ட பிரதேசம் என்று கூறப்படும், பாகங்கள் நகர் அமைப்புக்குள் வருமாறு திரு. நேசமணி நகரத்தின் எல்லையை அகலமாக்கினார்; தேவையான, அபிவிருத்தி ஏற்படவும், சுகாதார வசதிகள் பெருகவும் வாய்ப்பு ஏற்படும் வகையில், வரி அமைப்பைச் சீர்செய்து, நகர சபையின் நிதிநிலையைக் கணிசமாக அதிகரிக்கச் செய்தார். வருங்காலத் தேவைகளை மனதிற்கொண்டு, நகரச்சீரமைப்புத் திட்டமொன்றை அமுல் செய்ய அரசாங்கத்தை தூண்டினார், நகரத்தில் பிச்சைக்காரர்கள் தொல்லையை அகற்றுவதற்காக, பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற்று அனாதை விடுதியை நிறுவினார். நகரசபைத் தலைவரானதும், அன்றைய திருவிதாங்கூர் சட்ட சபைக்கு கல்குளம் தாலுகாவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் அவரது அரசியல் ஈடுபாடுகள் பல்வேறு திசைகளில் வளர ஆரம்பித்தன.

கூர்மையான அறிவுத் திறன்படைத்தவர். அன்றைய திவான் சர்.சி.பி. ராமசாமி ஐயர் அவர்கள் நேசமணியின் ஆற்றலையுணர்ந்து, அவரைத் திருவிதாங்கூர் சர்வகலாசாலை செனட் சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தார். 1947-ம் வருடம் இந்தியா விடுதலையடைந்து மொழிவழி ராஜ்யங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து நாடெங்கும் பரவியது.

குமரி முதல், காசர்கோடு வரை, கேரளத்திற்கும் எல்லை தீட்டினர் சிலர். ஆனால் குமரி செந்தமிழ் நாட்டின் எல்லை. அது தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று எண்ணினோர், திருவிதாங்கூர் தமிழகத்தினர். **இந்த எண்ணத்திற்கு உருவம் கொடுத்து, அதைச் செயல்படுத்த, நேசமணி முன்வரவேண்டுமென்று, அன்றைய நாஞ்சில் முதுபெரும் அறிஞரான திரு. சிதம்பரம் பிள்ளை உட்பட பலர் விரும்பினர்.**

கடமையின் அழைப்பு எந்தத் திசையிலிருந்து, எந்த ரூபத்தில் வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயங்காதவர் நேசமணி. திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கம் உரம்பெற்று, ஓங்கிவளர்ந்தது.

அடக்கு முறைகளுக்கிடையே 1948-ல் பொதுத் தேர்தலில், திரு. நேசமணி, சட்ட சபைக்கு தி.த.நா.கா. சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மக்கள் மன்றத்தில் நேசமணியின் செல்வாக்கு உச்ச நிலை ஏறியதும், பொறாமையும், பூசலும் எழ ஆரம்பித்தன. தி.த.நா.கா. பிளவுபட்டது. அவதூறான பொய்ப் பிரச்சாரங்கள் அள்ளி வீசப்பட்டன. இவைகளுக்கு ஈடுகொடுத்து மக்களின் லட்சியக் கனவை நினைவாக்க, "திங்கள்" என்ற பத்திரிகையை திரு. நேசமணி ஆரம்பித்தார்.

1952-ம் வருடம் பொதுத் தேர்தல் நடந்தது. திரு. நேசமணி டில்லி மக்கள் சபைக்கு நாகர்கோவில் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். திரு - கொச்சி சட்டசபையில் அவரின் சகாக்கள் பலர் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அன்றைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி, முதல் முறையாக, தி.த.நா.கா. பிரதிநிதி மந்திரி சபையில் இடம்பெற வழிகண்டார், திரு. நேசமணி. 1954-ல் இடைத்தேர்தல் நடந்தது. திரு. பட்டம் தாணுபிள்ளை, திரு-கொச்சி முதல் மந்திரியானார். அடக்குமுறை காரணமாக அதைக் கேட்கச் சென்ற இடத்தில் மூணாற்றில் வைத்து அவரும், அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமது நெஞ்சில் நிறைந்த தலைவர் சிறை சென்றதும், திருவிதாங்கூர் தமிழகம் குமுறி எழுந்தது. எங்கும் எதிர்ப்பு, கிளர்ச்சி, தண்டனைக் காலம் தீருமுன்னே, திரு நேசமணி விடுதலை

செய்யப்பட்டார். ஆனால் அரசாங்கம் அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. தி.த.நா.கா. தலைவர்களும் ஊழியர்களுமாக எண்ணற்றவர் சிறைக்குள் வாடினர். நேசமணியோ கைது செய்யப்படாதது திரு. தமிழகத்தின் நல்ல காலம்!

நேசமணி சட்ட மேதை. டில்லி மக்கள் சபையில், அவரின் சட்ட நுட்ப அறிவைச் சுட்டிக்காட்டினார் திரு. எ. எம். தாமஸ் வேறொரு சந்தர்ப்பத்தில். தமிழகத்தின் பன்னூறு மக்கள் நீதிகிடையாது சிறையில் தவித்த காலத்தில் - சட்டத்தின் துணைநாடி, நம மக்களுக்கு விடுதலைபெற, டில்லி உச்சநீதி மன்றத்திற்குச் சென்று, வழக்குகள் யாவற்றையும் மைசூருக்கு மாற்றி, வழக்குரைத்து, வெற்றி பெற்றார். அதன் விளைவாகச் சிறையிலே வாடியவர்கள் வெளியே வந்தார்கள். அடக்குமுறை நடத்திய ஆட்சி அகற்றப்பட்டு, புதியதோர் நல்லாட்சி நிறுவப்பட்டது.

இதற்கிணையான அரசியல் நிகழ்ச்சி உலகச் சரித்திரத்தில் அதிகமிராது!

1956 நவம்பர் முதல் தேதி, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்து, நேசமணியை லட்சிய சித்தியடைந்த மாவீரனாக்கிற்று.

இணைப்பைத் தொடர்ந்து நடந்த தேர்தலில் மக்கள் சபைத் தேர்வுக்கு மனுதாக்கல் செய்தார். **தேர்தல் காலம் முழுவதும் சபை கேசுகளினிமித்தம் அவர் சென்னையிலே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுங்கூட மக்கள் அவரை மறக்கவில்லை.** அவரின்றியே அவரை எதிர்த்தோர் டிப்பாசிட் இழக்கும் தரத்தில் அவருக்கு வாக்களித்து வெற்றி தேடிக் கொடுத்தனர். பாராளுமன்றத்தாரும் அவரை மதிப்புக் கணக்கு கமிற்றியில் தெரிந்தெடுத்தார்கள்.

திறமையும் சேவையுணர்ச்சியும் மிகுந்தவர் திரு. நேசமணி; சம்பவங்கள் நிறைந்தது அவரின் வாழ்க்கை. **மதப்பணியிலும் தேசப்பணியிலும் ஒருங்கே ஈடுபடுபவர் அவர். ஆனால் மதத்தையும்அரசியலையும் இணைக்காமல் செயல்படும் ஆற்றல் உடையவர்.**

சுமார் 40 வருட காலமாக பொதுவாழ்விலே பல பொறுப்புகள் ஏற்றுப் பணிபுரிந்து வருகிறார்; அதனால் அவரின் சொந்த வாழ்க்கை சிதறியதுண்டு, ஆயினும் அவர் மனம் தளர்ந்ததில்லை; பொதுப்பணியிலே அவர் ஈடுபட்டிருக்கும் வேளையில் அவர் குடும்பத்தில் சோகமேகம் சூழ்ந்ததுண்டு; ஆனால் கடமையை அவர் மறந்ததில்லை. குமரி மாவட்டத்தின் இம்மாபெரும் ஊழியர் "நோய்நொடி யாவையும் விட்டோடி, நூறு வயசும் கட்டோடு" தாய் நாட்டிற்கும், திருச்சபைக்கும் பணிசெய்து வாழ வாழ்த்துவோம்.

எம். கே. பாவா

நேசமணி - மக்கள் தலைவர்

திருவிதாங்கூர் தமிழர்களின் உரிமைக்காகப் போராட தி. த. நா. கா. என்று ஒரு அரசியல் கட்சியை உருவாக்குமுன், நாகர்கோவில் நகர சபைத் தலைவர் பதவி முடிந்ததும், நேசமணி திருவிதாங்கூர் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென் திருவிதாங்கூரிலுள்ள புரோட்டஸ்தாந்து (S.I.U.C. or C.S.I.) கிறிஸ்தவர்களின் ஏழ்மை நிலைமையும், புறக்கணிக்கப்பட்ட நிலையையும் சட்ட மன்றத்தில் எடுத்து வைத்து - வாதாடி அவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வைத்தார். அதனால் அன்று சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்கள் அரசு கல்லூரிகளில் இடம் பிடித்தார்கள். பெருமளவில் அரசு வேலைகளையும் பெற்றார்கள். இந்தச் சலுகை இந்துநாடார்களுக்கோ, கத்தோலிக்க நாடார்களுக்கோ அன்று கிடையாது. அதனால் நேசமணியை அரசியல் அரங்கில் மதவாதி என குற்றம் சாட்டி, அவருடைய தலைமையில் இயங்கி வந்த தி.த.நா, கா. வை வலு இழக்க முயற்சித்தனர். நேசமணி பற்றி, **ஒரு மறக்கப்பட்ட வரலாறு** (1994) என்ற நூல் ஆசிரியர் என்ன சொல்கிறார் என்பதை பார்ப்போம்.

தமிழ்நாட்டின் தெற்கு கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரியின் தலைநகர் நாகர்கோவில் நகரின் மையத்தில் அண்ணாபேருந்து நிலயத்தின் முகப்பில் ஒரு மனிதரின் உருவச்சிலை நிற்கிறது. அது ஏ. நேசமணியின் உருவச்சிலை, அங்கிருந்து தென்மேற்கில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் நேசமணி நகர் என அழைக்கப்படும் குடியிருப்பு உள்ளது. அதன் ஒரு மூலையில் நேசமணி வீடு அமைந்துள்ளது. அதன் மற்றொரு முனையில் அரசு போக்குவரத்துக்

கழகத்தின் தலைமை அலுவலகம் இருக்கிறது. அங்கிருந்து வடக்கில் 25 கிலோ மீட்டர் தொலைவில், கேரள மாநில, கன்னியாகுமரி எல்லையினருகே, கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் நேசமணி ஞாபகார்த்த கிறிஸ்தவக் கல்லூரி அமைந்துள்ளது. உள்ளேயிருக்கும் கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் நேசமணியின் பெயரில் பல சிறிய, பெரிய திட்டங்கள் செயல்படுவதைக் காணலாம். இவை யாவுமே திருவாங்கூரின் தமிழ் பகுதிகளை, தமிழகத்துடன் இணைத்து, பொது மக்கள் அரசியல், மொழி, கலாச்சார மற்றும் பொருளாதார சுதந்திரத்தை அடைய தலைமை வகித்த தங்கள் பாசத்துக்குப் பாத்திரமான தலைவருக்கு சாதாரண மக்கள் செலுத்தும் அஞ்சலியாகும்.

1895- ம் ஆண்டு ஜூன் 12-ம் தேதி அப்பலோசுக்கும் ஞானம்பாளுக்கும் விளவங்கோடு தாலுகாவில் பள்ளியாடியில் பிறந்த நேசமணி, தனது முன்னோர்கள் நாயர்களின் பிடியில் எப்படி கொடுமைப்படுத்தப் பட்டார்கள் என்ற உணர்வுடன் வளர்ந்தார். இன்றும் கூட அநியாயமான செயல்பாடுகளால் அவரது மக்கள் அல்லல்பட்டனர். தனது கிராமத்தையும், தனது பெற்றோரையும் தனது மக்களையும் நேசித்தவரான நேசமணியின் இதயம் அவர்களுக்காக வேதனைப்பட்டது. அவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர அவர் ஏங்கினார். ஆனால் வேறு இலட்சியங்களும் அவரது வாழ்வில் இருந்தன. அவர் தனது கல்வியைத் தொடர நாகர்கோவில், பாளையங்கோட்டை, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்குச் சென்று ஒரு வழக்கறிஞராகக் கற்றுத் தேறினார். நாகர்கோவில் நீதிமன்றத்தில் தமது சட்டத் தொழிலை ஆரம்பித்தார்.

நேசமணியின் சட்டவியல் அறிவாற்றலும், திறமையும் அவருக்கு சக வழக்கறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றுத் தந்தன. அவர் நாகர்கோவிலில் மிகச் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராகவும், தலைவராகவும் திகழ்ந்தார். அவரது செயல்பாடுகளும் ஆலய நடவடிக்கைகளில் அவரது ஈடுபாடும், கிறிஸ்தவ சமுதாயத்தின் அன்புக்கு அவரைப் பாத்திரமாக்கியது. 1943-ம் ஆண்டு அவர் நாகர்கோவிலில் நகர சபையின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். அவர் நகரின் எல்லைகளை விரிவுப்படுத்தி நகரின் நீர் விநியோகத்தைச் சீராக்கி, ஆதரவற்றோருக்கு ஒரு இல்லத்தை ஏற்படுத்தி, நகரின்

வருவாயையும் அதிகரிக்கச் செய்தார். அதே ஆண்டு அவர் திருவாங்கூர் சட்டமன்றத்தின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அத்துடன் திருவாங்கூர் பல்கலைக் கழக செனட் சபையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

அவரது தலைமைத்துவ திறமைகள் திருச்சபை மற்றும் நாட்டின் சேவைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்டன. அவர் பலமுறை தென் திருவிதாங்கூர் சபைகளின் மிஷன் கவுன்சில் மற்றம் தென் திருவிதாங்கூர் சபை கவுன்சில்களின் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு அர்ப்பணிப்பு மிகு சேவையாற்றினார். கன்னியாகுமரி மறை மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், 1968-ல் அவர் மறையும் வரை அதன் உபதலைவராக தேர்வு செய்யப்பட்டு பணியாற்றினார். கன்னியாகுமரி மறை மாவட்ட சொத்துக்கள் சபையின் தலைவராக, தாமரைக்குளம், தென்னந்தோப்பின் பரப்பளவை அதிகரிக்க பெருமுயற்சிகளை மேற்கொண்டார். மறை மாவட்டத்தின் எல்லா சபைகளிலும், குழுக்களிலும் அவர் மதிப்புமிகு உறுப்பினராக இருந்தார். ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியின் பட்டப்படிப்பு கட்டிடக் குழுவின் செயலாளராக அவர் ஆற்றிய சேவையை இலகுவில் மறந்து விட முடியாது. **திருவிதாங்கூர் சட்டமன்றத்தின் உறுப்பினராக அவர் இருந்த பொழுது தென்னிந்திய ஐக்கிய ஆலயத்தை (எஸ்.ஐ.யூ.சி.) சேர்ந்த கிறிஸ்தவர்களின் பின் தங்கியுள்ள நிலையை எடுத்து விளக்கி, அவர்கள் கல்லூரிகளில் அனுமதி பெறவும், வேலை வாய்ப்புகளில் சலுகைகளைப் பெறும் வகையிலும் அவர்கள் பின்தங்கியோர் பட்டியலில் இடம்பெறச் செய்தார்.**

அரசியலில், நியாயமற்ற முறையில் திருவிதாங்கூர் அரசு, தமிழ் தாலுகாக்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்து வட பகுதியை வளரச் செய்வதற்காக பெருந்தொகையை மேம்பாடு திட்டங்களுக்காக செலவிட்டது. இந்த தாலுகா மக்களின் நலனின் அரசு காட்டிய மெத்தனமும், தமிழர்கள் மீதான அவர்கள் ஆதிக்கமும், நேசமணியின் மிகச் சிறந்த அரசியல் ஆற்றலை வெளிக்கொண்டு வந்தது. அவர் டி.டி.என்.சி. விவகாரங்களில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மார்ஷல் நேசமணி என்ற பட்டப்பெயரையும் பெற்றார். தமிழ் தாலுகாக்கள் தமிழ்நாடுடன் இணையும் வரை அவர் செயல்பாடுகளுக்கும்

உள்ளாக்கப்பட்டார். இவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கிய முக்கிய சிற்பி என்ற பெருமதிப்பையும் பெற்றார்.

நேசமணியிடம் தலைமையை உருவாக்கும் சக்தி இருந்தது. அவருக்குக் கீழ் வளர்ந்த பல இளைஞர்கள், அரசியல் தலைவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், மேம்பாடடைந்தனர். அரசியலிலும், சட்டத்துறையிலும் மட்டுமின்றி ஆலயப்பணியிலும் அவர் தமது அன்பு பராமரிப்பின் கீழ் பல இளைஞர்கள் பரிணமிக்க வழி வகுத்தார். கன்னியாகுமரி மறை மாவட்டத்தின் உபதலைவராக தன் கண்முன் வளர்ந்த ஒரு இளம் பேராயருக்கு தக்க மரியாதை கொடுத்து பாசம் காட்டி அவரை ஆலயத்துக்கு உகந்த ஒரு வலுவான தலைவராக உருவாக்கும் வகையில் அவருக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கினார்.

இயற்கை அளித்த தீக்கல் போன்ற மனத்திடமும், ரோஜாவைப் போன்ற மென்மையான இதயத்தையும் பெற்றிருந்த நேசமணி கண்டிப்பானவரும், அதே வேளையில் அன்புடையவராகவும் இருந்தார். அவர் கூட்டங்களில் பேச எழும்பொழுது நெப்போலியனின் அசையாமையும், மன உறுதியும் இருந்தன. ஆனால் அவரது முகத்தில் அரும்பும் கனிவான புன்னகை அவரது இதயத்தின் மென்மையை எடுத்துக் காட்டியது. பாசமுள்ள கணவன், அன்பான தந்தை, பற்றுதல் மிக்க நண்பன், நேசமணியின் இதயம் இடுக்கணிலிருப்பவருக்கும், துன்பத்தில் துவள்பவருக்கும் இரங்கியது. **அவரது புகழ் வழக்கறிஞராகவும், அரசியல் வாதியாகவும் மதத்தலைவராகவும் பரவுவதற்கு முன்னரே அவரது தயாளகுணம் ஒரு பழமொழியாயிற்று. அவர் வாழ்வு ஒரு ஆசீர்வாதம், அவர் நினைவு ஒரு வரப்பிரசாதம்.**

திருமதி. ஜாய் ஞானதாசன்

தொகுப்பு : டாக்டர். டி. பீட்டர்

17 சி.பி. இராமசாமி அய்யரும் தென்திருவிதாங்கூர் அரசியலும்

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கடைசி மன்னர் சித்திரைத்திருநாள் மகாராஜா என்பவர் ஆவார். அவரது சர்வ வல்லமை பொருந்திய திவான் சர்.சி.பி. இராமசாமி அய்யர் என்பவர். இவர்களது ஆட்சிகாலத்தில் தற்போது குமரிமாவட்டம் என அழைக்கப்படும் தென்திருவிதாங்கூர் பகுதிகளில் அரசியல் நிலவரம் எங்ஙனம் இருந்தது என்பது பற்றிய ஓர் அலசலே இக்கட்டுரை.

சமஸ்தானத்தின் முந்தைய மகாராஜாவான ஸ்ரீமூலம் திருநாள் (1885-1924) காலமான போது அவரது வாரிசான சித்திரைத்திருநாள் பன்னிரண்டு வயது சிறுவனாகவே இருந்தார். அவருக்குப் பதிலாட்சியராக (Regent) அமர்வதில் மூத்த ராணி என அழைக்கப்பட்ட சேது லட்சுமிபாய்க்கும் இளைய ராணியும் சித்திரை திருநாளின் தாயாருமான சேது பார்வதிபாய்க்கும் போட்டி ஏற்பட்டது[1]. திருவிதாங்கூர் அரச குடும்பத்தின் மருமக்கள் வழி முறைப்படி மூத்த ராணியே அதற்கு உரிமையாளர். அதன்படி ஆங்கில அரசு லட்சுமிபாயையே பதிலாட்சியராக நியமித்தது. அரண்மனைக்குள் நடைபெற்ற இவ்வதிகாரப் போட்டியில் நாயர் சமூகத்தோர் இளைய ராணியையும் சிறியன் கிறிஸ்தவர்கள் மூத்த ராணியையும் ஆதரித்தனர்[2].

இந்நிலையில் இளைய ராணி ஒருமுறை உதகமண்டத்தில் தங்கியிருந்தபோது அவருக்கு சென்னை மாநில காங்கிரஸ் முக்கியஸ்தர்களில் ஒருவரான சி.பி. இராமசாமி அய்யரின் தொடர்பு

கிடைத்தது. அத்தொடர்பின் காரணமாக இராமசாமி அய்யர் அப்போதைய வைஸ்ராயான வில்லிங்டன் பிரபுவிடம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திப் பதிலாட்சியரை நீக்கிவிட்டுச் சித்திரைத் திருநாளை அதிகாரத்தில் அமர்த்த இளைய ராணிக்கு உதவி புரிந்தார். 1931-இல் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த சித்திரைத் திருநாள் தமது முடிசூட்டுவிழா நிகழ்ச்சியிலேயே இராமசாமி அய்யரை தமது குடும்பத்தின் 'நம்பிக்கைக்குரிய நண்பர்' என அறிமுகம் செய்தார்[3]. இராமசாமி அய்யர் தமக்குச் செய்த உதவிக்குக் கை மாறாக 1931-ஆம் வருடம் அவரைத் தமது அரசியல் சட்ட ஆலோசகராகவும், தொடர்ந்து 1936-ஆம் வருடம் தமது திவானாகவும் மன்னர் நியமனம் செய்தார்[4]. 1931 முதல் 1947 வரையுள்ள காலத்தில் சி.பி இராமசாமி அய்யரே திருவிதாங்கூரின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்[5].

திவான் பொறுப்பை ஏற்றதும் சமஸ்தானத்தின் உயர் அரசுப் பதவிகளை தமது சாதியினரான பார்ப்பனர்களுக்கே வழங்கி வந்த முந்தைய திவான்களின் செயல்களை இராமசாமி அய்யரும் தொடர்ந்தார். சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் அவர் 'அய்யர்களை ஒரு சிறப்பு ஆளும் வர்க்கமாக மாற்றினார்; ஸ்வாமி எனப் பயபக்தியுடன் அழைக்கப்பட்ட அவர்கள் நிர்வாகத்தின் மூலை முடுக்குகளிளெல்லாம் அமர்த்தப்பட்டனர்'[6]. 1945-ஆம்வருடத்தில் சமஸ்தான அரசில் இருந்த மொத்தம் 37 துறைத்தலைவர் பதவிகளில் 23-இல் பார்ப்பனர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்[7]. கர்நாடக சங்கீதத்தை வளர்ப்பதாகக் கூறிக் கொண்ட திவான் அதற்கென பல உயர் அரசுப் பதவிகளை உருவாக்கி அவற்றில் சென்னை மாநிலத்திலிருந்து செம்மாங்குடி சீனிவாச அய்யர், கே.ஆர். ஹரிஹர அய்யர் போன்ற பல பார்ப்பனர்களை அழைத்து வந்து உயர் ஊதியங்கள் வழங்கி பணியமர்த்தினார்[8], இக்காலங்களில் நாயர் கூட்டுக் குடும்பங்களின் சிதைவு காரணமாகவும், அவர்களது ஆடம்பர வாழ்க்கை முறை காரணமாகவும் அச்சமுதாயம் பெரும் பொருளாதார நெருக்கடிகளில் உழன்று கொண்டிருந்தது. 1926-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட சுமார் பதினைந்து வருட காலத்தில் திருவிதாங்கூர் நாயர்களின் நிலவுடமைகளில் சுமார் 43 விழுக்காடு அவர்கள் கைகளை விட்டு நழுவியது[9]. இந்நிலையில் அரசுப் பணிகளும் தங்கள் சாதியினருக்குத் தாராளமாய் கிடைக்காமல்,

அவை அந்நிய பார்ப்பனர்களுக்கு வழங்கப் பட்டுவந்தது பற்றி நாயர்கள் பெரும் கோபம் கொண்டனர். ஏனெனில் தொன்று தொட்டே இந்நாட்டின் சிறப்புக் குடிமக்கள் என்றும் 'மகாராஜாவின் சிறப்புச் சலுகைகளுக்கு உரிமையுள்ளோர் எனவும் கருதி வந்தவர்கள் நாயர்களே[10] போதாக் குறைக்கு மகாராணி என அழைக்கப்பட்ட ராஜமாதாவிடம் இராமசாமி அய்யர் கொண்டிருந்த நெருக்கம் அரண்மனைக்குள்ளேயே அவருக்குப் பகைவர்களைத் தோற்றுவித்தது[11]

சி. பி. இராமசாமி அய்யர் தமது அரசியல் வாழ்க்கையை இந்திய தேசீய காங்கிரசின் செயலாளராகவும், ஹோம் ரூல் இயக்கப் பொதுச் செயலாளராகவும் தொடங்கியவர்[12]. அன்னிபெஸண்டிடம் அரசியல் பயிற்சி பெற்ற அவர் தமது குருவின் கிறிஸ்தவப் பகைமைக் கோட்பாடுகளையும் திருவிதாங்கூரில் நடைமுறைப் படுத்தினார். திவான் பொறுப்பை ஏற்றதும் முதல் பணியாகக் கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் பல நடவடிக்கைகளில் இறங்கினார். 1937-இல் நடைமுறைப் படுத்தப்பட்ட ஸ்டாதாம் அறிக்கை (Statham Report) யின்படி தென் திருவிதாங்கூரில் ஏராளமான கிறிஸ்தவத் தொடக்கப்பள்ளிகளை மூடிவிட வேண்டிய தாயிற்று[13]. தொடர்ந்து மேலும் பல தொடக்கப் பள்ளிகளை மூடிவிடும்படியான அல்லது அரசுக்குக் கையளித்து விடும்படியான சட்டபூர்வ நிர்ப்பந்தங்கள் திருச்சபை நிர்வாகங்கள் மீது திணிக்கப்பட்டன. அதன் காரணமாகத் திருவிதாங்கூர் சபை ஆலோசனைச் சங்கத்தின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருந்த 45 தொடக்கப்பள்ளிகள் அரசுக்கு 'சரண்டர்' செய்யப்பட்டன[14]. அப்பள்ளிகள் இன்றும் 'சரண்டர் பள்ளிகள்' (Surrender Schools) என்றே அழைக்கப்படுகின்றன. மொத்தத்தில் எல்.எம்.எஸ். சபை நிர்வாகம் அப்போது 158 பள்ளிகளை இழந்தது[15]. முன்னர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் அரசு அளித்து வந்த கல்விக் கட்டணச்சலுகை கிறிஸ்தவ மாணவர்களுக்கு நிறுத்தப்பட்டது[16].

திருவிதாங்கூர் சபை ஆலோசனைச் சங்கத்தின் கீழ் செயல்பட்டு வந்த 443 சபைகளில் 157 இடங்களில் பள்ளிக் கட்டிடங்களும் ஆலயக்கட்டிடங்களும் ஒன்றாகவே இருந்தன[17]. அக்கட்டிடங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டுத் தலங்களாகவும் பிறநாட்களில்

பள்ளிக் கூடங்களாவும் கிறிஸ்தவர்களால் பயன் படுத்தப்பட்டு வந்தன. ஆனால் 1938-39-ஆம் கல்வி ஆண்டிற்குப் பின்னர் எந்தப் பள்ளிக் கட்டிடங்களும் வழிபாட்டுத்தலங்களாகப் பயன்படுத்தப்படல் கூடாது என அரசு உத்தரவு பிறப்பித்தது[18]. இவ்வுத்தரவு காரணமாகப் பல இடங்களில் கிறிஸ்தவர்கள் வழிபாட்டுத்தலங்கள் இன்றி அவதியுற்றனர். தொடர்ந்து ஆலயக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் கல்லறைத் தோட்டங்கள் அமைப்பதற்கும் பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு விதித்தது[19].

கிறிஸ்தவக் கல்வி நிலையங்களுக் கெதிராக அரசு நடத்தியத் தாக்குதல்களைக் கண்டித்துத் திருவனந்தபுரத்தின் கத்தோலிக்கப் பேராயர் மார் இவானியஸ் தலைமையில் அச்சமுதாயத்தவர் பல போராட்டங்களை நடத்தினர். தமது திருச்சபையின் அச்சத்தைத் தெரிவித்து மார் இவானியஸ் மகாராஜாவுக்கு மனு ஒன்றையும் சமர்ப்பித்தார். சங்ஙனாச்சேரி பேராயர் மார் ஜேம்ஸ் காளசேரி அரசின் கல்விக்கொள்கையைக் கண்டித்து எழுதிய கடிதம் தொடர்பாக அரசின் கடுமையான மிரட்டல்களுக்குள்ளானார். இராமசாமி அய்யர் கிறிஸ்தவ நிறுவனங்களுக் கெதிராக நடத்திக் கொண்டிருந்த தாக்குதல்களை பற்றிச் சென்னை, மும்பை, பெங்களூர் ஆகிய இடங்களின் பேராயர்களும் இந்திய அரசுக்குப் புகார் மனுக்களை அனுப்பினர்[20].

அரசுக்கு இணக்கமான பேராயர்களையே திருவிதாங்கூரில் நியமிக்க வேண்டுமென வாட்டிகனை கேட்குமளவிற்கு மன்னரும் திவானும் திருச்சபையின் மீது கட்டுப்பாடுகளை இறுக்கினர். வெள்ளையம்பலத்தில் கத்தோலிக்கப் பேராயரின் இல்லம் கட்டுவது தொடர்பாகப் பல்வேறு நிபந்தனைகளையும் கால தாமதங்களையும் அரசு ஏற்படுத்தியது[21]. 'எந்தச் சமயத்திற்கும் பிற மக்களின் வறுமையையோ, பொருளாதார நிலமையையோ, பிற அதிருப்திகளையோ பயன்படுத்தி அவர்களின் சமயத்தை விட்டு மற்றொரு சமயத்திற்கு மாற்றுவதற்கு உரிமை கிடையாது'[22] எனக்கூறிய இராமசாமி அய்யரின் அரசு, மிஷனரிகள் சமஸ்தானத்தில் நுழைவதற்கும் பல தடங்கல்களை ஏற்படுத்தியது[23]. ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைக் கவனிப்பதற்கென 1938-ஆம் ஆண்டு அரசு

Protector of Depressed Classes என்னும் அரசுப் பதவியை உருவாக்கியபோது, அம்மக்களை இந்து சமூகத்திற்கு நேராய் திருப்புவதற்குத் தீவிரமாய் உழைத்து வந்த ஆர்.வி. பொதுவல் என்பவருக்கே அப்பதவி வழங்கப்பட்டது[24]. தலித்துக்களும் ஏனைய பிற்படுத்தப்பட்ட மக்களும் அப்பொழுது மிக வேகமாகக் கிறிஸ்தவத்திற்கு நேராய் சென்று கொண்டிருந்த போக்கைத் தடுத்து நிறுத்தவே 1936-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் நாள் அனைத்துப் பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் இனமக்களையும் இந்து ஆலயங்களில் நுழைய அனுமதிக்கும் பிரகடனத்தை மன்னரைக் கொண்டு வெளியிட்டார். 1941-ஆம் வருடத்தைய திருவிதாங்கூர் சமஸ்தான மக்கட் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே இவ்வுண்மை தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அதில்:

'அது (ஆலய நுழைவுப் பிரகடனம்) இந்து சமுதாயத்திலுள்ள பிரிவினை சக்திகளைத் தடுத்துநிறுத்தி, பிற சமயங்களுக்கு மதம் மாறிச் செல்வோரின் எண்ணிக்கையைக் குறைத்து விட்டதுடன், இந்து சமயத்தை விட்டுச் சென்றோரில் பலரை மீண்டும் அதற்குத் திரும்பிவரவும் ஊக்குவித்தது'[25]. எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. திருவிதாங்கூர் அரசின் கிறிஸ்தவப் பகைமை பற்றி பிரிட்டீஷ் பாராளுமன்றத்தில் பேச்சு எழும் அளவிற்கு அது உலகறிந்த செய்தியாய் இருந்தது[26].

அக்காலத்தில் திருவிதாங்கூரில் செயல்பட்டுக் கொண்டிருந்த முக்கிய வங்கியான திருவிதாங்கூர் தேசீய மற்றும் கொல்லம் வங்கியும் (Travancore National and Quilon Bank), முக்கியபத்திரிகையான மலையாள மனோரமாவும் சிறியன் கிறிஸ்தவர்களின் உடமைகளாக இருந்தன. திருவிதாங்கூரின் இருபெரும் சக்திகளாக விளங்கிய அவ்விரு நிறுவனங்களின் வளர்ச்சியை இராமசாமி அய்யராலும் அவரைச் சுற்றியிருந்த அய்யர் கூட்டத்தாலும் பொறுத்துக்கொள்ள இயல வில்லை[27]. மூத்தராணிக்கும் இளைய ராணிக்கும் முன் நடைபெற்ற அதிகாரப் போட்டியின் போது மூத்த ராணியை ஆதரித்த சிறியன் கிறிஸ்தவர்களைப் பழிவாங்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த மகாராணிக்கும் மகாராஜாவுக்கும் மேற்கூறிய வங்கியின் செயல்பாடு ஒரு உறுத்தலாகப்பட்டது[28]. அதன் காரணமாக

மகாராஜாவும், மகாராணியும், திவானும் இணைந்து அவ்வங்கியின் நிர்வாகத்தின் மீது பல குற்றச்சாட்டுக்களை ஜோடித்து அதன் செயல்பாட்டைத் தகர்த்தனர். அதற்கான அனைத்து உத்தரவுகளும் அரண்மனையிலிருந்தே புறப்பட்டன[29]. திவான் 'தனது முழுப் பலத்தையும், தந்திரங்களையும் பிரயோகித்து அவ்வுத்தரவுகளைச் செயல்படுத்தினார்[30]. சி. பி. மாத்தன் என்னும் அதன் நிர்வாக இயக்குநரும் பிற நிர்வாகிகளும் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் உள்ளிட்ட பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்[31]. இவ்வங்கியின் செயல்பாட்டை அழிக்கத் திருவிதாங்கூர் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிக் கருத்துக்கூறும் தற்கால வரலாற்றறிஞர் ஏ.சிறீதரமேனன் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

'திருவிதாங்கூர் தேசீய மற்றும் கொல்லம் வங்கி மீது திருவிதாங்கூர் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் நிச்சயமாகக் கிறிஸ்தவ சமுதாயத்தின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவையே'[32].

அரசின் பல்வேறு சதித்திட்டங்களுக்குப் பின்னரும் அவ்வங்கியின் கணக்குகளை இறுதி முடிவுகட்டிய போது, திருவிதாங்கூருக்குள் உள்ள அதன் வைப்புதாரர்களுக்கு 81.25 விழுக்காடும் வெளியே உள்ள வைப்பு தாரர்களுக்கு நூறு விழுக்காடும் பணம் திருப்பிச் செலுத்தும் அளவிற்கு அதன் நிதி நிலமை வலுவானதாகவே இருந்தது. இதன் மூலம் திருவிதாங்கூர் அரசு இவ்வங்கிக் கெதிராக சுமத்தியக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஜோடிக்கப்பட்டவையே என்பதும் அவை சிறியன் கிறிஸ்தவர்களுக்கெதிராக திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளே என்பதும் அனைத்துத் தரப்பினராலும் புரிந்து கொள்ளப்பட்டன[33].

அரசுக் கெதிராகச் செய்திகள் வெளியிட்ட குற்றத்திற்காக 1938-ஆம் ஆண்டு மலையான மனோரமா பத்தரிகையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு அதன் அச்சகமும் வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டன. அதன் உரிமையாளர் கே. சி. மாமன் மாப்பிள்ளை பல்வேறு வழக்குகளில் உட்படுத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறியன் கிறிஸ்தவரான போத்தன் ஜோசப் என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு திருவிதாங்கூரில் விநியோகிக்கப்பட்டு

வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மீதும் பல கெடுபிடிகள் நடத்தப் பட்டன[34]. 1944-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பவுரத்வானி என்னும் மலையாளப்பத்திரிகை வெளியிட்ட 'கிறிஸ்தவ மெம்மோரியல்' என்னும் கட்டுரை காரணமாகத் திருவிதாங்கூர் அரசின் நெருக்கடிகளைச் சந்தித்தது. 1945 டிசம்பரில் மலபார் மெயில் என்னும் பத்திரிகை மீது இந்து விரோதப் போராட்டங்களைத் தூண்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. மேற்கண்டவாறெல்லாம் இராமசாமி அய்யர் நடைமுறைப் படுத்திய கிறிஸ்தவ விரோத கெடுபிடிகளுக்கு அவர் மட்டுமே பொறுப்பு என முடிவு கட்டிவிடலாகாது. 'உண்மையில் அவர் பற்றிக் கூறப்படும் அனைத்துக் கிறிஸ்தவ விரோத கொள்கைகளும் நடவடிக் கைகளும் அவரது அரண்மனை எஜமானர்களின் விரிவான முழுக்கலந்தாய்வுக்குட்பட்டே வகுக்கப்பட்டன' என ஏ. சிறீதரமேனன் எழுதியுள்ளார்[35].

1932-ல் அறிமுகம் செய்யப்பட்ட சட்டமன்றப் பிரதிநிதித்துவ முறைகளைக் கிறிஸ்தவர்களுடன் இணைந்து எதிர்த்த ஈழவ சமுதாயத்தினர் மீதும் திவான் பல்வேறு அடக்கு முறைகளைக் கையாண்டார். அதன் காரணமாக அம்மக்களும் அரசுக் கெதிராகத் திரும்பிவிட்டனர்[36]. அக்கால அரசியல் நிலவரம் பற்றி எழுதும் தற்கால எழுத்தாளர் ஒருவர் 'சி.பி. என்னும் ஆலமரத்தின் கீழ் கிறிஸ்தவர்களோ, நாயர்களோ, ஈழவர்களோ வளர அனுமதிக்கப் படவில்லை' எனக்குறிப்பிட்டுள்ளார்[37]. இக்காரணங்களால் திருவிதாங்கூரில் 1891-ல் பிறந்த 'மலையாளி மெம்மோரியல்' சாதிக்கூட்டணி மீண்டும் உதயமாயிற்று. நாயர்கள், சிறியன் கிறிஸ்தவர்கள் மற்றும் ஈழவர்கள் ஆகியோர் அடங்கிய இக்கூட்டணியினர் பிரிட்டீஷ் இந்தியாவில் அப்போது நிலவிய தேசீய எழுச்சியைத் தங்கள் முகமூடியாக அணிந்து கொண்டார்கள். 1937-இல் பிரிட்டீஷ் இந்தியாவில் தேர்தல்கள் நடத்தப்பட்டு அதன் பல்வேறு மாநிலங்களிலும் பொறுப்பாட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து மைசூர், காஷ்மீர், ஹைதராபாத், ஜெய்பூர், ராஜ்காட், ஒரிசா போன்ற பல சமஸ்தானங்களிலும் பொறுப்பாட்சிக் கோரிக்கைகள் எழுந்தன[38]. அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இராமசாமி அய்யரைத் திவான் பதவியிலிருந்து ஒழித்துக் கட்ட திட்டமிட்டார்கள் மேற்கூறிய சாதிகளின் தலைவர்கள். "மதிராசி பட்டருடே பரணம் வேண்டே

வேண்டா[39]" (தமிழ் நாட்டுப் பார்ப்பனனின் ஆட்சி வேண்டவே வேண்டாம்) என்னும் அவர்களது முழக்கம் மேற்கூறிய சாதிக்கூட்டணியினரின் பார்ப்பன மற்றும் தமிழர் எதிர்ப்பு வேகத்தை வெளிப்படுத்தியது. அகில இந்திய காங்கிரசின் தலைமையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட அவர்கள் 1938-ல் திருவனந்தபுரத்தில் கூடி திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் (Travancore State Congress) என்னும் அரசியல் கட்சியைத் தோற்றுவித்து சமஸ்தானத்தில் உடனடியாகப் பொறுப்பாட்சியை அமல்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை அரசின் முன் வைத்தனர்[40]. ஸ்டேட் காங்கிரசின் தலைமையும், அதன் பங்காளிகளும், அதன் நடவடிக்கைகளும் அவ்வமைப்பு மலையாளி மெம்மோரியல் சாதிக் கூட்டணியின் மறுபதிப்பே என்பதனைத் தெளிவுபடுத்தின. நாயர் தலைவரான பட்டம் தாணுபிள்ளை அதன் தலைவராகவும், சிறியன் கிறிஸ்தவரான ட்டி.எம். வர்கீஸ் என்பவரும் ஈழவ சமூகத்துத் தலைவரான சி. கேசவன் என்பவரும் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர்[41].

ஒடுக்கப்பட்ட மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு சமஸ்தான அரசு மேற்கொண்டு வந்த முயற்சிகளுக்கு காங்கிரஸ் தனது துணை அமைப்புக்களான இந்து மிஷன், அரிசன சேவா சங்கம் போன்றவை மூலம் ஆதரவு நல்கி வந்தது. எனவே அதுவரை காங்கிரசின் நடவடிக்கைகளை ஆதரித்து வந்த திவான், தனது எதிர்ப்பாளர்கள் காங்கிரஸ் முகமூடியை அணியத் தொடங்கியதும் அதன் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடைவிதித்தார். பொறுப்பாட்சி என்பது திவான் பதவி ஒழிப்பை மையமாகக் கொண்டிருந்ததால் ஸ்டேட் காங்கிரசின் அனைத்துப் போராட்டங்களும் தம்மைக் குறிவைப்பவையே எனத் திவான் கருதினார். அதன் காரணமாக அக்கட்சியின் அனைத்துப் போராட்டங்களையும் அவர் இரும்புக் கரம் கொண்டு அடக்கினார்[42]. அதற்கென அவர் சட்டத்திற்கும் ஜனநாயக நெறிமுறைகளுக்கும் விரோதமாக காவல்துறை, நீதித்துறை போன்றவற்றையும் கூடக் கூச்சமின்றி ஏவிவிட்டார்.[43] இராமசாமி அய்யரின் அரசு மேற்கொண்ட கடுமையான அடக்கு முறைகளை நாயர்களாலும் சிறியன் கிறிஸ்தவர்களாலும் தாக்குப்பிடிக்க இயலவில்லை. அத்துடன் சிறியன் கிறிஸ்தவர்களின் அரசியல் எழுச்சிக்கு ஸ்டேட் காங்கிரஸ்

கருவியாவதைக் காந்தியார் விரும்ப வில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் கிறிஸ்தவத்துக்கு நேராய் சென்று கொண்டிருந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆலய நுழைவுப் பிரகடனம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொணடு வந்த திவானையும், அரச குடும்பத்தையும் பாதுகாக்கும் அணுகு முறையையும் காந்தியார் கொண்டிருந்தார். எனவே ஸ்டேட் காங்கிரசை முடக்க சர்ச்சைக்குரிய பல்வேறு உத்தரவுகளை காங்கிரசின் அகில இந்திய தலைமையின் பெயரால் அவர் பிறப்பித்துக் கொண்டிருந்தார். சமஸ்தானத்தின் கிறிஸ்தவர்கள் இதுபற்றிக் காந்தியாருக்குப் பலமான கண்டனங்களைத் தெரிவித்தனர். இக்காரணங்களால் வெகு விரைவிலேயே ஸ்டேட் காங்கிரஸ் ஏறக்குறைய செத்துப் போய்விட்டது.[44]

வடதிருவிதாங்கூரின் பெரும்பான்மை மக்களான நாயர், சிறியன் கிறிஸ்தவர் மற்றும் ஈழவர் ஆகியோர் ஏறக்குறைய முழுவதுமாகத் தமக்குப் பகைவர்கள் ஆகி விட்டதை உணர்ந்த திவான், தென் திருவிதாங்கூரில் தமக்குஆதரவாளர்களைத் தேடிக் கொள்ளும் முயற்சியில் இறங்கினார். தென்திருவிதாங்கூரின் சாதிக் கூறுகளும் திவானின் இம்முயற்சிக்குத் சாதகமாய் அமைந்திருந்தன. மேற்கூறிய மூன்று சாதியினரும் தென் திருவிதாங்கூரில் சொற்ப அளவிலேயே வாழ்ந்து வந்தமையால் அவர்களது ஸ்டேட் காங்கிரசின் நடவடிக்கைகளும் அங்கு சொற்ப அளவிலேயே இருந்தன. அப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்களாய் இருந்தது தமிழ்பார்ப்பனரான சி.பி. இராமசாமி அய்யருக்கு அவர்களுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு வசதியாய் அமைந்துவிட்டது. தோவாளை மற்றும் அகதீஸ்வரம் தாலுகாக்களில் வாழ்ந்து வந்த வெள்ளாளர்களுக்கு, நாயர்களுக்கு இணையான சூத்திரர் என்னும் உயர்சாதி அந்தஸ்தை திருவிதாங்கூர் மன்னர்கள் வழங்கியிருந்தமையால் அவர்கள் பரம் பரையாகவே அரச குடும்ப விசுவாசிகளாக இருந்து வந்தனர்.[45] இந்நிலையில் இராமசாமி அய்யரும் நாஞ்சில் நாட்டில் நிலவிலிருந்த நிலவரிமுறையை வெள்ளாள நிலச்சுவான்தாரர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் மாற்றியமைத்து அவர்களின் விசுவாசத்தை மேலும் உறுதி செய்து கொண்டார்.[46] திவான் தங்களுக்கு வழங்கிய இப்புதியச் சலுகைக்கு

கைமாறாக வெள்ளாள நிலச்சுவான்தார்கள் எம். சிவதாணுபிள்ளை என்னும் சட்டசபை உறுப்பினர் தலைமையில் அணிதிரண்டு ஸ்டேட் காங்கிரஸ் கட்சி தங்கள் சாதியினரிடையே காலூன்றிவிடாமல் பார்த்துக் கொண்டனர். அத்துடன் இந்து மிஷன், இந்து மகா சபை போன்ற இந்து அமைப்புக்களின் ஆதரவு இராமசாமி அய்யருக்கு வெளிப்படையாக இருந்தது.

முன்னர் அவர் வெகுவாகப் பகைத்து வந்த தென்திருவிதாங்கூர் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவர்களுக்கும் இப்போது திவான் நேசக்கரம் நீட்டத் தொடங்கினார். பல தலைமுறைகளாக சமஸ்தானத்தின் உயர் அரசு பதவிகளினின்று விலக்கி வைக்கப் பட்டிருந்த அச்சமுதாயத்தைச் சேர்ந்த ட்டி. ஏ. தாமஸ், எலிசபெத் தேவசிகாமணி, ஏ. குணமணி,[47] டாக்டர் ஹில்கையா, சி. கே. தாஸ்,[48] போன்றோர் அரசின் உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். தென்திருவிதாங்கூர் தமிழ் மக்களின் மாபெரும் தலைவராகவும் இருந்த ஏ. நேசமணி திருவிதாங்கூர் பல்கலைக்கழக செனட் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.[49] தென் திருவிதாங்கூர் புராட்டஸ்டாண்ட் திருச்சபையுடன் தமது நட்பை வெளிக்காட்டும் நோக்கத்தில் 1945-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் நாள் திருவனந்தபுரம் விக்டோரியா நகர மண்டபத்தில் நடைபெற்ற எல்.எம்.எஸ்.-ன் 150-ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளிலும் இராமசாமி அய்யர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.[50]

இக்காரணங்களால் தென்திருவிதாங்கூரில் திவானுக்கெதிரான அரசியல் நடவடிக்கைகள் முழுவதுமாகத் தவிர்க்கப்பட்டு அங்கு ஸ்டேட் காங்கிரசின் செயல்பாடுகள் "பெயரளவிலேயே இருந்தது."[51] அப்போது இப்பகுதியின் அரசியல் உன்னிப்பாளர்களில் ஒருவராக விளங்கிய ஏ.ஏ. ரசாக் என்பவர் இது பற்றிக் கூறுகையில்,

"அரசியல் இயக்கமாக ஒரு நிகழ்ச்சியும் (அங்கு) நடந்ததில்லை. சமஸ்தானக் காங்கிரசின் தோற்றத்திற்குப் பிறகு நாகர்கோவில், குழித்துறை ஆகிய நகரங்களில் சில வாலிபர்கள் ஏதாவது ஒரு வக்கீல் தலைமையில் சங்கம் சேர்ந்து "ஜெய ஜெய பாரதம்," "பாரத மாதாவுக்கு ஜே," "காந்திக்கு ஜே" என்று கோஷமிட்டதோடு சரி. எவரும் திருவிதாங்கூருக்குச் சுய ஆட்சி வேண்டுமென்றோ, ராஜ ஆட்சி நீங்க வேண்டுமென்றோ குரல்

கொடுத்ததில்லை. வெள்ளையனை வீட்டுக்குப் போகச் சொல்லி 1942-இல் ஒரு புரட்சி நடந்ததல்லவா? அப்போது கூட இங்கு யாரும் சப்தம் போட்டு உரக்கச் சொன்னதில்லை"[52] எனக்குறிப் பிட்டுள்ளார். இப்பகுதியின் மற்றொரு அரசியல் ஆர்வலரான பி.எஸ். மணி என்பவர்,

"............ அப்போது ஏற்பட்ட கொந்தளிப்பிலே கலந்து கொள்ளாது திருவிதாங்கூர் தமிழ்ப் பிரதேச வாசிகள் ஒதுங்கியிருந்தனர் .... இக்கிளர்ச்சிகளில் கலந்து கொள்ளாததத்தினால் திரு - தமிழர்களை மலையாளத்தினர் வெறுக்க ஆரம்பித்தனர்"[53]என எழுதியுள்ளார்.

இங்ஙனம் தென் திருவிதாங்கூர் பகுதியில் நிலவிய அரசியல் சூன்ய நிலைக்குக் காரணம் ஸ்டேட் காங்கிரசின் சாதிக் கூட்டணித்தன்மையும், தென்திருவிதாங்கூர் மக்களுக்குத் திவான் நட்புக்கரம் நீட்டத் தொடங்கியதும் மட்டுமே எனக்கூறிவிட இயலாது. இந்திய அரசியல் வானில் வேகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களையும் அவை தொடர்பான அரசியல் யதார்த்தங் களையும் கல்வியில் மிகவும் முன்னேறி யிருந்தவர்களான தென் திருவிதாங்கூர் மக்கள் நன்கு புரிந்து வைத்திருந்ததும் அதற்கு ஒரு முக்கிய காரணமாகும். சமஸ்தானத்தின் திவான் பதவி என்பது மன்னரால் தம் விருப்பப்படி நேரடியாக நியமிக்கப்பட்டு வந்த பதவி அல்ல; திவான் நியமனத்தில் ஆங்கில அரசின் பங்கு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது[54]. அந்நிலையில் பிரிட்டீஷ் இந்தியா விடுதலை பெற்றால் மட்டுமே திவான் பதவி ஒழிக்கப்பட்டு சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்பட வழி ஏற்படும். இந்தியா விடுதலை பெறும்போது சமஸ்தானங்களும் இந்திய யூனியனுடன் இணைந்து கூட்டாட்சி ஏற்பட 1935-ஆம் வருட அரசியல் சட்டத்தில் வழிவகைகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன.[55] தொடர்ந்து இந்திய அரசியல் அமைப்பில் ஏற்பட்டுக் கொண்டிருந்த வளர்ச்சியும் அத்திசையில் தான் சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில் திருவிதாங்கூரின் சுதந்தர பிரகடனம் ஒரு "கோமாளித்தனமே"[56] என்பதனையும், ஸ்டேட் காங்கிரசின் பொறுப்பாட்சி முழக்கம் என்பது "மலையாளத்தார்களுக்கும் திவானுக்கு மிடையே நடக்கும் போராட்டமே"[57] என்பதனையும் தென்

திருவிதாங்கூர் மக்கள் அனைவரும் நன்கு தெரிந்தே வைத்திருந்தனர். அக்காலங்களில் அகில இந்திய காங்கிரசின் தலைமையும் சமஸ்தானங்களில் காங்கிரஸ் சார்பில் நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதையே விரும்பியது. 1938-இல் ஹரிபுராவில் கூடிய காங்கிரசின் தீர்மானமும் அங்ஙனமே அமைந்திருந்தது.[58] ஆயினும் இவ்வுண்மை நிலையைப் புரிந்து கொள்ளாமலும், புரிந்து கொண்டும் "விளையாட்டாகவும்"[59] அவ்வப்போது சில இளைஞர்கள் ஊர்வலங்கள் சென்றும், கோஷங்கள் எழுப்பியும் வந்தனர். அவர்களது அந்நடவடிக்கைகள் பிற்காலத்தில் தியாகிகள் பட்டியலில் அவர்கள் பெயர்கள் இடம் பெறவும் மக்கள் வரிப்பணத்தினின்று ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளவும் உதவியதேயன்றி அரசியல் ரீதியாக வேறெதுவும் சாதித்து விடவில்லை.

இங்ஙனம் தென் திருவிதாங்கூரின் அரசியல் நிலவரம் மந்தமாக இருந்ததெனினும், இந்திய அரசியலில் வேகமாக நிகழ்ந்து கொண்டிருந்த மாற்றங்களை இங்குள்ள புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவர்கள் உன்னிப்புடன் கவனித்த வண்ணமே இருந்தனர். 1908-இல் எஸ்.ஐ.யூ.சி. அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து எல்.எம்.எஸ். கிறிஸ்தவர்களின் திருவிதாங்கூர் சபை ஆலோசனைச் சங்கம் 1920-ஆம் வருடம் திருத்தியமைக்கப்பட்டது.[60] அது முதல் அவ்வமைப்பு திருச்சபையையும் அதனைச்சார்ந்த நிறுவனங்களையும் மட்டுமே மேற்பார்வை செய்தது. எனவே தங்கள் சமூகத்தவரது அரசியல் மற்றும் பொருளாதார நலன்களைப் பேண ஏற்றதொரு அமைப்பு தோற்றுவிக்கப்படல் வேண்டும் என அதன் தலைவர்கள் எண்ணத் தொடங்கினர்.[61] அத்தகைய எண்ணமுடையோர் சிலர் இரட்சண்யசேனை மற்றும் லூத்தரன் கிறிஸ்தவர்களிடையேயும் இருந்தனர். இறுதியாக மேற்கூறிய மூன்று புராட்டஸ்டாண்ட் பிரிவு களையும் சேர்ந்த 21 பிரமுகர்கள் 1921-ஆம் ஆண்டு மேய் 18-ஆம் நாள் முட்டத்திலுள்ள காக்ஸ் பங்களாவில் கூடித் "தென் திருவி தாங்கூர் கிறிஸ்தவ இளைஞர் முகாம்" (The South Travancore Christan Young Men's Retreat) என்னும் அமைப்பைத் தொடங்கினர்.[62] அதன் உறுப்பினர் பட்டியலில் 400 பேர் இடம் பெற்றிருந்தனர்.[63] ஜே.ஏ. ஜேக்கப், டி.எம். தேவசகாயம், ஏ. குணமணி,

அகிமாஸ், ஏ. நேசமணி, வி. ஈசார்தாஸ் முதலியோர் அதன் முக்கிய நடவடிக்கையாளர்களாக இருந்தனர். ஆண்டிற்கொரு முறை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் கூடித் தங்கள் சமுதாயத்தவர் சந்தித்துக் கொண் டிருந்த அரசியல், சமுதாய, சமய மற்றும் கல்விப் பிரச்சனைகள் பற்றி விவாதித்து வந்தனர்.[64]

1928-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கூறிய தலைவர்கள் கன்னியாகுமரியில் கூடிய போது கிறிஸ்தவர்களின் அரசியல் நலன்களைப் பேணுவதற்கெனத் தனியான அமைப்பு ஒன்று தொடங்குவது பற்றி ஆராய்ந்தார்கள். இறுதியில் ஆண்டிற்கொரு முறை திருவிதாங்கூர் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவர்களின் மாநாடு நடத்தி அதன் மூலம் தங்கள் சமூகத்தவரிடையே அரசியல் எழுச்சியை ஏற்படுத்துவது எனத்தீர்மானிக்கப் பட்டது.[65] அதன்படி தென்திருவிதாங்கூர் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவர்களின் முதல் மாநாடு 1929-ஆம் வருடம் மார்த்தாண்டத்தில் கூடியது. அதில் சென்னை மாநில சட்ட மன்ற உறுப்பினர் டேனியல் தாமஸ் சிறப்புரை ஆற்றினார். அடுத்த ஆண்டு நாகர்கோவிலில் கூடிய இரண்டாவது மாநாட்டில் டெல்லி மத்திய சட்டமன்றத்தின் இந்தியக் கிறிஸ்தவ பிரதிநிதியும் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான தேவதாஸ் சிறப்புரை ஆற்றினார்.[66] இன்றைய குமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் சேரக்காரணமான திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவிக்க மார்ஷல் நேசமணி அவர்கள் 1947 செப்டம்பர் 8-ஆம் நாள் நாகர்கோவில் ஆலன் நினைவு மண்டபத்தில் கூட்டிய கூட்டம் இக்கிறிஸ்தவ அரசியல் மாநாடுகளின் பரிணாம வளர்ச்சியே.

இந்தியாவில் ஆட்சி மாற்றம் உறுதிப் பட்டிருந்த அக்காலத்தில் மலையாளி மெம்மோரியலின் மறுபதிப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் கட்சி, தமிழ் பேசும் பகுதிகளான தென் திருவிதாங்கூரையும் உள்ளடக்கிய ஐக்கிய கேரள மாநிலம் அமைக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியது.[67] ஐக்கிய கேரளத்தில் தாங்கள் என்றென்றும் மலையாளி உயர் சாதியினருக்குக் கீழ்ப்பட்டே இருக்க வேண்டும் என அஞ்சிய தென் திருவிதாங்கூர் தமிழ் பிரதிநிதிகள் 1945-ஆம் ஆண்டில் சேம் நதானியல் என்னும்

புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவ வழக்கறிஞர் தலைமையில் அகில திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ் என்னும் அமைப்பைத் தொடங்கி, திருவிதாங்கூர் தமிழ்ப்பகுதிகள் அச்சமஸ்தானத்திற்குள் தனியொரு "மகாணமாக" நிர்வகிக்கப்படல் வேண்டும் என்னும் கோரிக்கையை விடுத்தனர். திவான் பதவியினின்று தன்னை ஒழித்துக்கட்ட முயன்று கொண்டிருந்த ஸ்டேட் காங்கிரசுக்குப் போட்டியாகத் தோன்றிய இக்கட்சியைத் தடையேதுமின்றி செயல்பட சி.பி. இராமசாமி அய்யர் அனுமதித்தார்.[68] அச்சூழ்நிலையைப் பயன்படுத்தி அதனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட எம். சிவதாணுபிள்ளை, சிவராம பிள்ளை, ஸ்ரீவி. தாஸ் போன்ற திவான் ஆதரவாளர்கள் அக்கட்சியை இராமசாமி அய்யரின் சுதந்தர திருவிதாங்கூர் கோட்பாட்டிற்கு ஆதரவாகத் திருப்ப முயன்றனர்.[69] அதன் காரணமாக 1947 ஜூலை 6-ஆம் நாள் மருத்துவாழ் மலையில் வைத்து நடைபெற்ற அக்கட்சியின் பொதுக்குழுவில் பெரும் ரகளைகள் ஏற்பட்டு அதன் செயல்பாடு நின்று போயிற்று.[70] 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் ஆங்கில ஆட்சி முடிவுற்றதைத் தொடர்ந்து மற்றெந்த சமஸ்தானத்தையும் போலத் திருவிதாங்கூரும் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.[71] சமஸ்தானத்தின் இடைக் கால நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென உடனடியாக ஒரு "சட்டம் இயற்றும் குழுவை" (Rule Making Committee) அமைப்பதற்கான உத்தரவை மகாராஜா வெளியிட்டார்.[72]

இத்துடன் சி.பி. இராமசாமி அய்யரின் ஆட்சி திருவிதாங்கூரில் முடிவுற்றது. எந்த மக்களாட்சி நெறிமுறைகளுக்கும் மதிப்பளிக்காத ஒரு சர்வாதிகார ஆட்சி என்றே அவரது ஆட்சிபற்றி இன்று வரை மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. குறிப்பாக 1947 ஜூலை 18-ஆம் நாள் மகாராஜா சித்திரைத் திருநாள் வெளியிட்ட இந்திய ஒருமைப் பாட்டிற்கு விரோதமான சுதந்தர திருவிதாங்கூர் பிரகடனத்திற்கு இராமசாமி அய்யரையே பொறுப்பாளி ஆக்கிவிட்டார்கள். ஆனால் 1949 ஜனவரி 31-ஆம் நாள் இராமசாமி அய்யர் அப்போதைய இந்திய உள்துறை அமைச்சர் சர்தார் பட்டேலுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

"It must be remembered that all the policies and actions and steps formulated and carried out by me were the result of close and daily consultation with His Highness who, as you know, is

highly educated and conversant of public affairs and also leads an uniquely exemplary personal life. At the time when I was Dewan, he was the Sovereign and not a merely constitutional Head of the State and his responsibility was definite"[73]

இதன் மூலம் இராமசாமி அய்யரின் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு யார் காரணம் என்பது தெளிவாகிறது.

மேலும் இராமசாமி அய்யர் கடைசியாக 1960-ஆம் ஆண்டு தென் திருவிதாங்கூரின் தலைமையிடமான நாகர்கோவிலுக்கு ஒரு முக்கிய அரசு முறைப் பயணமாக வந்தார். அப்போது முன்னாள் சட்ட மன்ற ஊறுப்பினர் திரு. எம். சிவதாணுபிள்ளையும் அவரது ஆட்களுமே அவரை வரவேற்று பொதுக் கூட்டங்களும் நடத்தி சிறப்பித்தனர்.[74] அப்போது குமரி மாவட்ட அரசியலில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த மார்ஷல் நேசமணியோ அவரது ஆட்களோ இராமசாமி அய்யரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. இதன் மூலம் இராமசாமி அய்யரின் கைக்கூலிகளாகத் தென்திருவிதாங்கூரில் செயல்பட்ட இனத்தவர் யார் என்பது தெளிவாகிறது.

NOTES

1. A. Sreedhara Menon, Triumph and Tragedy in Travancore, (Kottayam, 2001) p.3.
2. Ibid, p.118
3. Coronation Speech of His Highness the Maharaja of Travancore, 6 November , 1931.
4. A. Sreedhara Menon, op.cit., pp.6-9
5. The New Sunday Express (Madurai), March 9, 2003, p.13.
6. Ibid.
7. A. Sreedhara Menon, op.cit., p.86
8. I bid, pp.64-65.
9. The New Sunday Express (Madurai), March 2, 2003, p.15.
10. Thengumthanam P. Sankara Pillai, Democracy in Kerala and Pattom A. Thanupillai (Trivandrum, 1969), p.14.

11. 1947-ல் சி.பி. இராமசாமி அய்யர் மீது திருவனந்தபுரத்தில் வைத்து நடத்தப்பட்ட கொலை முயற்சியில் அரண்மனைப் பிரதானிகளுக்குத் தொடர்பிருந்ததாகத் திருவிதாங்கூர் மக்களிடையே இப்போதும் பேச்சு நிலவுகிறது.
12. Jawaharlal Nehru, An Autobiography (London, 1962), pp.532 & 596.
13. L.M.S., Report by Norman Goodal After a Secretarial Visit to India, September 1937 - April 1938, p.45.
14. ஜாண் ஏ. ஜேக்கப், தென்திருவிதாங்கூர் லண்டன் மிஷன் சரித்திரம் (நாகர்கோவில், 1956) ப.134.
15. C.S.I., South Travancore Diocesan Council, Reports of Boards for the year 1948-49, p.19.
16. L.M.S., Report by Norman Goodal, p.33.
17. S.I.U.C., Travancore Church Council, Minutes from January to December1936,p.43.
18. I bid, p.43
19. The National Christian Council Review, January 1946, pp,6-7.
20. A. Sreedhara Menon, op,cit., p.63.
21. Ibid, pp.291-292.
22. Ibid, p.296.
23. Ibid, p.293.
24. Ibid, p.288.
25. Census of India, 1941, Vol.XXV, Travancore Part, Report, p.129.
26. A. Sreedhara Menon, op.cit., p.292.
27. The New Sunday Express (Madurai), March 9, 2003, p.13.
28. A. Sreedhara Menon, op.cit., p.292.
29. Ibid.
30. Ibid, p.117.
31. Ibid, pp.126-130.
32. Ibid, pp.132-133.
33. Ibid, pp.131-132.

34. The New Sunday Express (Madurai), March 9, 2003, p.13.
35. A. Sreedhara Menon, op.cit., pp.271-272, 292.
36. D. Daniel, 'The S.N.D.P. Yogam and the State Congress,' South Indian History Congress 1981, pp.117-122.
37. The New Sunday Express (Madurai), March 9, 2003, p.13.
38. V.P. Menon, The Story of the Integration of the Indian States (Madras, 1956), p.42.
39. தேரூர் எஸ். சிவன்பிள்ளை, புயலின் நடுவே ஒரு பயணம், பாகம்2, (தேரூர், 1998), ப.3.
40. K. Karunakaran Nair, 'Genesis of the Travancore State Congress,' Journal of Kerala Studies, vol.II., Sl.No. 2&3, January 1974, pp,331-332.
41. தேரூர் எஸ். சிவன்பிள்ளை, மு.நூ., ப.5.
42. M.J. Koshy, Last Days of Monarchy in Kerala (Trivandrum, 1973), p.5.
43. K. Karunakaran Nair, op.cit., pp.332-338.
44. M.K. Gandhi, The Indian States' Problem (Ahmedabad, 1941), pp.113-114.
45. Mateer Memorial C.S.I. Church, Platinum Jubilee Souvenir, December 1981, pp.56-81.
46. எஸ். சிவன்பிள்ளை, 'குமரி மாவட்டத்தில் தேசீய எழுச்சி,' கன்னியாகுமரி, (நாகர்கோவில்), ஆகஸ்டு 9, 1972, ப.26.
47. Mateer Memorial C.S.I. Church, Platinum Jubilee Souvenir, December 1981, pp.56-81.
48. தேசோபகாரி (நாகர்கோவில்), நூற்றாண்டு மலர் 1861-1961, ப.44, 160 & 161.
49. மார்ஷல் நேசமணி சிறப்புமலர் 1969, ப.29.
50. Triple Jubilee of the L.M.S., Public Meeting in the Victoria Jubilee Town Hall, Trivandrum, 26th October 1945, pp.12-17.
51. தேரூர் எஸ். சிவன் பிள்ளை, மு,நூ., ப.7 & 77.
52. ஏ.ஏ. ரசாக், நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம் (நாகர்கோவில், 1998), ப.16-17.

53. மணி, திருதமிழரியக்கம் (நாகர்கோவில்,1956), ப.8.
54. தேரூர் எஸ். சிவன்பிள்ளை, மு,நூ., ப.168.
55. V.P. Menon, op.cit., p.35.
56. ஏ.ஏ. ரசாக், மு.நூ., ப.38.
57. மணி, மு.நூ., ப.8.
59. M.K. Gandhi, op.cit., p.73,74,79,401, 402 & 403.
59. சேம் நதானியல் அவர்களுடன் நேர்காணல், நாள்: 23-11-1981.
60. Travancore Church Council (L.M.S.), Minutes of the Annual Meeting of 1920, p.1.
61. Speech delivered by Mr. A. Gnanasikamony, Chairman of the Reception Committee at the Second Annual Conference of the S. Travancore Protestant Christian Community held at Nagercoil, 1st & 2nd October, 1930, p.2.
62. The South Travancore Young Mens' Retreat, Silver Jubilee Session 1942, p.2.]
63. Ibid, pp.18-21.
64. Ibid, pp.3-5.
65. Speech Delivered by Mr. A. Gnanasikamony, op.cit., p.2.
66. Ibid, pp.3-4.
67. V.P. Menon, op.cit., pp.276-279.
68. தேரூர் எஸ். சிவன்பிள்ளை, மு.நூ. ப.224,226,228 & 247.
69. பி. எஸ். மணி அவர்களுடன் நேர்காணல், நாள் : 15-4-1982.
70. இரா. வேலாயுதப் பெருமாள், திருவிதாங்கூர் தமிழரியக்க ஆரம்பகால உண்மைகள் ப.21.
71. V.P. Menon, op.cit., p.116.
72. A. Nesamony, Inside Travancore Tamil Nad (Madras, 1948), p.3.
73. A. Sreedhara Menon, op.cit., p.398.
74. P. Ramachandran, The Unsung Crusader (Nagercoil, 1990) p.29.

18

நாகர்கோவில் கஸ்பாசபை வரலாறு

கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. பேராயத்தில் உள்ள பழம் பெரும் சபைகளில் ஒன்று நாகர்கோவில் கஸ்பா சபை. இந்த சபையின் கட்டுமான வரலாறு திரிக்கப்பட்டு அடிக்கடி பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. அப்படி ஒரு வெளியீட்டுக்கு எந்த முகாந்திரமும் அல்லது தேவையும் இருப்பதில்லை. சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களைக் கொச்சைப் படுத்தவே அப்படி வரலாறு திரிக்கப்பட்டு வெளியிடப் படுகிறது. இதன் பின்னணியில் காலம் காலமாக நம்மை அடக்கி ஒடுக்கி வைத்திருந்த இனத்தவர். இதை அறியாத நம் உடன் பிறப்புகள் தங்கள் சபையின் படத்தையும் சில குறிப்புகளையும் பத்திரிகைகளில் அடிக்கடி காணும் போது பூரிப்படைந்துவிடுகிறார்கள். சி.எஸ்.ஐ. ஒரு தலித் கொண்டு வந்த வேதமாம். நாகரம்மன் கோவில் தெப்பக்குளம் கரை கல்லை அக்கோவில் யானையை வைத்து இழுத்து வந்து சிறை கைதிகளால் கட்டப்பட்டதாம் கஸ்பா சபை. இது ஒரு மிகப்பெரிய அபாண்டம்.

கோவில் யானை கட்டிய சர்ச் ....? **:** முன்பு மிருகங்களை பாரம் இழுக்க வைத்தார்கள். பின்பு பாரவண்டியை வைத்துப்பாரம் இழுத்தார்கள். இப்பொழுது பார லாரியை வைத்துப்பாரம் இழுக்கிறார்கள். மிகப்பெரிய பழுவான மரங்களை காடுகளிலிருந்து இழுத்து வர, அதிக பெலன் கொண்ட மிருகமான யானையைப் பயன்படுத்துவது அன்று வழக்கம். ஒரு வீட்டைக்கட்ட யானை பயன்படுத்தினால், அந்த வீட்டை

யானை கட்டிய வீடு என்று விலாசப்படுத்தினால் ..... வீடு கட்ட பார வண்டியைப் பயன்படுத்தினால் பார வண்டி கட்டிய வீடு என்றும் பார லாரியைப் பயன்படுத்தினால் பார லாரி கட்டிய வீடு என்றும் தானே விலாசப்படுத்த வேண்டும்? பத்மநாபபுரம் கோட்டை மற்றும் அரண்மனை, மிஷன் பங்களாக்கள் முதலியவை யானைகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன. அவைகளை யானை கட்டியது என்று சா்வசாதாரணமாக விலாசப்படுத்துவதில்லை. ஆனால் நாகா்கோவில் கஸ்பா சபையை எப்போதுமே யானை கட்டிய கோவில் - யானை கட்டிய கோவில் என்று சா்வசாதாரணமாக விலாசப்படுத்துகிறாா்கள். ஏன்? காரணம் இருக்கிறது! "யானை" என்று சொல்வதுடன் - எழுதுவதுடன் விடுவதில்லை. "கோயில் யானை" என்று நீட்டுவாா்கள். அத்துடன் நின்று விடுவதில்லை. "நாகராஜா கோயில் யானை" என்று மேலும் நீட்டிக் கொள்கிறாா்கள். ஏன்? எங்கள் நாகராஜா கோவில் யனையை மீட் ஐயா் பலவந்தமாக அபகரித்து இழுத்து வந்து நாகா்கோவில் கஸ்பா சபை கட்டுமான பணியில் ஈடுபடுத்தினாா் என்று நம்ப வைத்து, புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவா்களைக் குற்றப்படுத்தி, கூச்சப்படுத்தி அடிமை உணா்வை ஏற்படுத்தக் கையாளும் ஒரு உபாயம் தான் இந்த யானைக் கதை.

கோயில் யானை பயன்படுத்தப்பட்டதா? நாகா்கோவில் நாகராஜாகோவில் யானை பயன்படுத்தப்பட்டதா? சுமாா் 100 ஆண்டுகளுக்கு முன் திரு. சி.எம். ஆகூா் அவா்கள் எழுதிய Church History of Travancore என்ற நூலில் கிடைக்கும் செய்தியை வைத்துதான் இவா்கள் தூக்குக்கயிறு திரிக்கிறாா்கள். இவா்கள் திரித்த கயிறை சி.எஸ்.ஐ. கிறிஸ்தவ மேதாவிகளும் பயன்படுத்தி அடிக்கடி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொள்கிறாா்கள். காண்க:

"Mr. Knill says, I saw huge elephant feeding near a temple with a keeper by his side. I said to the man whose elephant is this? The reply was, He belongs to the goddess who lives in the temple, she rides upon him twice a year at the processions. I thought if we could get this elephant to draw the building materials for our chapel, the animal would serve a new master. Through the Resident the matter was laid before the Queen. Her Majesty said, they may have the

elephant, but they must feed the animal and pay the keeper. We readily consented and had the gratification of seeing the monster daily engaged in drawing stones and timber for the house of the Lord"

நீல் ஐயர் கண்ட யானையும், யானைப் பாகனும் தான் கஸ்பா சபையைக் கட்ட பயன்படுத்தப்பட்டார்களா? அந்த யானை ஒரு கோயிலில் நிரந்தரமாக பணியாற்றிக் கொண்டிருந்ததா? அப்படியானால் அந்தக் கோவிலில் பூஜை நடக்க தினமும் யானையின் சேவை வேண்டுமே? நாகராஜா கோவில் யானை பயன்படுத்தப் பட்டது என்று எங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

திருவிதாங்கூரில் அன்று யானை இலாகா (Elephant Department) இருந்தது. அதன் கட்டுப்பாட்டில் 149 - யானைகள் இருந்தன. வன இலாகா கட்டுப்பாட்டில் இருந்த யானைகள் இந்த 149-க்குள் அடங்கவில்லை. 19 யானைகள் தினந்தோறும் பூஜைக்கு யானை தேவைப்படும் கோவில்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. நாஞ்சில் நாட்டிற்கும் திருவனந்தபுரத்திற்குமாக மராமத்து வேலைக்கு 67 யானைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மற்றவை சிறியவை, வயதானவை. பழகாதவை, பயிற்சிக்கு உட்பட்டவை. அன்று திருவிதாங்கூரில் 12 யானைத் தாவளங்கள் இருந்தன. இன்றைய குமரி மாவட்டத்தில் அன்று பத்மநாபபுரத்தில் மட்டும் யானைத்தாவளம் இருந்தது. இதை நிரூபிக்கும் அளவிலும் ஒரு நிகழ்ச்சி உண்டு. 1828 டிசம்பர் 21-ம் நாள், ஞாயிற்றுக்கிழமை நாயர் பிரதானிகள் கண்ணனூர் கோவிலுக்குள் நுழைந்து வழிபாட்டில் இருந்த நாடார்களை இழுத்து அடித்து தலையில் தென்னை ஓலைகளை ஏற்றி பத்மநாபபுரம் கோட்டை யானைகளின் தீவனத்துக்குக் கொண்டு சென்றதற்கு ஆவண சான்று உண்டு. ஒரு யானைத் தாவளத்தில் ஒரு மேல் விசாரிப்புக்காரர் மற்றும் 19 ஊழியர்கள் பணிபுரிந்தார்கள். ஒரு யானையின் ஒரு மாத தீவன செலவு மற்றும் மருத்துவச் செலவு, ஊழியர்களின் சம்பளம் ஆகியவையும் வரையறுக்கப்பட்டிருந்தன. (Selections from the Records of Travancore - 1844)

தின பூஜைக்கு யானை தேவைப்படும் கோவில்களில் தான் யானை உண்டு என்றால், அந்த கோவில் யானையைத்தனியாருக்கு வாடகைக்கு விட இயலுமா? விட்டால் தினப்பூஜை என்னவாகும்?

அப்படியானால் ஒரு கோவிலோடு இணைக்கப்பட்ட யானை கஸ்பா சபை பணிக்குத் தினந்தோறும் பயன்பட்டிருக்க நியாயம் இல்லை. நாகராஜா கோவிலில் தின பூஜைக்கு யானை பயன்படுத்தப்படவே இல்லை. அதனால் நாகராஜா கோவிலோடு இணைக்கப்பட்ட ஒரு யானை அங்கு இல்லை. மேலும், நாகராஜா கோவிலில் ஆண்டுக்கு ஒரு முறை தான் யானை மீது கடவுள் உருவச்சிலையை ஏற்றி பவனி நடத்தப்படுகிறது: காண்க: "The principal image of copper-gilt, and in the form of a serpent, is carried in procession in a car, like other idols once a year" (Native Life in Travancore)

"For some Pagodas Elephants are attached for the daily Poojah and on the occasions of Oolsavoms, additional elephants are allowed" (Selection from the Records of Travancore).

யானைப்பாகன் கூற்றான, ஆண்டின் இருமுறை தேவியை சுமந்து பவனி வரும் என்பதை ஏற்றுக்கொண்டால் நாகராஜா கோவிலுக்கும் அந்த யானைக்கும் எந்த தொடர்பும் இல்லையல்லவா? கன்னியாகுமரி தேவி ஆண்டில் இருமுறை யானை மீது ஏறி பவனி வருவதாக ஒரு மூத்த தேவசம் ஊழியர், என் மாணவர் கூறுகிறார். அதனால், பாகன் கூற்றை ஒப்புக் கொள்வதானால், நீல் ஐயர் கண்ட யானை கன்னியாகுமரி தேவி கோவிலோடு இணைக்கப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அரசு அந்த யானையைத்தான் கஸ்பா சபை பணிக்குத்தந்தது என்று சொல்ல முடியாது.

ஒரு கோவிலுக்குச் சொந்தமான எதையும் கோவில் கமிட்டியின் ஏகோபித்த சம்மதம் இல்லாமல் வெளியே எடுத்து வர முடியாது. மன்னர் கோவில் கமிட்டியில் வெறும் ஒரு உறுப்பினர். அவருக்கு ஒரே ஒரு ஓட்டு மட்டுமே உண்டு. மொத்தம் $8^1/_2$ ஓட்டுகள். அதனால் ஒரு கோவில் யானையை பயன்படுத்த மன்னரின் ஆணை எந்த பயனும் தராது என்பது தெளிவு. யானை இலாகாவுக்குத்தான் மன்னரின் ஆணை செல்லுபடியாகும்? காண்க:

"The Pagoda is under the management of a committee consisting of members including His Highness the Rajah, who though he exercises the chief control, has only one vote, nothing can be taken out of the

Pagoda without the sanction of the other members. The number of votes is $8^1/_2$ (Selections from the Records of Travancore)

பெண் தெய்வம் என்றுதான் யானைப் பாகன் குறிப்பிடுகிறான். நாகராஜா கோவிலின் உள்ளே இருப்பது ஆணா - பெண்ணா? ராஜாவா - ராணியா? ஆண் தெய்வம் உள்ளே இருந்தால் "நாகராஜா" என்றும், பெண் தெய்வம் உள்ளே இருந்தால் "நாக எட்ச்சி" என்றும் தான் விலாசப்படுத்தப்பட்டதாக ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது. இதில் எந்தப் பெயர் நாகர்கோவில் நாகராஜா கோவிலுக்குப் பொருந்துமோ? இது நாகராஜாகோவில் என்றால், யானைப் பாகனின் "தேவி" மற்றும் "வருடத்தில் இருமுறை பவனி" ஆகிய கூற்றுக்கள் பொருந்தாதவை. எனவே, கோவில் யானை என்பதே பொருந்தாத போது நாகராஜா கோவில் யானை என்பது அப்பட்டமான பொய் என்றானபோது தினகரன் பத்திரிகைக்கு ஏன் இப்படியொரு தகிடுமறியல்? பின்னணியில் யார்?

முதல் புரோட்டஸ்தாந்து மிஷனெரி 1806-ல் தென் திருவிதாங்கூருக்கு வந்த பிறகு நாகர்கோவில் என்று பெயரிடப்பட்டதாம். பாருங்கள்: "In the 18th Century A.D. after the arrival of Rev. W. T. Ringeltaube of the London Missionary Society, the place took its present name Nagercoil" (S. Padmanabhan, 1967)

றிங்கல் தௌபே ஐயர் நாகராஜா கோவிலில் வந்து வழிபட்டதாகவும், நாகராஜா கோவிலை வைத்து நாகர்கோவில் என்று பெயரிட்டதாகவும் கூற எங்களிடம் எந்த ஆவணங்களும் இல்லை. பத்மநாபன் அவர்களிடம் இருக்கலாம். எப்படியும் நாகர்கோவில் என்று பெயரிட்டு நாகராஜா கோவிலுக்குப் பெருமை தேடித்தந்தவர் ஒரு புரோட்டஸ்தாந்து மிஷனெரி. நாங்கள் 19-ம் நூற்றாண்டில் (1806) தான் றிங்கல்தௌபே இங்கு வந்ததாக அறிகிறோம். திரு. எஸ். பத்மநாப பிள்ளை சொல்வது போல றிங்கல் தௌபே 18-ம் நூற்றாண்டில் இங்கு வந்திருந்தால் இயேசு அல்லது அவருடைய குடும்பத்தாரில் யாராவது நாகராஜா கோவிலினுள் சிலையாக நின்றிருந்தார்களா? அவர்களை வழிபட நாகராஜா கோவிலுக்கு றிங்கல் தௌபே வந்தாரா? இந்த வரலாறு புதுசு கண்ணா . . . புதுசு! இப்படி வரலாறுகளைப் படைப்பது தான் இவர்கள் நோக்கம் என்பதை நாங்கள் அறிவோம். மேலும் காண்க:

"Nagercoil the name of which is derived from the five headed serpent shrine of Nagaraja, is situated in the heart of Nanjilnad. The temple of Nagaraja may be regarded as the splendid monument, showing at its best the fusion of the four streams of Indian religion. Besides the presiding deity Nagaraja, the image of Lord Siva and of Ananthakrishna have been enshrined in the Ardhamandapa and the pillars of the mandapa bear carved figures of Jain Thirthankars, Parsavanath and Mahavira. The beautiful main gateway of the temple reminds us of the Buddhist monastery of Chinese architecture. Thus the temple stands as an embodiment of the four creeds Saivism, Vaishnavism, Jainism and finally Buddhism." (S. Padmanabhan 1967)

என்னென்ன குலுமாலுகள் நடந்திருக்கின்றன? எத்தனை கைகள் மாறியிருக்கின்றன என்பவை தெளிவாகிறது. மொத்தத்தில் நாகராஜா கோவில் ஒரு கலப்பு என்று பத்மநாபன் கூறுகிறார். நாகர்கோவில் என்று பெயர் வைத்து நாகராஜா கோவிலுக்குப் பெருமை தேடித்தந்த கனம் றிங்கல் தௌபே ஐயர் அவர்களுடைய கடவுளான இயேசு கிறிஸ்துவின் அல்லது அவர் தாயின் உருவச்சிலையை கோவிலில் எங்காவது ஒரு மூலையில், நான்குடன் ஐந்தாக நிறுவி நன்றிக்கடன் சேர்க்காதது என்ன? நன்றி என்பது மருந்துக்கும் இல்லையே?

கைதிகளை பயன்படுத்திய சமாச்சாரம் :

ஒருவன் தன் வீட்டை, அவன் கட்ட வில்லையானால், அப்பா கட்டிய வீடு அல்லது தாத்தா கட்டிய வீடு என்று சொல்வான். ஒரு கிறிஸ்தவ கோவிலை, இன்ன போதகர் கட்டினார் அல்லது பேராயர் கட்டினார் என்று சொல்வார்கள். கட்டுமான பணியில் கால் அல்லது கை ஊனமுற்ற மனிதர் ஈடுபட்டிருந்தால், நொண்டி கட்டியவீடு அல்லது நொண்டி கட்டிய கோவில் என்று யாரும் சொல்வதில்லை. அல்லது கட்டுமான பணியில் பெண்கள் ஈடுபட்டிருந்தால் பெண்கள் கட்டிய வீடு அல்லது கோவில் என்று யாரும் விலாசப்படுத்த மாட்டார்கள். இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட கைதிகள் கட்டின அணை என்று சொல்லாமல் கரிகால் சோழன் கட்டிய அணை என்று தான் சொல்கிறோம். இப்படியிருக்க நாகர்கோவில் கஸ்பா சபையை ஏன் கைதிகள் கட்டிய சர்ச் என்று சொல்லி கொச்சைப் படுத்துகிறார்கள்? காரணம் உண்டு!

இவர்களுக்குக் கிடைக்கும் மிஷன் ஆவணச் செய்தி இதுதான் : "As soon as the plans and estimates were formed Mr. Mead busily collected the necessary materials and employed all the prisoners in the court Jail under him, with the permission of the sircar, to dig the foundation and it was by this means of prison labour that immense quantities of granite stones were removed from the banks of the Sepoy's Tank and other places to the Mission premises where stone masons and mechanics were employed to cut and fit them" (Agur).

கட்டிட வாணம் தோண்டும் பணியை மீட் ஐயர் சிறையில் இருந்த கைதிகளைக் கொண்டு செய்வித்தார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அரசின் அனுமதியுடன் தான் கைதிகளைப் பயன்படுத்தினார் என்பது சிறப்பு. வெளிநாட்டுக்குப்படை அனுப்பி அந்நாட்டு மக்களை கவர்ந்து வந்தால் அந்த கைதிகள் வேறு, குற்றங்களுக்காக தண்டனை பெற்ற கைதிகள் அரசாங்க விருந்தினர்கள். அவர்களைப் பயன்படுத்த வேண்டுமானால் அரசு அனுமதி வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்பட்ட அரசு அனுமதியையே பெற முடியும். மீட் ஐயர் கூலி கொடுத்து தான் கைதிகளைப் பயன்படுத்த முடியும்.

மீட்ஐயர் அவருடைய நீதிபதி பதவியைப் பயன்படுத்தி கைதிகளை இழுத்துவந்து கஸ்பா சபை பணியில் அமர்த்தியிருக்க முடியாது. அவர் 'ஜட்ஜ்' ஆக இருந்தது ஒரே ஒரு வருடம். ஆனால் கஸ்பாசபை பணித்துவக்கம் 1819, பணிநிறைவு 1860. கஸ்பாசபை பணி மொத்த செலவில் 10,000-த்தில் ஒரு பாகமாவது கைதிகளின் பணியாக இருக்க முடியுமா? கல்கோவில் என்று சொல்லும்போது கல்லாசாரிகளின் பணிதானே முக்கிய இடம் பெறும்? ஏன் கல்லாசாரிகள் கட்டிய கோவில் என்று அழைக்காமல் கைதிகள் கட்டிய கோயில் என்று அழைக்கிறார்கள்? சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களைக் குற்றப்படுத்தி கூச்சப்படுத்தி அவர்கள் மனங்களில் ஒரு தாழ்வுணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் நோக்கம்.

கைதிகளைக் பயன்படுத்த மன்னரின் அனுமதி மட்டும் இருந்தால் போதாது. திறந்த வெளியில் விட்டு அவர்களை வேலை வாங்குவது சாமான்னிய காரியமா? எப்படிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்? அதற்காகும் செலவு என்ன? அரசு அதை ஏற்காதல்லவா?

ஜாதிபடிக்கட்டில் அன்று நாஞ்சில் நாட்டில் மிக உயர்ந்த இடத்தில் இருந்தவர்கள் வெள்ளாளர்கள். நாடார் முதற்கொண்டுள்ள கீழ் ஜாதியினர் இவர்களுடைய வீடுகளிலும், நிலபுலன்களிலும் இலவச வேலை (ஊழியம்) செய்து தர வேண்டும். கிறிஸ்தவர்களும் இந்து கோவில்களிலும் இலவச வேலை செய்ய வேண்டும். அப்படித்தான் அன்று கைதிகள், கஸ்பா சபை கட்ட இலவச வேலை செய்திருந்தாலும், ஒரு பிறந்த - இறந்த நாள் இருக்கும் வரலாற்று நாயகன் (இயேசு)க்கு கோவில் கட்ட ஈடுபடுவதில், மற்ற எல்லா ஊழிய வேலைகளையும் விட இது சிறப்புதானே?

கைதிகளில் உயர் ஜாதியினர் இருக்க முடியாது. உயர் ஜாதியினர் அன்று சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். ஒரு உயர் ஜாதி குற்றவாளியை உயர் ஜாதி 'ஜட்ஜ்' தான் விசாரிக்க வேண்டும். இந்நிலையில் மீட் ஐயரின் கோர்ட் கைதிகள் நாடார் முதற்கொண்டுள்ள கீழ் ஜாதியினராகத்தான் இருக்க வேண்டும். விஷயம் இப்படியிருக்க நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்கள் கற்கோவில் கட்டிய கைதிகளைப் பற்றி ஏன் கவலைப் படுகிறார்கள்? சி.எஸ்.ஐ.க் காரர்களை கொச்சப்படுத்தி அடிமை உணர்வைத் தூண்டத்தானே?

கோவில் கட்ட மகாராணியார் பொருள் தந்தார் :

இந்தச் செய்தியை சொல்லிக்காட்ட வேண்டும் என்ற கட்டாயம் உள்ளதா? கிறிஸ்தவர்களும் திருவிதாங்கூர் நாட்டின் பிரஜைகள்தானே? உரோமானிய நாட்டுப் பிரஜைகள் அல்லவே? கிறிஸ்தவர்கள் கோவில்கட்ட மகாராணியார் நன்கொடை தந்ததில் என்ன தவறு? Selections from the Records of Travancore (1844)-ல் இருந்து கிடைத்த சில புள்ளி விவரங்களை அடுத்த பக்கம் காண்க:

தென்திருவிதாங்கூரில் இருந்த இந்து கோவில்களின் எண்ணிக்கை மற்றும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் (1811)

தென்திருவிதாங்கூரில் இருந்த இந்து கோவில்களுக்கு அரசு செய்த வருடாந்திர செலவு (1811)

சுசீந்திரம் கோவில் வருடாந்தர செலவு 2,29,959 பணம் - கன்னியாகுமரி கோவில் 75,062 பணம் - வடசெரி கோவில் 36,135 பணம் - நாகர்கோவில் 37,396 பணம். இதுபோக ஒவ்வொரு கோவிலுக்கும் தனித்தனியாக சொத்துக்கள் உண்டு. நாகர்கோவில் மணிமேடை சமீபம் உள்ள அநேக கடைகள் நாகராஜா கோவிலுக்குச் சொந்தமானவை.

ஒரு குத்தங்கல்லை, போக்குவரத்துக்கு இடைஞ்சல் தந்து வைத்து அதற்கு பொட்டு இட்டு பட்டு உடுத்தி ஒரு பெயரிட்டால் அரசு தயங்காமல் அதன் பெயருக்கு 100 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறது. அதை யார் பெரியதாகப் பேசுகிறார்கள்? ஆனால் ஒரு கிறிஸ்தவ கோவிலுக்கு மகாராணியார் ஒரு சிறு நன்கொடை தந்து விட்டால் அதைச் சொல்லி சொல்லி கிறிஸ்தவர்களைக் கூச்சப்படுத்துவதில் இன்பம் ... இன்பம் ..... இவர்கள் கண்டு கொண்ட மகாராணியாரின் நன்கொடையைப் பாருங்கள்:

District	**Sirkar/ Regd.**	**Sirkar/ Unregd.**	**Village Pagodas**	**Pay of servants in SirkarRegd. Fanams/Year**
Thovalah	23	4	44	1082
Agastheesuaram	23	6	114	2436
Erraneel	17	13	55	1072
Kulcolum	20	41	66	3104
Vilavancode	23	13	57	997
Travancore Total	378	1103	1332	

Districts	Sirkar/ Regd. fanams	Sirkar/ Unregd. Fanams
Thovalah	1,44,384	677
Agastheesuaram	4,47,973	2,671
Erraneel	69,141	1,370
Kulcolum	3,52,188	3,921
Vilavancode	52,123	2,510
Travancore - Total	25,46,533 (1811) yr	1,56,086 (1811) yr

"His Highness the Maha Rajah of Tanjore gave 500 Rs. H.H. the Ranee of Travancore gave the land, timber and stones free. From H.H. the Cochin Rajas' gifts, over 1000 Rs. Some years after when H.H. the Maha Rajah of Travancore gave Rs. 2000/-" (Agur)

முழுக்கல்வியறிவு பெற்றதில் நாங்கள் முதலிடம் என்று பீத்திக்கொள்பவர்கள் சிந்திக்க வேண்டும். இது புரோட்டஸ்தாந்து மிஷனெரிகள் போட்ட பிச்சை. நம் நாட்டின் இப்பாகத்திலிருந்து தொற்று நோய்களை விரட்டியடித்தவர்கள் யார்? புரோட்டஸ்தாந்து டாக்டர் மிஷனெரிகள். இன்னும் எத்தனை எத்தனையோ நன்மைகளை திருவிதாங்கூர் மக்களுக்கு ஜாதிமத பாகுபாடு இல்லாமல் தந்திருக்கிறார்கள். "Many 'firsts' such as the first English school, the first printing press, the first news paper have been due to the labours of London Missionary Society in this area" (S. பத்மநாபன், 1967) இந்து பெண்களுக்கு என்றே பள்ளிக்கூடங்கள் நிறுவினர். இந்துக்களுக்கென்றே வாசிப்பு சாலைகள் நிறுவினர். திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்துக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர் மிஷனெரி. நன்றியை மறவாது ஒரு சிறு நன்கொடையை மன்னர் அல்லது ராணி தந்துவிட்டார். அதைக் குத்திக் குத்திக் காட்டுகிறீர்களே! சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தானே?

இனி முதல் கிறிஸ்தவன் கதை : இதுவும் சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களை ஏளனப்படுத்தி அடிமை உணர்வை இவர்களுக்குள் ஊட்ட திட்டமிட்டு எடுக்கும் ஒரு முயற்சி. 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ நாடார் மக்கள் மிஷனெரிகளின் துணையுடன் போராடி நாயர் - வெள்ளாளர் ஆகிய உயர் ஜாதியினரிடமிருந்து சமூக- பொருளாதார விடுதலை பெற்றார்கள். விழித்துக ் கொண்ட நாயர்களும் வெள்ளாளர்களும் அரசியல் அதிகாரங்களை மீட்டு எடுக்க 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் முயற்சிகள் மேற் கொண்டனர். அப்போது ஈழவர், சிரியானி கிறிஸ்தவர் ஆகியோரை கையில் எடுத்து இணைந்து போராடினர். அந்நேரம் தென் திருவிதாங்கூரிலுள்ள புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களைப் பழைய பகைமையின் நிமித்தம் அன்னியர்கள் என ஒதுக்கி வைத்தனர். இந்து நாடார்களுக்கும் கிறிஸ்தவ

நாடார்களுக்கும் இடையில் பகைமையை ஏற்படுத்த சில உபாயங்களைக் கையாண்டனர். கிறிஸ்தவம் "பறவேதம்" என்று விளம்பரப்படுத்தப்பட்டது. "ஒருவன் கிறிஸ்தவன் ஆனவுடன் அவன் அவனுடைய சாதி அடையாளத்தை இழக்கிறான்" என்பது அடுத்த விளம்பரம். இன்னும் வெள்ளாளர்கள், கிறிஸ்தவர்களுக்கு ஜாதி இல்லை என்று புருடாவிட்டுப்பார்க்கிறார்கள். இந்த பிரிவினை முயற்சிக்கு வலுவூட்டவே ...?

வேதமாணிக்கம் என்பவர் சாம்பவர் இனத்தைச் சேர்ந்தவராம். இவர்தான் திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்கு முதற்கனியாம். அவருடைய வேதம் பறவேதம். அதை பின்பற்றுபவர்கள் பற வேதக்காரர்கள் என்பது திரிக்கப்பட்ட கயிறு. இந்தக் கயிறைத்தான் இன்று சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்களான பிஷப் முதற் கொண்டு எல்லோருமே அடிக்கடி கழுத்தில் மாட்டிக் கொள்கிறார்கள், கூச்சப்பட்டு அடிமை உணர்வை அரவணைத்துக் கொள்கிறார்கள்.

இந்தக் குட்டை உடைக்கத் தகுந்த பலநூற்கள் வெளியாகியிருந்தாலும் இளந்தோட்டம் கு. சுகுமாறன் அவர்கள் எழுதி வெளிவந்த "கிறிஸ்துவுக்கு முதற்கனி" என்ற நூலே முதன்மையானது. வேதமாணிக்கம் அல்ல முதற்கனி, பிச்சைக்குடியிருப்பு பிச்சை நாடார் குடும்பமே கிறிஸ்துவுக்கு முதற்கனி என்பதைச் சான்றுகளுடன் பகிரங்கப்படுத்துகிறார் இளந்தோட்டம். எனவே கன்னியாகுமரி சி.எஸ்.ஐ. கிறிஸ்தவம் "பறவேதம்" என்று சொல்லிக் கூச்சப்படுத்தி அடிமை உணர்வை சி.எஸ்.ஐ கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுத்த எடுக்கும் முயற்சிதான் முதல் கிறிஸ்தவர் வேதமாணிக்கம் என்ற விளம்பரத்தின் உள்நோக்கம்.

டாக்டர் D. பீட்டர்

19 கல்விக்கு ஜாதி இல்லை மதம் இல்லை

புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரிகள் மதத்தைப் பரப்பத்தான் இங்கு வந்தார்கள். ஆனால் அறிவை அல்லது ஞானத்தைத் தந்துதான் மதப்போதனைகளைத் தந்தார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த அறிவை கிறிஸ்தவம் தழுவியவர்களுக்கு மட்டுமல்ல தழுவாதவர்கள் (Heathens) -க்கும் தந்தார்கள் என்பது வரலாறு. இங்கு வந்த மிஷனெரிகள் இந்துக்களுக்காக வாசிப்புச் சாலைகளையும் தனிப் பள்ளிக்கூடங்களையும் வைத்து நடத்தினார்கள். உயர் கல்வியிலும் போதிய பங்கு இந்துக்களுக்குத் தந்தார்கள்.

1. வாசிப்புச் சாலைகள்

"1818-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட நாகர்கோவில் லண்டன் மிஷன் சபையானது தொகையில் பெருகி, அறிவில் தேறி வந்தது. அதன் தெற்கிலும், கிழக்கிலும் வடக்கிலும் ஏராளமான இந்துக்கள் நிறைந்த பெரிய கிராமங்கள் அதோடு சேர்ந்திருந்தன. 50 வருஷங்களான பின்பும், இரு மார்க்கத்தாரும் நெருங்கி உறவாடத் தக்கதாக யாதொரு ஸ்தாபனங்களும் இருந்ததில்லை. கிறிஸ்தவர்கள் இந்துக்கள் வசித்து வந்த தெருக்களில் முதலாய்த் தாராளமாய்ப் போக்குவரத்துச் செய்யக் கூடாதிருந்தது. அப்படிப்பட்ட காலத்தில், ***பலமதஸ்தாரும் ஒன்று கூடவும், தங்கள் அபிப்ராயங்களைத் தாராளமாய் வெளியிடவும், அவ்விதமாய்***

ஒருவித ஒற்றுமையை உண்டு பண்ணுவதற்கும் அனுகூலமாக ஏற்படுத்தப்பட்டதே வாசிப்புச்சாலைகள்."

"லண்டன் மிஷன் போதகன்மாரில் நாகர்கோவில் சபையின் மேலான நன்றிக்குப் பாத்திரமானவர் மீட் ஐயருக்கப்பால், டதி ஐயர் என்னும் டதி பண்டிதர். அவர் உத்தேசம் 50 வருஷங்களாக நாகர்கோவிலில் வசித்தார். பொது ஜன சேவையில் அவருக்கு இருந்த வாஞ்சை அவரை வாசிப்புச் சாலைகளின் ஸ்தாபிதகர்த்தா (Founder of Reading Rooms) ஆக்கிற்று" (Report of the Nagercoil Station 1867)

a."கோட்டாறு வாசிப்புச்சாலை : நாகர்கோவில் சபையைச் சுற்றியிருந்த பலதரமான இந்துக்களோடு அதிகமாகப் பழகினார் கனம் டதி பண்டிதர். தேச அதிகாரிகளோடும் ராஜ குடும்பத்தோடும் கூட அதிகமான உறவாட்டமுடையவர். இந்நாட்டை அரசாண்டு கொண்டிருந்த திருமூலம் மகாராசாவை அவரது பரிவாரங்களுடன் தான் குடியிருந்த மங்களாயில் அழைத்து வந்தார். இவ்விதமாய் தாழ்ந்தோரோடும் உயர்ந்தோரோடும் நெருங்கி உறவாடின இவர் பக்கத்தில் வசித்து வந்த இந்துக்களுக்குள் அறிவை ஊட்டத்தக்கதாக பிரசங்கக் கூட்டங்கள் ஏற்படுத்தி ஒருவரோடொருவர் கலந்து பேசிக் கொள்ளத்தக்கதான குறிப்பிட்ட பொருட்கள் பேரில் பிரசங்கிக்கும் ஆட்களும் முன்கூட்டி ஒழுங்கு செய்து, பள்ளிக்கூட உபாத்தியாயரும், திராணியுள்ள மற்றவர்களும் அதில் பங்கெடுக்கச் செய்தார். அக்கூட்டங்களுக்கு வசதியாக கோட்டாறு சர்க்கார் இங்கிலீஷ் பள்ளிக் கூடத்தை, அதன் அதிகாரிகளின் அனுமதியோடு உபயோகித்து வந்தார். அப்பால் தனி கட்டடம் ஒன்று தேவை என்று கண்டதால் திருவிதாங்கூர் மகாராஜா, இளவரசர், சர். ற்றி. மாதவராயர், பிற்பாடு திவான் ஆன நாணுப்பிள்ளை திவான் பேஷ்கார் வேறு பல பெரியோர் மற்றோரின் உதவியும் அதற்கென்று பெற்றுக்கொண்டார்." (Report of Nagercoil Station 1867)

"வாசிப்புச்சாலை கட்டியிருக்கும் பூமியின் சொந்தக்காரரோடு சிநேகம் செய்து இனாமாகப் பூமி வாங்கினார். மற்றும் பலர் கொடுத்த உதவியோடு நாகர்கோவில் சபையாரும் பொருள் கொடுக்கும்படி தூண்டினார். இவ்வாறாக பாலமோர் ரோட்டோடு

பார்வதிபுரம் ரோடு சந்தித்துக் கன்னியாகுமரிக்குத் திரும்புகிற முச்சந்தியில் யாவருடைய கவனத்தையும் கவர்ந்து கொள்ளத்தக்கதான கெம்பீரத் தோற்றத்துடன் எழும்பி நிற்கும் ஒரு கட்டடம் கட்டி முடிந்தது. பொது ஜனத்துக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதில் பெஞ்சுகளும், மேசையும் போட்டு, பல சிநேகிதர் கொடுத்த பத்திரிகைகளும் சன்மார்க்க புத்தகங்களும், வேதாகமமும் கவர்ண்மென்டு கெஜட்-ம் வைத்து, அவைகளை சூட்சிப்பதற்கும் நாள்தோறும் கட்டடத்தைத் திறக்கவும், பூட்டவும் சுத்தம் செய்வதற்குமாக றைட்டர் என்ற ஒருவரை மாதச்சம்பளத்தில் நியமித்து வைத்தார். இந்த ஸ்தாபனத்தில் செலவாகும் பண உதவிக்காக நாகர்கோவில் ஆண் பள்ளிக்கூட சங்கப்பணம் பிரத்தியேகப்படுத்தப்பட்டது."

b. "நாகர்கோவில் வாசிப்புச் சாலை : கோட்டாறு புஸ்தக சாலைக்கு 7 வருஷங்களுக்குப் பிறகு நாகர்கோவிலில் ஒரு வாசிப்புச் சாலை ஸ்தாபிக்கப்பட்டது. ஹானரபிள் ராமையங்கார் திவான்ஜி அவர்கள் இந்த பாகத்துக்கு வந்த போது, ஜனங்களுக்குள் அறிவை ஊட்டுவதற்கு அவர் காண்பித்த விருப்பமே இந்த இடத்தில் ஒரு நல்ல கட்டடம் கட்டுவதற்கு முழுகாரணமாக இருந்ததென்று டதிபண்டிதர் எழுதுகிறார். தகுதியான கட்டடத்திற்கு அவசியமான பொருள் சேகரித்துக் கொடுப்பதாக திவான்ஜி அவர்கள் வாக்குச் சொல்லி, அதன்படி மகாராஜாவுக்குத் தெரிவித்து மகாராஜாவும் ராமையா திவான் பேஷ்காரும், உயர்ந்த பதவியில் இருந்த மற்றும் பல உத்தியோகஸ்தரும் வேறு பெரியோரும் செய்த உதவியினால் இந்த கட்டடம் கட்டப்பட்டதாகவும், இதற்கு 1334 ரூ.8 அணா செலவானதாகவும், அது கட்டப் பட்டிருக்கும் பூமிக்கு அதிகவிலை கொடுக்க நேர்ந்ததால் இவ்வளவு பெரும் தொகை செலவாகி விட்டதாகவும் டதி பண்டிதர் தமது ரிப்போர்ட்-ல் எழுதி வைத்திருக்கிறார். இதில் கோட்டாறு வாசிப்புச்சாலையில் செய்திருந்த ஒழுங்குப் படி ஆசனங்களும், புஸ்தகங்களும், றைட்டரும் உண்டு. இதன் ஆதரவுக்கும் பள்ளிக்கூட சங்க பணம் உபயோகிக்கப் பட்டது." (Report of the Nagercoil District 1901)

c. "வடசேரி வாசிப்புச் சாலை : நாகர்கோவில் வாசிப்புச் சாலைக்கு 5 வருஷங்களுக்குப் பின் வடசேரியில் ஒரு வாசிப்பு சாலை ஆரம்பிக்கப்பட்டது. நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தில் பற்பல இடங்களிலிருந்து திரளான ஜனங்கள் வந்து, வாரம் இருமுறை கூடும் சந்தை பக்கத்தில் இது கட்டப்பட்டிருந்தது. அக்கட்டிடம் மிகச் சிறிதாகவும், வசதியற்றதுமாயிருந்ததால், தகுதியான ஒரு கட்டிடத்திற்கு வேண்டிய பொருள் சகாயத்திற்காக ஜெபித்து வந்தார்கள். கடவுள் ஒரு சிநேகிதன் மூலமாக 50 பவுன் நன்கொடை அனுப்பினார். அது 819 ரூபாய்க்குச் சரியாயிருந்தது. முன் இருந்த கட்டிடத்தை விற்று டீக்கன்மார் 31 ரூபாய் தந்தார்கள். முன் கேற்றும், கோட்டைச்சுவரும் தவிர அதற்குச் செலவான தொகை 827 ரூபாய் 12 அணா. இக்கட்டிடம் அசம்பு-கன்னியாகுமரி ரோடும், திருவனந்தபுரம் - ஆரல்வாய்மொழி ரோடும் ஒன்றுக்கொன்று கடந்து செல்லும் நாற்சந்தின் வடமேற்குப் பெருக்கில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த வாசிப்புச்சாலைக்குச் செல்லும் செலவு முழுவதும், மற்றவர்கள் உதவியை எதிர்பாராமல் நாகர்கோவில் சபையே செய்வதற்கும் டதி ஐயர் ஒழுங்கு செய்தார்." (Report of the Nagercoil District 1901)

நம்மை ஆண்டு கொண்டிருந்த அரசோ அல்லது நம் சமுதாய அமைப்புகளோ நமக்கும் கல்வியைத் தந்து நம் ஞானத்தை வளர்க்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாத காலம் அது. தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்ற வித்தியாசம் இல்லாமல் அஞ்ஞான இருளில் மக்கள் மூழ்கியிருந்த காலம் அது. முதல் புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனெரி கனம் றிங்கல்தௌபே 1806-ல் தென் திருவிதாங்கூரில் மைலாடி என்ற ஊரில் கால்பதித்தார்கள். அவர் என்ன செய்தார்? காண்க?

"But Protestant Missionaries were the first to introduce English Education in the State. The originator of an English School in Travancore was Revd. Ringletaube a man of great force of character. He established many schools for poor Christians as well as Non-Christians. The instructions that are given consist in lessons of reading writing and arithmetic" (V. Nagam Aiya, The Travancore State Manual)

றிங்கல்தௌபே ஐயர் காலத்தில் 1815-ம் ஆண்டு 7 பள்ளிக்கூடங்கள் இருந்ததாகவும், அவைகளில் 188 மாணவர்கள் கல்வி பயின்று வந்ததாகவும் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இது அஞ்ஞானிகளை ஞானிகளாக்கும் முயற்சி இல்லை என்று கூற முடியுமா?

"But the most important name connected with educational work in Travancore, was undoubtedly that of Revd. Mead. He was a most enthusiastic worker and from the date of his arrival in Travancore in 1817 as a Missionary of the L.M.S. till his death, in 1873, he threw his heart and soul into the work of education" (Nagam Aiya)

கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களின் கல்வி பற்றிய சிந்தனை கனம் மீட் ஐயர் அவர்களை வாட்டியது. மிஷனால் ஆரம்பிக்கப்பட்ட எல்லா பள்ளிகளிலும் ஜாதி-மத வித்தியாசம் பாராமல் மாணவர்களைச் சேர்க்கும்படி கட்டளையிட்டார். 1920-ல் நாகர்கோவில் மிஷன் வளாகத்தில் இந்து மாணவர்களுக்கு என தனியாக ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. மிஷன் காம்பவுண்டுக்குள் வர இந்து மாணவர்கள் விரும்பாததால் அந்த பள்ளி அதே ஆண்டு வடசேரி சந்தை சமீபம் மாற்றப் பட்டது. 1923-ம் ஆண்டு 50 மாணவர்கள் அவர்கள் இப்பள்ளியில் பயின்றனர் என்றும், இந்துக்களும், முஸ்லீம்களும், பிராமணர்களும் என்றும் புள்ளி விவரம் கூறுகிறது.

அன்றைய திருவிதாங்கூரில் உயர் ஜாதி இந்து பெண்களின் நிலை என்ன? "It appears from the census that, after all, only a trifle over one per cent of the Malayalam Sudra females can read and write and a little larger proportion of Brahman women; only 93 females of the hundreds of thousands of Illavars and not one amongst the heathen Pariahs, Pulayas and other low castes. In the whole State 3452 females are returned as able to read and write of all the Hindu castes; and only 86 Muhammadan females."

"Ninety eight out of a hundred females, therefore, even of the higher castes are entirely uneducated. A Brahman gentleman was once asked, 'What do you think a woman ought to know'? 'She

must know two things,' was his reply; 'first she must know the way to the bazar to buy necessaries for the house; and secondly, she must know the way from the bazar home again.' A Munshi stoutly objected to instruct girls saying that they will not be obedient wives. I have heard a Brahmin publicly state that he never yet heard a woman accurately pronounce the names of the well-known towns in Travancore. a Malayalam Proverb says, 'A travelled woman is like a garden trespassed by cattle." (S. Samuel Mateer, Native life in Travancore)

இந்த நிலையில் உயர் ஜாதி இந்து பெண்களுக்கு என மிஷனெரிகள் பள்ளிக் கூடங்களைத் துவங்கி பெண்களுக்கு ஞானம் தந்தார்கள். 1872-ல் நெய்யூர் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த டாக்டர் தாம்சன் அவர்களின் மனைவி அனேக சமுதாய எதிர்ப்புகளின் மத்தியில் உயர்ஜாதி இந்துக்களின் கோட்டையான இரணியலில் முழுக்க முழுக்க அவர்களுக்கென்று ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்தார்கள். 60 முதல் 70 மாணவிகள் வரை படித்தார்கள் 1882-ல் உயர்ஜாதி இந்துக்களுக்கென்று தக்கலை, திருவிதாங்கோடு, தலக்குளம், நெய்யூர் ஆகிய இடங்களிலும் பள்ளிகள் திறக்கப்பட்டன. நான்கு பள்ளிகளிலுமாக 222 மாணவிகள் இருந்தனர். "Most of the girls belong to the Sudra, Chetty, Goldsmith, Carpenter and Potter communities." "They were taught Tamil/ Malayalam/ Scripture reading, writing, arithmetic, History, Geography, grammar singing, Needle work etc." (I.H. Hacker, Hundred Years in Travancore)

டாக்டர் தாம்சன் அவர்களின் மனைவி காட்டிய பாதையைப் பின்பற்றி நாகர்கோவில் மிஷன் மையமும் உயர்ஜாதி இந்து பெண் களுக்கென கோட்டார், நாகர்கோவில் (பிராமணர் தெரு) வடசேரி, கிருஷ்ணன்கோவில் ஆகிய இடங்களில் பள்ளிகள் ஆரம்பித்தது.

கிடைத்த புள்ளி விவரங்களை வைத்து ஆராய்வோம். 1921 முதல் 1940 வரை இந்து பெண்கள் பள்ளி 8 இருந்திருக்கின்றன. புத்தேரி, கோட்டார், நாகர்கோவில், வடசேரி நெசவாளர் தெரு, வடசேரி பொன்

ஆசாரிமார் தெரு ஆகிய 5 பள்ளிகள் நாகர்கோவில் மிஷன் கட்டுப்பாட்டில் இருந்து வந்ததாகவும், இரணியல், தலக்குளம், ஊத்துக்குழி ஆகிய மூன்று பள்ளிகள் நெய்யூர் மிஷன் கட்டுப் பாட்டில் இயங்கி வந்ததாகவும் தெரிகிறது. நாகர்கோவில் மையத்தில் வடசேரி நெசவாளர் தெரு பள்ளியில் 20 ஆண்டுகளில் (1921-40) உயர்ந்த அளவு மாணவர்கள் 295 என்றும் சராசரி 292 என்றும் காண முடிகிறது. நெய்யூர் மையம் இரணியலில் உயர்ந்த அளவு மாணவர்கள் 220 என்றும் சராசரி 180-ம் ஆகக் காண முடிகிறது. நாகர்கோவில் மையத்தில் 5 பள்ளிகளிலுமாக உயர்ந்த பட்சம் 570 மாணவிகள், சராசரி 530 மாணவிகள். நெய்யூர் மையத்தில் மூன்று பள்ளிகளிலுமாக உயர்ந்த பட்சம் 411, சராசரி 332. இரண்டு மையங்களிலும் உயர்ந்த பட்சம் 981 மாணவிகள், சராசரியாக 826 இந்து மாணவிகள் பயின்றனர்.

புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மிஷனரிகளின் "இந்து பெண்கள் பள்ளிக்கூடம்" என்ற திட்டம் அஞ்ஞானத்தைப் போக்க அல்ல என்று கூற முடியுமா?

மிஷனெரிகளின் மனைவியரின் அடிமைப் பெண்களின் புனர்வாழ்வுத் திட்டத்தைப் பாருங்கள்: "லண்டன் மிஷனெரிச் சங்கத்தின் இரண்டாவது மிஷனரியாகிய மீட் ஐயர் அடிமை முறையை ஒழிப்பதற்கு ஒரு வித்தியாசமான முறையைக் கையாண்டார். அவர் ஆரம்பித்த பள்ளிகளில் அடிமைச் சிறுவர்களையும் சிறுமிகளையும் அழைத்து வர ஆசிரியர்களை ஊக்குவித்தார். பள்ளிக்கு அழைத்துவரும் ஒவ்வொரு சிறுவனுக்கும் ஒரு பணம் வீதமும், ஒவ்வொரு சிறுமிக்கும் ஒன்றரைப்பணம் வீதமும் ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை தரும் திட்டத்தை ஆரம்பித்தார். அவர் ஆரம்பித்த திட்டம் ஒரு வருடத்துக்குள் 1000-க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியரை நெய்யூர் மையத்தில் மட்டும் கொண்டு வர முடிந்தது. திட்டம் வெற்றிபெறவில்லை. தங்கள் எஜமானர்களுக்குப் பயந்து கிறிஸ்தவர்களிடம் பேசுவதையே அடிமைகள் நிறுத்திவிட்டனர்."

"மீட் அம்மையாரும் மால்ட் அம்மையாரும் தாங்கள் ஆரம்பித்த கல்வி நிறுவனங்களில் சில அடிமைச் சிறுமிகளை மிகுந்த சிரமத்தின்

பேரில் அழைத்து வந்து, அவர்களுக்கு வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொடுத்ததோடு தையல் வேலையும் கற்றுக்கொடுத்தனர். அந்த சிறுமிகள் செய்யும் வேலைக்குப் பணம் கொடுத்து அதைச் சேமித்து வைக்கக் கற்றுக்கொடுத்து அப்பணத்தை எஜமானர் களுக்குக் கொடுத்து அச்சிறுமிகளின் விடுதலையை வாங்க முயற்சித்தனர். பண்ணையார்களின் கொடூரபிடிவாதத்தால் சிறுமிகளுக்கு விடுதலை கிடைக்கவில்லை." (டாக்டர் ஐவி பீட்டர், சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும்)

முதலாவது பாகத்தில் இந்துக்களுக்கு என்று புரோட்டஸ்தாந்து மிஷனெரிகள் வாசிப்புச் சாலைகள் நிறுவி ஞானம் தந்ததை அறிந்தோம். இரண்டாவது இந்து பெண்களுக்கென்று தனி பள்ளிக்கூடங்களைத் துவங்கி மிஷனரிகள் ஞானம் தந்ததைக் கண்டோம். மூன்றாவது பாகத்தில், பொதுவான கல்வி நிலையங்களில் இந்துக்களின் பங்கு எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

"But the most important name connected with educational work in Travancore, was undoubtedly that of Revd. Mead. He was a most enthusiastic worker, and from the date of his arival in Travancore in 1817 till his death in 1873 he threw his heart and soul into the work of education. In 1818 he founded the Nagercoil Seminary which was the first institution to give regular English education in Travancore. The great object the founder had in view was the communication of religious and useful knowledge, and the language taught were English, Tamil, Malayalam and Sanskrit. After a long and bright career the Seminary has risen to the status of second grade college. It has supplied two Dewans (N. Nanoo Pillai and T. Rama Rao) to the State and the first Headmaster and organiser of the Rajas' Free School, Mr. Roberts was drawn from it. Mr. Mead who had settled at Nagercoil established several schools besides the Nagercoil Seminary. His long and intimate connection with English education induced the government to appoint him as superintendent of schools in

1855, and in this capacity he did much to futher the cause of education in Travancore. He was also the pioneer of female education in the State. He established industrial schools and he did much to bring about the abolition of Slavery. As a Judge, a Missionary and Superintendent of Education and of the Government Press he put forth his best efforts for the amelioration of the condition of His Highness' Subjects." (Nagam Aiya) இது திருவிதாங்கூர் அரசு கனம் மீட் ஐயர் அவர்களின் சேவைகளுக்குத்தந்த பாராட்டு.

"இரண்டாம் மேலைநாட்டு மிஷனெரியான மீட் ஐயர் தமது திருப்பணிக்களத்திற்கு நாகர்கோவிலை மையமாகத் தெரிந்து கொண்டார். அவர் 1819-ல் நாகர்கோவிலில் ஒரு செமினரியைத் துவங்கினார். அங்கு ஆங்கிலம், தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளும் வரலாறு, புவியியல், கணக்கு, வானவியல் போன்ற பாடங்களும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டன. இதுவே திருவிதாங்கூரின் முறையான முதல் ஆங்கிலப் பள்ளி. பின்னர் இப்பள்ளி படிப்படியாக வளர்ந்து 1863-ல் மெட்ரிக்குலேஷன் ஸ்கூல் ஆனது" (உண்மை ஒலி, மார்ச் 1995)

"1893-ல் இந்த உயர் நிலை பள்ளியோடு சேர்ந்து ஒரு கல்லூரியும் உதயமானது. அதுவே இன்று 116 ஆண்டுகள் பணியை முடித்து நிற்கும் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி. 1925-ம் ஆண்டின் தொடக்கத்தில் வட திருவிதாங்கூரிலும் திருவனந்தபுரத்திலும் பல கல்லூரிகள் உருவாயின. நம் மாவட்டத்தில் 1953-ல் கிறிஸ்தவர் அல்லாதவர்களால் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1964க்குப் பின் பலவிதமான பல கல்லூரிகள் உதயமாகி இன்று தொழில் நுட்பக் கல்லூரிகளின் உறைவிடமாக கன்னியாகுமரி மாவட்டம் இருக்கிறது" (உண்மை ஒலி).

செமினரியின் ஆரம்பத்தில் 30 மாணவர்கள் பதிவேட்டில் உள்ளனர். சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களில் பெரும்பாலோர் இந்துக்களே. 1830 வரை உள்ள ஆசிரியர்களை பார்க்கும் போது அவர்களிலும் பெரும்பாலோர் இந்துக்களே. செமினரியைத் தொடர்ந்து நாகர்கோவில் மிஷன் மையக்கட்டுப்பாட்டில் இருந்த

பொதுவான பள்ளிகளில் கிறிஸ்தவர் - கிறிஸ்தவர் அல்லாதவர்களின் அட்மிஷன் எப்படி இருந்தது என்ற ஒரு கண்ணோட்டம்.

அட்டவணை 1. (1860 & 1896 - 99)

ஆண்டு	ஆண்/ பெண்/ மொத்தம்	கிறிஸ்தவர்	கிறிஸ்தவர் அல்லாதவர்	மொத்தம் மாணவர்	கிறிஸ்தவர் அல்லாதவர் %
1860	ஆண்	215	574	789	73
	பெண்	138	28	166	17
	மொத்தம்	353	602	955	63
1896	ஆண்	853	1755	2608	67
	பெண்	627	709	1336	53
	மொத்தம்	1480	2464	3944	63
1897	ஆண்	738	1435	2173	66
	பெண்	439	513	952	54
	மொத்தம்	1177	1948	3125	62
1898	ஆண்	765	1488	2253	66
	பெண்	454	565	1019	55
	மொத்தம்	1219	2053	3272	63
1899	ஆண்	752	1448	2236	66
	பெண்	494	444	938	47
	மொத்தம்	1246	1892	3174	61

இனி கல்லூரி அட்மிஷனைப் பார்க்கலாம். முதல் முதலாக (1893) 12 மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அவர்களில் 6 பேர் (50%) கிறிஸ்தவர் அல்லாதவர்கள். அவர்களின் பெயர் வருமாறு C. சுப்பையாபிள்ளை, குமாரசாமிப்பிள்ளை, சத்திய வாகீஸ்வர ஐயர், அனந்த சுப்பிரமணி ஐயர், மகாதேவ அய்யர் (13-2-1893-ல்). இந்த கல்லூரி அட்மிஷன் காலப் போக்கில் எப்படி இருந்தது?

அட்டவணை 2. (1920-1946)

ஆண்டு	கிறிஸ்தவர்	கிறிஸ்தவர் அல்லாதவர் %	ஆண்டு	கிறிஸ்தவர்	கிறிஸ்தவர் அல்லாதவர் %
1920	30	136(82)	1935	79	98(55)
1921	25	90(78)	1935	73	81(53)
1922	29	145(83)	1936	70	100(59)
1923	48	170(78)	1937	65	104(62)
1924	48	159(77)	1938	67	107(61)
1925	38	108(74)	1939	67	125(65)
1926	37	108(74)	1940	73	151(67)
1927	47	85(64)	1941	75	158(68)
1928	42	91(68)	1942	89	161(64)
1829	70	118(63)	1943	89	140(61)
1930	50	88(64)	1944	109	163(61)
1931	66	76(54)	1945	76	159(68)
1032	90	122(58)	1946	110	155(69)
1933	91	111(55)			

இத்தனை கல்லூரிகள் நம்மாவட்டத்தில் வந்து நிறைந்த போதும் கிறிஸ்தவர் அல்லாதவர்களின் சதவிகிதமே அதிகமாக உள்ளது. சில பட்ட மேற்படிப்புகளில் இது உண்மை அல்ல. ஏன் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கிறிஸ்தவக் கல்லூரியை விரும்புகிறார்கள்? 1957-ல் நான் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் நுழைந்த போது என்னைச் சுற்றி இருந்தவர்கள் நாகர்கோவிலைச் சோந்த வெள்ளாளர்களும் பிராமண மாணவர்களும் தான். அந்த அளவில் அவர்கள் கிறிஸ்தவக் கல்லூரியை நாடினார்கள். ஏன் இங்கு? உங்களுக்குப் பக்கத்தில் கல்லூரி உண்டல்லவா என்று கேட்டதற்கு . . . நாங்கள் பரம்பரை

பரம்பரையாய் இங்கே தான் படித்து வருகிறோம். உங்கள் ஆட்கள் தானே அங்கேயும் ஆசிரியர்கள்? என்பார்கள். எந்த அளவிலும் ஜாதிமத பேதம் கிறிஸ்தவ கல்லூரிகளில் காண முடியாது. மாணவனோ ஆசிரியனோ கல்லூரிக்கு வரும்போது "பைபிள்" கையில் சுமந்து கொண்டு வர தேவை இல்லை. கிறிஸ்தவன் அல்லாதவன் தன் மத அடையாளங்களுடன் (இசுலாமியன் தலையில் தொப்பி, இந்து கையில் கயிறு மற்றும் நெற்றியில் விபூதி அல்லது சந்தன குறியும் பொட்டும்) கல்லூரிக்குள் வருவதை யாரும் தடை செய்வதும் இல்லை, அப்படி வருபவர்களை யாரும் வழக்கத்துக்கு மாறான அதிசயம் என்று சீண்டிப் பார்ப்பதில்லை.

நான் 1985-ல் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி முதல்வராக இருந்த போது . . . ஒரு பிராமணர் தன் தங்கையுடன் என் அறையில் நுழைந்தார். அந்நேரம் வெளியில் (கல்லூரிக்கு வெளியில்) 3 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை ஒரு பட்ட மேற்படிப்பு மாணவர் இடம் ஏலம் ஆகிக் கொண்டிருந்தது. பயந்து போன அந்த பிராமணர், "சார்! என் தாத்தாவினுடைய அப்பா, தாத்தா, என் அப்பா, என் சகோதர சகோதரிகள் 4 பேர், நான் இந்த கல்லூரியில் தான் படித்தோம். என் கடைசி தங்கை இவள். இவளுக்கு அட்மிஷன் தருவீர்களா?" என்று கேட்டார். அது நாகர்கோவில் கிராமத்தில் உள்ள ஒரு ஜட்ஜ் குடும்பம். நான் எந்த பதிலும் சொல்லாமல் சிறிது நேரம் அமைதியாக இருந்தேன். அட்மிஷன் பட்டியல் கூட வெளியிடாத அந்த நேரத்தில் எந்த ஏலமும் இன்றி, "இன்றே நீங்கள் உங்கள் தங்கையை கல்லூரியில் சேர்த்து விட்டுப் போங்கள்" என்றேன். அந்த பிராமணர் அசந்து போனார்.

திரு. T.S. ராமசாமிபிள்ளை அவர்கள் அவருடைய கல்லூரியில் இடம் இருந்தாலும் வருடம் தோறும் சிலரை கொண்டு வந்து ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரியல் சேர்த்து விட்டுப் போவது உண்டு. பின்காலங்களில் கல்லூரி ஆட்சிக்குழுவிடம் அட்மிஷன்கள் வந்துவிட்டன. ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் சட்டைப் பையில் இந்து - முஸ்லீம் மாணவர்களுடைய பதிவு எண் தான் இருக்கும். இந்த அளவுக்கு சலுகை வேறு கல்லூரிகளிலும், சி.எஸ்.ஐ. மாணவர்களுக்கு இல்லை என்பதை விளக்க அனேக சான்றுகளை அனுபவத்தின் அடிப்படையில் இங்கு எடுத்து வைக்க முடியும். எடுத்து வைப்பதில் பயன் இல்லை.

திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தில் 1938-ல், ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரி சேரும் போது, 28 பேர் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்களில் R. கிருஷ்ணமாச்சாரி, T. K. நாராயண ஐயர், S. சுந்தரேசுவரய்யர், R. பஞ்சநடேஸ்வர சாஸ்திரி, T. S. சேது ராமன், G.K. செல்வம், K.C. ராமசாமி, S. தாணு ஐயர், S. அருணாச்சலம், M. வேலுப்பிள்ளை, V. வெங்கிடசுப்பன், நாராயண ஐயர், சுப்பிரமணிய மூசாத் ஆகிய 13 கிறிஸ்தவர் அல்லாதவர்களும் அடங்குவர்.

செமினரியில் படித்த இந்துக்கள் சிலருக்கு உண்டான நன்மைகளில் சிலவற்றை சாமுவேல் சகரியா (1906) இவ்வாறு எழுதுகிறார்: "இந்துக்களில் அநேகர் சர்க்காரில் பலவகை உத்தியோகங்கள் நடத்தும் அறிவும், சாமர்த்தியமும் உடையவர்களானார்கள். அவர்களுக்குள் சர்க்காரில் பெரிய உத்தியோ கங்களுக்கு உயர்த்தப்பட்டவர்களும் உண்டு. ராபர்ட் துரை காலத்தில் படித்த திரு. வேதாதிரிகாச முதலியார் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஆனார். மில்லர் ஐயர் காலத்தில் படித்த திரு. நாணுப் பிள்ளையும், ஒயிட் ஹவுஸ் காலத்தில் படித்த திரு. ராமராயரும் திருவிதாங்கோட்டு ராஜ்யத்தின் திவான்களாக உயர்ந்த பதவியடைந்தார்கள்".

"The establishment of Raja's Free school at Trivandrum marks the first attempt of government to impart English education to its youths. When His Highness the Raja visited the Nagercoil English Seminary in 1834 he was so much impressed with the importance of English education as a civilising agency that he asked for the service of a competent teacher to start an English school at Trivandrum. Mr. J. Roberts the Headmaster of the Seminary went to Trivandrum at H.H. 's invitation and opened the first English School. Mr. Roberts' school was taken over by the sirkar and he was appointed as Headmaster. He had great natural abilities, enthusiasm and force of character, and under his care and guidance the school made dstinguished progress and turned out pupils of merit. He retired in 1855 after a meritorious service of nearly twenty years during which period he had also the general direction of English schools in the mofussil" (Nagam Aiya) இந்த பாராட்டுகள் மட்டுமா?

டதி ஐயர் கோட்டார், நாகர்கோவில், வடசேரி ஆகிய இடங்களில் இந்துக்களின் ஞானம் விருத்தியடையச் செய்ய வாசிப்புச் சாலைகள் நிறுவினார் என்பதாகக் காண்கிறோம். இவருடைய பணிகளைப் பார்வையிட வந்த லண்டன் மிஷனெரி சங்க பிரதிநிதிகள் பற்றி சாமுவேல் மேற்றீர் அவர்கள் எழுதும்போது, "They lectured in the Kottar Reading Room to a crowded audience, after which an address was presented by the non - christian community expressing their thanks for the philanthropic and educational work of the mission. At other places also, Hindus decorated the school rooms, and presented addresses of commendation and thanks for the labours of the society in Travancore" (Native Life in Travancore)

1922-எல்.எம்.எஸ். உயர்கல்வி ஆய்வுக்குழு ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரிக்கு வந்தது. விவசாயத்தை நம்பியிருக்கும் இப்பிரதேச மக்களுக்கு பொதுக்கல்வி தேவை இல்லை, தொழில் கல்வி தான் வேண்டும் என்று முடிவு செய்தது. அதன்படி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியை மூடி விடவும் சாந்தபுரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி துவங்கவும் திட்டமிட்டது. இந்த திட்டத்துக்கு உயர் ஜாதி இந்துக்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. எனவே லண்டன் மிஷன் ஆய்வுக்குழுவுக்கு ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட செய்தி: "நாங்கள் (பிராமணர்கள்) உங்களோடு (கீழ் ஜாதி) சரிசமமாக உட்கார்ந்திருக்கிறோமே? போஜனம் பண்ணுகிறோமே? இந்தக் கல்லூரியின் சாதனையை குறிப்பிட இதைவிட பெரிய சாதனை வேறு எதுவும் இருக்க முடியுமோ?" லண்டன் மிஷன் சங்கத்தார் வெட்கிப்போய் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியை மூடி விடும் திட்டத்தைக் கைவிட்டார்கள். ஜாதி மத நல்லிணக்கத்தின் கருவியாக விளங்கினர் மிஷனெரிகள்.

டாக்டர். D. பீட்டர்

20 வேணுகோபால் கமிஷன் பரிந்துரைகள்

பொதுத் (சட்டம் ஒழுங்கு-பி) துறை சுருக்கம்
அரசாணை நிலை எண் 916, நாள் : ஏப்ரல் 1986

சட்டம் மற்றும் ஒழுங்கு - கன்னியாகுமரி மாவட்டம் - மண்டைக்காடு கிராமத்தில் கிறித்துவர்களுக்கும் இந்துக் களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களின் காரணமாக நடைபெற்ற சம்பவங்களின் தொடர்பாக 1-3-1982 மற்றும் 15-3-1982 ஆகிய தினங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் ஆணைக் குழுவின் அறிக்கை - முடிவுகள் - ஏற்கப்படுகின்றன - ஆணை - வெளியிடப்படுகிறது.

படிக்கவும் : அரசாணை நிலை எண்.916, பொதுத் (சட்டம் - ஒழுங்கு - பி) துறை, நாள் 29-4-1986 அக்ஷய, சித்திரை 16-2017, திருவள்ளுவர் ஆண்டு.

பார்வை :

1. அரசாணை நிலை எண் 508, பொதுத் (சட்டமும் ஒழுங்கும் - அ) துறை. நாள் 22-3-1982.
2. ஓய்வுபெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் ஆணைக் குழுவின் 21-9-1985 நாளிட்ட அறிக்கை ......

ஆணை : கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல் களின் விளைவாக நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து 1-3-1982 மற்றும் 15-3-1982 ஆகிய நாட்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து

விசாரணை செய்ய மேற்கண்ட அரசாணையில் 1952-ஆம் ஆண்டு ஆணைக் குழு சட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற நீதிபதி வேணுகோபால் அவர்களை ஒரு நபர் ஆணைக் குழுவாக அரசு நியமித்தது. விசாரணைக் குழுவின் ஆய்வு வரம்பு வருமாறு :-

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகுதியில் 22-3-1981-லிருந்து 22-3-1982 வரை ஓராண்டு காலத்திற்கு இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே பதட்ட நிலை உருவாகுவதற்கு ஏதுவான சூழ்நிலைகளையும் சம்பவங்களையும் ஆராய்ந்து விசாரணை செய்யவும்;

(ஆ) 1-3-1982 அன்று மண்டைக்காடு பகுதியில் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக 6 பேர் மரணமடைந்ததால், இத் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகளைப் பற்றி விசாரணை செய்யவும்

(இ) 15-3-1982 அன்று மேல்மணல்குடி பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் மரணமடைந்ததற்குக் காரணமான சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி விசாரணை செய்யவும்

(உ) இம்மாதிரி கலவரங்கள் எதிர்காலத்தில் நிகழாவண்ணம் தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றிப் பரிந்துரைகள் செய்யவும் கேட்டுக் கொள்ளப்பட்டது;

2. தன்முன் அளிக்கப்பட்ட பல்வேறு சாட்சியங்களின் வாக்கு மூலங்களை ஆராய்ந்து பார்த்த விசாரணைக் குழு கீழ்க்கண்டவாறு தனது பரிந்துரைகளைத் தெரிவித்துள்ளது :

(1) மத மாற்றத்தால் இனக் கலவரங்கள் ஏற்படுவதாலும், சட்டம்-ஒழுங்கு மிகவும் பாதிக்கப்படுவதாலும், மத்தியப் பிரதேசம், ஒரிசா, அருணாசலப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் வன்முறை, ஏமாற்றுதல் போன்ற காரணங்களால் அல்லது பொருளுதவி என்ற போர்வையில் மத மாற்றத்தைத் தூண்டுதல் என்பன போன்ற காரணங்களால் செய்யப்படும் **மத மாற்றத்தைத் தடை செய்து சட்டம் இயற்றியுள்ளது போல், தமிழ்நாட்டிலும் இதனைப் பின்பற்றி ஓர் சட்டம் இயற்றலாம்.**

(2) வெவ்வேறு மதத்தினர் வழிபடும் ஆலயங்கள் மற்றும் பொது வழிபாடுகள் மிகவும் அருகருகே உருவாவதைத் தடை செய்யலாம்.

(3) இந்தியாவில் உள்ள அனைவருக்கும் மத வேறுபாடின்றி ஓர் பொதுவான சிவில் நடைமுறை விதி தொகுப்பு வழங்கப்படலாம். அரசியல் சட்டத்தின் 44-வது பிரிவில் கண்டுள்ள வழிகாட்டி நெறிகளைப் பின்பற்றி பொது சிவில் நடைமுறை விதித் தொகுப்பு (Civil Code) ஒன்றினை உருவாக்கி இந்து, கிறிஸ்தவர், முஸ்லீம் என்ற மதப் பாகுபாடின்றி இந்தியக் குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கலாம்.

(4) இருதரப்பட்ட மதவழிபாடு ஆலயங்களில் ஒலிபெருக்கி அமைப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த ஒலி பெருக்கிகளால் இனக் கலவரங்களும், பதட்ட நிலைகளும் ஏற்பட ஏதுவாக உள்ளதால் இதனை முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் காவல் துறைச் சட்டத்தினைத் திருத்தி அமைக்கலாம். மற்றும் பதட்ட நிலை உருவாகுவதைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறைச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வரலாம்.

(5) மதச் சார்புடைய ஊர்வலங்கள், பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் பகுதிகளில் செல்ல அனுமதிக்காமல் தடை செய்யலாம்.

(6) மத மாற்றத்திற்கு, பெரும்பாலான அயல்நாட்டுப் பணம், நிதியுதவி என்ற போர்வையில் மத மாற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்படுவதால், இதனைக் கட்டுப்படுத்த அயல்நாட்டு நன்கொடை (முறைப்படுத்தல்) சட்டம் தகுந்த முறையில் திருத்தப்பட நடவடிக்கை எடுக்கலாம்.

(7) இனக் கலவரங்களின் போது ஏற்படும் மோதல்களின் தொடர்பாக பதிவு செய்யப்படும் குற்ற வழக்குகளை சாதாரண நீதிமன்றங்களில் விசாரணை நடத்தாமல் விசேட நீதிமன்றங்கள் அல்லது டிரிபியூனல் மூலம் துரிதமாக நடத்தத் தேவையான சட்டம் இயற்றப்படலாம்.

(8) 1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தினை இம்மாதிரி விசேஷ நீதிமன்றங்கள் அல்லது டிரிபியூனல்கள் அமைக்கும் அதிகாரம் கொடுக்கும் வகையில் திருத்தியமைக்கலாம்.

(9) கமிஷன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், கலவரத்தின் தொடர்பாக நடைபெற்று வரும் குற்ற வழக்குகளை நிறுத்தாமல் உடனடியாக புலனாய்வு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(10) இனக்கலவரத்தைத் தூண்டுவோரை அடக்கவும் கலவரங்களைக் கட்டுப்படுத்தவும் பிரத்தியேக பயிற்சி அளிக்கப்பெற்ற ஆயுதப்படைக் காவல் படையினரை நியமிக்கலாம்.

(11) இனக் கலவரங்களின் போது நடு நிலைமை வகித்தும், சார்பற்ற முறையிலும் நடந்து கொள்ளப் போதுமான அனுபவமிக்க பொது மக்களின் ஒத்துழைப்பை நாடும் அதிகாரிகளை இனக் கலவரங்களினால் பதட்ட நிலை ஏற்படும் இடங்களில் நியமிக்கலாம்.

(12) பிரத்தியேக புலனாய்வுப் படைகளில், இனக் கலவரங்களின் போது நடைபெறும் குற்றங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க திறமை வாய்ந்த நேர்மையான அதிகாரிகளை நியமிக்கலாம்.

(13) வன்முறை மற்றும் இனக் கலவரங்களைத் தூண்டும் ஆட்சேபகரமான சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், சுற்றறிக்கைகள் போன்றவைகளைப் பறிமுதல் செய்தும், தடை செய்தும் குற்றம் மற்றும் தேர்தல் (திருத்தம்) சட்டங்களின் கீழ் வழக்குத் தொடர்ந்தும் கடுமையான நடவடிக்கை எடுக்காலம்.

(14) ஈத்தாமொழி, கடையாலுமுடு, அஞ்சுகிராமம், மேலக்கிருஷ்ணன் புதூர் மற்றும் சித்திரன்கோடு ஆகிய இடங்களில் மீண்டும் இம்மாதிரி இனக்கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும் பொருட்டு புதிய காவல் நிலையங்கள் அல்லது புறக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தலாம்.

(15) கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களில் தகுதிபெற்ற படித்தவர்களில் சிலரைக் காவல் துறை பணியில் சேர்ப்பதால், உள்ளூர் மீனவ சமுதாயத்தினரை கலவரங்களின்போது ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

(16) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதிகளில் முறையாகப் பயற்சி பெற்ற திறமை வாய்ந்த காவலர்களை கலவரம் உருவாகாமல் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தலாம்.

(17) இனக் கலவரம் நடைபெற வாய்ப்பு உள்ள பகுதிகளில் நுண்ணறிவு புலனாய்வுக் காவல் துறையினர் மூலம் முன்கூட்டியே வதந்திகள் மற்றும் செய்திகள் ஆகியவற்றைச் சேகரித்து, முன்னெச்சரிக்கையான இனக் கலவரம் ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

(18) விசேட நடமாடும் காவல் படைப் பிரிவு ஒன்று அமைத்து இனக் கலவரங்கள் மற்றும் பதட்ட நிலை உள்ள இடங்களுக்கு விரைந்து சென்று தக்க நடவடிக்கை மேற்கொள்ள வழி செய்யலாம்.

(19) மணவாளக்குறிச்சியில் ஏற்றுமதி செய்யப்படும் விசேட மண்ரகத்தை, வெளியேற்றாமல் உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

(20) இதனால் வெளியே ஏற்றுமதி செய்யப்படும் தரமான (மானோசைட டைட்டானியம்) இம் மண்ணைக் கொண்டு தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் வேலை வாய்ப்புப் பெருக வாய்ப்பு உண்டாகலாம்.

(21) பொதுத் துறை நிறுவனம் (அல்லது) கூட்டுத் துறை மூலம் ரப்பர் தொழிற் சாலைகள் இம் மாவட்டத்தில் துவங்கினால் பொருளாதார வளர்ச்சி மேம்படலாம்.

(22) கயிறு திரிக்கும் தொழிற்சாலையை மேலும் விரிவுபடுத்தினால் ஏற்றுமதியை அதிகரிக்க வகை செய்யலாம்.

(23) மீன் பிடிக்கும் தொழிலை நவீனப் படுத்தினால் ஏற்றுமதி செய்வதை அதிகரிக்க வகை செய்யலாம்.

(24) தோவாளை வட்டத்தில் சிமெண்ட் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள் கிடைப்பதால், இங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தினால் வேலை வாய்ப்பு அதிகரிக்கலாம்.

(25) ரப்பர் போர்டு கடனுதவி அளிப்பது போன்று, முந்திரித் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கும் கடனுதவி அளிக்கலாம். முந்திரி கார்ப்பரேஷன் மூலம் கன்னியாகுமரியில் இயங்கும் முந்திரி சுத்திகரிப்பு ஆலைக்கு கச்சா முந்திரி கிடைக்க வகை செய்யலாம்.

(26) கொல்லங்கோட்டிலிருந்து மணக்குடி வரை உள்ள கடற்கரை சாலைகளை செம்மைப்படுத்தி போக்குவரத்தைத் துரிதப்

படுத்தலாம். இதனால் சட்டம் - ஒழுங்கு பராமரிக்கும் பொருட்டு, விரைவில் தடையின்றிச் செல்ல ஏதுவாகும்.

(27) இந்த மாவட்டத்தில் உள்ள வட்டங்களின் பரப்பளவு தற்பொழுது அதிகப்படியாக உள்ளதால் அவற்றை சிறு வட்டங்களாகப் பிரித்தால், மாவட்ட நிர்வாகம் திறமையாக நடைபெற ஏதுவாகலாம்.

(28) மீனவர்களுக்கு எல்லா பருவ நிலையிலும் தொழில் நடத்த முழு அளவில் வாய்ப்பில்லாததால், அவர்களுக்கு மேற்கொண்டு வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்யலாம்.

(29) மீனவர்கள் தற்பொழுது கடலோரப் பகுதியில் தனித்து வாழ்வதைத் தவிர்த்து எல்லோருடனும் உள்ளூரில் சேர்ந்து வாழும் வகையில் ஏற்பாடுகள் செய்தும், அரசுப் பணிகளில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்தியும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தலாம்.

(30) மீனவர்கள் தங்கள் குறைகளை அரசுக்கு எடுத்துக்காட்ட ஏதுவாக மீனவ சமுதாயத்துக்கு என்று ஓர் சட்டமன்றப் பேரவைத் தொகுதி ஒதுக்கலாம்.

(31) கன்னியாகுமரி மாவட்டத்தில் இன ஒற்றுமையும் அமைதியும் முன்னர் இருந்து வந்துள்ளது. எனினும் **ஒரு இயக்கத்தின் தீவிர மதப் பிரச்சாரத்தினால் பெருமளவு இனக் கலவரங்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இம்மாதிரி இயக்கத்தினர் தீவிர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், எச்சரிக்கையாக தேவையானால் தடுக்க வேண்டியும், தக்க வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம். இம்மாதிரி இயக்கங்கள், ஆயுதம் தாங்கி பயிற்சி அளிக்கும் இடங்களைக் கண்காணித்து வன்முறை ஏற்படாதவண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.**

(32) தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் பொருட்டு, இம்மாதிரியான இயக்கங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அவசியமாகும். கடந்த காலத்தில், இந்து மதம் ஏராளமான அன்னிய மதங்களின் ஆதிக்கத்தின் போது எவ்வித ஆக்கிரமிப்புக்கும் இடமளிக்காமல் அழியாது நிலை

பெற்றிருந்ததால், **இந்து மதத்தைக் காக்க தனி இயக்கங்கள் ஏதும் தேவையில்லை என்று கருதப்படுகிறது.** எனவே, இம்மாதிரி இயக்கங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

(33) கன்னியாகுமரி மாவட்டத்தில் மதச் சார்பான மாநாடுகள் மற்றும் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுவதால், காவல் துறையினர் தக்க எச்சரிக்கையுடன் கண்காணித்து இனக்கலவரங்கள் ஏற்படுவதைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(34) பலதரப்பட்ட சாதி அடிப்படைகளில் ஏராளமான சங்கங்கள் தோன்றி வருவது இனக் கலவரங்களைத் தூண்டுவதற்கு ஒரு படியாக அமைகிறது. எனவே, இம்மாதிரி சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் அரசு தரப்பிலோ மக்கள் பிரதிநிதிகளின் தரப்பிலோ பங்கேற்று கலந்து கொள்வதைத் தவிர்க்கலாம்.

3. ஆணைக்குழுவின் சட்ட ரீதியான பரிந்துரைகளையும், நீதி, நிர்வாகம் மற்றும் காவல் துறை சம்பந்தப்பட்ட பரிந்துரைகளையும், சமுதாய,பொருளாதார மாற்றங்கள் தவறான அடிப்படையில் அதாவது,வன்முறையால், பொருளுதவியால், ஏமாற்றத்தால், இன்னபிற காரணங்களால் நிகழும்போது, அதனைத் தடை செய்ய சட்டம் ஒன்று ஒரிசா, மத்தியப்பிரதேசம், திரிபுரா மற்றும் அருணாசலப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இயற்றப் பட்டுள்ளது போன்று தமிழ் நாட்டிலும் இயற்றலாம் என்ற பரிந்துரை யையும், இன ஒற்றுமையைக் குலைக்கும் அமைப்புகளின் தீவிர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய - பரிந்துரை களையும் அரசு ஏற்கிறது. மத, இன அரசியல் பிரச்சினைகள் பிணைந்து இருக்கும் சூழ்நிலையில் இவற்றைக் கவனமாகப் பரிசீலித்து ஒரு முடிவான அமைப்பை (Lasting Solution) ஏற்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கையாக சில உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அக்குழுவின் முழுமையான அறிக்கை பெற்று, அதன் பரிந்துரைகளை ஆராயலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

4. மேற்கண்ட நிலையில், விசாரணைக்குழுவின் கண்டு பிடிப்புகளின்படி 1-3-1982 அன்று மண்டைக்காடு பகுதியிலும், 15-3-1982 அன்று மேல்மணல்குடியிலும் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் காவலர்களின் உயிர் களுக்கும்,உடமைகளுக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவானதால் அச்சமயம் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு நியாயமானதே என்ற விசாரணைக்குழுவின் முடிவினை அரசு ஏற்றுக் கொள்கிறது. (ஆளுநரின் ஆணைப்படி)

டி.வி. அந்தோணி,
(அரசு தலைமைச் செயலர்)
தொகுப்பு : டாக்டர் D. பீட்டர்

21 மிஷனெரிகளின் பாதையில் . . .

- ***இந்து மதத்தைக் காக்க இந்து மதத் துறவிகள் என்ன செய்தார்கள்?***
- ***கிறிஸ்தவர்களையும் மதப்போதகர்களையும் துன்புறுத்தினார்களா?***
- ***தேவாலயங்களையும், பள்ளி, கல்லூரிகளையும் தீ வைத்தார்களா?***

புரோட்டாஸ்தாந்து மிஷனெரிகள் இந்திய மண்ணில் கால் வைத்த போது, இந்திய சமுதாயமானது அறியாமையிலும், மூடப்பழக்க வழக்கங்களிலும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தது. சாதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட இந்து சமுதாயமானது உயர் சாதியினர் என்றும், கீழ் சாதியினர் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உயர்சாதிப் பிரிவில் மேல்தட்டில் வைக்கப்பட்டு சகலவித சலுகைகளையும் அனுபவித்து வந்த பிராமணர் என்ற சாதியினரே ஆன்மிக வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் மொத்த உரிமையாளர்களாக விளங்கினர். கீழ் சாதிப்பிரிவில் வைக்கப்பட்டவர்கள் தீண்டத் தகாதவர்கள் என ஒதுக்கித் தள்ளப்பட்டனர். சதி. சிசு கொலை போன்ற கொடிய மனிதாபி மானமற்ற செயல்கள் சமயத்தின் பெயரால் நடத்தப்பட்டு வந்தன. குழந்தை மணம், பலதார மணம், தேவதாசி முறை, பர்தா முறை, விதவை மறுமணம் அனுமதிக்கப் படாமை போன்ற பழக்கங்களால் பெண்களின் வாழ்க்கை பாழடிக்கப்பட்டு வந்தது. இச்சூழ்நிலையிலேயே புரோட்டஸ்தாந்து மிஷனரிகள் தங்கள் சமூகப் பணிகளைத் துவங்கினர்.

அவர்களது பணிகளால் ஏற்பட்ட தாக்கம் சமுதாயத்தில் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. இந்து சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, விலங்குகளைவிடக் கேவலமான வாழ்க்கை நடத்திய இலட்சக் கணக்கானோர் இந்த மிஷனெரிகளின் சமூகப் பணிகளால் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி, கல்வி கற்று, நம்பிக்கை, மீட்பு என்னும் நற்செய்தியை ஏந்தி மனிதர்களாக உலாவந்தனர். ஒரு காலக்கட்டத்தில் இந்து சமுதாயத்தின் அடித்தளம் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. தங்கள் சமயத்திற்கு ஆபத்து வருவதைக் கண்ட இந்து சமயவாதிகள் விழித்துக் கொண்டனர். தங்கள் சமயத்தில் மலிந்து காணப்பட்ட சீர்கேடுகளே இந்நிலைக்குக் காரணம் என்பதனை உணர்ந்தனர். மிஷனெரிகளின் பாணியைப் பின்பற்றி சமயத்தையும், சமுதாயத்தையும் சீர்படுத்த முன்வந்தனர். பிரம்ம சமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணா மிஷன், தியோசாபிக்கல் சொசைட்டி (Theosophical Society) போன்ற சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இந்து சமயம் புத்துயிரூட்டப்பட்டு, புது மெருகுடன் பிரகாசிக்க ஆரம்பித்தது. உண்மையில் பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய சீர்த்திருத்தத்திற்கு இணையான ஒரு சமய சீர்திருத்தத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியா கண்டது. அடுத்ததாக, சமுதாயத்தைச் சீரழித்த மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிக்கப்பட்டு மேலை நாடுகளின் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து, நவயுகத்தை நோக்கி அடியெடுத்து வைத்து நவீன இந்தியாவை உருவாக்கத் துடித்துக் கொண்டிருந்த ஒரு சமுதாயம் உருவாக்கப் பட்டது. இங்ஙனம் அறியாமை இருளில் உழன்று அழிவுப்பாதையை நோக்கி வேகநடை போட்டுக் கொண்டிருந்த இந்து சமுதாயத்தைத் தடுத்து நிறுத்தி, சிந்திக்கத் தூண்டி, முன்னேற்றப் பாதையை நோக்கி நடைபோட வழிகாட்டியது புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவம்.

செராம்பூர் மிஷனெரிகளின் பணித் தளமான வங்காளமே சீர்திருத்த இயக்கங் களின் பிறப்பிடமாகும். சீர்திருத்த இயக்கங் களில் காலத்தால் முந்தியது பிரம்ம சமாஜம் ஆகும். இதனைத் தோற்றுவித்த இராஜாராம் மோகன்ராய் வங்காளத்தைத் சேர்ந்தவர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழ் சிறிதுகாலம் பணிபுரிந்த இவர் 1814-ஆம் ஆண்டு தமது வேலையை

இராஜினாமா செய்துவிட்டு கல்கத்தா வந்தார். அங்கு அவருக்குச் செராம்பூர் மிஷனெரிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. செராம்பூர் மிஷனெரிகள் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பியதோடு, இந்து சமயத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, விமர்சித்து கட்டுரைகள் எழுதி வெளியிட்டனர். இந்த விமரிசனங்கள் மோகன்ராயை வெகுவாகப் பாதித்தது. இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய வேதங்களைக் கற்று ஆராய்ந்து அவற்றின் அடிப்படைத் தத்துவங்களை உணர முற்பட்டார். பல கிறிஸ்தவ சமயவியல் வல்லுனர்களின் நூற்களை ஊன்றிப் படித்தார். அதற்காகவே கிரேக்கம், லத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளைக் கற்றார். கிறிஸ்தவச் சமயக் கோட்பாடுகளால் பெரிதும் கவரப்பட்டார். முக்கியமாக கிறிஸ்தவச் சமயத்தின் அடிப்படைத் தத்துவமான சிலுவைக் கோட்பாடு (Doctrine of the cross-acceptance of vicarious suffering for the sake of mankind) அவரைப் பெரிதும் கவர்ந்தது. கிறிஸ்தவக் கோட்பாடுகளின் உயர்வினை மதித்து, The Precepts of Jesus, the Guide to Peace and Happiness என்ற நூலையும் வெளியிட்டார்.

இங்ஙனம் பல சமயங்களையும் கற்று ஆராய்ந்தபின், இந்து சமயத்தை மூடியிருந்த புழுதியை நீக்கிச் சுத்திகரித்து கிறிஸ்தவ மிஷனெரிகளின் தாக்குதலிலிருந்து இந்து சமயத்தைக் காக்கும் பணியில் ஈடுபட்டார். கிறிஸ்தவ சமயத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் முற்போக்குக் கொள்கைகளை இந்து சமயத்தில் புகுத்த விரும்பினார். அதற்கென 1828-ஆம் ஆண்டு பிரம்ம சமாஜம் என்ற இயக்கத்தை தோற்றுவித்தார். பொது வழிபாட்டின் அடிப்படையில் சாதி, சமய பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதும், ஒரே கடவுள் தத்துவத்தை (Monotheism) வலியுறுத்துவதுமே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் வழிபட்ட கடவுளுக்குப் பெயரோ, உருவமோ கிடையாது. இந்து சமய வழிபாட்டின் முக்கிய அம்சமான பலியிடும் சடங்கு கைவிடப்பட்டது. உலகப் பொருட்களையல்ல, சுயத்தைத் தியாகம் செய்ய வேண்டும் (Sacrifice of self) என்னும் கொள்கை வலியுறுத்தப்பட்டது.

பாரம்பரிய அடிப்படையில் சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பகுத்தறிவுக்கு ஒவ்வாத சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை ஒழித்துக்கட்டி முற்போக்கு சிந்தனையுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கவும் அவர் விரும்பினார். சமயத்தின் பெயரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பல தீய பழக்கவழக்கங்களை எதிர்த்துப் போராடினார். வில்லியம் கேரி ஆரம்பித்த சதி ஒழிப்பு இயக்கத்திற்கு தனது முழு ஒத்துழைப் பையும் நல்கினார். சதி ஒழிப்பிற்காக தனது போராட்டத்தை 1818-ஆம் ஆண்டு ஆரம்பித்தார். பெண்களின் வாழ்வு மேம்பாட்டுக்காக உழைத்தார். பெண்கல்வி, பெண்களுக்குச் சொத்துரிமை, விதவை மறுமணம் ஆகிய வற்றுக்கு ஆதரவாகவும் பலதார மணத்திற்கு எதிராகவும் வாதாடினார். இந்து சமுதாயச் சீரழிவிற்குக் காரணமான சாதிப் பாகுபாட்டை ஒழிக்க முயற்சிகள் மேற்கொண்டார்.

இவரது மறைவுக்குப்பின் நலிவடைந்த பிரம்ம சமாஜத்திற்குப் புதுப் பொலிவைக் கொடுத்த பெருமை தேவேந்திரநாத் தாகூரைச் சாரும். 1857-ஆம் ஆண்டு இவ்வியக்கத்தில் சேர்ந்த கேசவ சந்திர சென்னின் தலைமையின் கீழ் பிரம்ம சமாஜம் ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாத் திகழ்ந்தது. அவர் அதை ஒரு மிஷனெரி இயக்கமாக மாற்றி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அதன் கொள்கைகளைப் பரப்பினார். இவர் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளால் அதிகமாக ஈர்க்கப்பட்டார். கிறிஸ்தவ சமயம் இந்திய நாட்டிற்கு ஆற்றியுள்ள தொண்டினை வெகுவாகப் புகழ்ந்தார். பிரம்ம சமாஜத்தின் அடிப்படைக் கொள்கைகள் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு ஒத்திருப்பதை வலியுறுத்தியதோடு, கிறிஸ்தவ கோட்பாடுகளின் படியே சமாஜத்தை நடத்திச் செல்ல விரும்பினார். அவர் தன்னை இயேசுதாஸ் (Servant of Jesus) என்று கூறிக்கொண்டார். முகம்மது நபி எவ்வாறு ஒரு ஆசியனோ அதேபோன்று இயேசுவும் ஒரு ஆசியன் (Asian) கிறிஸ்தவ சமயம் ஆசியாவில்தான் வளர்ச்சியடைந்தது. அதன் வளர்ச்சிக்குக் காரணமானவர்களும் ஆசியர்கள்தான். எனவே திருமறையிலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களில் (Gospels) கூறப்பட்டுள்ள உவமைகளையும், இயற்கை வருணனைகளையும், பழக்க வழக்கங்களையும் ஐரோப்பியர்களைவிட ஆசியர்களே நன்கு புரிந்து கொள்ள முடியும்

என்பது அவர் கருத்து. எனவே கிறிஸ்தவம் மேலை நாட்டுச் சமயமல்ல என்பதைத் தெளிவுப்படுத்தினார். கேசவ சென்னின் முயற்சியினால் பிரம்மசமாஜத்தின் கொள்கைகளும், சமுதாயச் சீர்திருத்தச் செயல்களும் வங்காளத்தின் எல்லையைத் தாண்டின.

கேசவ சந்திர சென்னின் மும்பைப் பயணத்தின் விளைவாகத் தோன்றிய இயக்கமே பிரார்த்தனா சமாஜம் ஆகும். இது 1867-ஆம் ஆண்டு பாண்டுராங் என்பவரால் மும்பையில் ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய சீர்திருத்தமே இந்த இயக்கத்தின் முக்கிய குறிக்கோள். குழந்தைத் திருமணத் தடுப்பு, விதவை மறுமணம், கலப்புத் திருமணம் போன்ற சமூக சீர்திருத்தங்களில் இவ்வியக்கம் தீவிரமாக ஈடுபட்டது. சாதிப் பாகுபாட்டை ஒழிக்கவும், பெண்கள் முன்னேற்றத் திற்காகவும் பாடுபட்டது. கிறிஸ்தவ மிஷனெரிகளைப் போன்று தாழ்த்தப்பட்டோர் நலனில் அதிக அக்கறை காட்டியது. நூற்றுக்கணக்கான கல்வி நிலையங்களும், அனாதை இல்லங் களும், இரவுப்பள்ளிகளும், தாழ்த்தப் பட்டோர் நலச் சங்கங்களும் இவ்வியக்கத்தின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டன. மும்பையிலுள்ள தாழ்த்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்காக இரவுப் பள்ளிகள் நடத்தப்பட்டன. இவ்வியக்கத்தின் பிரதான சிற்பியான மகாதேவ் கோவிந்த ரானடே சமூக சீர்திருத்தத்தை ஒரு தேசீய இயக்கமாகவே மாற்றினார். 1887-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இந்திய தேசீய காங்கிரஸின் மூன்றாவது மாநாட்டின்போது ரானடேயின் முயற்சியால் தேசீய சமூக மாநாடு (National Social Conference) என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. 1884-ஆம் ஆண்டு இவருடைய முயற்சியால் தக்காணக் கல்வி கழகம் (Deccan Education Society) ஆரம்பிக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தோன்றிய இன்னொரு சீர்திருத்த இயக்கம் ஆரிய சமாஜம் ஆகும். தயானந்த சரஸ்வதி என்பவரால் 1875-ஆம் ஆண்டு மும்பையில் துவக்கப்பட்ட இவ்வியக்கம் முந்தைய இரு இயக்கங்களிலிருந்து வேறுபட்ட கருத்துடையதாயிருந்தது. அவைகளைப் போன்று சமுதாய சீர்திருத்தமும், சமய சீர்திருத்தமுமே இவ்வியக்கத்தின் குறிக் கோள்களாக இருந்தாலும், இந்து சமயத்தை மீண்டும் பழைய

நிலைக்கு கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்து சமயத்திற்குப் புத்துயிரூட்டுவதில் தயானந்த சரஸ்வதி வெகு தீவிரமாகச் செயல்பட்டதால் அவருடைய இயக்கம் ஓர் இந்து புரோட்டஸ்தாந்து சீர்திருத்த இயக்கம் (Hindu Protestant Reformation Movement) என வர்ணிக்கப் படுகிறது. இராஜாராம் மோகன்ராயைப் போன்று இவரும் ஒரே கடவுள் தத்துவத்தை வலியுறுத்தினார். உருவ வழிபாடு, தீண்டாமை, குழந்தைத் திருமணம் போன்றவற்றிற்கு இந்து சமய வேதங்களில் அனுமதி இல்லை என்று ஆணித்தரமாகக் கூறினார். பெண் கல்விக்காகவும் பெண்கள் முன்னேற்றத்திற் காகவும், விதவை மறு மணத்திற்காகவும், இவ்வியக்கம் பிரச்சாரம் செய்தது. எண்ணிறந்த பள்ளிகளும், கல்லூரிகளும் நிறுவப்பட்டன.

கிறிஸ்தவ சமயத்தின் தாக்குதலைச் சமாளித்து இந்து சமயத்தைக் காக்கும் நிலையிலிருந்து, தாக்குதலைத் தொடுத்து இந்து சமயத்தைக் காக்கும் நிலைக்கு மாறிய முதல் சீர்திருத்தவாதி தயானந்தர் ஆவார். கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களைத் திரும்பவும் இந்து மதத்திற்கு மாற்றுவதற்கு லாலா முன்ஷிராம் என்பவரது தலைமையின் கீழ் சுத்தி இயக்கம் ஒன்று 1891-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய பல்லாயிரக் கணக்கானோர் மீண்டும் இந்து சமயத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். பிற சமயத்தவரும் அவ்வாறே இந்துவாக விரும்பினால் ஆரிய சமாஜம் அவர்களுக்குத் தீட்சை அளித்து இந்து வாக்கியது. தாழ்ந்த சாதியிலிருந்து புதிதாக இந்து சமயத்திற்கு மாறியவர்களுக்கு உயர் சாதியினரின் சின்னமாகிய புனிதநூலை அணிவதற்குரிய உரிமை வழங்கப்பட்டது. தயானந்தர் கையாண்ட மதமாற்றக் கொள்கை கிறிஸ்தவத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும். இச்செயல் மூலம் இந்து சமயத்தின் ஒரு சிறப்பம்சத்தை அவர் புறக்கணித்தார். பிரம்ம சமாஜமும், பிராத்தனா சமாஜமும் தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தாராள மனப்பான்மையோடு சேவை செய்தன. ஆனால் ஆரிய சமாஜம், தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதைத் தடுக்கும் முக்கிய நோக்கத்துடன் தான் தாழ்த்தப் பட்டோர் நலன் பேணுவதில் அக்கறை காட்டியது.

இந்து சமய மறுமலர்ச்சியை ஊக்குவித்த மற்றொரு இயக்கம் இராமகிருஷ்ணா மிஷன். இது இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடராகிய சுவாமி விவேகானந்தரால் 1897-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இராமகிருஷ்ண பரம ஹம்சரின் போதனைகளைப் பரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் இன்று உலகத்தின் பல நாடுகளிலும் கிளைகள் அமைத்து சிறந்த சமூக சேவை ஆற்றிவருகிறது. மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், தொழிற்சாலைகள், குருகுலங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளை அமைத்து உயரிய தொண்டு செய்து வருகிறது. வெள்ளம், புயல், பூகம்பம், வறட்சி, தீ, விபத்து, கொள்ளைநோய் போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படும் போது இம்மிஷனைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று இனம், மொழி, மதவேறுபாடின்றி துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். மனித குலத்திற்கு ஆற்றும் சேவையே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பதனை விவேகானந்தர் மக்களுக்கு வலியுறுத்த விரும்பினார். அந்த வகையில் அவரது இயக்கம் சிறந்த பணி ஆற்றி வருகிறது.

சமய சீர்திருத்தப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட மற்றொரு இயக்கம் தியோசாபிக்கல் சொசைட்டி அல்லது பிரம்ம ஞான சபையாகும். 1875-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள நியூயார்க் நகரில் பிளாவட்ஸ்கி அம்மையார், ஆல்காட் ஆகி யோரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக் கத்தின் தலைமையகம் 1886-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள அடையாறுக்கு மாற்றப் பட்டது. இவ்வியக்கத்தை மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கமாக மாற்றிய பெருமைக்குரியவர் அன்னிபெசன்ட் அம்மையார் ஆவார். அவரது தலைமையின் கீழ் இந்து சமய எழுச்சிக்கு இவ்வியக்கம் பாடுபட்டது. இந்தியப் பண்பாட்டின் பழம் பெருமையை மக்களுக்கு உணர்த்தியவர் இவர். இவ்வியக்கத்தின் சார்பில் பல சமூக அமைப்புகளும் தோன்றி மக்களுக்குச் சேவைசெய்து வருகின்றன.

மேற்கூறிய சீர்திருத்த இயக்கங்கள் அனைத்தும் கிறிஸ்தவ மிஷனெரி இயக்கங்களின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கும் எதிர்த் தாக்குதல்களாகவே எழுந்தன. அம்முயற்சியில் இந்திய நாட்டின் பண்டைய பண்பாடும் ஆன்மீகமும் புதுப்பொலிவு பெற்று மறுமலர்ச்சி

யடைந்ததோடு, தூய்மைப்படுத்தப் பட்ட இந்து சமயமும் துயருறும் மனித இனத்திற்குச் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தது. சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரம்பரிய நடை முறைகளால் அதிக அளவில் பாதிக்கப் பட்டவர்கள் பெண்களும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்களுமே. எனவே அனைத்து சீர்திருத்த இயக்கங்களும், பெண்கள் முன்னேற்றத்தையும், தாழ்த்தப் பட்டோரின் மேம்பாட்டையுமே மையமாகக் கொண்டு செயல்பட்டன. இவ்வியக்கங்கள் அனைத்திற்கும் தூண்டுகோல்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தவர்கள் புரோட்டஸ்தாந்து மிஷனெரிகளே. மிஷனெரிகளைப் போன்று இந்த இயக்கங்களும் மிஷன் என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கின. தாழ்த்தப்பட்டோர் மிஷன் (Depressed Classes Mission), இராமகிருஷ்னா மிஷன் (Ramakrishna Mission) போன்றவை அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

இத்தகைய சீர்திருத்த இயக்கங்களின் தோற்றத்தால் இந்திய சமுதாயத்தை வாட்டி வதைத்த பல தீமைகள் ஒழிக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பல முட்டுக்கட்டைகள் அகற்றப்பட்டன. பல தீய பழக்கவழக்கங்கள் சட்டத்தின் மூலமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. இந்திய சமுதாயத்தில் ஒரு நாடுதழுவிய புரட்சி ஏற்பட்டது. ஒரு புதிய சமுதாயம் உதயமானது.

டாக்டர் ஜவி பீட்டர்